R.8176 - 8182 (One Codex)

Paper : 30.5 x 25cms; Pages : 1-102
Lines 24 on a Page; Tamil, Good, New
Restored in 1969-70 from a manuscript of G.O.M.L.

R.8176

ஞான சிவாசாரிய மடத்துக் கைபீது

GNANA SIVACHARYA MADATTUK KAIFIAT

Pages : 1-14
Extent 90 granthas
Restored from D.3003 (M.68) of G.O.M.L.

(குறிப்பு): இச்சுவடி, டி.3003ஆம் எண்ணிலிருந்து படி எடுத்துவைக்கப்பட்டதாகும்.

R.8177

மாம்பறை பாளையப்பட்டுப் பாளையக்காரர் வமிசாவளி

MAMBARAI PALAYAPPATTUP PALAYAKKARAR VAMSAVALI

Pages : 19-45
Extent 150 granthas
Restored from D.3004 (M.68) of G.O.M.L.

(குறிப்பு): இச்சுவடி, டி.3004இலிருந்து படியெடுத்து வைக்கப்பட்டுள்ளதாகும்.

R.8178

திண்டுக்கல் நகரத்து வியாபார வரலாறு

TINDUKKAL NAGARATTU VYAPARA VARALARU

Pages : 47-54
Extent 45 granthas
Restored from D.3005 (M.68) of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், டி.3005இலிருந்து படியெடுத்து வைக்கப்பட்டுள்ளதாகும்.

R.8179

குள்ளிப்பாடி ரங்கராசர் வமிசாவளி

KULLIPPADI RANGARASAR VAMSAVALI

Pages : 59-61
Extent 20 granthas
Restored from D.3006 of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், டி.3006ஆம் எண்ணிலிருந்து படி எடுத்துவைக்கப்பட்டதாகும்.

R.8180

குள்ளிப்பாடி கிராமம் ரங்கராசர் வமிசாவளி

KULLIPPADI GRAMAM RANGARASAR VAMSAVALI

Pages : 63-70
Extent 45 granthas
Restored from D.3008 (M.68) of G.O.M.L.

(குறிப்பு): இச்சுவடி, டி.8180இலிருந்து படியெடுத்து வைக்கப்பட்டுள்ளது.

R.8181

திண்டுக்கல் தருமராசர் கோயில் திருநாள் வரலாறு

TINDUKKAL TARUMARASAR KOIL TIRUNAL VARALARU

Pages : 71-78
Extent 55 granthas
Restored from D.3010 (M.68) of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், இந்நூலகத்தில் டி.3010ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டுவரும் சுவடியிலிருந்து எடுத்தெழுதப்பட்டதாகும்.

R.8182

திருவண்ணாமலைக் கைபீது

TIRUVANNAMALAK KAIFIAT

Pages : 79-102
Extent 700 granthas
Restored from D.3022 (M.91) of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், இந்நூலகத்திலுள்ள டி.3022ஆம் எண் கொண்ட சுவடியின் படியாகும்.

R.8183

திருமுருகன் இசைத்தமிழ்த் திரட்டு

THIRUMURUGAN ISAI-T-TAMIL-T-TIRATU

Extent 2160 granthas

(குறிப்பு): இந்நூல் திருமுருகன் இசைத்தமிழ்த்திரட்டு என்னும் பெயர்த்து, முருகன் மீது இசைத்தமிழ்ப்பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. இசை இலக்கணங்களுக்கேற்ப, பல பாடல்கள், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பிரித்து பாடப்பட்டுள்ளன. முருகனது பெருமை பலவாறாகப் பாராட்டப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ., மதுரை. முற்றுமுள்ளது.

R.8184

திருப்புகழ்

TIRUPUKAL

Pages : 165-262
Extent 1540 granthas
Complete
This complete work comprising 200 songs invoking Lord Muruga to shower his blessings, by Thiru N. Kanaga Raja Iyer, M.A., elaborately describes the greatness of Lord Muruga.

Beginning:

"அரியகுண கணசுமுக அறுமுகவ இருமகளிர்
அணையவரு முரிமையுள தலைவவீரா
அமுதமுணு மமரர்படை அவுணர்படை தனையெதிர
அருள்கெழுமு தலைவனென வருவோனே
எரிவிழியின் வருபொறிகள் அறுமைதரு மறுகுழவி
எனுமரிய திருவுருவம் உடையோயே
எவர்வருவர் எதுநினைவர் எதுபுகல்வர் எனுநினைவின்
எழில்கொள்தனி யிடையுறையும் அரசேயோ"

End:

"முயன்ற முறையி லுயர்ந்த பயனை
முகுந்த மருக அருள்வாயே
மொழிந்த மறையின் முழங்கு முருவ
முடிந்த முடிபை முருகோனே".

வாழ்த்து

"அறுமுகனை அனுதினமும் அணுகுபவர் குலம்வாழ்க
மறுவில்மன முடையகுகன் மலரடிகள் மிகவாழ்க
நறுமலர்கள் புனையுமிகு நலமகளிர் அருள்வாழ்க
பெறுபொருள்கள் முருகனருள் பெறவமைய நிலம்வாழ்க".

Colophon:

பிரதி எழுதிமுடிந்தது

13/5/66

(குறிப்பு): இந்நூல் திருப்புகழ் என்னும் பெயர்த்து. இதன்கண் ஆறுமுகனிடம் அருள்வேண்டி பாடியப் பாடல்கள் சிறப்பாக உள்ளன. திருமுருகனின் பெருமைகள் விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. இலக்கிய நயத்தோடு 200 பாடல்களும் உள்ளன. இதனை இயற்றியவர் கவிராசபண்டிதர் திருமிகு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றும் உள்ளது.

R.8185

முருகவேள் திருமணக்கும்மி

MURUKAVEL TIRUMANAKUMMI

Pages : 263-314
Extent 700 granthas
Complete
The auspicious occasion of the marriage of Lord Muruga with Devayani & Valli is described here in Kummi style by author Thiru Kanaka Raja Iyer. Complete

Beginning:

காப்பு

"எழிலிலங்கு செவ்வேள் இருமகளிர் தோல்மேற்
பொழிலலர்ந்த மாலை புனையும் - விழவதனைக்

கும்மியென வேதாக் குறுந்தா ளொருகும்பன்
செம்மையுளம் நல்கும் சிறிது"

கும்மி

"கும்மி யடியுங்கள் கும்மி யடியுங்கள்
குதித்துக் கும்மி யடியுங்களே - தமிழ்
துதித்துக் கும்மி யடியுங்களே".

End:

"வள்ளிமுகமு மணமும் மலர்ந்தன
வாழ்த்தினர் கயிலை யிறைமையினார்
வெள்ளி வியாழனே ஞாயிறே திங்களே
மேம்பாடு கூறி வழுத்தினரே".

வாழ்த்து

"வாழி முருகன் திருமணம் என்றே
வழங்கும் இருமை மணமரபும்
வாழி அவனை மணந்துயர் வாழ்வுறு
மங்கைய ரய இருவருமே".

Colophon :

பூர்த்தி
20/2/66

(குறிப்பு): இந்நூல் முருகவேள் திருமணக் கும்மி என்னும் பெயர்த்து. இந்நூலுள் 'செம்மை முருகவேள் தேவர்மகளையும், வள்ளியையும் திருமணம் பூண்ட சிறப்பு கூறப்படுகிறது. பாடல்கள் அனைத்தும் சந்தத்தில் மாறா வண்ணம் கும்மிப் பாடல்களாக உள்ளன. இதில் 316 பாடல்கள் உள்ளன. ஆக்கியோன் பெயர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றும் உள்ளது.

R.8186 - 8206 (One Codex)

Paper : 32 x 19.5cm; Pages : 1-278
Tamil, Fair, Old

R.8186

திருப்பரங்குன்றக் குறவஞ்சி

TIRUPARANKUNRA KURAVANJI

Pages : 1-51
Lines 32 on a Page
Extent 835 granthas
Complete
A musical drama on Lord Muruga, the deity of Thirupparankundram by Thiru Kanaka Raja Iyer. It is said that Lord Siva and Ankayarkanni came to witness this drama.

Beginning.:

காப்பு

"விநாயகனை வேத விழுப்பொருளை யென்றும்
அநாயகனை வேண்டி அடைவாம் - அநாமயமே
நல்கும் பரங்குன்ற நம்பி குறவஞ்சி
புல்கும் தமிழின் பொருட்டு.

அங்கயற்கண்ணி

"பங்கயற்கண் வாழிருவர் பத்தியொடு பாராட்டும்
அங்கயற்கண் ணம்மையருள் புனைவாம் - இங்கயற்கண்
உள்ளபரங் குன்றத்தாற் கோதுகுற வஞ்சியன்ன
வள்ளல்மனம் கொள்வான் வர.

End:

"என்னை யளித்ததனால் தன்னை அளித்தனனே
எம்பிரான் என்பவளே - பரங்குன்றத்து
எம்பிரான் என்பள் அவளே".

வாழ்த்தில் (கடைசி)

"ஐந்தொழிலும் வல்லவனை
அருமறைச் சொல்லவனை
மைந்தருளே மிக்கவனை
வாதமுடி தொக்கவனை - வாழ்த்துவோமே.

Colophon

குரோதி சித்திரை மா சனிக்கிழமை காலை ரு மணி பிரபந்த மூர்த்தி.

மங்களம். 18/4/14.

(குறிப்பு): இந்நூல் திருப்பரங்குன்றக் குறவஞ்சி என்னும் பெயர்த்து. திருப்பரங்குன்றக் குமரக்கடவுளின் பேரில் நாடகமாக அமைக்கப்பட்டுள்ளது. பாடல்களால் ஆக்கப்பட்டுள்ள இந்நூலுள் இசைப்பாடல்களும் உள்ளன. இந்நாடகத்தைக் காண சிவனும், அங்கயற்கண்ணியும் வந்ததாகவும் கூறப்படுகிறது. இயற்றியவர் திரு. நா. கனகராச ஐயர். முற்றுமுள்ளது.

R.8187

திருப்பரங்குன்றக் கலம்பகம்

TIRUPARANKUNRAK KALAMBAKAM

Pages : 52-78
Lines 41 on a Page; Tamil, Fair, Old
Extent 650 granthas
Complete
The manuscript in Kalampakam character contains songs in praise of the deity of Thirupparan Kundram. A complete work written by Thiru Kanakaraja Iyer.

Beginning:

காப்பு (விநாயகர்)

"நலம்பகரும் சொற்பொருட்டாய் நம்பிபரங் குன்றக்
கலம்பகம் பாடும் கருத்தான் - நிலம்புகழும்
சித்திக் களிற்றரசின் சேவடியைச் சென்னிமிசை
பத்தியுறச் சேர்ப்பாம் பரிந்து"

கலைமகள்

"அறிவுருவ மேவி அனைத்துக் கலையும்
செறியுருவம் கொண்ட திருவின் - வெறிகமழும்
பாதமலர் போற்றிப் பணிந்து பரங்குன்றன்
பாதமலர் காண்பாம் பனிந்து".

End:

"சலமொன்று தைத்தியரைச் சாய்த்தமரர்த் தாங்கும்
குலமொன்று நற்குணமே கொண்ட குமரன்
தலமொன்ற வந்து தணிகுவே மாயின்
பலமொன்ற வாழ்வனோம் பார்த்து"

வாழ்த்து

"வாழி பரங்குன்ற மேவிய தண்டமிழ் வள்ளலருள்
வாழி முருகே யெனப்புகல் நெஞ்சுள மாந்தரினம்
வாழி சுரகுணம் புல்விலங் காதிய வாழிநன்றா
வாழி யகனிலம் தென்பரங் குன்றம் வளர்வுறவே".

Colophon:-

பூர்த்தியானது. குரோதி வருடம் சித்திரை மாதம் கசா விசாகம் துவிதியை செவ்வாய்க்கிழமை காலை ஆறு மணி.

- 28.4.64.

(குறிப்பு): இந்நூல் திருப்பரங்குன்றக் கலம்பகம் என்னும் பெயர்த்து. கலம்பகத்தின் இலக்கணங்கள் பொருந்திய நூலாக உள்ளது. பாடல்கள் சிறப்பாக உள்ளன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றும் உள்ளது.

R.8188

திருப்பரங்குன்றக் கோவை

TIRUPARAN KUNRAKOVAI

Pages : 79-150
Lines 42 on a Page; Tamil, Fair, New.
Extent 1512 granthas.
Complete

Though written in Kovai style, this differents from other Kovais. Here with a suggestive head 'Perumpirivu' the author Kanagaraja Iyer tells the story of a person who took to renunciation and allows his better half also after his futile attempt to desist her from following his way of life i.e., renunciation.

Beginning:-

காப்பு

"திருப்பரங் குன்றமுறை செம்மல்திருக் கோவை
கருப்பரங் குன்றிக் கழன்றே - உருப்பரமன்
ஆகும் அவனருளை ஆக்க விநாயகனே
ஆகுவினை யூர்ந்தருளு மால்"

கலைமகள்

"கலைகளையே தன்னுருவிற் காணும் பிராட்டி
நிலைகளெலாம் நல்கும்விழி நேயம் - தலைமைதரும்
வாக்கருளும் வேலவன்றன் மாக்கோவை நன்கமையும்
நோக்கருளும் நாவால் நுவன்று"

இருவரும் புறப்படல்

End:

"மனத்துக் கினிய மகளா யிருந்த மடமயிலே
கனத்துக் கிடமாம் பரங்குன்ற நீங்கினம் காளத்திலே
இனத்துக் குரிமை யிலாது பிரிந்தே இருந்துறவில்
தனத்துக் கதிகப் பொருள்தேடு கின்றேம் சரவணனே"

வாழ்த்து

"வாழி பரங்குன்று வாழ்வுறும் தேவன் மலர்க்கழல்கள்
வாழி மகபதி தந்த வணங்கின் மலர்க்கழல்கள்
வாழி முருகப் பிரானடி பற்றிய வாழ்வினர்
வாழி தமிழும் உலகும் வளர்ந்து மலிந்துநின்றே"

Colophon:-

இக்கோவை குரோதி ஆண்டு சித்திரை மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை விசாக நாள் துதியை திதி உள்ள 28.4.64இல் தொடங்கப்பட்டது. மீட்சிமுடிய 482 செய்யுள்களோடு அழர்திதியாக நின்றது. மீண்டும் விசுவாவசு ஆண்டில் அடுத்து வைகாசி 27 தசமி சித்திரை நாள் 9.6.75ல் பூர்த்தி செய்யப்பெற்றது. இடைநின்ற காலக்கணக்குக் குறிக்கப்படாததால் இந்நூல் இயன்றது மிகநெடுங்காலமாகத்தோன்றும்.

(குறிப்பு): இந்நூல் திருப்பரங்குன்றக் கோவை என்னும் பெயர்த்து. கோவைக்குரிய இலக்கணங்களின்படியே இயற்றப்பட்டுள்ளதென்றாலும் மற்ற கோவைகளினின்றும் முடிவில் மாறி உள்ளது. இறுதியில் தலைவன் துறவறத்தை மேற்கொள்ள தலைவியும் உடன்செல்ல விரும்ப, தலைவன் முதலில் மறுத்துப்பின்னர் உடன்பட இருவருமே துறவை மேற்கொள்வதாகப் பெரும்பிரிவு என்னும் தலைப்போடு முடித்துள்ளார். முற்றுமுள்ளது. ஆக்கியோர் கவிராசபண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8189

திருவாலவாய்ச் சொக்கலிங்க வெண்பா அந்தாதி

TIRUALAVAY CHOCKALINGA VENBA ANTADI

Pages : 153-164
Lines 34 on a Page; Tamil, Fair, New
Extent 240 granthas
Complete
This complete work written in a day's time by Kanaka Raja Iyer, M.A , contains 100 songs in Venba character. Songs are sung to invoke the Lord Chokkalingam of Thiruvalavay for his blessings.

Beginning:

காப்பு

"அந்தாதி வெண்பாவால் ஆலவாய்ச் சொக்கலிங்கன்

சிந்தாதி வீறும் சிறப்புரைக்க - வந்தாதி

ஓங்கார மாகும் ஒருகொம்பன் முன்னிற்கும்
ஆங்கார நீக்கி யகத்து"

நூல்

"திருவால வாயுரையும் தெய்வமே நாயேன்
கருவால வாயகலாக் காட்சி - தருவாயே
நீயே யருள்புரிய நேராயேல் வேறெவரைப்
பேயேன் சரண்புகுவன் பேர்த்து"

End:

"அழித்துப் பிறக்கவொட்டான் ஆலவா யண்ணல்
விழித்துத் திரிபுரத்தை வீத்தான் - அழித்துப்
புரட்டுமயல் வாழ்விற் புகுந்தே மெனினும்
திரட்டுவது ஞானத் திரு"

வாழ்த்து

"வாழி மதுரைநகர் வாழ்சொக்க லிங்கனருள்
வாழி யவன்றாள் மலரிருமை - வாழியரோ
அன்னவற்கு மாலையிட்ட அங்கயற்க ணம்மையருள்
நன்னயத்தார் வாழ்வுபெற நன்கு"

Colophon:

காலக்குறிப்பு

தொடக்கம் 19.3.63 சுபகிருது, பங்குனி சா.

பூர்த்தி 20.3.63 சுபகிருது, பங்குனி எ. புதன்கிழமை.

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய் சொக்கலிங்கன் வெண்பா அந்தாதி என்னும் பெயரை உடையது. திருவாலவாய்ச் சொக்கலிங்கனிடம் முறையிட்டுப் பாடிய பாடல்களாக உள்ளன. வெண்பா இலக்கணத்தினின்றும் விலகாமல் அந்தாதியாய் அமைத்துள்ளார். முற்றுமுள்ளது. 100 பாடல்களும், ஒரு வாழ்த்துப்பாவும் உள்ளன. இந்நூலை ஒரே நாளில் இயற்றியுள்ளார். ஆசிரியர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8190

மதுரைக் கயற்கண்ணி பதிற்றுப்பத்தந்தாதி

MADURAI KAYARKANNI PATIRRUPATTANTADI

Pages : 165-179
Lines 34 on a Page; Tamil, Fair, New
Extent 270 granthas
Complete
This complete work on Antadi Style contains 100 songs to extent blessings of Ankayarkani for self protection is written in a day's time by the author Thiru Kanaka Raja Iyer, M.A.

Beginning:

காப்பு

"மதுரைக் கயற்கண்ணி மாமலர்த்தாள் சாத்தும்
துதியைத் தமிழ்ப்பூந் தொடையை - மதிபுகுந்துள்
ஆக்கும் பதிற்றுப்பத் தந்தாதி யாமுருவிற்
காக்கும் ஒருகொம்புக் களிறு"

நூல்

"திங்களஞ் செல்வன் சிறப்பெய்த வந்தருள் தெய்வதமே
மங்கள நாயகி மாமறை யோதரு மாண்புடையாய்
சங்கர நாயகி சுந்தரன் தேவி தமிழ்க்கவிதை
அங்கர மேந்தும் கயற்கண்ணி யன்பினோ டாண்டருளே"

End:

"விளக்கொளியு மின்னொளியு விண்மீனின் வருமொளியும்
களக்கமிலா மதியொளியும் கதிரொளியும் தோல்வியுற
அளக்கரிய ஒளியுருவா மங்கயற்கண் ணம்மைநிலம்
துளக்கறவே யாள்வதற்குத் துணிந்ததுதிங் கட்குலமே"

வாழ்த்து

"அருளுருவத் தங்கயற்கண் ணம்மைதிரு வடிவாழ்க
தெருளுருவச் சொக்கலிங்கன் திருவடிகள் மலர்வாழ்க
மருளுருவத் தொடர்மறுத்த மாதவர்தம் குழுவாழ்க
பொருளுருவத் தமிழ்வாழ்க பொருந்தும்வட மொழிவாழ்க"

Colophon:

காலக்குறிப்பு

பதிற்றுப்பத்தந்தாதி

தொடக்கம் 20.3.63. சுபகிருதி பங்குனி ௭ புதன்.

பூர்த்தி 21.3.63. சுபகிருதி பங்குனி அ வியாழன்.

(குறிப்பு): இந்நூல் மதுரைக் கயற்கண்ணி பதிற்றுப் பத்தந்தாதி என்னும் பெயர்த்து. அங்கயற்கண் அம்மையிடம் அருள்வேண்டிப் பாடிய பாடல்களாக உள்ளன. அம்மையின் புகழ் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தன்னைக் காத்துத் தனக்கருள் செய்ய வேண்டி முறையிடப்பட்டுள்ளது. அந்தாதியாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்த நூறு பாடல்களையும் ஒரே நாளில் இயற்றியுள்ளார். ஆசிரியர் பெயர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றுமுள்ளது.

R.8191

சுந்தரேசர் திருவூசல்

SUNDHARESAR TIRUVOOSAL

Pages : 180-182
Lines 32 on a Page; Tamil, Fair, New
Extent 50 granthas
Complete
This work, complete in 10 stanzas in Praise of Lord Siva and sung aptly to the tune of the movement of a swing in which Lord Siva was enshrined, is written by Kanakaraja Iyer, M.A.

Beginning:

காப்பு

"என்னூசல் நெஞ்சமர்ந்தான் இன்றமிழ்தேர் சொக்கலிங்கன்
பொன்னூச லாடும் புதுமையினை - மின்னூசல்
நாவினினி தோத நயந்தருளும் சித்தியெலாம்
ஏவியருள் வேழமுகன் இன்று"

நூல்

"மணங்கமழும் கடப்பமலர் வளருங் காட்டில்
வாசவனும் வெண்களிறும் வழிபா டாற்ற
வணந்திகழும் இந்திரவி மானத் தானே
மகிமைபெறு மாலயத்தே மண்ணும் விண்ணும்
குணங்கெழும விசைத்தமிழாற் குலவிப் போற்றக்
குறைகூற வறியாத குடிகள் வாழ்த்த
அணங்கரசி னருகமர்ந்தாய் ஆடாய் ஊசல்
ஆலவாய் உடையபிரான் ஆடாய் ஊசல்"

End:

"இந்திரனே முதலாயோர் இறைஞ்சி யேத்த
இருந்தவத்து முனிவரரும் இருந்து வாழ்த்தச்
சந்திரனே தலைவணங்கி தாழ்வு காட்டத்
தாரகையி னினமெலாம் சரணம் சார
மந்திரமே மறைதேரு மறையோர் போற்ற
வண்டமிழின் புலவர்கரம் வணங்கி வாழ்த்த
அந்தரமே ஒளிபடர ஆடாய் ஊசல்
ஆலைவாய் உடையபிரான் ஆடாய் ஊசல்"

வாழ்த்து

"காலவாய் வீழாக் கருணைபொழி சொக்கலிங்கன்
ஆலவாய் ஈசன் அருளூசல் - சீலவாய்
வாழ்வார் முகமலர்ந்து வாழியரோ ஞாலத்தே
தாழ்வார் உயர்வுபெறத் தந்து"

Colophon:

சுந்தரேசர் திருவூசல் காலக்குறிப்பு

தொடக்கம் 21.3.63. சுபகிருது பங்குனி அ. வியாழன்

பூர்த்தி 21.3.63 சுபகிருது பங்குனி அ. வியாழன்

(குறிப்பு): இந்நூல் சுந்தரேசர் திருவூசல் என்னும் பெயரை உடையது. கலம்பக உறுப்புகளுள் ஒன்றானது ஊசல். அந்த ஊஞ்சலிலே சொக்கலிங்கனை அமர்த்தி ஆட்டச் செய்கின்றார் ஆசிரியர். ஆட்டத்திற்கேற்ப அவனின் பெருமைகளைப் பேசி இறுதியில் "ஆலவாய் உடையபிரான் ஆடாய் ஊசல்" என்று முடிக்கிறார். ஒவ்வொரு பாடலும் இவ்வாறே முடிகிறது. மொத்தம் 10 பாடல்கள் உள்ளன. முற்றும் உள்ளது. ஆக்கியோர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார்.

R.8192

அங்கயற்கண்ணம்மை யருளூசல்

ANGAYARKANNAMMAI YARULOOSAL

Pages : 182-185
Lines 38 on a Page; Tamil, Fair, New
Extent 50 granthas
Complete
Similar to the work described under the previous no. The only difference is that here the Goddess Ankayarkannammai is praised instead of Lord Sundaresa. Complete. Author is Kanaka Raja Iyer, M.A.

Beginning:

காப்பு

"ஆணிப்பொன் னூசலிலே அங்கயற்கண் ணம்மையெனும்
மாணிக்க வல்லி மகிழ்தூங்கப் - பாணிக்குத்
தக்கவா றாடும் தமிழூசற் பாட்டிசைக்க
முக்கண்வே ழத்தருளை முன்று"

நூல்

"ஓங்காரத் தகப்பொருளா யொளிருந் தாயே
ஓதுமறைப் பொருள்தெளிவா குளத்தே நிற்பாய்
யாங்காண முனிவரரும் இமையோர் தாமும்
இறைஞ்சிநிற்க அரியணைமேல் இருந்த செல்வி
தீங்காதல் வலியாலே சிவத்தை நாடத்
திசையமருக் கெழுந்தருளும் தேவ தேவீ
ஆங்கார மெமக்கடங்க ஆடா யூசல்
அங்கயற்கண் பெருமாட்டி ஆடாய் ஊசல்"

End

"மணவாள வேடமுடன் வருமோர் பித்தன்

மகட்கொடுக்க வருதாய் முன் மதுரைக் கண்ணே

தணவாத பழமைநிலை தனக்கு ளோர்ந்து

தனித்துணைவ னுடன்வருதல் தகவே நோக்கி

உணவாதி பனாகவுற வொருவ ரில்லை

உனைமணந்தேன் யானெனவே யுரைத்த செல்வி

அணவாத பொருளைமணந் தாடா யூசல்

அங்கயற்கண் பெருமாட்டீ ஆடா யூசல்"

வாழ்த்து

"ஆலவாய் இறைவன் நாமம் அடைந்தருள் இறைவி வாழ்க

ஞாலவாய் நலமே யோங்க நான்மறை முதுநூல் வாழ்க

கோலவாய் மகளி ரோடு கொழுநரும் குலவி வாழ்க

சீலவாய் நிலைக்கு ஞானச் செல்வரு முலகும் வாழ்க"

Colophon:

அங்கயற்கண்ணம்மை அருளூசல் காலக்குறிப்பு

தொடக்கம் 21.3.63 சுபகிருது பங்குனி அ வியாழன்

பூர்த்தி 22.3.63 சுபகிருது பங்குனி கூ வெள்ளி

(குறிப்பு): இந்நூல் அங்கயற்கண்ணம்மை யருளூசல் என்னும் பெயர்த் து. இதில் அங்கயற்கண்ணம்மையை ஊஞ்சலில் வைத்து ஆடி மகிழ்ந்திடப் பாடல்களைப் பாடியுள்ளார். இறைவியின் பெருமைகளை எடுத்துக் கூறி இறுதியில், "அங்கயற்கண் பெருமாட்டீ ஆடா யூசல்" என்று முடிக்கிறார். மொத்தம் பத்துப்பாடல்கள் இருக்கின்றன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றும் உள்ளது.

R.8193

மீனாட்சி சுந்தரேசர் ஊசல்

MENATCI SUNDARESAR USAL

Pages : 185-187
Lines 38 on a Page; Tamil, Fair, New
Extent 50 granthas
Complete
This work by Kanaka Raja Iyer, M.A., is similar to those described under nos. R.8191 & R.8192. Here both Lord Sundaresa & Goddess Minakshi are praised. Complete. Contains 10 stanzas.

Beginning:

காப்பு

"மீனாட்சி யென்றும் வியன்சுந்த ரேசனென்றும்
வானாட்சி பூணுரிமை மற்றிருவர் - கோனாட்சி
ஒப்புதிரு வாலாவாய் ஊசலாட் டேரம்பன்
செப்புதமிழ் நெஞ்சே தெளி"

நூல்

"மரகதமும் செம்மணியும் மணந்தாற் போன்றும்
வான்வெளியும் மண்ணகமும் மயங்கல் போலும்
பரவுறுசை வவலம்பவனம் படர்ந்தாற் போன்றும்
பசுந்துளவும் சிஞ்சுகமும் பயின்றாற் போலும்
விரவியசெவ் வானமுகில் விளக்கம் போலும்
விண்டுசிவ னொருமைபெறும் வியப்பே போன்றும்
அரவரசை யணிபரமன் ஆடும் ஊசல்
அங்கயற்கண் ணம்மையொடும் ஆடும் ஊசல்"

End:

"பாலம்வாய் ஒருவிழிகோன் பரமா வென்றும்

பனிமதியம் பரிதிவிழிப் பழையே யென்றும்

சீலம்வாய் முனிவரரும் தேவர் தாமும்

சிந்தைகசிந் தெழுமன்பாற் செப்பா நிற்க

மூலமாய் முளைத்தெழுந்த முதன்மை யாளன்

மும்மையுளே மறைந்துநின்ற முதிய மூர்த்தி

ஆலவாய் உடையபிரான் ஆடும் ஊசல்

அங்கயற்கண் ணம்மையொடும் ஆடும் ஊசல்

வாழ்த்து

"ஆலவாய் வாழிறையும் அங்கயற்க ணம்மையும்

ஞாலவாய் வாழ்மனித்தர் நன்மைபெறக் - கோலமாய்

ஊசலாட் டேற்க வுவந்தவருள் வாழியரோ

ஈசனாட்டா மன்றே யீது"

Colophon:

மீனாட்சி சுந்தரேசர் ஊசல் காலக்குறிப்பு

தொடக்கம் 22.3.63. சுபகிருது பங்குனி கூ வெள்ளிக்கிழமை

பூர்த்தி 22.3.63 சுபகிருது பங்குனி கூ வெள்ளிக்கிழமை

(குறிப்பு): இந்நூல் மீனாட்சீ சுந்தரேசர் ஊசல் என்று பெயர் பெற்றுள்ளது. இதன் கண்ணுள்ள பாடல்களில் இறைவனது பெருமைகளை வியந்து பாராட்டி இறுதியில் "அங்கயற்கண் ணம்மையொடும் ஆடும் ஊசல்" என்று முடித்துள்ளார். மொத்தம் பத்துப் பாடல்கள் உள்ளன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றும் உள்ளது.

R.8194

திருவாலவாய்த் திருச்சாழல்

TIRUVALAVAY-T-TIRUCHALAL

Pages : 18-199
Lines 34 on a Page; Tamil, Fair, New
Extent 260 granthas
Complete
A complete work by Kanaka Raja Iyer, M.A., containing 100 stanzas in the form of Questions and Answers on the greatness of Lord Siva.

Beginning:

காப்பு

"அங்கயற்கண் ணம்மையொடு மாலவாய்ச் சொக்கலிங்கன்
பங்கயப்பூம் பாதம் பரவுதற்கே - சங்கமகிழ்
சாழலினை யோதத் தமிழ்மயமாம் வரக்கருளும்
வேழமுகன் சித்தியின் வித்து"

நூல்

"திருவால வாய்மகிழும் தேவன் வினைவசமோ
கருவால வாய்வந்து காசினிக்கே தோன்றினான்
அருவா யுருவா யருவுருவ மாகுமவன்
கருவாய்தல் நாடகத்துக் காட்சிகாண் சாழலே"

End:

"அருள்தெளியா மனத்தினருக் கருள்விளக்க மருள்வானும்
இருள்பொதியு மனத்தினரை யீர்ப்பவனு மிவனேயோ
பொருள்தெளிய விளக்கியருள் புராணருரு வரனுமிவன்
தெருள்கனிய அருள்பொழியும் சிவனுமிவன் சாழலே

அரனில்லை அரியில்லை அயனில்லை மறையில்லை
பரனில்லை யென்பார்க்கும் பரமனருள் வாய்ப்பதுண்டே
உரனில்லை உளனில்லை உணர்வில்லை யென்பார்க்கும்
வரனில்லை வாழ்விலென மறுப்பதுண்டோ சாழலே".

Colophon:

காலக்குறிப்பு

திருச்சாழல்

தொடக்கம் 23.3.63. சுபகிருது பங்குனி க0 சனிக்கிழமை

பூர்த்தி 24.3.63. சுபகிருது பங்குனி கக் ஞாயிற்றுக்கிழமை

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய்த் திருச்சாழல் என்னும் பெயர்த்து . இதன்கண் இறைவனது பெயருமைகள் பேசப்படுகின்றன. பிரபந்தத்தில் ஓர் உறுப்பாகிய சாழல் என்பது மகளிரின் விளாட்டுகளில் ஒன்றாகும். இரண்டு மகளிரில் முதலாமவர் இறைவனைப்பற்றிய பெருமையைக் கூறி வினாவில் முடிக்க மற்றவர் விடையாகக் கூறும் பகுதியாகவே ஒவ்வொரு பாடலும் அமைந்திருக்கிறது. ஆக்கியோர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ., மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. முற்றுப்பெற்றுள்ளது.

R.8195

திருவாலவாய்த் திருவுந்தியார்

TIRUVALAVAY-T-TIRUVUNDIYAR

Pages : 200-209
Lines 33 on a Page; Tamil, Fair, New
Extent 150 granthas
Complete
Poem containing 108 songs in Praise of God is commonly sung by girls, while they swing in swings. A complete work by Thiru Kanaka Raja Iyer, M.A.

Beginning:

"அன்பர்க் கெளியவன் ஆலவாய் வாழ்பவன்
இன்பம் அருளு மென்றுந் தீபற
எங்கும் இருக்கும் என்று உந்தீபற
ஆலவாய் மேவினன் ஆரணத் துட்பொருள்
காலம் கடந்தா னென்றுந் தீபற
கருணை பொழியு மென்றுந் தீபற"

End:

"எனதென யானென நனவினிற் கனவினில்
மனதுளே நிறையு மென்றுந் தீபற
வாழ்வு மதுரை யென்றுந் தீபற
என்றுமே யெங்குமே யாவுமா யிலங்குவான்
மன்றுளே யாமென்றுந் தீபற
மதுரையில் நிறையு மென்றுந் தீபற"

Colophon:

காலக்குறிப்பு : திருவ்ாலவாய்த் திருவுந்தியார்

தொடக்கம் 25.3.63. சுபகிருது பங்குனி கஉ

பூர்த்தி 26.3.63 சுபகிருது பங்குனி கங

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய்த் திருவுந்தியார் என்னும் பெயர்த்து. இதன்கண் 108 பாடல்கள் அமைந்துள்ளன. மகளிர் விளையாட்டுகளில் சென்றாகியது. பாடிக்கொண்டே ஆடும் விளையாட்டு. அந்தப் பாடல்கள் எல்லாம் பரமனின் பெருமையைப் பாராட்டுவதாகவே அமைந்துள்ளன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றுமுள்ளது.

R.8196

பிடித்த விண்ணப்பம்

PIDITHTHA VINNAPPAM

Pages : 210-215
Lines 37 on a Page; Tamil, Good, New
Extent 110 granthas
Complete

A complete work in 25 stanzas in Praise of Lord to entreat his blessings, by N. Kanaka Raja Iyer, M.A.

Beginning:

"ஆதி நாயகனே அமரர் நாயகனே
ஆரணத் தடிநடு முடியாய்
சோதி நாயகனே சுடர்விழி யுடைய
தோன்றலே யாலவா யுடையாய்
மாதி னாயகனே அங்கயற் கணியார்
மருவு நாயக நின்கழலை
வேத நாயகனே பிடித்தனன் மொழியும்
விண்ணப்பம் கேட்டருள் புரியே

அருவமே யுவந்தாய் அருவுரு வமைந்தாய்
அழகுசால் உருவமு முடையாய்
பருவமே கருதி யெழுதரு முகில்போற்
பத்தர்நல் லுளத்தருள் பொழிவாய்
சருவனே சிவனே மதுரைமா நகராய்
சத்தியாம் கயற்கணி தலைவ

வெருவரல் தவிர்தாள் பிடித்தன னடியேன்
விண்ணப்பம் கேட்டருள் பொழியே"

End:

24. "பூவில்வாழ் மகளிர் இருவரும் வணங்கிப்
பொழுதுறப் பூசனை புரியும்
தேவியாம் கயற்கண் செல்வியை மணந்த
தேவனே தென்னவர் திருவே
ஆவியாய் உடலாய் அவற்றுள் ளுயிராய்
அமைந்தனை அவனியே புரப்பாய்
மேவினேம் நின்பூங் கழலினைப் பிடித்தேன்
விண்ணப்பம் கேட்டருள் புரியே

25. வானவர் குலத்தின் வருத்தமே யொழிய
மதலையே படைக்கடல் நடத்தும்
மானவ னெனநீ வழுதியா யடைந்தாய்
மனித்தருக் கருள்செய நினைத்தோ
கோனவர் தலைவன் குறைவிலாப் புதையல்
குரவர னெனவி ளங்கினையே
மீனவர் தலைவா வியன்பதம் பிடித்தேம்
விண்ணப்பம் கேட்டருள் புரியே"

Colophon:

காலக்குறிப்பு: பிடித்த விண்ணப்பம்

தொடக்கம் 26.3.63. சுபகிருது பங்குனி கங

பூர்த்தி 26.3.63. சுபகிருது பங்குனி கங

குறிப்பு: இந்நூல் பிடித்த விண்ணப்பம் என்னும் பெயர்த்து. இதன் கண் 25 பாடல்கள் உள்ளன. இறைவனின் பெருமைகளைப் பாராட்டி அவன் திருவடியைப் பிடித்து அருள வேண்டி விண்ணப்பம் செய்வதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இதனை இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றுமுள்ளது.

R.8197

திருவாலவாய்த் திருத்தசாங்கம்

TIRUVALAVAY-T-TIRUTTASANGAM

Pages : 215 & 216
Lines 59 in a work; Tamil, Good, New
Extent 40 granthas
Complete

As per this work Lord himself ruled in the guise of Pandiyan. Here a Parrot adorning the hand of Goddess replies to certain questions put to her on the Lord's ten parts i.e., name, place, etc. complete in 10 stanzas by Kanaka Raja Iyer, M.A.

Beginning:

திருநாமம்

1. "நன்றுமொழி பைங்கிளியே நான்மாடக் கூடலாற்கு
ஒன்றுதிரு நாமம் உவந்துரையாய் - என்று மன்பர்
வாக்குமனம் வாழ்வுவிழை மாமதுரைச் சொக்கனென்று
தேக்குசுவை நாவிற் செறித்து.

நாடு

2. "இன்பமொழி நன்குபுகல் ஈடிணையின் பைங்கிளியே
நன்பமரு மெம்பெருமான் நாடுரையாய் - அன்பர்பணி
ஈண்டியிசை யோடுவளர்ந் தேழுலகும் போற்றவுயர்
பாண்டியநா டென்றே பணிந்து"

End:

மாலை

9. "ஐந்துநிறம் வாய்ந்தழகு மார்ந்தசுக மேவுரையாய்
எந்தைபிரான் பூணும்தார் யாதென்றே - ஐந்தெழுத்தன்
ஐந்துமுகன் ஆலவாய் ஆண்டபிரான் வேப்பந்தார்
இந்துகுலம் வாழ்வேற்றா னென்று"

கொடி

10. "முக்கண்ணன் எணடிசையோர் முத்திபெற நாடிவரும்
சொக்கையன் கொண்டகொடி சொற்றருளாய் - கைக்கிளியே
பண்டுவிடை கொண்டபரன் பாண்டியநா டுற்றதனால்
கொண்டுனது மீனக் கொடி".

Colophon:

தசாங்கம் காலக்குறிப்பு

தொடக்கம் 27.3.63. சுபகிருது பங்குனி கஙு. புதன் காலை

பூர்த்தி 27.3.63. சுபகிருது பங்குனி கஙு. புதன் காலை.

குறிப்பு: இந்நூல் திருவாலவாய்த் திருத்தசாங்கம் என்னும் பெயர்த்து. இதன்கண் 10 பாடல்கள் உள்ளன. இந்நூலுள், இறைவன் பாண்டியனாக அரசு வீற்றிருந்த பெருமை பேசப்படுகிறது. இறைவியின் மென்கரத்தில் உள்ள பைங்கிளியைப் பார்த்து இறைவனது பத்து அங்கங்களாகிய பெயர், நாடு, நகர், நதி, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை கொடி ஆகியவற்றைப்பற்றிக் கேட்க, பைங்கிளியும் அவற்றிற்கான விடை பகர்வதாக பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. முற்றுமுள்ளது. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8198

திருவாலவாய்த் திருப்பள்ளியெழுச்சி

TIRUVALAVAY-T-TIRUPPALLI YELUCHI

Pages : 217-219
Lines 38 on a Page; Tamil, Good, New
Extent 35 granthas
Complete

This work by Kanaka Raja Iyer, M.A. comprising 10 songs on the greatness of God when sung at dawn, will yield prosperity. Complete.

Beginning:

செங்கதிர்ப் பரிதிமால் திருவளர் குணக்கில்
செயலுற வெழுந்தனன் திசைதிசை யெல்லாம்
பொங்கிய தெழிலொளி புள்ளினம் எழுந்த
புதுமொழி பயில்வுறும் புதல்வரே புரைய
எங்கணும் காகங்கள் இயல்பினாற் கரையும்
இளைஞரு மகளிரு மிறைஞ்சுவான் விரைந்தார்
அங்கயற் கண்ணியின் அருட்பெருந் தலைவ
ஆலவாயா பள்ளி யெழுந்தரு ளாயே"

End:

10. "பொற்கிழி தருமியே புலவனாய்ப் பெறவே
புலவர்மா வேடமே புனைந்தருள் பரம
நற்பொருள் மருகனே நணுகுதல் கருதா
நலம்பொலி மாமனா நடந்தருள் கிழவ
அற்புத நிதிக்கிழி அளவினி லடங்கா
அரும்பொருள் நிரம்புற அரசனுக் கருள்வாய்
அற்பொலி களத்தினாய் அருள்பொலி விழியாய்
ஆலவாயாபள்ளி யெழுந்தரு ளாயே"

Colophon:

காலக்குறிப்பு : பள்ளியெழுச்சி

தொடக்கம் : 27.3.63. சுபகிருது பங்குனி கங. புதன் 12 மணி

பூர்த்தி : 27.3.63. சுபகிருது பங்குனி கங. புதன் பிற்பகல் 1 மணி

குறிப்பு: இந்நூல் திருவாலவாய்த் திருப்பள்ளி யெழுச்சி என்னும் பெயரினை உடையது. மொத்தம் 10 பாடல்கள் உள்ளன. இறைவனது பெருமையைக் கூறிப்பொழுது புலரும் தன்மையைக் கூறி, "ஆலவாய ா பள்ளி யெழுந்தருளாயே" என்ற அமைப்பிலேயே ஒவ்வொரு பாடலும் அமைந்துள்ளது. இந்நூலை இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றும் உள்ளது.

R.8199

திருவாலவாய்த் திருவெம்பாவை

TIRUVALAVAY-T-TIRUVEMBAVAI

Pages : 219-225
Lines 37 on a Page; Tamil, Good, New
Extent 170 granthas
Complete

A complete work by Kanaka Raja Iyer, M.A. comprising 30 songs on the greatness of God to inspire people to workship his feet.

Beginning:

"அருளின் திருவுருவன் ஆனந்த மூர்த்தி
மருளின் மயங்குவேம் வாழ்வுபெற வந்தான்
பொருளின் விளக்கம் புலப்படுத்தும் செம்மல்
இருளின் கலக்கமெலாம் ஏகுவித்துக் காப்பான்
தெருளின் முடிமேல் திகழும் பதத்தான்
அருளின் திறம்விளங்கத் தோன்றும் சடையான்
அருளின்பம் ஓங்கவே ஆலவாய் வாழும்
பொருளின் புகழ்பாடிப் போற்றேலோ ரெம்பாவாய்".

End:

"மீன்விளங்கும் வானம் வெளுக்குமுன் எம்பெருமான்
தான்விளங்கும் கோயில் தலைக்கடைக்கே வந்துற்றோம்
கோன்விளங்கு கோலம் குளிர்விழியால் நோக்கினோம்
மான்விளங்கு கையால் மறாதெம்மை யேற்றருள்க
தேன்விளங்கு மாலை திருவருளால் தந்தருள்க
கான்விளங்கு பூங்கடம்பின் காதல் எமக்குரிதாம்
ஊன்விளங்கு முத்தலைவேல் ரெப்பிலியின் பின்செல்வோம்
ஈன்விளங்கு கூடனலம் ஈயேலோ ரெம்பாவாய்".

Colophon:

காலக்குறிப்பு : திரவாலவாய்த் திருவெம்பாவை.

தொடக்கம் : 27.3.63. சுபகிருது பங்குனி கங. புதன் மாலை 4 மணி

பூர்த்தி : 28.3.63. சுபகிருது பங்குனி கரு. வியாழன் பகல் 12 மணி

குறிப்பு: இந்நூல் திருவாலவாய்த் திருவெம்பாவை என்னும் பெயர்த்து. இதன்கண் 30 பாடல்கள் உள்ளன. இறைவனது பெருமைகளைக் கூறி அப்படிப்பட்ட இறைவனின் அடிபணிவோம் வாராய் பாவாய் என்று மற்றவர்களைக் கூவி அழைப்பதாக அமைந்துள்ளது. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். முற்றும் உள்ளது.

R.8200

திருவாலவாய்ச் சொக்கன் நெஞ்சுவிடு தூது

TIRUVALAVAY CHOKKAN NENJUVIDU TUDU

Pages : 226-235
Lines 42 on a Page; Tamil, Good, New
Extent 350 granthas
Complete

A Complete work by Kanaka Raja Iyer, M.A., in 200 stanzas. Explains the structural peculiarity, greatness, and the beauty of the place adorned by Lord Siva of Thiruvalavay.

Beginning:

காப்பு

"செந்தமிழ் நாடாண்ட திருவால வாய்ச்சொக்கன்
சொந்தமுற நெஞ்சுவிடு தூதுரைக்கப் - பந்தமறுத்
தெல்லாப் பொருளுமருள் ஒரம்ப மால்களிற்றைச்
சொல்லாற் புகழ்வாம் துதித்து"

7

நூல்

"பொன்மலிந்து வெற்றிப் புகழ்மலிந்து நீர்மலிந்து
தென்மலிந்து பெண்டிர் நிறைமலிந்து - மின்மலிந்து
கார்முகிலான் வாழ்வினிடைக் காண்டற் குரியனவாம்
சீர் மலிந்து பேர்மலிந்து செம்மைகுன்றாப் போர்மலிந்து
நானிலத்து மிக்கபுகழ் நான்மாடக் கூடனகர்
தானிலைத்து வீற்றிருக்கும் தந்தை பால்"

End:

- கவிமேவு

"கண்ணின் கருணையான் காதலான் சேவலான்
அண்ணல் திருவருளி லாட்சியினித் - திண்ணமுறச்
சேய்மைமறந் திப்பொழுதே தென்றமிழ்ச் சொக்கன்பால்
தூய்மைபடிந் தேகிவரச் சொல்கின்றேன் - வாய்மைநின
துண்மையுற மெய்ம்மையுற ஓதிவர தூதென்று
திண்மையுறச் செப்புவேன் செல்"

Colophon:

காலக்குறிப்பு நெஞ்சுவிடு தூது

தொடக்கம் : 28.3.63. வியாழன் சுபகிருது. பங்குனி கச. மாலை 4.30 மணி

நிறைவேற்றம் : 29.3.63. வெள்ளி சுபகிருது. பங்குனி கரு. பிற்பகல் 3.00 மணி

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய்ச் சொக்கன் நெஞ்சுவிடு தூது என்னும் பெயர்த்து. இதன்கண் 200 கண்ணிகள் அமைந்துள்ளன. திருவால வாய்ச் சொக்கனிடம் தன் நெஞ்சைத் தூதாக அனுப்புகின்ற தன்மையை எடுத்துரைக்கின்றது. இறைவனின் உருவ அடையாளங்களையும் அவனுடைய பெருமையையும், அவன் விற்றிருக்கும் இடத்தின் அழகையும் எடுத்துரைத்து நெஞ்சை அவன்பால் தூதாக அனுப்புதல். இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றுமுள்ளது.

R.8201

திருவாலவாய்ச் சொக்கலிங்கன் அடைக்கலமாலை

TIRUVALAVAY CHOCKALINGAM ADAIKALAMALAI

Pages : 236-242
Lines 34 on a Page; Tamil, Good, New
Extent 170 granthas
Complete
This work written by Kanaka Raja Iyer, M.A., is a complete. Songs numbering 50 to invoke god's blessings are sung in the form of surrending to God to absolve sin and remove unbearable grief.

Beginning:

காப்பு

"கருவால வாய்வருடம் காரணத்தை மாற்றத்
திருவால வாயுறையும் தேவன் - அருளால்
அடைக்கல மாலை அவன்றாள்மேற் சாத்தக்
கடைக்களிற்றின் பாதமே காப்பு"

1. "ஞால மனைத்தும் வழிபட்டு நல்வாழ்வுறவே கடைக்கண்ணின்
சீலம் விளக்கும் கயற்கண்ணி செல்வம் படைத்த சீமானே

ஆலம் களத்தே அடைந்தருளி அமரர் புரந்த கருணையினாய்
மூலம் தெளியா முதலேயோ மொழிவே னினருட்கடைக்கலமே"

End:

"ஆலம்வா யிறைகல் கொண்டே அழகுக் களத்தி னிறுத்து பிரான்
மூலம் வாயும் பொருளின்றி முளைத்த முளையா முழுமுதலே
சீலம் வாயும் ஞானியர்தம் சித்தத்தமர்ந்த திருக்கூத்தாய்
ஆலவாயி னரனேயோ அளியே னுண்டே கடைக்கலமே"

Colophon:

காலக்குறிப்பு : அடைக்கலமாலை

தொடக்கம் : 30.3.63 காலை 5 மணி. சுபகிருது பங்குனி கஎ. சனிக்கிழமை

நிறைவேறியது : 31.3.63 பிற்பகல் 2 மணி. சுபகிருது பங்குனி கஅ. ஞாயிறு

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய்ச் சொக்கலிங்கன் அடைக்கலமாலை என்னும் பெயர்த்து. இதன்கண் 50 பாடல்கள் உள்ளன. இறைவனே எனக்கு அடைக்கலம் தருவாயாக! என்று தான் படும் தாங்கொணாத் துன்பத்தை எடுத்துரைத்தலாகவே பாடல்கள் அமைந்துள்ளன. இயற்றியவர் கவிராசபண்டிதர் திரு. நா. கனகராசஐயர், எம்.ஏ. முற்றும் உள்ளது.

R.8202

திருவாலவாய்த் திருப்பெருந்தாண்டகம்

TIRUVALAVAY TIRUPERUNDHANDAHAM

Pages : 242-244
Lines 36 on a Page; Tamil, New, Good
Extent 60 granthas
Complete
A complete work in ten songs in praise of God to invoke his blessings by Kanaka Raja Iyer, M.A.

Beginning:

"கல்லாத கலையில்லாய் கல்வி யில்லாய்
காணாத காட்சியிலாய் கருத்து மில்லாய்
சொல்லாத சொல்லுமிலாய் துணிபு மில்லாய்
சூழாத சூழ்வில்லாய் துணிபு மில்லாய்
இல்லாத வுரையுளிலாய் இருக்கை யில்லாய்
இதுவதுவென் றெவராலு மிசைத்த லில்லாய்
செல்லாத செலவில்லாய் சிறப்பு மில்லாய்
திருவால வாயுறையும் தேவர் தேவே"

2. "பாடலிலே யழுந்திநிற்கும் பதமே யாவாய்
பதத்தினகம் திணிந்தபொருட் பகுதி யாவாய்
ஆடலிலே திளைக்கின்ற அருளின் மூர்த்தி
ஆனந்தப் பெருங்கடலே அதனுள் யாமும்
நீடவருள் புரிவதுநின் நினைப்பே யாகும்
நினைத்தியாமே யதனையுறு நிலையு முண்டோ
தேடரிய பெரும்பொருளே தெளிந்த தேனே
திருவால வாயுறையும் தேவர் தேவே"

End:-

10. "வேதங்கள் விளம்புபொருள் விளக்கும் தேவ
வேம்பன்மனம் விழைந்ததெலாம் விளைக்கும் தேவே
பூதங்கள் தொறும்புகுந்து புரளா நின்றாய்
பூதகணம் பணிபுரியப் புரத்தை வென்றாய்
சாதங்கள் மீண்டெய்தாச் சதள மீதே
சரண்பற்று மடியேமைச் சார்விப் பாயே
சீதங்கொள் பொற்கமலத் திருத்தம் வாழும்
திருவால வாயுறையும் தேவர் தேவே!

Colophon:

காலக்குறிப்பு : திருப்பெருந் தாண்டகம்.

தொடக்கம் : 31.3.63. பிற்பகல் 1.30 மணி சுபகிருது. பங்குனி கஅ ஞாயிறு

நிறைவேற்றம் : 31.3.63. பிற்பகல் 3 மணி சுபகிருது. பங்குனி கஅ ஞாயிறு

(குறிப்பு): இந்நூல் திருவாலவாய்த் திருப்பெருந்தாண்டகம் என்னும் பெயர் பெற்றுள்ளது. இறைவனின் பெருமைகளை எடுத்துக் கூறி அருள் வேண்டித் துதிப்பது.மொத்தம் பத்துப்பாக்கள் உள்ளன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. முற்றுமுள்ளது.

R.8203

கயற்கண்ணி கருணைச்சிறப்பு

KAYARKANNI KARUNAICHIRAPPU

Pages : 244-246
Lines 34 on a Page; Tamil, New, Good
Extent 40 granthas
Complete

This complete work in 16 songs by Kanaka Raja Iyer, praises the greatness and kindness of Goddess Kayarkanni.

Beginning:

காப்பு

"சித்தி விநாயகன் சேவடியைச் சென்னிவைத்துப்
பத்தி யெழுமெய்ப் பரவசத்தாற் - சத்திஇவை
அங்கயற்கண் ணம்மை யருட்சிறப்பை யோதுகின்றேன்
இங்கயற்கண் வேறொன் றிலேன்"

நூல்

1. "போற்றிப் புகழும் புகற்சிக் கடங்குவதோ
சாற்றித் தெளிந்தாரோ சான்றவர்தாம் - ஊற்றினெழும்
அத்தப் பெருக்கை யருளங் கயற்கண்ணி
சித்தக் கருணைச் சிறப்பு"

End:

16. "துதிக்கு ளடங்காத தூய்மை பொருந்தி
மதிக்கு மனத்துக்கும் வாய்த்த - நிதிக்கு
நிகரப் பொலியும் நிலையங் கயற்கண்
சிகரக் கருணைச் சிறப்பு".

Colophon : (தொடக்கமும் பூர்த்தியும்) (2.4.64)

(குறிப்பு): இந்நூல் கயற்கண்ணி கருணைச் சிறப்பு' என்னும் பெயர் பெற்றது. இறைவியின் பெருமைகளையும் கருணையையும் பெரிதும் போற்றிப் பாடப்பட்டுள்ளது. மொத்தம் 16 பாடல்கள் உள்ளன. இயற்றியவர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ . ஆவார். முற்றுமுள்ளது.

R.8204

சொக்கலிங்க மாலை

CHOCKKALINGA MALAI

Pages : 246-258
Lines 34 on a Page; Tamil, New, Good
Extent 360 granthas
Complete
The author Kanaka Raja Iyer feels extremely happy in praising the fame of Lord Siva in 100 Songs.

Beginning:

காப்பு

"கற்றார் மனங்கவரும் காதலான் மாமதுரைப்
பொற்றா மரைக்கரையிற் போந்தருளும் - பற்றாரும்
சீலமிகும் வேழத் திருவருளாற் சொக்கலிங்க
மாலைமிசை நாவான் வரும்"

நூல்

1. "திருவின் மாமகள் செல்வ நல்கவே
திசையின் நான்முகன் திவ்ய பத்தினி
உருவின் மிக்கநா வுயர்வு தந்தருள்
உவமை யில்கலை யுவந்து நல்கவே
கருவின் வாழ்வுறுங் கவலை மாறவே
காத லோடுநின் கழலை நெஞ்சுளே
துருவி நிற்பவர் சோர்வு மாற்றுவாய்
சொக்க லிங்கமே சொக்க லிங்கமே"

End:

103. "ஈகை வேட்பமே ஈய வெண்ணலம்

ஏற்றம் வேண்டுவேம் இழிவி னீங்கலேம்.

சாகை யாயிரம் தாங்கு தோன்மறை

தலையி லேற்றிய தாம ரைக்கணோ.

ஒகை மிக்கதோர் உணர்வி னோடுசார்

உறுதி கொண்டுள உள்ள தாயினுய்

தோகை மாமயில் தோன்றல் தந்தையே

சொக்க லிங்கமே சொக்க லிங்கமே"

"வாழி யாலவாய் மதுரை யம்பதி

வாழி யாங்கெழு மதில்கொ ளாலயம்

வாழி யாலயம் வாழ்வு கொண்டவன்

வாழி தேவனை மணந்த தேவியே

வாழி வேழமே வாழி வேலினான்

வாழி அன்பினால் வந்த சான்றவர்

வாழி நற்பணி வழி நன்மணம்

வாழி வாக்கிலே வளரு மாலையே"

Colophon:

சொக்கலிங்க மாலை முற்றும்

தொடக்கம் : 2.4.64. பூர்த்தி 6.4.64.

(குறிப்பு): இந்நூல் சொக்கலிங்க மாலை என்னும் பெயர்த்து. இதன்கண் நூறு பாடல்கள் உள்ளன. சொக்கலிங்கனின் புகழ் தக்கவாறு பாடப்படுகின்றது. ஒவ்வொரு பாடலும் சொக்கலிங்கமே சொக்கலிங்கமே என்று முடிவடைகின்றது. இந்நூலை இயற்றியவர் கவிராச பண்டிதர் கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார். சொக்கலிங்கனுக்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர். முற்றுமுள்ளது.

R.8205

அங்கயற்கண்ணி மாலை

ANGAYAR KANNI MALAI

Pages : 259-271
Lines 34 on a Page; Tamil, New, Good
Extent 350 granthas
Complete
The complete work in 100 songs by Kanaka Raja Iyer, is a garland of songs. The author feels happy in garlanding the goddess with his songs of garland

காப்பு

"ஆலவாய் கோயில்கொளும்அங்கயற்க ணம்மையருள்
கோலவே வேண்டும் குறிப்பினாற் - சால
அருள்விளக்க மாலை அவள்தாளிற் சாத்திப்
பொருள்விளக்கம் கேட்பன் புகுந்து"

விநாயகன்

"பொற்றா மரைக்கரையிற் போந்தமரும் ஏரம்பன்
நற்றா மரைக்கழலை நன்கடைவாம் - முற்றா
மதிமலையும் சொக்கை மணந்தகயற் கண்ணி
துதிமயமாம் மாலை சொல்"

நூல்

"பாண்டிய நாடு புரிந்த தவத்துறு பண்டைய பேரமுதே
ஈண்டிய வன்பினர் நெஞ்சிடை நன்னரிலங்கிய நாண்மலராய்
வேண்டிய வாழ்வுகள் வேண்டு முனிந்து விளக்கிய மெய்யருளால்
ஆண்டியை வேண்டி மணந்த கோமாட்டியே அங்கயற் கண்ணியள்ளே"

End:

100. "உறுவது தேர்கிலம் உற்றது கோர்கிலம் முன்னரு
துணையாய்
பெறுவது தேர்கிலம் வேறினி யென்னை
பிறப்போடிறப்பெமையே
தெறுவது மாய்ந்த தறுபகை போயின
தேவ ரின்வஞ் சினமே
அறுபது நான்குறு திருவிளை யாடலை
அங்கயற் கண்ணி யள்ளே"

வாழ்த்து

"வாழிய சொக்கன் இணைக்கழல் அன்பர் மனத்த வாய்ப்பறவே
வாழிய அங்கயற் கண்ணி பதத்தளிர் மானவர் வாழ்வுறவே
வாழிய வேழ விநாயகன் வேலவன் மாமது ராபுரியே
வாழிய தண்டமிழ் நாட்டிடை யுள்ள மலைகளோ டாறுகளே"

பயன்

"அங்கயற் கண்ணிதிருப் பெயரோதி அறுபது நாற்பதுமாம்
மங்களப் பாடலை யோதி நினைப்பவர் மாநில வாழ்வினிலே
பங்கயப் பெண்டிர் இருவர் துணையொ மார்ப்பதி மீன்விழியாள்
சங்கையர் நெய்து நிலையும் பேறுருவர் சத்திய வாக்கிதுவே".

Colophon:

காலக் கணக்கு

தொடக்கம் : 6.4.64.

பூர்த்தி : 10.4.64. பூரட்டாதி, உத்திரட்டாதி சுக்கிரவார பிரதோஷத் தெட்டு.

பொருந்திய திருமகள் அருள்பெறு நாளில் நிறைவேறியது.

(குறிப்பு): இந்நூல் அங்கயற்கண்ணி மாலை என்னும் பெயர்த்து. இதன்கண் 100 பாடல்கள் உள்ளன. இறைவனின் இல்லாளுக்கு - இவ்வுலகத் தலைவிக்கு - பாமலைகளைச் சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராச ஐயர். இறைவியின் புகழ் மலர்களாலேயே மாலை தொடுக்கப்பட்டிருக்கின்றது. முற்றுமுள்ளது.

R.8206

அங்கயற்கண்ணி சொக்கலிங்கன்

இரட்டை மணிமாலை

ANGAYARKANNI CHOCKALINGAN

IRATTAI MANIMALAI

Pages : 271-273
Lines 34 on a Page; Tamil, New, Good
Extent 64 granthas
Complete
The author Kanaka Raja Iyer, M.A., garlands Lord Siva & his betterhalf with his garland gem like 20 songs. Each gem of the garland praises the fame and greatness of the Lord. Complete.

Beginning:

காப்பு

"அங்கயற் கண்ணியொடும் ஆலவாய்ச் சொக்கலிங்கன்
பங்கயப் பாதம் பணிந்திசைக்க - மங்களமாய்
யாக்கும் இரட்டைமணி மாலையினை யேரம்பன்
காக்கும் மொழியுட் கலந்து"

நூல்

"அருளின் திருவுருவாம் அங்கயற்கண் ணன்னை
மருளின் மயங்கு மனத்தார் - தெருளுயரக்
கட்இடையா னோக்கியருள் காலும் பெருஞ்சிறப்பின்
உட்இடையே வேதத் துளது"

End:

"அகப்பொரு ளாகிப் புறப்பொரு ளாகி அகப்புறமாய்
உகப்புறு மெய்ப்பொருளாகிய கூடல் ஒருபொருளைத்
தகப்பெறு நெஞ்சகக் கோயில் சமன்செயவே
அகப்படு மானந்தம் பேரின்பம் ஐயன் அருளுறவே"

வாழ்த்து

"வாழி கயற்கண்ணி வாழிய சொக்கலிங்கம்
வாழி அவர்கழலை வாழ்த்துவார் - வாழியரோ
தண்டமிழும் ஆரியமும் தம்மால் இயன்றளவு
தொண்டர் பணி ஏற்கத் துணிந்து"

Colophon:

(குறிப்பு): இந்நூல் அங்கயற்கண்ணி சொக்கலிங்கன் இரட்டைமணி மாலை என்னும் பெயர்த்து. இதன்கண் (20) இருபது பாடல்கள் உள்ளன. இறைவன் சொக்கலிங்கனுக்கும். அங்கயற்கண்ணிக்கும் பாமாலைகளை மணிமாலைகளாக அணிவிக்கின்றார் ஆசிரியர். அம்மாலையிலுள்ள மணிகள், இறைவனின் புகழும், பெருமையுமே ஆகும். இரண்டு வகைப் பாடல்களால் மணிமாலை சூட்டுகின்றார். முற்றுமுள்ளது. ஆசிரியர் கவிராச பண்டிதர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. ஆவார்.

R.8207-8225 (One Codex)

Paper : 32 x 20cm. Pages: 1-500; Tamil, New, Good

R.8207

புவனேசுவரி கவசம்

PUVANESWARI KAVASAM

Pages : 1-3
Lines 37 on a Page

Extent 70 granthas
Complete
Theme of this work containing 10 songs is that the blessings of Goddess Bhuvaneswari is like a defensive weapon to all limbs of one's body and one who reads this will be happy in this world and the world beyond. This work is already Printed and Published in 1954. The author is Kanaka Raja Iyer, M.A.

Beginning:

காப்பு

"சிவகேசி தேவேசி சிந்தா ரமணி
புவநேசி பாதமலர் போற்றித் - தவநேசர்
சிந்தைநிறை பொற்கவசம் செய்தமைக்கத் தந்திமுகத்
தெந்தைகழல் காப்பா மெமக்கு"

தியானம்

"அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும
பங்கய கரத்தள் பிதாம் பரமணி மிடையள் பொற்பூண்
பைங்கள நிறம்பப் பூண்டாள் பதினாறு கலையெழுத்துள்
பொங்கிய வோரெழுத்துள் புவனேசி பாதம் போற்றி!

கவசம்

1. "திருமுடி காப்பா ளாக தேவதே வேசி யென்றும்
திருவிழி வலது காக்க சிவானந்த வுருவம் பூண்டாள்
வருவிழி யிடது காக்க வலம்புரிக் கலத்துச் செல்வி
உருகிய வுளத்தாள் நாசி யுவப்புடன் காப்பா ளாக"

End:

10. "சக்திகள் குறைவுறாதே சத்திய தேவி காக்க
புத்திகள் புரைபடாதே புராதனி புரிந்த காக்க
சித்திகள் பழுதுறாதே சித்தமா தங்கி காக்க
உத்திகள் அழிவுருதே உலகநா யகியே காக்க"

பலசுருதி

"காப்பதே கடனாப் பூண்ட கருணையின் கடலை நெஞ்சில்
பார்ப்பதே துணிந்த அன்பர் பயப்படா வண்ணம் காத்துப்
பூப்பதே யருளும் தேவி புவனேசி கவசம் சொல்வார்
யாப்பதே பொருளே ஞானம் இறைவியி னருளி னாலே"

வாழ்த்து

"புதுவையில் சதாசி வேந்தன் புண்ணியத் தானம் வாழ்க
மதுமயப் பிரம மென்றே மறைமுடி விளக்கும் தேவி
புதுமையில் பழமை காட்டும் புவனேசி பாதம் வாழ்க
பதுமமேல் வாழும் தேவி பக்தர்பல் லாண்டு வாழ்க"

Colophon:-

முகவுரை

(குறிப்பு): இந்நூல் புவனேசுவரி கவசம் என்னும் பெயர்த்து. இதன்க ண் பத்துப் பாடல்கள் உள்ளன. புவனேசுவரியின் அருள் என்னும் கவச த்தால் அனைத்து உறுப்புகளுக்கும் அரண் போடலாம் என்று எடுத்துக் கூறுவது நூல் நுவலும் கருத்தாகும். இந்நூலைப் படிப்பவர்கள் இம்மை மறுமை இன்பங்களை எய்துவார்கள் என்று முகவுரையில் ஆசிரியர் மொழிந்துள்ளார். இந்நூல் அச்சிடப்பட திரு. அ. நாகப்பச் செட்டியார் உதவி செய்தாரென்று முகவுரை உரைப்பதால் அச்சிடப்பட்ட செய்தி தெரிகின்றது (1959 ஆம் ஆண்டுப்பதிப்பு). ஆக்கியோர் புவனேசுவரிதாசன் என்று புனை பெயரால் எழுதியுள்ளார். (இயற்பெயர் : திரு. நா. கனகராச ஐயர்) முற்றுமுள்ளது.

R.8208

புவனேசுவரி தேவி மலர்த் திருப்பணி மாலை

PUVANESWARI DEVI MALAR-TH-TIRUPPANI MALAI

Pages : 4-8
Lines 32 on a Page; Tamil, New, Good.
Extent 75 granthas
Complete
The author Kanaka Raja Iyer, Praising Goddess Bhuvaneswari in 16 songs.

Beginning :

காப்பு

"தவநேசர் ஞான சதாசிவத் தானம்
இவை நேசர் போற்றச் சிறக்கும் - புவனேசி
பூப்பணி மாலை புனைய விநாயகனே
நாப்பணி நல்கும் நயந்து"

நூல்

"நாதமே கலையே விந்துவே யெனமெய்ஞ்
ஞானியர் உணர்பெருந் தலைவி
வேதமே தெளித்தற் கரியமாப் புகழாய்
வேத னாதியர் பணி பதத்தாய்
பாதமே முதலா முடியவு ளலரின்
பருவத மியைந் தெதி ராசன்
போதமே பொருந்த விறைஞ்சலு முவப்பாய்
புதுவைவாழ் புவனநா யகியே"

End:

"தமைமறந் துயர்ந்த தவத்திலே யிகுந்த
சதாசிவ சயந்தியுள் பிலவ
அமைவுறு விடிவில் அருந்திருப் பணியாய்
ஆயிரம் வெள்ளிகொள் மலரை
எமையிருள் நோக்கால் எழுந்தருள் புரியும்
இறைவியின் கழற்கெதி ராகா
சமைவுற வியற்றுதிருப் பணிச்சி றப்பைச்
சக்தியே யறிந்தரு ளுவளே"

வாழ்த்து

"வாழிய வுலக நிலையிலே மயங்கா
மனத்தினர் துறவிலே நிலைத்தார்
வாழிய அறங்கள் முறையினாற் புரியும்
மனமுள இல்லறத் தலைவர்
வாழிய புதுவைச் சதாசிவ முனிவர்
வளரருள் நிலைமாம் தனியே
வாழிய புவன நாயகி யருள்நன்
மலர்ப்பணி புரியவர் பெறவே"

Colophon:

(குறிப்பு): இந்நூல் புவனேசுவரி தேவி மலர்த்திருப்பணிமாலை என்னும் பெயர்த்து. இதன்கண் பதினாறு பாடல்கள் உள்ளன. புவனேசுவரி தேவியின் மலர்த்திருப்பணிக்குப் பாமாலை சூட்டுகின்றார் பாவலர். தேவியின் திருப்புகழ் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.இயற்றியவர் கவிராசபண்டிதர் திரு. கனகராச ஐயர். முற்றுமுள்ளது.

R.8209

புவனேசுவரி திருப்பாவை

PUVANESWARI TIRUPPAVAI

Pages : 9-16
Lines 33 on a Page
Extent 140 granthas
Complete

The author Bhuvaneswari Dasan as written in the work, praises the greatness of Goddess Bhuvaneswari with 30 songs. It is said that these songs are sung by ladies after bathing before sun rise.

காப்பு

"தவநேசர் போற்றும் சதாசிவ ஞானி
பவனேசி தென்புதுவைப் பாசி - புவனேசி
பாவைப் பனுவல் பகரக் கயமுகத்துத்
தேவைப் பணிவாம் சிரத்து"

நூல்

1. "திங்கள் நிலவமுதம் தேக்கும் திருநாளால்
மங்கள வாழ்வில் மனங்கொள் மகளிரேம்
பொங்கு புதுமைப் புனல்குடைந் தாடுவாள்
கங்குல் புலராமுன் காவற் கடம்பூண்ட
நங்கள் இறைவியை நாவாற் பழிச்சுவரம்
எங்கும் எழிலினால் ஏற்றம் பெறுமுலகே
சங்கம் குலுங்கத் தமிழ்ப்புவன நாயகியை
அங்கம் குறுக அழையேலோ ரெம்பாவாய்".

End:

30. "வாழிய மண்டலமே வாழிய விண்டலமே
வாழிய நன்மக்கள் வாழிய மெய்ப்புலவர்
வாழிய நான்மறைகள் வாழிய நூல்வகைகள்
வாழிய ஆரியமே வாழிய பைந்தமிழே"

"வாழிய ஞாலம் வழங்கு மொழியெல்லாம்
வாழிய ஆண்மையே வாழிய பெண்மையே
வாழிய நாற்பொருளே மார்கழி நோன்பினால்
வாழிய நம்நாட்டமென வாழ்த்தேலோ ரெம்பாவாய்"

வாழ்த்து

வெண்பா

"பணிவா சகத்தானே பாவைப்பாட் டோதும்
மணிவா சகர்போதை வாழ்க - பணிவார்
பவனேசர் ஆகவருள் பாவைப்பாட் டேற்ற
புவனேசி வாழ்க புவி"

Colophon:

(குறிப்பு): இந்நூல் புவனேசுவரி திருப்பாவை என்னும் பெயரை உடையது. இதன்கண் முப்பது பாடல்கள் உள்ளன. கங்குல் புலராமுன் பொங்கு புதுமைப் புனல் குடைந்தாடும்பூவையர்கள் பாடும் பாடல்களாக அமைந்துள்ளன. புவனேசுவரியின் பெருமைகள் போற்றப்படுகின்றன. இயற்றியோர் புவனேசுவரி தாசன் என்று எழுதப்பட்டுள்ளது. முற்றுமுள்ளது.

R.8210

புவனேசுவரி திருப்பள்ளி எழுச்சி

BHUVANESWARI TIRUPPALLI ELUCCHI

Pages : 17-19
Extent 60 granthas
Complete
Unpublished
On Bhuvaneswari, goddess at Pudukkottai, by N. Kanaka Raja Iyer. Form, versed. Date, 1964.

Beginning:

பறவைகடள ஒலித்தன பலபல குரலாற்
பயிலிசைக் கலைஒரும் பாடினர் பாடல்
கறவைகள் எழுந்தன கரவிலாக் குணத்தாற்
கறந்தன அமுதினைக் காணுதி அளவியே

... ...

End:

வாழிய வசுக்களும் மற்றுன உயிரும்
வாழிய புதுவையில் வளர்ந்திருந் தனியே
வாழிய புவனைநின் மலந்திரு வடியே
(11)

(குறிப்பு): நா. கனகராஜ ஐயர் இதன் ஆசிரியர்; மொத்தம் 11 விருத்தங்கள் உள. புதுக்கோட்டை, புவனேசுவரி நகரில் உள்ள புவனேசுவரி மீது பாடப்பட்டது இந்நூல்.

R.8211

புவனேசுவரி அனுபூதி

BHYVANESWARI ANUBHUTI

Pages : 20-35
Extent 500 granthas
Complete
Unpublished
Invocation praising the goddess Bhuvaneswari worshipped at Pudukkottai. Auth or, N. Kanaka Raja Iyer. Contains 110 verses.

Beginning:

நூல்

அருளே வருவாய் அமையும் சிவையே
மருளே அகல்வான் மனமே புகுவாய்
தெருளே பொழியும் திருநோக் குகையாய்
பொருளே உருவாம் புவனே சுரியே

(க)

End:

... ...

வல்லைப் புவிமேல் மலிவாழ் வருள்வாய்
புல்லைப் பிரியாப் புவனே சுரியே
(108)

வாழ்த்து

... ...

தெருள் வாழிய மெய்த்தெருள் வாழியவே
பொருள் வாழிய ஒப்புவ னேசுரியே
(109)

(குறிப்பு): நா. கனகராஜ ஐயர் எழுதியது; புதுக்கோட்டைப் புவ னேசுவரி அம்பாள் மீது பாடப்பட்டது. காப்பு உட்பட 110 பாக்கள் உள.

R.8212

புவனேசுவரி அலங்காரம்

BHUVANESWARI ALANGARAM

Pages : 36-51
Extent 400 granthas
Complete
Unpublished
For the graces of the goddess Bhuvaneswari of Pudukkottai by N. Kanaka Raja Iyer. Piece possesses 111 verses.

Beginning:

நூல்

மூலப் பொருளை முதன்மைப் பொருளை முழுப்பொருளைக்
காலப் பொருளை கணக்கில் பொருளைக் கருப்பொருளை
தூலப் பொருளை ஆக்கப் பொருளைத் துணிபொருளைச்
சீலப் பொருளைப் புனேசி என்பர் தெளிந்தவரே!

(1)

End:

வாழ்த்திய வரவை நினைக்கின்ற நெஞ்சினை வாழவைப்பான்
தாழ்த்திய சென்னியைத் தன்பதத் தாமரை சாரவைப்பாள்
வீழ்த்திய பொல்லா வினையாளர் நெஞ்சில் விளங்குறுவாள்
ஊழ்த்திற மாற்றி யருள்வாய் புவனேசி உத்திமியே!

(108)

(குறிப்பு): காப்பு, பயன், வாழ்த்துப் பாக்கள் உட்பட இதில் 111 பாக்கள் உள. பாடியவர் நா. கனகராஜ ஐயர். புவனேசுவரி, புது க்கோட்டைப் புவனேசுவரி.

R.8213

புவனேசுவரி பிள்ளைத்தமிழ்

BHUVANESWARI PILLAITTAMIL

Pages : 52-98
Extent 1300 granthas
Complete
Pillaittamil type of Tamil Piece by N. Kanaka Raja Iyer. Bhuvaneswar here is the goddess enshrined at Pudukkottai. Total verses 108.

Beginning:

பாயிரம்

விநாயக மூர்த்தி

அளவிலா மறைகள் பலமுறை முயன்றும்

அளவிடற் கரிய சீருடைய

அகில நாயகியைப் புவன நாயகியை

ஆற்றலே உருவமா யமையும்

... ...

End:

வாழ்த்து

... ...

நாடலா நலம்பெற முயல்வார்

நலம்பெருந் திருவாம் புவன நாயகியின்

நல்லருள் திளைத்து வாழியரோ

(குறிப்பு): 1-8 விருத்தங்கள் உள; புதுக்கோட்டை நகர்ப் புவனேசுவ ரி மீது பாடப்பட்டது; பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையைச் சேர்ந்தது. ஆசிரியர், நா. கனகராஜ ஐயர்.

R.8214

புவனேசுவரி சதகம்

BHUVANESWARI SATAKAM

Pages : 99-152
Extent 1350 granthas
Complete
N. Kanaka Raja Iyer submits a peice entitled as Bhuvaneswari Satakam before Bhuvaneswari of Pudukkottai. This runs in 103 verses.

Beginning:

காப்பு

... ...

வேணியினாள் ஈன்ற விநாயகன் ஆறுமுகன்

வாயியெனும் மூவர் மகிழ்ந்து!

End:

... ...

செல்வியிச் சிறுபணியை யருளினொடு ஏற்றருள்க

செகதலம் புகழும் வகையே!

ஆக்கியோன்

... ...

மகிழ்வேண்டு மனமுடைய மைந்தரோடு முதியவரும்

வாழ்வுசுவை எய்துமாறு

மகளிரொடு செல்வரொடு மழலைபுகல் புகல்வரொடு

மதித்துருகி வாழ்க நன்றே!

(குறிப்பு): சதக வகை நூல்; நா. கனகராஜ ஐயர் எழுதியது. 103 பாக்கள் உள. புதுக்கோட்டைப் புவனேசுவரி பாடுபொருள். இச்சுவடியின் முகப்பில், சதகம் குறித்துச் சில குறிப்புகள் உரைநடையில் எழுதிவைத்துள்ளார் ஆசிரியர்.

R.8215

புவனேசுவரி திருப்புகழ்

BHUVANESWARI TIRUPPUGAL

Pages : 153-214
Extent 1050 granthas
Complete.
Published.
On the pattern of the famous Arunagiri nathar, this goes on Bhuvaneswari of Pudukkottai. Author of this rhythmic treatise is N. Kanaka Raja Iyer. We have in this volume 109 songs.

(குறிப்பு): திருப்புகழ் வகை இலக்கியம் இது; நா. கனகராஜ ஐயர் இயற்றியது. மொத்தம் 109 பாக்கள் உள. 1965இல் புதுக்கோட்டை யில் அச்சிடப்பட்டது இந்நூல்.

R.8216

புவனேசுவரி ஆனந்தக் களிப்பு

BHUVANESWARI ANANDAK KALIPPU

Pages : 215-230
Extent 300 granthas
Complete
Sticking to the interesting 'anantak kalippu' rhyth, the N. Kanaka Raja Iyer has composed this work on Bhuvaneswari. We have 105 songs.

Beginning:

ஆனந்தம் ஆனந்தம் ஆமே - பரம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆமே

1. அன்னை புவனேசி பாதம் - பணிந்
தடையவர் காண்பதே ஆனந்த போதம்
தன்னை உணர்த்திய வேதம் - அவள்
தத்துவக் காட்சியிற் சாற்றுமே பேதம்

End:-

எவ்வனம் அவள்புகழ் இசைப்போம் - அவளே

இதயம் பொருந்தும் புதையலாய் அசைப்போம்

இவ்வளம் அவள்வரும் எனவே - முனிவர்

இசைத்த சொல்நம்பி இருப்பது நலமே

(குறிப்பு): காரைக்குடியில் 1966ல் இந்நூல் ஆசிரியர் நா. கனக ராஜ ஐயரால் எழுதி முடிக்கப்பட்டது. இதில் 105 பாக்கள் உள. சந்தக் குறிப்புகளையும் ஆசிரியரே ஆங்காங்கு எழுதியுள்ளார்.

R.8217

புவனேசுவரி கும்மி

BHUVANESWARI KUMMI

Pages : 231-246
Extent 500 granthas
Complete
Unpublished
A kummi type of literature enlogising Bhuvaneswari of Pudukkottai. This has got 100 verses, all by N. Kanaka Raja Iyer.

Beginning:

நூல்.

அருமை யுடைய பொருளில்லை தேவி

அடிமலர் நெஞ்சில் அடைத்தவர்க்கே

பெருமை எனவாவை உண்டோ அவையெலாம்

பேணி அவர்க்குப் பணிசெய்யுமே

(1)

End:

வௌவால் மறையும் குகையிலை தேவி

மகிழ்வுற வாழும் திருக்கோயிலே

எவ்வாறு நோக்கிலும் எங்கும் இருப்பாள்

இதயம் மலர்த்தும் புவனேசியே!

(100)

(குறிப்பு): 100 பாக்கள் கொண்ட கும்பி இது; புதுக்கோட்டைப் புவனேசுவரி மீது பாடப்பட்டது. ஆசிரியர் நா. கனகராஜ ஐயர்.

R.8218

புவனேசுவரி கிளிக்கண்ணிகள்

BHUVANESWARI KILIKKANNIKAL

Pages : 247-248
Extent 50 granthas
Complete
Unpublished
Addressing to a parrot, all these 12 completes are meant for the worshipping of Bhuvaneswari of Pudukkottai. man who addressed to the parrot was N. Kana ka Raja Iyer.

Beginning:

நூல்.

அருளிலுரு வம்பூணும்

பொருளின் பெருமையினைக் - கிளியே

நெருங்க புவனையென்றே

(1)

End:

எளவியம் வேண்டா என்றாள்

செவ்விட வழிசொல்வாள் - கிளியே

திவ்விய புவனேசியே!

(12)

(குறிப்பு): 12 கண்ணிகளால் ஆன நூல்; ஒவ்வொன்றிலும் 'கிளியே' என்ற விளி உளது. ஆசிரியர். நா. கனகராஜ ஐயர். பாசப்பட்ட கடவுள், புவனேசுவரி.

R.8219

புவனேசுவரி தாலாட்டு

BHUVANESWARI TALATTU

Pages : 249-256
Extent 150 granthas
Complete
Unpublished
93 completes form a lullaby on Bhuvaneswari of Pudukkottai. Formed by N. Kanaka Raja Iyer, noted above.

Beginning:

அன்புருகு நெஞ்சுமுளார் ஆரணத்தின் பொருள்தேடி

இன்புருவா யெழுந்தருளும் எழிற்புவனே தாலேலோ

(1)

End:

வெளவாலே நுழையாத மாண்புமிகும் ஆலயத்தே

செவ்வாக விற்றிருக்கும் திருத்தேவி தாலேலோ!

(93)

(குறிப்பு): நா.கனகராஜ ஐயர் இயற்றிய தாலாட்டு நூல் இது; புதுக்கோட்டைப் புவனேசுவரி மீது பாடப்பட்டது. 93 கண்ணிகள் உள.

R.8220

புவனேசுவரி திருவாயிரம்

BHUVANESWARI TIRUVAYIRAM

Pages : 257-458
Extent 4000 granthas
Complete
Unpublished
In 1010 stanzas, N. Kanaka Raja Iyer, has sung invoking the goddess Bhuvaneswari of Pudukkottai for graces. Period 1966-67.

Beginning:

காப்பு.

பிரபந்தம்

அருளின் உருவத்தை ஆனந்த வெள்ளத்தை அன்பர்மனம்
தெருளின் விளங்க அருள்செயும் தெய்வத்தைச் சித்தமலர்
இருளின் அகலம் புரிவித்துக் கோயில் இருப்பவளைப்
பொருளின் உருவைப் புவனே சுரியெப் போற்றுவமே!

(க)

End:

நமதுரிமை அருள்விளக்கம் நமதுகடன் பணியே
நமக்குநலம் எலாம்புவன நாயகியே அருள்வாள்
எமதுசெயல் இதுவெனவே இனித்தூற இறைவி
எமக்குநல மனமப்பதற்கே இருநிலத்து வருவாள்
சமதமமே யாதியவாம் தந்திரத்தை யிசைத்தே
தனைத்தேடி யுடையுநெறி தான்விளங்கும் விதியாள்
சிமயமுடி யிருந்தாலும் சிறியேமை விழைந்தே
சித்கனமாய் விளங்குவதாம் தேவிதிரு வருளே!

(1008)

(குறிப்பு): 1966இல் தொடங்கி, 1967இல் 1010 பாக்களையும் எழுதிமுடித்தார் நா. கனகராஜ ஐயர். புதுக்கோட்டைப் புவனேசுவரி மீது பாடப்பட்ட நூல் இது. வழக்கம்போல, இதுவும் அவருடைய சொந்தக்கையை முத்தானேயே அமைந்துள்ளது. 'நா. கனகராஜ ஐயர்' என்றே கையொப்பம் இட்டுள்ளார். 'ஆயிரம்' என வரும் வேறு சில நூற்களையும் இவர் எழுதியுள்ளார்.

R.8221

புவனேசுவரி சதமணி மாலை

BHUVANESWARI SATAMANI MALAI

Pages : 459-488
Extent 600 granthas
Complete
We have got 110 stanzas all sung on Bhuvaneswari of Pudukkottai; All by N. Kanaka Raja Iyer who has completed in 1967 at Karaikudi (Pasumpon Dt.)

Beginning:

காப்பு

திருப்புவன நாயகியின் சேவடியைப் போற்றி
விருப்பமன மோ விளம்பும் - திருப்புவன
நாயகி பாதமலர் நண்ணும் சதமணிவி
நாயகனை நாடும் நயந்து

End:

... ...

தாவிலா துயர்ந்த பெருநிலை யடியேன்
சரணகோ கனகமே துணையாம்
சாருவ தரிதோ விளதமும் களையும்
சமைப்பவர் உளர்கொலோ உரையாய்
வாங்கல் கிராமப் பூர்வ வரலாறு

VANGAL KIRAMAP PURVA VARALARU

Pages : 19-23
Extent 25 granthas
Complete

Restored from D.3058 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல் நிலையத்தில் உள்ள டி.3058ஆம் எண்கொண்ட சுவடியின் தாட்படி ஆகும்.

R.8335

பவித்திர கிராம வரலாறு

PAVITRA KIRAMA VARALARU

Pages : 25-29
Extent 30 granthas
Complete

Restored from D.3059 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தில் டி.3059ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப்பட்டுள்ளதாகும்.

R.8336

குப்பங் கிராமப் பூர்வ வரலாறு

KUPPANG KIRAMAP PURVA VARALARU

Pages : 31-33
Extent 17 granthas
Complete

Restored from D.3060 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தில் டி.3060ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியின் தாட்படி ஆகும். விளக்கம் ஆண்டு உள்ளது.

R.8337

புகலூர்க் கிராம வரலாறு

PUHALURK KIRAMA VARALARU

Pages : 35-38
Extent 15 granthas
Complete

Restored from D.3061 of G.O.M.L.

(குறிப்பு): இது, டி.3061ஆம் எண் கொண்ட சுவடியிலிருந்து படியெடுக்கப்பட்டது ஆகும் விளக்கத்தினை ஆண்டுக் காணலாம்.

R.8338

காதப்பாறை கிராம வரலாறு

KADARPPARAI KIRAMA VARALARU

Pages : 39-43
Extent 20 granthas
Complete

Restored from D.3062 of G.O.M.L.

(குறிப்பு): இது, டி.3062ஆம் எண்ணின்கீழ் விளக்கப்பட்டுள்ள சுவடியின் தாட்படி ஆகும்; விளக்கம் அங்கு தரப்பட்டுள்ளது.

R.8339

தாராபுரம் கைபீது

TARAPURAM KAIFIAT

Pages : 47-50
Extent 20 granthas

Restored from D.3063 (M.56) of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தில் டி.3063ஆம் எண்ணின்கீழ் விளக்கப்பட்டுள்ள சுவடியின் தாட்படி ஆகும்.

R.8340

தாராபுரம் கலியாணராமசுவாமி தேவஸ்தான வரலாறு

TARAPURAM KALYANARAMASWAMY DEVASTANA VARALARU

Pages : 51-52
Extent 10 granthas
Complete

Restored from D.3064 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தே டி.3064 என்ற எண்ணின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியினின்றும் பெயர்த்து எழுதப்பட்டதாகும்.

R.8341

நட்டாற்றீசுவரர் தேவஸ்தான வரலாறு

NATTATRISWARAR DEVASTANA VARALARU

Pages : 53-58
Extent 35 granthas
Complete

Restored from D.3065 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தே டி.3065 ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியின் தாட்படி ஆகும்.

R.8342

தூரம்பண்டிக் கிராமம் குலமாணிக்கீசுவரர் தேவஸ்தான வரலாறு

TURAMPANDIK KIRAMAM KULAMANICKISWARAR DEVASTANA VARALARU

Pages : 59-61
Extent 25 granthas
Complete

Restored from D.3066 of G.O.M.L.

(குறிப்பு): இது, டி.3066ஆம் எண்ணிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப்பட்டுள்ளது.

R.8343

மூன்றூர்க் கிராமம் சோழீசுவரர் தேவஸ்தான வரலாறு

MUNDRURK KIRAMAM SOZHISWARAR DEVASTANA VARALARU

Pages : 63-64
Extent 12 granthas
Complete

Restored from D.3067 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல்நிலையச் சுவடியாம் டி.3067இன் தாட்படி.

R.8344

கொங்கு விடங்கேசுவர சுவாமி தேவஸ்தான வரலாறு

KONGU VIDANGESWARA SWAMY DEVASATNAN VARALARU

Pages : 65-67
Extent 15 granthas
Complete

Restored from D.3068 of G.O.M.L.

(குறிப்பு): இது, டி.3068ஆம் எண்ணின் படி ஆகும்; விளக்கம் இதன்கீழ் உள்ளது

R.8345

மாம்பாடி மாந்தீசுவர தேவஸ்தான வரலாறு

MAMBADI MANDISWARA DEVASTANA VARALARU

Pages : 69-70
Extent 10 granthas
Complete

Restored from D.3069 of G.O.M.L.

(குறிப்பு): இது, டி.3069ஆம் எண்ணில் உள்ள சுவடியின் தாட்படி ஆகும்; விளக்கத்தை ஆண்டுக் காணலாம்.

R.8346-8347

Paper : 31 x 25cms; Pages : 1-46
Lines 24 on a Page; Tamil, Good, New

Restored from a manuscript of G.O.M.L. by Mr. I Krishnaramanujam Pillai in 1969-70.

R.8346

Pages : 1-10
Extent 80 granthas
Complete

Restored from D.3117 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல்நிலையக் சுவடியான டி.3117ஆம் எண்ணின் தாட்படி ஆகும்; விளக்கம் ஆண்டு உள்ளது.

R.8247

பழனி பாளையப்பட்டுச் சின்னப்ப நாயகன் வமிசாவளி

PALANI PALAYAPPATTUL CHINNAPPA NAYAKAN VAMSAVALI

Pages : 11-46
Extent 300 granthas
Complete

Restored from D.3118 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல்நிலையச் சுவடிவிவர அட்டவணையில் டி.3118ஆம் எண்ணில் விவரிக்கப்பட்டுள்ள சுவடியின் தாட்படி ஆகும். விளக்கம் அங்கு தரப்பட்டுள்ளது.

R.8348-8352

Paper : 31 x 25cms; Pages : 1-56
Lines 24 on a Page; Tamil, Good, New

Restored from a manuscript of G.O,M.L. by Mr. I. Krishnaramanujam Pillai in 1969-70.

R.8348

மலையாள சாதி விவரம்

MALAYALA SATI VIVARAM

Pages : 1-18
Extent 150 granthas
Complete

Restored from D.3121 of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், டி.3121ஆம் எண்ணின் தாட்படி ஆகிறது. விளக்கத்தினை ஆண்டுக் காணலாம்.

R.8349

பாண்டுக்குழி என்ற கல்லறைகள் வரலாறு

PANDUKKUZHI ENDRA KALLARAIKAL VARALARU

Pages : 19-24
Extent 40 granthas

Restored from D.3096 (M.66) of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தில் டி.3096 என்ற எண்ணின் கீழ் விளக்கப்பட்டுள்ள சுவடியிலிருந்து படியெடுத்து வைக்கப்பட்டதாகும்.

R.8350

தொண்டைமான் சக்கரவர்த்தி சரித்திரம்

TONDAIMAN CHAKARAVARTHI CHARITRAM

Pages : 25-30
Extent 35 granthas
Complete

Restored from D.3097 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல் நிலையத்துச் சுவடிவிவர அட்டவணையில் டி. 3098ஆம் எண்ணில் விளக்கப்பட்டுள்ள சுவடியைப் பார்த்து எழுதி வைக்கப்பட்டதாகும்.

R.8352

மலையாள தேயத்து நம்பூதிரி சாதி வரலாறு

MALAYALA TEUATTU NAMBOOTIRI SATI VARALARU

Pages : 43-56
Extent 100 granthas

Restored from D.3122 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூலகத்தே உள்ள டி.3122ஆம் எண்ணிலிருந்து தாளில் படியெடுத்து வைக்கப்பட்டதாகும். விளக்கத்தை டி. 3122ஆம் எண்ணின் கீழ்க் காணலாம்.

R.8353 - 8356 (One Codex)

Papers : 31 x 25cms; Pages : 1-45
Lines 24 on a Page; Tamil, Good, New

Restored from a manuscript of G.O.M.L. by Mr. N. Narayanaswamy Pillai in 1969-70.

R.8353

போடி மாம்பட்டி வெள்ளிமாலை வரலாறு

PODI MAMBATTI VALLIMALAI VARALARU

Pages : 1-6
Extent 45 granthas

Restored from D.3070 of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், டி.3070 ஆம் எண்ணிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப்பட்டுள்ளது.

R.8354

காவேரிபுரம் ஜலக்கட்டேசுவரர் தேவஸ்தான வரலாறு

KAVERIPURAM JALAKKATTESWARAR DEVASTANA VARALARU

Pages : 7-19
Extent 100 granthas

Restored from D.3071 of G.O.M.L.

(குறிப்பு): இது, இந்நூல் நிலையத்தே டி.3071ஆம் எண்ணில் இருந்துவ ரும் சுவடியினின்றும் பெயர்த்தெழுதப்பட்டதாம்.

R.8355

தேனீசுவரசாமி தேவஸ்தான வரலாறு

TENISWARASWAMY DEVASTANA VARALARU

Pages : 23-36
Extent 100 granthas

Restored from D.3072 of G.O.M.L.

(குறிப்பு): இந்நூல், டி.3072ஆம் எண்ணிலிருந்து படியெடுத்து வைக்கப் பட்டது ஆகும்.

R.8356

கோயம்புத்தூர் வரலாறு

KOIMBATORE VARALARU

Pages : 37-45
Extent 65 granthas

Restored from D.3073 of of G.O.M.L.

(குறிப்பு): இச்சுவடி, டி.3073ஆம் எண்ணின் தாட்படி ஆகும்.

R.8357

நிமிந்தப்பட்டி நீலியப்பக் கவுண்டன் வமிசாவளி

NIMINDAPPATTI NILIYAPPAK KAVUNDAN VAMSAVALI

Paper : 31 x 25cms; Pages : 1-12
Lines 24 on a Page; Tamil, Good, New
Extent 100 granthas

Restored from D.3074 of G.O.M.L. by Mr. N. Narayanaswamy Pillai in 1969.

(குறிப்பு): இந்நூல், இந்நூலகத்தில் டி.3074ஆம் எண்ணின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டுவரும் சுவடியினின்றும் பெயர்த்து எழுதப்பட்டது. விளக்கத்தை டி.3074ஆம் எண்ணில் காணலாம்.

R.8358

சோதிட நூல் (இரேகை சாஸ்திரம்)

JYOTIDA NUL (REKAI SASTIRAM)

Paper : 31 x 25cms; Pages : 1-31
Lines 24 on a Page; Tamil, Good, New
Extent 250 granthas.

Restored in 1970-71 from D.2705 of G.O.M.L. by Mr. N. Narayanaswamy Pillai.

(குறிப்பு): இந்நூல், இந்நூலகத்தில் டி.2705ஆம் எண்ணில் பாதுகாக் கப்பட்டுவரும் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப்பட்டது ஆகும்.

R.8359

பெரிய திருமொழி

PERIYA THIRUMOZHI

Leaf.

Presented in 1972 by Mr.M. Muthukamatchi to G.O.M.L.

இந்நூல் அச்சில் வெளிவந்துள்ளது.

R.8360 - 63 (One Codex)

Palf Leaf : 45 x 2.5cms; Folls : 25
Lines 4 on a Page; Tamil, Old, Injoured

R.8360

விநாயகர் அக்வல்

VINAYAKAR AHAVAL

Folls : 1-5
Extent 82 granthas
Complete
Printed
A small literary piece on Vinayaka in Ahaval metre.

Beginning:

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளிபோடுந் தொடர்ந்த வினைகளே.

"உறங்கி கண்விழித்து
வெள்ளி யுதிக்கு முன்னே
பள்ளிக்கூட வந்து சேரும்
பள்ளிப் பிள்ளைகளே".

கட்டேபோ புத்திவா
கடுக நடந்து பாடந்தா
குச்சிலயா ஒலையும் கூரிய
எழுத்தாணியும் வாறா
தெழுத் தெல்லா(ம்) எனக்கேவா
ஆனை முகத்திலே அருகு முளைத்தது
ஆருகொண்ட பிள்ளை யாருக்கு
ஆறுகொட்டு ஆறு தோப்புகுணம்.

Colophon:

"விசுவாவசு வருடம் வைகாசி மாதம் உயர ஆம் தேதி கோக்கம்பட்டியிலே இருக்கும் சின்னப்பன் செட்டிமகள் வீரப்பனுக்கு வேண்டுமுகம் எழுதி நிறைந்தது. முற்றும் முத்தாலம்மன் துணை.

(குறிப்பு): இந்நூல் விநாயகர் அகவல் என்னும் பெயரினை உடையதே னும், இதன்கண் பிள்ளையார் சிந்து, சரசுவதி சிந்தனை, பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை எனும் மூன்றும் அடங்கியுள்ளன. இந்நூல் 'விநாயகர் அகவல்' எனும் தலைப்பில், என். கணபதி முதலியார் அவர்களது கணேசானந்தம் அச்சகத்தில் 1939 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. டி.1624 ஆம் எண்ணில் குறித்துள்ள விநாயகர் அகவலினின்றும் இந்நூல் வேறுபட்டுக் காணப்படுகிறது.

R.8361

ஆத்தி சூடி

ATTI CHUDI

Palf Leaf. Folls. 3
Lines 4 on a Page
Extent 40 granthas.
Incomplete
Same work as that described under D.No.129.

(குறிப்பு): இந்நூல் டி.எண்.129இல் வந்துள்ளதைப் போன்றதே, யெனினும் நொடக்கம் மாறுபடுகிறது. முடிவில் வேற்றுமை இல்லை. அதோடு "கேள்வி முயல்" என்ற செய்யுளில்தான் தொடங்குகிறது. தொடக்கத்தில் உள்ளபாடல் ஆத்திசூடியோடு தொடர்புடையதாக எந்த நூலிலும் காணப்படவில்லை. "சந்திரன் தனியே ஆட சங்கரன் முன்னே நிற்கும்" என்று தொடங்கும் மூன்று நான்குவரிப்பாடல்கள் அச்சாகி வந்துள்ள 'ஆத்திசூடி' நூலில் இல்லை. மற்று முடிவுவரை வேற்றுமை இல்லை.

R.8362

உலக நீதி

ULAHA NEEDI

Folls. 6
Lines 4 on a Page
Extent 45 granthas
Complete
Same work as that described under D.No.141

(குறிப்பு): இந்நூல் டி.141ஆம் எண்ணில் விளக்கப்பட்டுள்ள சுவடியைப் போன்றதே. ஆனால் முடிவில் சில வரிகள் மாறி உள்ளன. அச்சிடப்பட்டுள்ளது.

R.8363

குழிமாற்று

KULIMARRU

Folls. 9
Lines 4 on a Page
Extent
Complete
A small book on Tamil mathematics; this deals with measurement of land etc.
Beginning:

"ஹரி னாது

நன்றாக

குருவாழ்க

குருவே துணை.

பெருங்குளிமார்

பேருள்ள கரினாய்

கருங்குளித்தானே

கணபதி காப்பு"

End:

"ளய ளய குட ளளய கூ

ளய கூ ய க கூ

ளய கூ ய உ கூ

ய ள ய உ கூ ள கு"

Colophon:

"விசுவாவசு வருடம் மாசிமாதம் யச தேதி கொக்கம்பட்டியிலிருக்கும் சின்னப்பன் செட்டிமகன் வீரப்பன் செட்டி குழிமாற்று எழுதி நிறைந்தது. முற்றும்.

(குறிப்பு): இந்நூல் குழி மாற்று என்னும் பெயரினை உடையது. இது கு ழியைப் பரப்பாக்கும் ஒரு கணக்கு வாய்பாடு. இதில் கூறும் கணக்குகளுக்குரிய எண்கள் அனைத்தும் தமிழ் எண்களாகவே உள்ளன. முழுதும் உள்ளது. சின்னப்பன் செட்டிமகன் வீரப்பன் செட்டி என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

R.8364

கோள்நிலையாரூடம்

KOLNILAIYARUDAM

Palm Leaf : 27.5 x 3cms; Folls. 50
Lines 4 on a Page
Extent 300 granthas
Complete
A work on astrology; change of planetory positions and effect caused by them and other such things have been dealt with.

Beginning:

"ஹரி ஓம்
நன்றாக
குருவாழ்க
குருவே துணை".

"வார் கொண்ட கொங்கை யபிராமி பாதமல ரருளால்
பார் கொண்ட கோணிலை யாரூடக் காதலை பாஷக் கானசொர்
சீர் கொண்ட பாடவீர் நதிவலையைச் சேர்த்துரைக்க
கார் கொண்ட குச்சாத்தைங் கான்பாதங் கருதுவனே".

End:

"அடவுட னயனும் போசு....சாற்றிக் கவுசிகன் முனிவர் தேவர்
அடவுடன் கைலாயத்தில் அனைவரும் வாழ்ந்தி....நன்றாய்
அடவுடன் படிப்போர் கேட்போர் விரிவுள்ள செல்வமாகி
மேதினி முழுது.........பவித்துத்
திரிபுர னருளினாலே சிவபதம் பெற்று வாழ்வார்
வானவர் வாழி வாழி வாழி.

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் கோள்நிலையாருடம் என்னும் பெயரினை உடையது. கோள்களின் நிலைமாற்றங்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கணக்கிட்டுக் கூறுகின்றது. சிறந்த சோதிடநூலாகத் தெரிகின்றது. ஓலைகள் சிதைந்து காணப்படுகின்றன. முற்றும் உள்ளது.

R.8365

சுந்தரி அம்மானை

SUNDHARI AMMANAI

Palm-leaf : 41 x 2.5cms; Folls
Lines 5 on a Page; Tamil, Good, Old
Extent
Complete
A ballad in ammanai style; Regarding the story, Ilakkana Kumaran son of Duryodana and Abhimanyu son of Arjuna work to marry Sundari, daughter of Mayan. Abimanyu wins.

Beginning:

"ஹரி ஓம்
நன்றாக
குருவாழ்க
குருவே துணை"

"முந்தி முந்தி விநாயகனே முருக சரஷபதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவா
ஆலடிப் ..ள்ளை யாரே அ(ற)ரசடி வினாயகனே
வேலடிப் பிள்ளை யாரே வேறு...னை வாராமல்
அத்தி மகனே அறனார் திருமகனே

சக்தி கணபதியே தைய நல்லாள் புத்திரனே
வித்தைக்கு நல்ல வேத முடையவனே
சீறாக முன்னடவா செல்வக் கணபதியே
மாயன்மகள் சுந்தரியை மாலையிட யான்பாட
அய்வருடப் பாரத்தை அடவாக நான்பாட"

End:

"என்னும் பதம்பெறுவீர் யீஷப்ரனைப் போலிருப்பீர்
சுந்தரி போலே சுகமாக வாழ்ந்திருப்பீர்
கேட்டவர்க ளெல்லோரும் கிளைகோத்தி ரமாயிருக்க
பாடிப் படித்தவர்கள் பாக்கியமே யுண்டாவீர்
தேன்பாலில் பூவுலகில் தேசமெங்குந் தான்வாழி
வாழி மிகவாழி வானோர்கள் தான்வாழி
மாரன் பெருமாள் மண்டமும் தான்வாழி
சரஷபதியு வாழிவிக் கினேஷபரருந் தான்வாழி
பராபதா தேவிபர மேஷபரருந் தான்வாழி"

Colophon:

பரிதாவி ஸ்ரீ ஆடி மீ உயரு தீ அப்பிபாளையங் கிராமம் கொக்கம்பட்டியிலே இருக்கும் சின்னப்பன் செட்டிமகன் செவ்க் குமாரனாகிய வீரப்பன் செட்டியெழுதியது சுந்தரியம்மானை. இதையெடுத்துப் படித்தபேர்கள் பிழையிருந்தால் திருத்திக் கொள்ளவும்.

(குறிப்பு): இந்நூல் சுந்தரியம்மான் என்னும் பெயரினை உடையது. இதில் மாயன்

மகள் சுந்தரியை மணமுடிக்க துரியோதரன் மகன் இலக்கண குமாரன் விரும்புகின்றான். அருச்சுனன் மகன் 'அபிமன்யூ'வும் அவளையே விரும்புகின்றான். முறைப்படி பெண்கேட்டு மணவிழாச் சடங்குகள் நடக்கின்றன. பல்வேறு போராட்டங்களுக்கிடையில் வீர அபிமன்யூ வெற்றி பெறுகின்றான். சுந்தரிக்குச் சொந்தமாகிறான். அதுவே சுந்தரியம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. முழுதும் உள்ளது. நூலினிறுதியில் உள்ள குறிப்பால் இச்சுவடி வீரப்பன் செட்டியால் எழுதப்பட்டது என்பதை அறியமுடிகிறது. பாடலின் எளிமையை நோக்க நூலையே இவர்தான் ஆக்கினாரா என்ற ஐயமேற்படுகிறது. ஔவையாரின் 'வாக்குண்டாம்' எனும் நூலிலிருந்து சில பாடல்கள் இதன்கண் உள்ளன.

R.8366

அரிச்சந்திர நாடகம்

ARICHANDIRA NATAKAM

Palm-leaf; Folls. 1-115; 38.5 x 3cms.
Lines 5 on a Page; Tamil, Good, Old
Extent 2300 granthas
Incomplete
A Tamil drama in prose depicting the famous story of Raja Harischandra; Auth or, not known.

Beginning:

"மதிலழர் குடையான் செங்கோல் மனுவெல்லாம் நடத்தி வண்ணும் அதிசயம் படைத்த கோமான் அரிச்சந்திர நாடகத்தை துதி செய்யும்பொழுது நல்ல தொண்டர்கள் வினையும் தீர்த்துக் கதிதனை யருளும் செல்வக் கணபதி காப்பு தானே புரமெரித் தருளு மாதி பூங்கிளி முடிமேற் சாத்தி மருமலற் கொடுத்தனுரை ம ற்றதோ வழக்கம் போலே நான் அரிச்சந்திரராசன் நாடகம் த ன்னைப் பாட திருவடி சுமந்த சீடன் திருமலற் கொளுந்தன் காப்பாம்".

End:

"வசனம்: அகோவாறும் பிள்ளையாய் அரிச்சந்திராயினிமேலாவது பட்டாபிசேகம் பண்ணிக் கொள்ளும் பிள்ளாய் அகோவாறுங்களையா சுவாமி என்னுட குலகுருவாகிய வதி டர் விசுவாமித்திரர்களே உங்களுடைய சீஷன் அரிச்சத்திரனுக்குப் பச...ஷேகம் பண்ணி வையுங்களையா அப்படியே பட்டாபிசேகம் பண்ணி வைக்கிறேன் யான் - பொது - விருத்தம்.

"சுந்திர ரூபம்...யரிச்சந்திரராசன்

அந்த மாய்ச் சந்திரமதி அழகுள்ள லோகிதாசன்

யிந்திர முனிவர் தேவர் யாவரும் இருக்கும்போது

....னுக்கு விசுவாமித்திரனும் குடம் வைத்தான்.

விருத்தம்

ஆகையா லரசே யெங்கள் அனுக்கிரகப்படியே செய.....

(குறிப்பு): இந்நூல் 'அரிச்சந்திர நாடகம்' என்னும் பெயரினையுடை யது. அரிச்சந்திரன் கதை நாடகமாக உரையாடல்கள் மூலமாக (நாடகபாணியில்) விளக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்குப்பின்னே பல இடங்களில் உரைநடைப் பகுதிகள் அமைந்துள்ளன. இந்நூல் ஆர்.1977 ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருக்கும் சுவடியை ஒத்திருந்தாலும் சில இடங்களில் மாறுபடுகின்றன. முற்றுப் பெறவில்லை. ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.

R.8367 - 82 (One Codex)

Paper : 32.5 x 20.5cms; Pages : 1-7
Lines 2 on a Page; Tamil, New, Good
Complete

R.8367

திருப்பெருந்துறைப் பிரபந்தத் திரட்டு

TIRUPERUNDHURAIP PIRAPANDAT TIRATTU

ஒருபா ஒருபஃது

ORUBA ORUBAHDHU

Extent 80 granthas

Complete

Unpublished

A collection of literary pieces written by N. Kanagaraja Iyer of 20th Century; works are mainly on Siva of Tirupperundurai.

Beginning:

"திருப்பெருந் துறையுறை சிவபரம் பொருளே
கருப்பெருந் துறையினிக் காயா தருளும்
அன்பின் பிழம்பே அருளின் பெருக்கே
இன்பின் மலிவே எல்லையி லொளியே
எழுதாக் கிளவியி னேத்தப் படூஉம்
தொழுதார்க் குரிய தூய்மை விளக்கே
காணற் கரியாய் கருதற் கரியாய்
போன்ற கரியாய் பேசற் கரியாய்"

End:

"முதுமை வேடம் கதுவிய மூர்த்தி
புதுமை வேடம் புனைந்த மூர்த்தி
தத்துவ மூர்த்தி சத்துவ மூர்த்தி
சித்தச னழிய திருவிழி திறந்த
அத்த ஆத்தும நாத
பத்த கணத்திற் படர்வுறல் திருவே. (கம)

14

பின்னணிவுரை:

(குறிப்பு): இந்நூல் திருப்பெருந்துறைப் பிரபந்தத் திரட்டில் 'ஒருபா ஒருபஃது' என்னும் பெயரினையுடையது. இதன்கண் திருப்பெருந்துறையுறை சிவப்பரம் பொருளின் சிறப்பும் அருளும் பற்றிப் பாடப்பட்டுள்ள பத்து பாடல்கள் உள்ளன. முற்றுப்பெற்றுள்ளது. ஆசிரியர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8368

திருப்பெருந்துறை இருபா இருபஃது

TIRUPERRUNTHURAI IRUBA IRUBAHDHU

Pages : 8-12
Lines 31 on a Page
Extent 75 granthas
Complete
All these 20 verses are on Siva enshrined at Tirupperundurai; Author, N. Kanagaraja Iyer, noted above.

Beginning:

காப்பு

"பெருந்துறைவாழ் தேவர் பெருமாள் கழற்கே
அருந்துறைகள் எல்லாம் அமையத் - திருந்தும்
இருபா விருபஃ திசைக்க வெயில்வேண்
டொருபாவை நெஞ்சமே யுள்ளு".

நூல்

"ஓங்காரப் பெட்டகத்தி னுட்பொருளா யைம்பூதம்
ஆங்கார மாலுக்கு மப்பாலாம் - நாங்காதல்
பூணும் பெருந்துறையான் பொற்பார் திருமேனி
ஆணு அருவமுள தாம் (க)

End:

"ஏக நாயகி யோக நாயகி

திருவிளக் கொடுங்குறச் சேரும் சிறப்பும்

அருளினை அன்றே அரும்பெருந் துறையில்

உருளிய வுருவுள ஒங்கார மூர்த்தியே".

பின்னணியுறை:

(குறிப்பு): இந்நூல் திருப்பெருந்துறை 'இருபா இருபஃது' எனும் பெயரினைப் பெற்றுள்ளது. திருப்பெருந்துறையுறை சிவப்பரம் பொருளின் சிற்ப்பும் அருளும் பற்றி இருபது பாடல்கள் உள்ளன. வெண்பாவும், ஆசிரியப்பாவுமாக இருபது பாடல்கள் உள்ளமையால் இருபா இருபஃது என்று அழைக்கப்படுகிறது. ஆசிரியர் திரு. நா. கனகராச ஐயர். முற்றும் உள்ளது.

R.8369

மும்மணிக்கோவை

MUMMANIKKOVAI

Pages : 13-22
Lines 32 on a Page
Extent 180 granthas
Complete
This literary genre, mummanik kovai, consisting of 30 stanzas, sung on Siva of Tirupperundurai. Author, N. Kanagaraja Iyer.

Beginning:

காப்பு

"செய்தற் கரியசெயல் செய்ய விழையு நெஞ்சே

உய்தற் குரியநெறி யோதுகேள் - வெய்துற்ற

செம்மணி வேழத்தைச் சிந்தித்துத் தேவர்பிரான்

மும்மணிக் கோவை மொழி"

நூல்

"அறிவி னுருவம் ஆற்றலி னுருவம்
நெறியின் முடிபை நிகழ்த்தும் உருவம்
பேரரு ளுருவம் பேரொளி யுருவம்
நாரமை யுருவம் வேரமை யுருவம்
ஆயினு மருவ மாகிப் பெருந்துறைத்
தேவி யோடு திருத்தக வமர்ந்த
பாவி பூதம் பயில்நிகழ் வென்ற
மும்மையு நன்றே முகிழ்ப்புற வருளும்
அம்மை யப்பன் ஆத்தும நாதன்
பெருந்துறை யுவந்த பெருமான்
வருந்துறை மனமென வகுப்பேம் யாமே".

End:

"அடையவர் ஒரைவர் ஆயினு மன்னார் அகத்தியற்றும்
இடையூறு கோடி யெனவே யறியு மிதயமுளீர்
நடையுற வெய்திய பெருந்துறை வாழான்ம நாயகனை
அடைகுவிர் போற்றுவிர் பேரின்ப முன்டென் றறிகுவிரே".

(குறிப்பு): இந்நூல் முன்மணிக்கோவை என்னும் பெயரினை உடையது. திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது முப்பது பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மூவகைப் பாக்களால் யாக்கப்பட்ட முப்பது மணிகளாகிய பாடல்களைக் கோவையாக்கி இறைவனுக்குச் சூட்டி மகிழுகின்றனர். இந்நூல் ஆசிரியர். திரு. நா. கனகராசர் ஐயர், எம்.ஏ.

R.8370

திருப்பெருந்துறை நான்மணிமாலை

TIRUPERUNDHURAI NANMANI MALAI

Paper; Pages : 23-33
Extent 200 granthas
Complete
N. Kanaraja Iyer's another work; This is also on Siva enshrined at Tirupperundurai wherein we have 40 verses.

Beginning:

காப்பு

"இருக்கின் முடியேறி யிலங்குதிருத் தாளாள்
அருக்கன்மதி அங்கி விழியானோன் - பெருக்குமுறும்
ஆளுடையான் மாலையமை நான்மணி பொ ருந்தத்
தாளுதவும் வேழமுகன் தான்".

நூல்

"இல்லந்தொ றும்புகுந்திங் கியானே யிருப்பலெனச்
சொல்லும் பழமைச் சுருதியினான் - நெல்லின்வளம்
குன்றாப் பெருந்துறைவாழ் கோகழியை நெஞ்சார
நன்றாக வேண்டுகின்றோம் நாம்".

End:

"நெஞ்சே தோழமை நிரம்பப் பெற்றாய்
அஞ்சே லெனவே அருள்பொழி பெருமான்
குருந்தடி யமர்ந்த குருவர மூர்த்தியாய்
இருந்ததருள் புருயும் பெருந்துறை குறுகாய்
ஏனோ பிறவி யெடுக்கத் துணிந்தனை
வானோர் வணங்க மறைதேர் முனிவரர்
ஏனோர் இறைஞ்சி யேத்தினர் பராவ
ஈனோர் எவர்க்கும் எளிதின் விளங்கிய
தேனோர் வண்டினம் செறிமலர்த் சோலைசூழ்
திருப்பெருந் துறையெனும் திருத்தகு தலத்தே
உருப்பெறும் பொருளென உயர்ந்தோ ரேத்தும்
அருவப் பிரானை அருளின் பிரானை
திருவப் பிரானைத் திருத்தகு பிரானைப்
போற்றிப் புகழும் புலமை
யெற்றுப் பொலிது இல்லத் தகத்தே". (20)

(குறிப்பு): இந்நூல் திருப்பெருந்துறை நான்மணிமாலை என்னும் பெயரினை உடையது. அவ்வூரில் எழுந்து அருள்வழங்கும் இறைவன் மீது பாடப்பட்டது. நால்வகைப் பாக்களால் நாற்பது பாடல்களாகிய மலர்களைக் கொண்டு கட்டிய பாமாலை நான்மணிமாலையாகும். ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அம்மாலையை ஆண்டவனுக்குச் சூட்டி மகிழ்கின்றார். பிரபந்த வகையில் ஒன்று. முற்றுப்பெற்றுள்ளது.

R.8371

திருப்பெருந்துறை ஐந்தெழுத்தமுதக் கோவை

TIRUPERUNDHURAI AYNDELUTHTHAMUDHAK KOVAI

Pages : 34-46
Extent 150 granthas
Complete
All these 50 stanzas sing the glory of Siva of Tirupperundurai; Author, N. Kanagaraja Iyer; Period, 20th Century.

Beginning:

காப்பு

"வெயிலுகந்த ஐங்கரத்து வேழத்தைப் - போற்றி
எயிலுகந்த ஆளுடையா னேற்றுப் - பயிலுகின்ற
அன்புப் பெருந்துறையில் ஐந்தெழுத்துக் கோவையினை
இன்புற்றுப் பேசுவனே யான்".

நூல்

"பெருந்துறை யருமைக் கோயில்
பிறங்குற வாழும் வள்ளல்
இருந்துறை இதுவே யென்ன
இருக்கினற் சிரத்து வாழ்வான்
வருந்துறை யனைத்தும் காட்டி
வாதவூர் முனையி ஆண்டான்
அருந்துறை யெளிதாச் செய்யும்
ஐந்தெழுத் தமுதக் கோவே".

End:

"வையமோ வான வாழ்வோ
மதித்திலா மனத்துச் சான்றோர்
மெய்யதெ யுருவ மாக
வேதநா யகன்வாழ் கோயில்
செய்யதாள் நெல்லி னோங்கும்
திருப்பெருங் துறையிற் சேர்வார்
ஐயநீ யாரைக் காப்பாய்
ஐந்தெழுத் தமுதக் கோவே"

(குறிப்பு): இந்நூல் 'திருப்பெருந்துறை ஐந்தெழுத்தமுதக் கோவை' என்னும் பெயரினை உடையது. இதில் ஐந்தெழுத்திறைவனின் பெருமை கள் அதிகம் பேசப்படுகின்றன. ஒவ்வொரு பாடலும் "ஐந்தெகுத்து அமுதக் கோவே" என்று முடிகின்றன. மொத்தம் 50 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன். முழுதும் உள்ளது.

R.8372

திருப்பெருந்துறை ஆறுமுக ஆராதனை மாலை

TIRUPPERUNTHURAI ARUMUGA ARUMUGA ARADHANAI MALAI

Pages : 46-54
Extent 160 granthas
Complete
This garland of verses is in praise of god Arumugam of Tirupperundurai; Author, N. Kanagaraj Iyer, mentioned earlier.

Beginning:

காப்பு

"ஐந்துமுகத் தோடதோ முகமொத் தாறாக
இந்துமுக வேணி யிறைவனே - வந்து
பெருந்துறையா னாவதைப் பேணுவாம் வேழத்து
அருந்துணைமைப் பெற்றே அகத்து".

குறிப்பு:

குமாரனென ஆறுமுகக் குருவரனைக் கொடுக்கும்
குறிப்பானே தென்முகமாக் குடிலையக மடங்கும்
சமானனிலா ஆற்றலினான் சதாவிசனாம் பகவன்
தற்புருட முதாய தனதம்மை முகத்தோ
டெமாதுநலம் விளைத்தருளும் இதயத்தா லெடுத்து
இருமூன்று முகத்தோற்றம் இருக்குமுதல் மறைகள்
தமாரியகல் பொருட்டாகச் சாற்றுவது தெளிந்தே
சந்திரசூ டனைப்பணிவாம் சண்முகனா மெனவே".

End:

"திருநெறியின் தமிழ் கேட்கும் செவியாள புவியாள
வருநெறியும் போநெறியும் மனிதருக்கே அமைக்கிளரும்
இருநெறிகள் உளவென்ப இருள்நெறியு மொளிநெறியும்
அருநெறிய பெருந்துறையாய் ஆறுமுகப் பெருமானே".

(குறிப்பு): இந்நூல் திருப்பெருந்துறை ஆறுமுக ஆராதனை மாலை என்னும் பெயரினை உடையது. இதன்கண் திருப்பெருந்துறை இறைவனின் பெருமை பேசப்படுகிறது. ஆறுமுகப் பெருமானின் மீது பாடப்பட்டுள்ளது. அம்முருகனுக்கு கவிதைப் பூக்களால் மாலை தொடுத்து ஆராதனை மாயைாக அணிவித்து மகிழ்கின்றார் ஆசிரியர் நா. கனகராசன். முழுதும் உள்ளது.

R.8373

திருப்பெருந்துறை ஏழிசையருள் வழங்கு மாலை

TIRUPPERUNTHURAI ELISALIYARUL VALANGUMALAI

Pages : 55-72
Extent 275 granthas
Complete
Unpublished
Stanzas by N. Kanagaraja Iyyer solicit Siva so that the author may get the seven kinds of music.

Beginning:

"சாம மறையுள் தழைக்கும் இசையானான்
நாம முருவமிலா நம்பெருமான் - ஏமம்
இசைக்கும் பெருந்துறையா னேழிசையின் மாலை
இசைக்கும் ஒருகொம்பி னேறு

அருட்பெருந் துறையாய் ஆளுடை யரசே
ஆரண மாயிர முடையாய்
மருட்பெருந் துறையில் மயங்குவே முளத்தே
மறைப்பெரு நுணுக்கும் வைத்த ருள்வாய்

பொருட்பெருந் துறையில் பொருவிலாப் பொருளே
புரையிலா வேழிசை யருள்வாய்
தெருட்பெருந் துறையாய் சிவப்பரம் பொருளே
திருப்பெருந் துறையுறை சிவமே (க)

End:

"உயிரெனப் பிறந்தே உலகிடை யுழன்றே
உவப்பொடு வெறுப்பிடை விழுந்தே
பயிரெனா வளர்க்கத் தகுந்தபேரன்பாம்
பண்பினை வளர்த்திலா தழிந்தேன்
தயிரினாற் பயத்தால் மதுவினால் இளநீர்
சந்தனத் தூற்றினம் குளிப்பாய்
செயிரிலாப் பொருளே இசைக்கலை யருள்வாய்
திருப்பெருந் துறையுறை சிவமே". (எ0)

(குறிப்பு): இந்நூல், திருப்பெருந்துறை ஏழிசையருள் வழங்கு மாலை என்னும் பெயரினை உடையது. திருப்பெருந்துறை இறைவனிடம் ஏழிசையை அருளவேண்டிய பாடிய பாமாலை. இதன்கண் எழுபது பாடல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் 'திருப்பெருந்துறை உறை சிவமே' என்றே முடிகின்றன. முழுதும் உள்ளது. ஆசிரியர் திரு. நா. கனகராசன்.

R.8374

எண்வகைத் திருத்தரும் இறைவன் மாலை

ENNVAGAIT TIRUTTHARUM ERAIVAN MALAI

Pages : 73-93
Lines 32 on a Page
Extent 375 granthas

Complete
In 80 verses, the Poet Kanagaraja Iyer euologises god Atmanatha for graces

Beginning:

"எட்டுவகை மேனி இயைந்தஅரு ளாளன்
சுட்டுமொழி யில்லாச் சுடரானால் - எட்டுருவ
மாலை யிசைப்பதற்கு வானவெயி லுகந்த
மாலை வழுத்துகவென் வாக்கு

இயன்றவள வுண்மையினை யிசைப்பதற்கே துணிந்தே
எம்பெருமான் நின்கழல்கள் இரண்டினையும் பிடித்தேன்
மயன்றமன நிலையோடு வாழ்க்கையிலே யுழன்றேன்
மறந்ததனை நின்னருகே வருவதற்கே யெழுந்தேன்

துயன்ற கொன்றை மாலையினாய் தூயமனத் தடியர்
தொழுவெளிது பெருந்துறையிற் றோன்றியருள்பரம
அயன்றனெமுத் தெனையே ஆட்கொளலுக் கடனே
ஆத்துமநா சரணம் அடைக்கலம்தந் தருளே".

End:

"கவிதவாக் கருளினைநீ கருணையெழு கடலே
கவிமழையே யருள்வதற்கும் கனவுருவில் வருதி
சவிதாவே சந்திரனே தன்றுரவ மெனவே
சாதித்த பெருமானே சந்திரசே கரனே
பவிதாநன் னிலைபெறவே பணிந்துபரா வினனே

பார்த்தருளித் திருவருட்கே பாத்திரமாம் புரிவாய்

அவிதாவென் றிசையாதே அமைதியுற வருள்வாய்

ஆத்துமநா யகசரணம் அடைக்கலம்தந் தருளே". (அ0)

எண்பது செய்யுளில் முடியவேண்டும் என்று இப்படி எழுதப்பட்டது.

(குறிப்பு): இந்நூல், 'எண்வகைத் திருத்தரும் இறைவன்மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் எண்பது பாடல்கள் உள்ளன. ஆத்தும நாதனின் அருள்வேண்டியும் அடைக்கலம் வேண்டியும் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியும், "ஆத்துமநாயக சரணம் அடைக்கலம் தந்தருளே" என்று முடிகிறது. இயற்றியவர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8375

திருப்பெருந்துறை நவமணிமாலை

TIRUPPENDURAI NAVAMANIMALAI

Pages : 95-145
Extent 728 granthas
Complete
The 'malai' prabhandam runs in 100 verses which is in praise of Siva of Tiruppendurai. Author, N. Kanagaraja Iyer.

Beginning:

காப்பு

"ஆத்தும நாதன் அடிமலர்க்காம் தொண்டுசெய

சாத்து நவமணித் தமிழ்மாலை - ஏத்தும்

வெயிலுகந்த பிள்ளை விழியருளை யெய்தி

எயிலுகந்த நாவான் எழும்".

மாணிக்கம்

"திருப்பெருந் துறையாய் வாதவூ ரடிகள்
திருப்பணி யுவந்த தேசிகனே
திருவருட் சுடரே கருவினுட் புகுந்து
சிறுமையே நிறைந்த சிற்றுயிரை

அருப்பெருந் துறையா யமர்ந்தவா றருளும்
ஆண்டவா நீண்டபே ரரசே
அம்பிகை யெனவே யடைந்தருள் தலைவி
அருவமே புனைந்தரு கிருக்க

உருப்பெருந் துறையின் அழகெலா மொளிர
உள்ளமே யுணர்ந்துயத் தகுந்த
ஒப்பரு முருவாய் யோகநா யகியாய்
உவப்புறப் பணிசெய வமைத்தாய்

மருப்பெருந் துறைசேர் மலர்மது பயமே
வாக்கிய நம்பிபூ சனையை
மகிழ்வொடு மேற்ற மாணிக்க மணிமே
வழங்குவாய் நினையடி யவர்க்கே". (க)

End:

"ஆயிரம் உருவம் ஆயிரம் நிலையம்
ஆயிரம் தலங்களி லுடையாய்
அருமறை முடிமேல் ஆடிய கழலாய்
அம்பா வுருவமே பொருந்தி

வேயுநல் லொளிகால் பொன்னினம் பலத்தே
விளங்கினை காளத்தி நகரில்
விரிந்துசெய் வாயுவு ருவொடு விளங்கி
வேடனார் வழிபட விசைந்தாய்

தீயென நிமிர்ந்தாய் திருவண் யாமலையில்
திருவானைக் காப்புன லானாய்
திருவளிங் காரூர் நகரிலே புற்றாய்த்
திகழ்தனை பரம்பொரு ளுருவே

சேயனே யெவரும் தெளிவதற் கரிய
திப்பிய மரம்விளங் கினையே
திவனொளி விளங்கு பவளமே யனைய
திருப்பெருந் துறையுறை சிவவே".

பின்னணியுரை::-

மீனாட்சி சுந்தரர் பெருங்குடும்பியாக இருப்பதால் அவனுக்குப் பாரமாய் இல்லாமல் விரைந்து பிற இடங்களுக்குப் போகவே இப் பிரபந்த வரிசை இங்கு இந்த அளவில் நிற்கிறது. இனி மதுரை, புதுக் கோட்டை - கோட்டையூர் காரைக்குடி முதலிய உறைவிடங்களில் நடைபெறும். திருச்சிவாசம் ஒருவாரம் நீடிப்பதாட்ல இன்னும் பிற பிரபந்தங்கள் இங்கு நடக்கும்.

(குறிப்பு): இந்நூல் 'திருப்பெருந்துறை நவமணிமாலை' என்னும் பெயரினையுடையது. இதன்கண் திருப்பெருந்துறையுறை சிவத்தை நவமணிகளாக உருவகப்படுத்திப் பாடியுள்ளார். மாணிக்கம் முதலாக பவளம் முடிவாக உள்ள ஒன்பது மணிகளாக இறைவனை விளித்துப் பாடுகின்றார். நவமணிகளோடு 'கெம்பு' வும் சேர்ந்து பாடல்களின் எண்ணிக்கை நூறாகி விட்டது. இயற்றியவர் திரு. நா. கனகராசன்.

R.8376

திருப்பெருந்துறை தசாங்க மாலை

TIRUPPERUNDURAI TASANGA MALAI

Pages : 146-198
Lines 32 on a Page
Extent 626 granthas
Complete
Unpublished
This literary genre possesses 100 stanzas; all of the songs, sing the glory of Siva enshrined at Tirupperundurai. 'Thasangam' means, 10 aspects for a king. Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"உருப்பெருந் துறையி னீங்கி ஓமெனு மெழுத்துள்நின்ற
அருப்பெருந் துறையி னெய்தி ஆளுடை அமல னாகித்
திருப்பெருந் துறைக்கண் வாழும் சிவபிரான் தசாங்கு மாலை
கருப்பெருந் துறையி னீக்கும் கயமுக னருளு மன்றே".

நூல்

"அருட்பெருந் துறையே அடியவர் புகுவான்
அறிவெனுக் திருவினை யருளும்
தெருட்பெருந் துறையான் திருவுற வமரும்
திருப்பெருந்த துறைநகர் சிறக்க
பொருட்பெருந் துறையில் மிகுந்துநற் புகழ்பூண்
புண்ணியம் பழுத்தமா நிலத்தை
மருட்பெருந் துறையை மாற்றிய தமிழ்
மாநில மெனவழுத் துவமே". (க)

முடிவு

"கொள்ளவல் லவன கொடுக்கவல் லவனே
குடிலையுள் மறைபரம் பொருளே
குணக்கட லெனவே கூறிய புலவர்
குணங்களை யளந்தெதப் படியே
உள்ளமார் தளியில் உறையுடுமம் பெரும
ஒருமையே யிருமையே விளக்கி
உருவிலா தமர்ந்து திருப்பெருந் துறையில்
உரியவர் பூசனை பெற்றாய்
எள்ளவல் லவரும் இருப்பரோ வுலகில்
எம்பிரான் சூலமேந் தினையேல்
எப்படை தனையும் எடாமலே யுலகம்
யாவையும் அடக்கியா ளுதியே
புள்ளர சுவர்தான் பூவின்மே லமர்ந்தார்
போற்றிய திருவடிப் பரம
பொன்மலை சிலையாய் வளைத்தனை யலையோ
பொற்புறு மற்புதத் துணையே". (க00)

(குறிப்பு): இந்நூல் 'திருப்பெருந்துறை தசாங்க மாலை' என்னும் பெயரினையுடையது. இதில் அரசனுக்குரிய பத்து உறுப்புகளாக தொல்காப்பியத்தில் கூறப்பட்டவற்றை ஆண்டவனுக்கும் பொருந்த அவற்றின் சிறப்புகளைப் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு உறுப்புக்கும் பத்துப்பத்துப் பாடல்களாக மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. நூலின் முதலில் இரண்டு பாடல்கள் வேறுவிருத்தத்தால் பாடப்பட்டு ஆசிரியர் தன் சந்தத்தை மாற்றிக் கொண்டதால் நூலோடு சொந்தம் கொண்டாட முடியாமல் நிற்கின்றன. அதையும் சேர்த்தால் 102 பாடல்களாகும். முழுதும் உள்ளது. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8377

அருவ அண்ணல் அடிமலர் மாலை

ARUVA ANNAL ADIMALAR MALAI

Pages : 199-246
Lines 32 on a Page
Extent 700 granthas
Complete
Aruva Annal, here, is Siva; on him is written this piece in 100 verses by N. Kanagaraja Iyer

தொடக்கம்

"அடிமலர் இலாயே முடிச்சடை யிலாயே
அருள்மலி திருப்பெருந் துறையாய்
அருகிலே யமர்ந்த யோகநா யகியொடு
ஆயிர கோடி யருச்சனைகள்
படியிலே சிறந்த குலமுடை யவராம்
பரிணதர் புரிதர வுவந்தாய்
பனுவலே தமிழா லிசைத்த பாவலர்க்குப்
பதவியும் இறப்புமே அமைத்தாய்
கொடியிலே யிடபம் கொண்டவெம் பிரானே
குடிலையு ளடங்கிய சிவமே
கூப்பிட நினைப்பார்க் கருள்விளக் குறவே
குவலயம் புகுந்தனை புகலாய்
துடியுள கரத்தாய் உலகெலாம் படைத்த
சோதியே ஆதிநா யகனே
தொழவுநிற் பணிந்து புகழவு மடியேம்
தொல்லைநல் வினைபுரிந் துளமே" (க)

முடிவு

"குறைமை வாழ்வுறு கோயிலே இறுதிதோற்ற மிலாதவ
இனிமை நல்கடை கோலமே எழில் விளங்கிய ஆதியே
முறைமை பூமி நிலைக்கவே முதலமைச்சென வந்தவர்
முனிவ ராகி யடங்கியே முயன்று மெய்ப்பணி பூணவே
கறையில் ஏவல் விதித்தனை கறைவிரும்பிய வேந்தனே
கழலில் வீழ அமைத்தனை கனிவு காட்டு குருந்தினுய்
மறைகள் தேறிய முனிவரர் வாழ்த்த நின்ற பராபர
மறைகள் தேடு நகரினுய் வாழ்வுநல்கு தெய்வமே".

(க00)

Colophon:

"இப்பிரபந்தம் பதிற்றுப்பத்து முறைபற்றிப்பத்து வெவ்வேறு விருத்த வகையாற் பாடப்பட்டது. ஆயினும் அந்தாதி அமைக்கவில்லை. இது தொடங்கியது திருச்சிராப்பள்ளியில். இன்று முடிவு பெறுவது காரைக்குடிக்கு அடுத்த கோட்டையூரில்".

(குறிப்பு): இந்நூல், "அருவ அண்ணல் அடிமலர்மலை" என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண் அருவ அண்ணலாகிய மாதர்பாகனின் அருள்வேண்டி 'வாழ்வு நல்கு தெய்வமே' என்று முடியும் நூறுபாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8378

அருவ அன்னை அடிமலர் மாலை

ARUVA ANNAI ADIMALAR MALAI

Pages : 247-284
Lines 32 on a Page
Extent 570 granthas
Complete
Unpublished
Aruva Annai is none other than Parvathi; On her is composed this genre by N. Kanagaraja Iyer in 100 stanzas.

தொடக்கம்

காப்பு

"ஆளுடைய கோயில் அருவ அன்னை மாலைசொல
நாளுடைய ஞாயிற்றின் நன்மையெலாம் ஆளும்
வெயிலுகந்த பிள்ளைகழல் வேண்டுநன் னெஞ்சே
மயிலுகந்த கோவை வணங்கு".

நூல்

"திருப்பெருந் துறையாம் சிவபுரத் தினிலே
சேருவார் மனநலம் தெளிந்து
கருப்பெருந் துறையைக் கழற்றுணைத் துகளாற்
கழற்றியே திருவருள் புரியும்
அருப்பெருந் துறையின் தலைமையே யனமந்த
அம்பிகை யோகநா யகியின்
உருப்பெருந் துறையை உணருவாம் தெளிவாம்
ஒருமனு மெழுத்தினை யுரைத்தே". (க)

முடிவு

"உலகநா யகியே உவணநா யகியே
ஓதிப விடபநா யகியே
ஒப்பில்நா யகியே எப்பில்நா யகியே
ஒத்தினால் உணருநா யகியே

பலகமே அரிகை கதைதனு முதலாம்

படைகளை மதித்திலா துலகம்

பாலனம் புரியும் பரமநா யகியே

பழமைசால்ல யோகநா யகியே

விலகமே யறியா தமரரே முனிவர்

வேண்டினர் வழுத்தினர் பரவும்

விமலநா யகியே திருப்பெருந் துறையாம்

வேதமா புரத்துநா யகியே

உலகமே யுடையாய் உயிரெலா முடையாய்

உரியவர் மனமெலாம் உடையாய்

உவப்பினா லவர்தம் மனத்தகம் குறிப்பாய்

ஓமெனு மந்திர முரைத்தே". (க00)

பின்னணியுரை

(குறிப்பு): இந்நூல் 'அருவ அன்னை அடிமலர் மாலை' என்னும் பெயரினையுடையது. 'ஓமெனும் மந்திரம் இசைத்து' அருவ அன்னையின் அடி மலரில் அருள்வேண்டிப்பாமாலைகளைச் சூட்டி பரவுகின்றார் ஆசிரியர். இயற்றியவர் நா. கனகராசர், எம்.ஏ. ஒவ்வொரு பாடலும் 'ஓமெனும் மந்திரம் (இசைத்து) உரைத்து', என்றே முடிகின்றன. முழுதும் உள்ளது.

R.8379

திருவருள் வெள்ளச் சிறப்பு

TIRUVARUAL VELLA CHIRPPU

Pages : 284, 285
Total Lines 251
Extent 25 granthas
Complete
Running in venba metre this depicts the graces of the god enshrined at Tirupperundurai. Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"குருவருள் வேண்டும் குறிப்பால் உரைப்பாம்
திருவருள் வெள்ளச் சிறப்பு - மருவருள்
வேழ முகத்து வெயிலுகந்த விநாயகனை
யாழ விறைஞ்சுதும் யாம்".

ஒருபா ஒருபஃது வெண்பா

"அறியவலார் யாரே அறிந்தவள வானே
குறியை யுணர்வதும் கூடும் - செறியும்
குருவருள் தந்த குடிலைப் பொருளாம்
திருவருள் வெள்ளச் சிறப்பு".

முடிவு

"பெருந்துறை வாழும் பெருமாள் பொலிக
பெருந்துறை வாகும் பிராட்டி - பொருந்திய
நல்லருளே வாழிய ஞாலமெலாம் என்று நவில்
சொல்லளவே யாகும் சுகம்".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் 'திருவருள் வெள்ளச் சிறப்பு' என்னும் பெயரினையுடையது. இதன்கண் இறைவனின் அருள்வெள்ளச் சிறப்பு, அளவின்றி கிடைக்கவேண்டுமென்ற விருப்பத்தால் அதன் பெருமைகளைப் பாராட்டிப் பாடப்பட்டுள்ளது. 'வெண்பா'வால் பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசர், எம்.ஏ. முற்றும் உள்ளது.

R.8380

மாணிக்கவாசகர் திருவாயிரம்

MANICKAVASAGAR THIRUVAYIRUM

Pages : 286-466
Lines 32 on a Page
Extent 3500 granthas
Complete
As many as 1000 verses narrate the glory of Manickavasagar and how he attained the graces of Siva. Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"மாணிக்க வாசகர் வாக்கமுத நன்கு துய்க்கும்
ஆணிப் பொன்போலும் அகமுடையான் - காணிக்குத்
தேர்ந்தான் பெருந்துறையைச் சித்தமலர் வாழ்கின்றான்
ஆர்ந்தான் திருவாயிரம்".

நூல்

"மாணிக்கவாசகர்தே ரேறு மாறு வகுத்தருள்வான்
ஆணிப்பொன் அம்பலத்தா னந்தக் கூத்தன் அருவமுறீஇ
பாணிக்கு வாய்ந்த இறைவிதுணை யோடு பத்தர்தொழ
பேணிப் பெருந்துறை வந்துறைவா னருள் பேசுவமே". (க)

முடிவு

"ஓரன்பர் உணருகென உருவம் காட்டி
உலகமெலாம் அருவமென உணர நின்றான்
சீரன்பர் வாதவூர்த் தேவர் என்றே
செகமெலாம் அறிந்துகொளச் செய்த தேவன்
பேரன்பர் ஆயிரர்முன் பேசாப் பேச்சாற்
பெருந்துறையிற் குருந்தினடி பிறங்கவல்லாய்
வாரன்பர் மண்ணன்பர் வன்னி யன்பர்
மாணிக்க வாசகர்தேர் வாய்ப்ப திண்டோ? (க000)

வாழ்த்து

"ஆணிப்பொ னம்பலத்தே ஆசிமொளி புக்கடங்கும்
மாணிக்க வாசகர் மாண்பறியப் - பேணிப்
பெருந்துறையாற் போற்றும் பிரபந்த மீதோர்
அருந்துறை ஆயிரமா மால்".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் 'மாணிக்கவாசகர் திருவாயிரம்' என்னும் பெய ரினையுடையது. இதன் கண் மாணிக்கவாசகர் இறைவனிடம் அருள் பெற்றச் சிறப்பு பற்றி கூறப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரின் தமிழ்ப்புலமையும், இறைவனின் அருள்வேண்டி அவர் வாடிய நிலையும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. ஆசிரியர் நா. கனகராச ஐயர். மொத்தம் ஆயிரம் பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது.

R.8381

ஆன்மநாதன் அந்தாதி

ANMANATHAN ANTHADHI

Pages : 467-476
Lines 28 on a Page; Tamil, Good, New
Extent 160 granthas
Complete
In 'andhadhi' style this eulogises Atmanathan enshrined at Tirupperundurai.
Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"அந்தாதி யெய்தற் கரிய பெருந்துறைத் தேவனுக்கே
அந்தாதி பாட வெயிலுகந்தான் டருள் ஆனைமுகன்
வந்தாதி யான மொழியும் பொருளும் வகுப்புதனால்
சந்தாதி வேத புரிநாதன் ஏற்கும் தயாவுடனே".

நூல்

"திருவாழ் பெருந்துறை ஆத்தும நாயக தேடுமறை
உருவாய் எனவே யுரைப்பது கேட்டு முமைதருவும்
அருவாய் அமரும் பெருமை பொருந்திய ஆலயத்தே
குருவாய் அமரக் குருந்த நிழலோ குறுகினையே".

முடிவு

"தூயவனே மறைத் தொல்பொருளே கதிர்தோன் றுவிழி
ஏயவனே திருவாசகம் கோவை இயம்பு மன்பர்
வாயவனே நன்மனத் தவனே மறைவாழ் புரத்தே
மேயவனே யுனைக்கண்ட லெவ்வாறு விளம்புகவே".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் 'ஆன்ம நாதன் அந்தாதி' என்னும் பெயரினை உடையது. பெருந்துறையில் உறைந்துள்ள ஆத்துமநாயகன் மீது அருள்வேண்டி அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8382

யோகநாயகி பதிற்றுப் பத்தந்தாதி

YOGANAYAKI PATIRRUPPATTANTADI

இந்நூல் எழுதப்படாமல் விடப்பட்டுள்ளது. பெயர்மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

R.8383 - 8404 (One Codex)

Paper; Pages : 1-470; Tamil, Good, New
Extent 8380 granthas
Complete

R.8383

பராசக்தி மாலை

PARASAKTHI MALAI

Pages : 1-15
Lines 30 on a Page; Tamil, New, Good
Extent 350 granthas
Complete
In 100 verses, N. Kanagaraja Iyer begs Parasakthi for graces.

தொடக்கம்

காப்பு

"தரா சக்தி சாந்த சக்தி சாத்துவிக சக்தி
பராசக்தி மாலை பகர்வாம் - இராசக்தி
உள்ளமெய்யன்பர் உவப்பதருள் வேழமுக
வள்ளலெருள் நெஞ்சமலர் வைத்து"

வேண்டுகோள்

"காலநிலம் கடந்துநின்ற கருணைச் செல்வி
கலைகளினால் அளப்பரிய கதிமேல் நின்றாள்
மூலமறை முடியினிலே முறைமை நாட்டும்
முண்டகத்தாள் இரண்டுடைய முதன்மைத் தேவி
கோலமிஃ தெனவெவரும் குறித்த லாகாக்
குணங்குறிகள் கொளுந்தெய்வம் குடுமிக் குனிறல்
ஞாலமெலா நலம்பெறவே நடனம் ஆடும்
நாயகியை நாமனத்தால் நணுக வோமே". (௧)

முடிவு

"அஃகம் பெருக வாழ்கவெனக அளவில் மறைகள் புகன்றாலும்
வெஃகம் வெருளல் விலகாதே விழைந்து பாவம் புரிமாந்தர்
எஃகம் மேந்தி யாழியெடுத் திறைமை பூணும் பராசக்தி
அஃகு நிலையை யருளாதே ஆண்டு பெருக வாழியவே".

வாழ்த்து

"பழமை பொருந்து பராசக்தி பாதம்புனையும் தமிழ்வாழி
கிழமை பொருந்து தொண்டரினம் கிளர்ந்து வளர நிலம்வாழி
உழவர் குலமும் உழுதொழிலும் உலகம் செழிக்க வாழியவே
மழவர் குலமும் வணிகரோடு மறைவாழ் குலமும் வாழியவே".

(குறிப்பு): இந்நூல், 'பராசக்தி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் பராசக்தியிடம் அருள்வேண்டி உள்ளம் உருகுமாறு பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ. அவர்கள். முழுதும் உள்ளது. மொத்தம் 100 பாடல்கள் உள்ளன.

R.8384

திருமயிலாப்பூர் கபாலிகோயில் கற்பகவல்லிமாலை

TIRUMAYILAPPUR KABALIKOIL KARPAKAVALLIMALAI

Pages : 16-30
Extent 320 granthas
Complete
A laudation on Karpagavalli of Mylapore (Madras) in 108 songs by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"கபாலி தழுவிய கற்பக்த்தை வேண்டும்
உபாய மலதொன்று றுணரேம் - சபாதி
அறியேம் விநாயகனே அன்னையருள் வேண்டி
நெறியே மழையை நிறை".

பிரபந்தம்

"திருவளர் தண்டமிழ் நாட்டின் அறநெறி தேறு மன்னும்
உருவளர் புன்னையங் கானல் மயிராகும் ஒப்பிலியே
டருவளர் மாலிகை சூட்டுவம் கொண்ஃமு வரவருள்வாய்
கருவளர் செல்வத்தைக் காக்கும் மயிலையிற் கற்பககே". (க)

முடிவு

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையமும் தேவநெறி
பொய்யாத வானமும் ஒப்பில்வென் றுரைபொன் மொழிகள்
மையார் குழலி மயிலாபுரித்த தனிவா ழணங்கே
கையா மனத்திரேம் தாயே மறைமொழி கற்பகமே".

வாழ்த்து

"வாழி கபாலி திருக்கழல் அன்பர் மனமலர்மேல்
வாழிய கற்பக நாயகி பூங்கழல் மாமறைமேல்
வாழிய மெய்த்தொண்டர் கூட்டம் சிறக்கும் மயிலைநகர்
வாழிய வென்றும் குறையா தெழுங்கார் மழைமுகிலே".

பின்னணியுரை:

21.4.69இல் சென்னையில் இருக்கும்போது இப்பிரபந்தம் இயன்றது. 18.8.69இல் இரண்டாம் பிரதி இயன்றது. 3.11.69 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு இஃது கோட்டையூரில் பிரதிசெய்ய பெற்றது.

(குறிப்பு): இந்நூல், 'திருமயிலாப்பூர் கபாலிகோயில் கற்பகவல்லி மாலை' என்னும் பெயரினையுடையது. கற்பகவல்லியிடம் கருணை வேண்டிப் பாடப்பட்டுள்ளது. மொத்தப்பாடல்கள் 108. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராச ஐயர், எம்.ஏ.

R.8385

மதுரைக் கயற்கண்ணிமாலை

MADURAIK KAYARKANNI MALAI

Pages : 31-46
Extent 300 granthas
Complete
As many as 108 verses sing the fame of Kayarkanni of Madura; Author, Kana garaja Iyer; Period, 20th Century.

தொடக்கம்

காப்பு

"மதுரைக் கயற்கண்ணி வண்மைபுகழ்ந் தேத்தி
மதுரைக் கயற்கண்ணி மாலை - மதுரகவி
பாடித் திருவருளேப் பார்த்திருக்கும் நெஞ்சத்தேம்
தேடிக் கரிமுகன்முன் சேர்ந்து".

பிரபந்தம்

"திருவால வாயெனும் மாண்பெயர் பூண்ட திருத்தலத்தே
உருவா லவாவி யுலகே பணியும் உரிமையினுய்
தருவா லுதவற் இயலாத வாழ்வுதரும் விழியாய்
கருவாய் வராமை யருள்வாய் மதுரைக் கயற்கண்ணி". (க)

முடிவு

"பேரின்பம் வேண்டும் பிறிதொன்று வேண்டேம் பெருமையினாய்
ஓரின்பம் அஃதே யெனமறை யோதினர் உற்றுணர்ந்தார்
தேரின்பம் கண்டேம் அருள்க் அஃதெனச் சேவைசெய்தே
காரின்பம் நோக்கிய தாயே மதுரைக் கயற்கனியே". (க0அ)

வாழ்த்து

"மதுரத் தமிழால் இறைவி கயற்கண்ணி மாண்பு புகல்
மதுரைக் கயற்கண்ணி மாலை யுலகத்தில் வாழ்வுறுக
மதுரைக் கயற்கண்ணி பாத கமலமும் வாழ்வுறுக
மதுரைக் இரசாய சொக்கப் பெருமானும் வாழியவே"

பின்னணியுரை:

மூன்றாம் பிரதியாகிய இஃது கோட்டையூர் சிவன்கோயில் அக்கிர காரத்தில், சௌமிய ஐப்பசி கஅ, 4.11.69 செவ்வாய்க்கிழமை எழுதப்பெற்றது.

(குறிப்பு): இந்நூல் 'மதுரைக் கயற்கண்ணிமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் மதுரைக்கண் வீற்றிருக்கும் அங்கயற்கண்ணி அம்மனிடம் அருள் வேண்டிப் பாடிய பாடல்கள் உள்ளன. அங்கயற்கண்ணிக்குப் பாடல்களை மாலையாக்கி அணிவித்துள்ளார் ஆசிரியர். இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8386

திருவானைக்கா என்ற சம்புகேசுவரம்

அகிலாண்ட நாயகி திருமாலை

TIRUVANAIKKA ENRA SAMBUKESUVARAM

AHILANDA NAYAKHI TIRUMALAI

Pages : 46-61
Extent 330 granthas
Complete
A 'malai' prabhandam eulogises Akilandeswari of Tiruvanaik Kaval. N. Kanagaraja Iyer, 20th Century, composes this eulogy in 108 verses.

தொடக்கம்

காப்பு

விநாயக வணக்கம்

"அகிலாண்ட நாயகி ஆனந்தக் செல்வி
முகிலாண்ட கூந்தல் முதல்வி - நகிலாண்ட
ஞானத் தலைவி நறுமாலை யேகதந்தான்
மானத் தருளால் வரும்".

வேண்டுகோள்

"நாற்பொருள் நல்கும் திருவானைக் காவுறை நாயகனைப்
பாற்படு பூசனை செய்து மணந்த பவித்திரைகாண்
மாற்பதம் நல்கி யுலகுயிர்க் காத்தருள் வண்மைநிறை
காற்பது மத்தினள் அன்புக்கெளிய கருணையளே".

முடிவு

"சிற்றம் பலத்திலும் பேரம் பலத்தும் சிவமுளது
மற்றம் பலத்திடைத் தேடி யடையு மனித்தரினும்
சுற்றம் பலத்திடை யாமவற் காகும் துணிபுரியும்
நற்றம் பலத்தினை நல்காய் அகிலாண்ட நாயகியே". (க0அ)

வாழ்த்து

"வாழிய வெண்ணுவ நாதன் திருவடி மாமலரே
வாழி அகிலாண்ட நாயகி பாத மணமலரே
வாழி திருவானைக் காவெனு நற்றலம் மாநிலத்தே
வாழி அகிலாண்ட நாயகி மாலை மகிதலத்தே".

பின்னணியுரை:

இது சௌமிய ஐப்பசி (மாதம்) 20 (ஆம் நாள்) புதன்கிழமை காலையில் கொட்டையூரில் தொடங்கிப் பெற்றது. பிறகு மதுரைக்கு வந்து ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மதுரையில் மீனாட்சிசுந்தரம் இல்லத்தில் பூர்த்தி செய்யப்பெற்றது.

(குறிப்பு): இந்நூல், 'திருவானைக்கா என்ற சம்புகேசுவரம் அகிரலாண்ட நாயகி திருமாலை' என்னும் பெயரினை உடையது. திருவானைக்காவில் உறை அகிலாண்ட நாயகியின். அருள்வேண்டிப் பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8387

ஸ்ரீ சாரதாதேவி திருமாலை

SRI SARATHADHEVI THIRUMALAI

Pages : 62-87
Lines 32 on a Page
Extent 250 granthas
Complete
N. Kanagaraja Iyer invokes Saradha Devi of Sringeri in 100 songs. Period, 20th Century.

தொடக்கம்

காப்பு

"பிருங்கமென் அன்பர்மனம் பேணிப் பணியும்
சிருங்ககிரி சாரதா தேவி - பெருங்கருணை
சேரப் புனையும் திருமாலை வேழமுகன்
ஈரத் துணைமைபெறு மின்று".

வேண்டுகோள்

"அருள்வெள்ளம் அவனியிலே பரப்பு வதற்கு
அவதரித்த அறிவர் கோமான்
பெருள்வெள்ளம் தமதாக்கி யுலக மெலாம்
வென்றுயர்ந்த சிவமாம் ஞானி
மருள்வெள்ளம் ஒழிக வென்று சிருங்ககரி
வருவித்த மாதா தேவி
உருவெள்ளம் ஒடுதுங்க பத்திரைச்சார்
சாரதைதாள் உளத்துள் வைப்போம்".

முடிவு

"நொள்குமுடல் மருந்தாலே தேறுவது
மெய்யாமேல் நூண்மை யெல்லாம்
கொள்ளுமனக் குருவரனார் திருவாக்கிற
குளிக்கின்றார் குணமேன் சொல்வேன்
வெள்குமன நாவலிரே வந்திலிரே
வந்துமனம் விளம்பீர் என்றாள்
எள்குறவை மிதித்தருளும் சிருங்ககிரிச்
சாரதைதாள் இறைஞ்சி வாழ்வோம்".

(குறிப்பு): இந்நூல், 'ஸ்ரீ சாரதா தேவி திருமாலை' என்னுடன் பெயரினை உடையது. சிருங்ககிரி சாரதைத்தாள் உளத்துள் வைத்து வணங்கிப் பாடும் பாடல்களாக உள்ளன. சாரதாதேவியின் அருள்வேண்டிப் பாடப்பட்டுள்ளன. மொத்தம் நூறுபாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8388

காமகோடி அம்பிகை மாலை

KAMAKODI AMBIKAI MALAI

Pages : 88-103
Lines 30 on a Page
Extent 270 granthas
Complete
Invoker of Kamakoti Ambikai, here, for betterment, is poet N. Kanagaraja Iyer. Composed in 20th Century all these 108 songs.

காப்பு

"கருக்காம கோடி கழியும் கருத்தால்
திருக்காம கோடிகழல் சேர - உருக்காமம்
தோன்றும் கருத்தாற் நெடங்குந் தமிழ்மாலை
ஊன்றும் கரிமுகனெஞ் சற்று".

வேண்டுகோள்

"தாய்மை யுருவம் தனதெனவே தமியே னறி
விளங்குகின்றான்
சேய்மை யணிமை யிலாப்பொருளைத் தெளிவித்தருளும்
திருமுகத்தாள்
வாய்மை மெய்ம்மை உண்மை மும்மை வழங்குமொரு மூ
விழியாட்டி
நோய்மை யகல்விடுங் காஞ்சி நோன்மை யுருவை
யிறைஞ்சுவமே".

முடிவு

"என்றுமுள்ள தொன்று வேதம் யாவும் ஒதிவைத்ததே
என்றுகூற வந்தஞானி இதயபீடம் ஏறினாய்
பொன்றுமாறு மீளுமாறு போகிலாத விட்டுளே
கன்றுகண்ட தாய்மை காஞ்சி காமகோடி அம்பியே". (க0அ)

வாழ்த்து

"வாழி வாழி வாழிநன்கு வாய்த்த தொண்டைமண்டலம்
வாழி வாழி வாழிகாஞ்சி வாழவந்த ஆலயம்
வாழி வாழி வாழிகாஞ்சி வந்தகாம் கோடியே
வாழி வாழி காமகோடி மனனமர்ந்த மாந்தரே".

(குறிப்பு): இந்நூல், 'காமகோடி அம்பிகை மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் காமகோடி அம்மையின் கருணை வேண்டிய பாடல்கள் உள்ளன. உள்ளம் உருக்கும் வண்ணம் பல பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது. மொத்தம் நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன.

R.8389

திரிபுர சுந்தரி மாலை

TIRIPURA SUNDHARI MALAI

Pages : 104-130
Lines 32 on a Page
Extent 760 granthas
Complete
A 'malai' prabhandam lauds the fame of Tiripura Sundari in 100 stanzas. Another feather to the crown of N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"திரிபுர சுந்திரி தேவர்தொழும் தேவி
பரிபுர பாதம் பணியக் - கரிமுகத்தான்
வாக்கருளி நெஞ்சமர்ந்து மாலை மணமருளும்
நோக்கருளும் நாவால் நுவன்று".

வேண்டுக்கோள்

"ஏடார வெழுதியுணர்த் தரிதாய பரம்பொருளை
இதயத் தேற்றி
நாடாளு மன்னவரே தலைவணங்கச் சீடருக்ம்
ஞானம் நல்கும்
பீடாதி பதியாகத் திருக்காம கோடிமடம்
பிறங்கும் ஞானி
வீடாய பேருள வழிபடுமம் பிகைமதத்தில்
வீழ்ந்து வாழ்வாம்".

முடிவு

"அறிவர் மனத்திடை அறிவின் விளங்கிய ஆற்றிலினரவசளே
அறிவலர்தேடி யழைத்திடு காலையில் அருளொடு
வருபவன் காண்
செறிவொடு தெளிவமை திருவுருவுள்ளவன் தேவியர் சிரமமர்வாள்
திரிபுர சுந்திரி பரிபுர பங்கய திருவடி யிருமையிருள்
மறிளெ ருண்டன நிலையில் மகிழ்ச்சி மனத்துநினைக் கலரே

மறைமுடி தேடிய பொருளை விளக்கிய மாதை
மருவவளே
கறிவளர் நிலனொடு நெல்வளர் முத்தொளிர் கழனிய நாளுடையான்
கலியுக நாயகி திரிபுர சுந்திரி கழல்மலர் பணிகுவமே".
(க00)

வாழ்த்து

"வாழிய நான்மறை வாழிய நூல்வகை
வாழிய வடமொழியே
வாழிய தமிழ்மொழி வாழிய பிறமொழி
வாழிய உலகமெலாம்
வாரிய அறநெறி வாழிய பொருணெறி
வாரிய இன்பநெறி
வாரிய வீட்டை விளக்குறு நெறிவகை
வாரிய தவநெறியே
வாழிய சத்துவ குணமலி மானுயர்
வாழிய சத்தியமே
வாழிய நற்பயிர் வாழிய புன்பயிர்
வாழிய நானிலமே
வாழிய கார்முகில் வாழிய பெருமழை
வாழிய உழவர் பணி
வாரிய அரசொடும் அறநெறி நிலைபெற
மறைமுதல் அருளாகவே".

(குறிப்பு): இப்பிரபந்தம் 1.5.69க்குப் பொருத்தமாகிய சௌமிய ஆண்டு சித்திரைமதிப்

பூரணை திதி அன்று தொடங்கி 5.5.69இல் சென்னையில் விசுவேசுவரனோடு இருந்த காலத்தில் பூர்த்தியாயது. இரண்டாம் பிரதி சௌமிய ஆவணி பிரதனம புதன்கிழமை சிராவண தினத்தன்று கோட்டையூரில் புத்தகத்தில் எழுதி முடிந்தது. அன்று 28.8.69 மூன்றாம் பிரதியாகிய இப்பிரதி சென்ற நான்கு நாளாக எழுதப்பெற்று இன்று பிற்பகல் பூர்த்தியாயது. சௌமிய கார்த்திகை ங செவ்வாய் நவமிதிதி சதயநாள் 18.11.69.

(குறிப்பு): இந்நூல், 'திரிபுர சுந்தரி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் திரிபுர சுந்தரியின் பெருமை கூறப்பட்டுள்ளது. தேவியின் திருவருள் வேண்டி உருகி பாடுகின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன். "வாழிய தமிழ் மொழி, வாழிய பிறமொழி" என்று வாழ்த்துப்பகுதியில் பாடியுள்ளதிலிருந்து இவரது பரந்தமனப்பான்மை வெளிப்படுகின்றது. முழுதும் உள்ளது.

R.8390

யோகநாயகி மாலை

YOGANAYAGI MALAI

Pages : 131-145
Lines 30 on a Page
Extent 340 granthas
Complete
An invocation of poet N. Kanagaraja Iyer (20th Century) towards Yoganayagi of Tirupperundurai. Herein are available 100 stanzas forming a literary genre what is known as 'malai'.

தொடக்கம்

காப்பு

"வெயிலுகந்த பிள்ளைகழல் வேண்டுத் தொழுதே
எயிலுகந்த ஆத்துமநா தேசன் - மயிலுகந்த
யோகத்து நாயகிக்கே யோகமுறு மாலைபுனைந்து
ஏகத்து னின்புறுவாம் யாம்".

வேண்டுக்கோள்

"பாரத பூமியிடை யாலயம் பலவுண்டு பரமனும்

பலவடிவமாய்ப் பக்த கோட்டியின் மனது பரிவினொடு

வேண்டுதும் படிவமே பலவேண்டுவன்

நாரதன் தந்தநூல் நெறியிலே பக்திவளர் நாட்டகத்

துருவமில்லா

நாயகியு நாதனும் கோயில்கொண் டருள்கின்ற நற்றிருத் தலமொன்று காண்

நீரத நிறத்தலன் கோயிலுட் சிவநேச நித்தியா னந்த வல்லி

நேயநெறி காட்டுவா னிலைநின்ற கோயிலு நிலத்தகம் பலவுண்டுகாண்

சாரத மதத்துத் தெளிவருளு நாயகி தன்னிகரில் யோகதேவி

தழைத்துள திருக்கோயில் நெஞ்சத் தமைந்துள்ள

தமிழ்ப்னுவல் நாவளருமே".

முடிவு

"அகத்துறை சிவமே சிவத்துறை சிவையே அருமறை முடிதிக ழொளியே

சகத்துறை தொடர்பே தொடர் பெயர் மறுத்த தத்துவத் தனிநிலைப் பொருளே

இகத்துறு பொருளே பரத்துறு பொருளே எங்குமாய் யாவுமாய் இறைவி

மகத்துவ முளையே பரத்துவ முனையே மறைந்த முதல்யோக நாயகியே".

(க00)

வாழ்த்து

"சிறப்புற வாழ்க திருப்பெருந் துறையே சிவபரம்பொருள் திருத்தளியே

சிறப்புற வாழ்க குருந்தடி யமர்ந்த திப்பிய குரவனெம் பெருமான்

சிறப்புற வாழ்க ஆன்மநா யகனே திருவருள் யோகநா யகியே

சிறப்புற வாழ்க வாதவூ ரடிகள் திருப்பணிச் சிறப்பினாற் சிறந்தே".

பின்னணியுரை

இப்பிரபந்தம் சென்னையில் விசுவேசுவரன் இல்லத்தில் இருந்தபோது 11.5.69இல் பூர்த்தியாயிற்று. அங்கு ஒரு தனிச்செய்யுள் எழுதப்பெற்றிருந்தது. அது வருமாறு,

"முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறகணமும் முடங்கிவாழும் ஒப்பற்ற திருமேனி யுடையானை உலகவுயிர் உறுகண் நீக்கிச் செப்பத்தின் வாழ்வதற்கே அறச்செங்கோல் ஏந்தியருள் திருக்கைவேந்தை எப்பற்று மறவொழிந்தார் இதயமலர் இருப்பானை இறைஞ்சுவாமே".

(குறிப்பு): இந்நூல், 'யோக நாயகி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் திருப்பெருந்துறையில் தங்கி அருட்பெருஞ் செல்வத்தை அடியவர்க்கு அருளும் யோக நாயகியின் பெருமை பாராட்டப்படுகின்றது. ஆசிரியர். நா. கனகராசன். அம்மையின் அருள்வேண்டிப் பாடிய பாடல்களையே மாலையாக்கி அம்மைக்கு அணிவிக்கின்றார். மொத்தம் நூறு பாடல்கள் உள்ளன. இந்நூல், சென்னையில் விசுவேசுவரன் இல்லத்தில் பூர்த்தியானதாக அதன் பின்னணியுரையால் தெரிகிறது. முழுதும் உள்ளது.

R.8391

திருவண்ணாமலை அண்ணாமலையான் துணை

உண்ணாமலை உடை திருமாலை

UNNAMULAI UMAI THIRUMALAI

Pages : 146-161
Lines 30 on a Page
Extent 250 granthas
All these 108 songs are set for singing the glory of Unnamalai of Tiruvannamalai. Setter, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"அண்ணா மலையான் அருள்விளக்கம் நாட்டுமனை
உண்ணா முலையாம் உமையுருவம் - எண்ணாத்
திருமாலை யாக்கச் செழுந்தமிழை நல்கும்
அருள்வாயும் வேழமுகத் தான்".

வேண்டுகோள்

"நினைந்தளவில் முத்தியருள் அருணகிரி மான்மியத்தை
நிகழ்த்தும் நூல்கள்
வினைந்தசிவன் புகழ்மாலை செவியேற்று மனமகிழ்ந்து
வணக்கம் தோன்றப்
புனைந்தபுது மாலையொன்று திருவண்ணா மலையானைப்
பொருந்தும் தேவி
நனைந்தவரு ளுளத்திண்ணா முலையம்மைக் காகுமென்று
நவிலப் புக்கேன்".

முடிவு

"கோடிக்கரை வரைசென்றவர் கோடற்கரி தெதுவோ
தேடிப்பெற லரிதாகிய சிவமெய்ப்பொருள் எதுவோ
ஆடிப்பெற அதுநல்குவான் அருணாசல னதனை
ஓடிப்பெறு கென வோதினர் உண்ணாமுலை யுமையே". (க0அ)

வாழ்த்து

"ஆக்கைக்குயிர் அருணாசலன் அருள்வாழிய இனிதே
வாக்கைத்தரு முண்ணாமுலை மனம்வாழிய இனிதே

புக்கைக்கொடு வழிபட்டவர் புலமைத்திறம் வளர்க
நோக்கைத்தரு திருத்தொண்டரின் நோன்புத்திறம் வளர்க".

"உலகத்துயிர் எல்லாம்நலம் உறவே பயிர்வளர்க
நலனைத்தரு தொழில்வல்லவர் நலநாடினர் வளர்க
வலமிக்கமர் புரிகின்றவர் மனுநூல்நெறி வளர்க
புலனிற்கவர் புலமைப்பயன் புவியெங்கனும் வளர்க".

பின்னணியுரை

முதற் பிரதி	இரண்டாம் பிரதி	மூன்றாம் பிரதி
17.5.69	29.8.69	20.11.69

சென்னை (கோட்டையூர் மதுரை)

முதற் பிரதி சிறய கைப்புத்தகத்தில் எழுதியது. இரண்டாம் பிரதி திருத்தமாகக் கட்டடம் உள்ள புத்தகத்தில் எழுதிய பெற்றதாயினும் சில பிழைகள் நேர்ந்ததால் இந்த மூன்றாம் பிரதி எழுத நேர்ந்தது. இப்பிரதியிலே சில பல திருத்தங்கள் புகுந்துள்ள காரணத்தால் இதுவே சுத்தப்பிரதி எனத்தக்கது.

நா. கனகராசன்

சௌமிய கார்த்திகை ரு வியாழன்
துவாதசி உத்திரட்டாதி.

(குறிப்பு):இந்நூல், "உண்ணாமுலை உமை திருமாலை" என்னும் பெயரினை உடையது. இதன்கண் அண்ணாமலையானின் புகழ்பாடி அவனின் துணையாளின் இணையற்ற கருணை எடுத்தியம்பப் பட்டுள்ளது. அண்ணாமுலையான் மனைவி உண்ணாமலையாள் நினைந்தளவில் முத்தியருள்கின்ற நேர்மையாள் என்றும் அவளின் அருள் பெறுதல்போல் அவனியிற் வேறு சிறப்பில்லையென்றும் பாடப்பட்டுள்ளது. அப்பாடல்களாகிய மாயையால் அம்மையை அணி செய்து மகிழ்கின்றார் ஆசிரியர். ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முற்றும் உள்ளது.

R.8392

சிவகாம சுந்தரி மாலை

SIVAKAMA SUNDHARI MALAI

Pages : 162-177

Lines 30 on a Page
Extent 350 granthas
Complete
Asking for prosperity, N. Kanagaraja Iyer, worships here Sivagama Sundari in a 'malai' prabhandham of 108 stanzas.

தொடக்கம்

காப்பு

"பொன்மன்றிற் கூத்துவக்கும் பொன்னரசை நோக்கிநிற்கும்
சொன்மன்றம் வேண்டுசிவ சுந்தரியைத் - தன்மக்கள்
காக்கும் சிவகாமக் கற்பரசைக் கார்மாலை
காக்கும் கரிக்கற் பகம்".

வேண்டுகோள்

"கற்பகப்பேர் பூணும் கயமுகனைப் போற்றுகின்றோம்
அற்பகத்தே வீற்றிருப்பா னாதலினால் - வெற்பகத்துத்
தோன்றும் சிவகாமி சொன்மாலை நன்கமைய
ஊன்றும் தமிழ்மொழியில் உற்று".

முடிவு

"பெரும்பற்றப் புலியூரிற் பெரும்பற்றே புரிகின்ற
அரும்பற்றைப் பற்றிநின்றே அகிலகிலா அருளரசி
தரும்பற்றில் மூழ்குவதே தவமாக நினைவாரைத்
திரும்பற்ற நிலைசேர்க்கும் சிவகாம சுந்தரியே". (க0அ)

வாழ்த்து

"எல்லையே விளக்கரிய வேற்றமுள சிவம்வாழி
தொல்லைமா மறைபோற்றும் சொன்னமய சபைவாழி

தில்லைவாழ் பேரரசி சிவகாமி அருள்வாழி
தில்லைவாழ் அந்தணர்தம் திருப்பணியும் வாழியவே

சிவகாமம் நமர்க்களிக்கும் திருவருளும் வாழியவே
தவகாமம் தமிழ்க்கருளும் சக்திசிவம் வாழியவே
பவகாமம் மாற்றியருள் பரங்கருணை வாழியவே
சிவகாம சுந்தரியின் திருமாலை வாழியேவே".

பின்னணியுரை

மூன்றாம் பிரதி 22.11.69 காலை 5.30 மணிக்கு இப்புத்தகத்தில் திருத்தமாகஎழுதப்பெற்றது. திருவருள் மதுரை.

நா. கனகராசன்,

22.11.69.

(குறிப்பு): இந்நூல், சிவகாம சுந்தரிமாலை' என்னும் பெயரினை உடையது. தன்னேரிலாச் சிறப்புடையவள், தாய்மை குணம் நிறைந்தவள் சிவகாமி அம்மை என்று சிறப்பித்துப் பாடப்பட்டு உள்ளது. அம்மையிடம் அருள்தா என்று ஆசிரியர் வேண்டுகின்றார். ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8393

நெல்லைக் காந்திமதிமாலை

NELLAIK GANDHIMADHIMALAI

Pages : 178-228
Lines 32 on a Page
Extent 625 granthas
Complete
A supplication extending towards Gandhimati of Tirunelveli; Author of this application is N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"நெல்லைநகர்க் காந்திமதி நீள்விழிநள் னோக்குமுறச்
சொல்லியிசை நன்மாலை சூட்டுதற்கு - வல்லையருள்
காட்டியருள் பூக்கும் கயமுகனை வாழ்த்துவல்யான்
ஏட்டிலெழுத் தேறுகவே யென்று".

ஆறுமுக நயினார் துதி

"நீறுபொலி திருமுகங்கள் திசைகளெலாம்
விளக்க நின்ற தீபத்தாரான்
சோறுபுனல் குறைவறியாத் தென்பாண்டி
நெல்லைநகர் சுடரும் செவ்வேள்
பேறுமன நினையுமுனம் பன்னிரண்டு
கரத்தாலம் பெறுவித் தாள்வான்
ஆறுமுக நயினாரைக் காந்திமதி
மாலைசொல அடைவேன் யானே".

முடிவு

"அருமையே யுருவான அருளினா லமைசக்தி
அகிலலோ கேசி வாழ்க
அழகினா லொப்பற்ற பெண்தெய்வம் ஆனந்தம்
அருளாமெம் மன்னைவாழ்க

பெருமையே வளர்கின்ற பெருமாட்டி யூராட்டி
பிஞ்ஞகன் தேவி வாழ்க

பிறப்பிறப் பொழியவே யுயிர்கட்கு முன்வரும்
பெண்மைப் பிராட்டி வாழ்க

இருமையா முருவெய்தி யேகமே யாமென்று
இசைத்தருளும் இறைவி வாழ்க
இணையிலா வொளியுள்ள காந்திமதி யாமெழில்
இயற்றமிழ்ச் செல்வி வாழ்க

ஒருமையே யுண்மையென் றுள்ளூற வுணர்த்தவே
உருவெடுத் துள்ள தேவி
உலகங்கள் பலபோடி நலமெய்த ஆண்டருளும்
உத்தமச் செல்வி வாழ்க".

பின்னணியுரை:

முதற் பிரதி	31.8.69	சென்னை
இரண்டாம் பிரதி	3.9.69	கோட்டையூர்
மூன்றாம் பிரதி	2.11.69	மதுரை

(குறிப்பு): இந்நூல் 'நெல்லைக் காந்திமதி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன் கண் திருநெல்வேலியின் கண்ணுள்ள காந்திமதித்தாயின் கருணை உள்ளம் பாராட்டப்பட்டுள்ளது. ஆண்டவனையே ஆட்டுவிக்கம் அற்புதத் தாயிடம் ஆன்மசுகம் பெறுகின்ற அடியவர்கள் போற்றும் பாணியில் புகழ்ந்து பாடியுள்ளார். மொத்தம் 108 பாடல்கள், வாழ்த்துபாக்கள் தனியாக நான்கு உள்ளன. முழுதும் உள்ளது. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8394

மட்டுவார் குழலி மாலை

MATTUVAR KULALI MALAI

Pages : 229-224
Lines 30 on a Page
Extent 315 granthas
Complete
A 'malai' prabhandam in 108 stanzas on Mattuvar Kuzhali of Tiruchi hill asking for the blessings by N. Kanagaraja Iyer. Period of this prabhandam is 20th Century.

தொடக்கம்

காப்பு

"தாயான செல்வம் தழுவுமட்டு வார்குழலி
சேயார விந்தபதம் சேர்மாலை - சேயாகும்
வேழமுகன் செவ்வேள் விதித்தருளும் சொற்பொருளோ (டு)
ஏழைமையேன் நாவின் எழும்".

மலைப்படி விநாயகர்.

"கற்பகமே போல முன்றில் காத்த விநாயகனை
அற்பகமே போந்தருளும் ஆனைமுக - சிற்பரனை
தாயான செல்வம் தழுவுமட்டு வார்குழலி
வாயான் வரவே வணங்கு

தேடாத செல்வத்த ராயினும் தாயின் திருவருளே
ஓடாத மேருவரை யெனப்பெற்றோர் உலகினவர்
பாடாத பாடலும் கேளாத கேள்வியும் பண்புவளர்
வாடாத வாழ்வும் சிறப்ப வருள்மட்டு வார்குழலே". (கo அ)

வாழ்த்து

"வாழிதிருச் சிராப்பள்ளி மலைமுடிவாழ் தவைன்
வாழிஅரு ளால்உலகாள் திருமட்டு வார்குழலி
வாழிவிநா யகன்ஆறு முகனெனமக் கள்மனம்
வாழிதிரு மட்டுவார்குழல் மாலைமனம் பெறவே".

பின்னணியுரை:

முதற் பிரதி சென்னையில் இயன்றது. 1.8.69
இரண்டாம் பிரத் கோட்டையூரில் எழுதப்பெற்றது. 4.9.69
மூன்றாம் பிரதி மதுரை T.V.S. நகர் E.193 இல்லம் 4.12.69 எழுதி முடிந்தது.

(குறிப்பு): இந்நூல், 'திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில்' எழுந்தருள இருக்கும் மட்டுவார் குழலி மீது பாடப்பட்டதாகும். 'மட்டுவார் குழலி மாலை' என்னும் பெயரினைப் பெற்று உள்ளது. மட்டுவார் குழலியின் பெருமைகளைப் பாடல்கள் எனும் மலர்களால் மாலையாக்கி அணிவித்து மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது. மொத்தம் 108 பாடல்கள் உள்ளன.

R.8395

திருக்குற்றாலம் குழல்வாய் மொழிமாலை

TIRUKKURRALAM KULALVAY MOZHIMALAI

Pages : 245-261
Lines 30 on a Page
Extent 300 granthas
Complete
Another 'malai' prabhandam by N. Kanagaraja Iyer; This is on Kuzalvai Mozhiammai of Kurralam, a hill-station. Herein are present 108 songs.

தொடக்கம்

காப்பு

"குற்றாலம் வாழும் குழல்லவாய் மொழியம்மை
சொற்றாளும் மாலைத் துதிபுகல்வாம் - முற்றாத
திங்களணி வேணிகொளும் தீர்த்த விநாயகனை
மங்களமாய் நெஞ்சகத்தே வைத்து".

குற்றால நாதன்

"குறும்பலா நீழல் குளிர்ச்சிமிக வாழ்வான்
நறும்பல அன்பர்க்கு நல்கும் - குறும்பிள்ளை
வேழ முகத்து விநாயகனைக் கைப்பற்றும்
யாழவனை நெஞ்சே இறைஞ்சு".

முடிவு

"திருமால் வளர்ந்த திருத்தலத்தே சிவமே நினைந்து புகுந்தமுனி
கருமால் கெடுக்கும் தவச்சிறப்பாற் கரத்தைச் சிரமேல் வைத்துநின்று
திருமால் உருவைச் சிவமாக்கித் தேயம் புக்கப் புரிந்ததனை
பெருமால் கழன்ற தவமுனிவர் பெருமையென்றும் பேருலகே

குறுக முருவம் திருமாற்கே கொடுத்துச் சிவமா மாற்றுவித்த
குறுக முனிவர் குறுமுனிவர் கொடுத்த தலமாம் குற்றாலம்
அறுகு மத்தம் எடுக்கணியும் அரனும் துளவம் அணியரியும்
மறுகு மிகுந்த நகரத்தே வயங்குமொருமை விளக்கியதே".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் திருக்குற்றாலம் 'குழல்வாய் மொழி மாலை' எனும் பெயரினை உடையது. திருக்குற்றாலத்தில் வற்றாத அருள் மழையை வழங்கிக் கொண்டிருக்கும் குழல்வாய் மொழியம்மையின் சிறப்பினை இந்நூல் இயம்புகின்றது. அவ்வம்மையின் அருள்வேண்டி ஆசிரியர் உருக்கமாகப் பாடியுள்ளார். இதற்கிறுதியில் 'அகத்தியத்துதி' என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் உள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் பாடல்களின் எண்ணிக்கை நூற்றெட்டு. முழுதும் உள்ளது.

R.8396

திருக்குற்றாலம் இராசராசேசுவரி மாலை

TIRUKKURRALAM RAJARAJESWARIMALAI

Pages : 262-311
Lines 36 on a Page
Extent 675 granthas
Complete
Rajarajeswari templed at Karralam has been invoked by N. Kanagaraja Iyer for blessings. Invocation completes in 108 songs.

தொடக்கம்

காப்பு

"குற்றாலம் புக்குக் குலவும் பெருமாட்டி
வற்றாத செல்வம் வழங்குவாள் - நற்றாய்
இராசரா சேசுவரி இன்சொற்பா மாலை
கராசலமே காக்கும் கனிந்து.

சராசர மெல்லாம் தவப்பேற்றா லோங்க
இராசரா சேசுவரி ஈண்டித் - தராநின்ற
எல்லா நிலமும் இயைய விநாயகனே
சொல்லலா மாலை சொலும்".

முடிவு

"இதயமே தனியா யேற்ற பேரரசி
இராசரா சேசுவரி யெனவே
பதமய மறைகள் பரவியே புகழும்
பரிசுள பதும சோமனையாம்

முதமய முகத்தான் அமுதமே யொழுகும்
மொழியினான் உலகெலாம் நிறைந்த
இதமய நிலையான் உலகமெய்ந் நிலத்தின்
இயற்கையால் பதமலர் வாழி".

"இராசரா சேசி யிருபத மிறைஞ்சி யியற்றிய பவந்தம் வாழ்வுறுக
இராசரா சேசி யருளின்வீற் றிருக்கும் எழில்மலிதவங்கள்வாழ் வுறுக
இராசரா சேசி மனத்திடை யிருந்தே இயம்பிய மொழிகள்வாழ் வுறுக
இராசரா சேசி திருவடி பரவும் ஏற்றமார்மலர்கள் வாழ அறவே".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல் திருக்குற்றாலம் 'இராச ராசேசுவரி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் அவ்வம்மையின் அருட்சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. இராசராசேசுவரி அம்மையின் அருள்வேண்டிப் பாடியுள்ளார். மொத்தம் நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8397

தையல்நாயகி திருமாலை

TAIYALNAYAKI TIRUMALAI

Pages : 312-327
Lines 30 on a Page
Extent 450 granthas

Complete
On the graceful character of Thayyalnayagi of Vaideeswaran Koil by N. Kanaga raja Iyer. He executes his job with 108 stanzas. Date of composition, 1969.

தொடக்கம்

காப்பு

"புள்ளிருக்கு வேஉளூர் புகுந்துநிறைந் தருள்வாள்
உள்ளிருக்கு மெய்ப்பொருளை யோதுவாள் - கள்ளிருக்கும்
தாமரைக்கைத் தையல் தமிழ்மாலை பாடுதற்கு
நாமலர்த்தும் வேழமுகம் நான்கு".

முருகப்பெருமாள்

"திருநீறு நல்கிச் சிவநெறியே சேர்க்கும்
பெருநீறு காட்டும் பெருமாள் - அருணாடி
முத்துக் குமார மொழியருள்க வென்றுமனம்
ஒத்துத் துதிப்போம் உவந்து".

முடிவு

"ஆக்கமே யருள்க அறிவையே யருள்க
ஆற்றலே அருள்கென விரப்போம்
நோக்கமே யருள்க நுணுக்கமே யருள்க
நோன்மையே யருள்கெனப் பணிவேம்
மோக்கமே யருள்க மோனமே யருள்க முதல்வியே
வெனவிறைஞ் சுவமே
தாக்கமே யறியேம் தணிந்துனை யடைந்தேம்
தாய்மையே தையல்நா யகியே". (கO அ)

வாழ்த்து

"வாழிய திருப்புள் ளிருக்குவே ளூரில் வாழ்வுறும் மருத்துவர்
தலைவன்
வாழிய அவனுக் கருகியே துணிமை வகித்துள தையல்
நாயகியே
வாழியிவ் விருமை யொருமையென் றுணரும் மனமுள
திருக்தொண்டரினமே
வாழிய தமிழின் மறைமொழி யுலகில் வடமொழி மறையொடு
பயின்றே".

பின்னணியுரை:

இப்பிரபந்தம் சென்னையில் இருந்தபோது 1.5.69 இயன்றது. நாட்குறிப்பு இல்லை. கோட்டையூரில் பிரதிபண்ணத் தொடங்கிச் சேலத்திலே சாரதா அகத்தில் 14.9.69 ஞாயிறு காலை 5.30 மணிக்கு பூர்த்தியாயது. வியாழன் கோட்டையூரில் அன்றே சேலம் நோக்கிப் புறப்பட்டு திருப்பணி நடக்கின்ற ஸ்கந்தகிரிச் சாரலில் ஸ்கந்தமூர்த்தி தரிசனம் பெற்று சாந்தானந்தர் முரகனைப் பற்றிப் பிரபந்தம் இயற்றக்கூறியதால் அவற்றை விரைவில் முடித்துக் கொடுத்தேன். பிரபந்தத்திரட்டு இப்பொழுது புதுக்கோட்டை அதி டானத்தில் இருக்கிறது. அச்சு ஏறும்வழி எப்படியோ! முருகனே அறிவான் சேலம் கோட்டை சாரதா அகம்.

நா. கனகராசன்,

14.9.69.

இந்த மூன்றாம் பிரதி நான்கு நாட்களுக்கு முன்பு தொடங்கி இடையில் உடல்நிலை நன்கமையாததால்ல இன்று பகல் பண்ணிரண்டு மணிக்குப் பூர்த்தியாயிற்று.

(குறிப்பு): இந்நூல், 'தையல்நாயகி மாலை' என்னும் பெயரினை உடையது. இதில் புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீசுவரன் கோயிலில் வீற்றிருந்து அருள்வழங்கும் தையல்நாயகியின் அருட்சிறப்பூப் பாராட்டப்பட்டுள்ளது. மொத்தம் நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8398

கன்னியாகுமாரி மாலை

KANNIYAKUMARI MALAI

Pages : 328 - 343
Lines 30 on a Page
Extent 300 granthas
Complete
Goddess Kanyakumari has 'tempted' N. Kanagaraja Iyer to knit a Tamil Literary genre, 'malai' on herself. This knitting has been done with 113 songs.

தொடக்கம்

காப்பு

"இமயமுடி நோக்கி யிருந்தவமே நோற்கும்
குமரிகன்னி பாதமலர் கும்பிட் - டிமையவரும்
எய்தரிய வாழ்வுபெற ஏரம்பன் மெய்யருளைப்
பொய்தவிர நெஞ்சகமே போற்று".

வேண்டுகோள்

"பொன்னியும் வையையாறும் பொருநையும் பெருகுநாட்டில்
தன்னியல் தவமே யென்று தமிழருக் குணர்த்தும் தெய்வம்
பன்னியென் றொருவன் கூறப் பதிகாரம் இன்னும் பற்றாக்
கன்னியா குமரிதெற்குக் கடற்கரைக் காப்பா ளன்றே".

முடிவு

"சேரவர் நாட்டில் வாழ்ந்து செந்தமிழ் நாடுபோந்த
ஈரமார் உளத்துக் கன்னி இருபத முளரிவாழ்க
சாரமாம் பொருளை நல்கு சற்குரு தேவிவாழ்க
ஆரமாய்க் குமரி சூடும் அருந்தமிழ் மாலைவாழ்க

குழவிபோல் உருவம் காட்டிக் குளிக்கின்ற தேவிவாழ்க
கிழவியாய் உலகம் காக்கும் கிரியைசால் குமரிவாழ்க
அழகிய உருவம் பூண்ட அம்பிகை குமாரிவாழ்க
விழவுறு கோயில் வாழ்க விழியருள் உலகில் வாழ்க".

பின்னணியுரை:

முதற் பிரதி	.5.69 சென்னை
இரண்டாம் பிரதி	15.9.69 சேலம்
மூன்றாம் பிரதி	18.12.69 மதுரை

(குறிப்பு): இந்நூல், 'கன்னியா குமாரிமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் கடற்கரையில் வீற்றிருந்து கருணை மழை அருள்கின்ற 'கன்னியா குமாரி'யின் சிறப்பியல்புகள் கூறப்பட்டுள்ளன. மொத்தம் நூற்றுப்பத்துப் பாடல்களும், வாழ்த்துப்பாடல்கள் மூன்றுமாக நூற்றுப்பதின் மூன்று பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8399

பிரமரநாயகி மாலை

PIRAMARANAYAKI MALAI

Pages : 344-361
Lines 30 on a Page
Extent 325 granthas
Complete
Poet N. Kanagaraja Iyer solicits the blessings of Bramaranayagi of Sirsailam in elegant verses. This has been flourished in 1969.

தொடக்கம்

காப்பு

"வண்டுருவம் பூண்டுதிரு மல்லிகை அர்ச்சுனனைப்
பெண்டுருவம் எய்திப் பிணித்தாளைக் - கண்டுருகா
நெஞ்சமே யேரம்பன் நிற்கும் துணையாக
வஞ்சமறு மாலை வரும்".

வேண்டுகோள்

“பூதல மெல்லாம் நலம்பெற வாய்த்த பொதுவுடைமை
பாதல கங்கை பணிபதம் கொண்ட பரமனருள்
மீதன வாழ்நர் பெறுமுன் நிலத்தேம் விதிமுறையால்
காதலம் தத்துவம் போற்றுவம் வேண்டு கவிவரவே”.

முடிவு

“தொண்டுசெய் பயிற்சி யுண்டோ தூய்மைசால் நினைப்பு முண்டோ
கண்டுகொள் கருத்துமுண்டோ கனிவுறு மிதய முண்டோ
வண்டுவந் தருளவேண்டி மல்லிகை மலரைப் போற்றின்
உண்டுகொல் என்றுவேதம் உரைத்தருள் பேரின் பத்தே”.

வாழ்த்து

“வாழிமல் லிகைவாழ் தேவன் வாழிவண் டுருவத் தேவி
வாழிமெய் யறிவின் வெள்ளம் வாழியன் பளக்கு நெஞ்சம்
வாழிசீ சைலபூமி வாழிபா தாள கங்கை
வாழிதண் டமிழி னாலே வண்டினைப் புகழ்ந்த பாட்டே”.

பின்னணியுரை:

முதற்பிரதி	சென்னை	.5.69
இரண்டாம் பிரதி	சேலம்	16.9.69
மூன்றாம் பிரதி	மதுரை	20.12.69

நான்குநாள் சேலம் வாழ்வு நடந்தது. அங்கிருந்து காஞ்சிபுரம் போய்க் குருதரிசனம் பெற்றுவந்தேன்.

(குறிப்பு): இந்நூல், 'பிரமரநாயக மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் ஸ்ரீசைலம் மல்லிகார் இனம் பிரமரநாயகியின் சிறப்பியல்புகள் கூறப்படுகின்றன. அம்மையின் அருள்வெள்ளச் சிறப்பினைப் புகழ்ந்து அவ்வருள் தான் பெறவேண்டும் என்ற விருப்பத்தில் வேண்டுகின்றார். இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8400

காசி அன்னபூரணிமாலை

KASI ANNAPURANIMALAI

Pages : 362-377
Lines 30 on a Page
Extent 300 granthas
Complete
N. Kanagaraja Iyer (20th Century) sings the glory of Annapurani of Kasi, during his stay at madras, Salem and Madurai; This happened in the year 1969.

தொடக்கம்

காப்பு

"காசிநகர் வாழ்சிவத்தின் கையிலன்ன மிட்டருளும்
மாசிலன்ன பூரணியின் மாலைசொலத் - தேசுமிகு
தும்பிக்கை நம்பி துணையுண்டு வாக்குவரும்
நம்பிக்கை யுண்டு நமக்கு".

வேண்டுகோள்

"ஆற்றற் றிருவுரு அன்பின் திருவுரு ஆகமிகர்
சாற்றற் கரிவரும் பேரின்ப ஞானத் தவவுருவம்
போற்றற் குரிய விசுவேசன் கையில் புகாநிசம்பும்
ஏற்றத் திறைவி திருவன்ன பூரணி எம்மனையே".

முடிவு

"ஆனக துந்துபி மைந்தன் விளக்கிய அன்புருவன்
வானக வேந்தனும் மண்ணக மாந்தரும் வாழ்த்துபிரான்
கானக வாழ்வினர் கண்ணப்பா அன்பின் கனிவறிவான்
போனகம் வேண்டக் கரத்தி லிட்டா யன்ன பூரணியே". (க0அ)

வாழ்த்து

"வாழ்க திருவன்ன பூரணி பாத மலரிருமை
வாழ்க திருவிசு வேசுரன் பாத மலரிருமை
வாழ்க அவிமுக்த மாநகர் பாயும் வரநதியே
வாழ்க திருக்காசி மந்திரம் மன்னுயிர் வாழ்அறவே".

பின்னணியுரை:

முதற்பிரதி. 25.5.69 சென்னை
இரண்டாம் பிரதி. சேலத்தில் சாரதா அகத்தில் 16.9.69.
17.9.69 எழுதி முடிந்தது.

நாளைக்காலை இங்கிருந்து காஞ்சிபுரம் சென்று குருதரிசனம் பெறவேண்டும். குருப்பிரசாதம் பெற்று அம்பத்தூர் போகவேண்டும்.

மூன்றாம் பிரதி. மதுரையில் சுந்தரம் இல்லத்திலும் சங்கரதாராபனர் இல்லத்திலும் எழுதப்பெற்றது.

24.12.69
25.12.69

(குறிப்பு): இந்நூல், 'காசி அன்னபூரணிமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் காசியின் வீற்றிருந்து கருணையினை அருளுகின்ற அன்னபூரணியின் சிறப்புகள் பாடப்பட்டுள்ளன. அப்பெருமைகளடங்கிய பாமலர்களால் மாலை கொடுத்து அம்மனுக்குச் சூட்டி அகமகிழ்கின்றார். இயற்றியவர் திரு. நா. கனகராசனி, எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8401

காசி விசாலாட்சி திருமாலை

KASI VISALATCHI TIRUMALAI

Pages : 378-398
Lines 30 on a Page
Extent 315 granthas
Complete
N. Kanagaraja Iyer has composed these 108 stanzas in 1969 asking for the benign blessings, on Visalakshi of Kasi.

தொடக்கம்

துண்டி விநாயகர் துணை

காப்பு

"துண்டி விநாயகனைத் தூயமனம் வாழ்வினை
அண்டி யிரந்தருளை அன்பர்பெற - மண்டிவரும்
வேழமுகத் தானை விசாலாட்சி மாலைசொலி
வாழ விழை நெஞ்சே வழுத்து.

தாய்க்குத் தனிக்கோயில் தந்தைக்கு வேறுதனி
வாக்குந் திருக்கரசி மாதலத்தே - சேய்க்குளுயர்
தும்பிக்கை மூர்த்தி சுடரும் திருத்தளியை
நம்பிக்கைக் கொண்டடைவேன் நான்".

முடிவு

"நாடு மறியேன் நகரறியேன் நலமும் குலமும் அறியேனே
பீடு மறியேன் திருவறியேன் பிறப்பும் இறப்பும் பிரியேனே
ஓடு பிடித்தப் பெருமாலுக் குதவிபுரியும் பெருமாட்டி
வீடு வேண்டும் விசாலாட்சி விமலவிசுவே சாம்பிகையே".

வாழ்த்து

"வாழி காசி விசுவேசன் வாழி காசி விசாலாட்சி
வாழி அன்ன பூரணியே வாழி கங்கை வரநதியே
வாழி வேத பரம்பரையே வாழி மூவர் திருவாக்கே
வாழி வாத வூரர்மொழி வாழியுலக மருணெறியே".

பின்னணியுரை:

முதற்பிரதி. சேலத்திலே சாரதா அகத்தில் எழுதப்பெற்றது. 18.9.69.

இரண்டாம்பிரதி. மதுரையில் சங்கரன் அகத்தில் எழுதப்பெற்றது. 28.12.69.

(குறிப்பு): இந்நூல், 'காசி விசாலாட்சி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன் கண் காசி மாநகரில் விற்றிருக்கும் விசாலாட்சியின் கருணைச் சிறப்புப் பாராட்டப்பட்டுள்ளது. மொத்தம் நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8402

திருவெவ்வுளூர்க் கனகவல்லிப் பிராட்டி திருமாலை

TIRUVEVULUK KANAGAVALLIP PIRATTI TIRUMALAI

Pages : 394-417
Lines 34 on a Page
Extent 425 granthas
Complete
Same N. Kanagaraja Iyer; This time the goddess, Kanagavalli Piratti of Tiruvevvulur. Year, 1969.

தொடக்கம்

காப்பு

"எவ்வுளார் வாழும் இறைவீர ராகவ னுக்கு
அவ்வுளம் தந்துலக மாள்தலைவி - திவ்விய

மான கனகவல்லி மாலைதமிழா வியற்றக்
கான முனி நம்மாழ்வார் காப்பு".

வேண்டுகோள்

"வைகுந்த மாநகரில் வாழும் தேவன்
மனிதகுலம் நலமெய்த மனுவின் பண்டை
மெய்கொண்ட திருமரபில் வேட்கை பூண்டு
மெய்ப்பொருட்டே யுயிரீந்த வேந்தின் பேறாய்
மைகொண்ட கூந்தல்அற மனத்தில்ல செம்மை
வாய்த்ததிருக் கோசலையின் மகவாய் வந்தான்
கைகொண்ட சக்கரத்தாற் காத்தான் பூமி
களைப்போடு மெவ்வுளகம் கரந்தா ளன்றே". (க)

முடிவு

"சானகியே கற்பரசி சாகேத புரிதுறக்கம்
மானவனா மிராகவனே மனுநெறியை நிறுவுபிரான்
ஆனவவர் இருவோரும் அயோத்திமறந் தெவ்வுளூர்
கானகுகம் அறிவுறச்செய் கனகவல்லி சரண்சரணே".

வாழ்த்து

"வேதநெறி தழைத்தோங்க வித்தைகளும் விளங்குறுக
காதலறம் கடைப்பிடித்த கனகவல்லி பதம் வாழ்க
மாதாமனம் அறிந்தருளும் வள்ளல்திரு வடிவாழ்க
ஓதவுணர் எவ்வுளூர் உறைதொண்டர் வாழியவே".

பின்னணியுரை:

"முதற்பிரதி:-	சௌமிய வைகாசி 31, வெள்ளி,
இரண்டாம் பிரதி:-	காஞ்சியில் தொடங்கி அம்பத்தூர் சாந்துள்ள திருவேங்கடநகரத்தில் பிரதிசெய்யப்பெற்றது.
மூன்றாம் பிரதி:-	மதுரை நகரத்தில் 31.12.69 எழுதிமுடிந்தது.

(குறிப்பு): இந்நூல், 'திருவெவ்வுளூர்க் கனகவல்லிப் பிராட்டி திருமாலை என்னும் பெயரினை உடையது. இதன் கண்ணே வீரராகவ மாலை, கனகவல்லி திருமாலை, எனும் உட்தலைப்புகளின் கீழும் பலபாடல்கள் உள்ளன. கனகவல்லி அம்மனின் கருணை வேண்டிப் பாடிய பாடல்களாக உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ, முழுதும் உள்ளது.

R.8403

சியாமளா தேவிமாலை

SIYAMALA DEVIMALAI

Pages : 418-443
Lines 32 on a Page
Extent 260 granthas
Complete
On 2-1-1970, N. Kanagaraja Iyer completed his 'malai prabhandam' wherein he declares that those who worship goddess ShyamalaDevi of Himalayan Mountain will definitely attain prosperity. This declaration is in 108 verses.

தொடக்கம்

காப்பு

"சியாமள நாமத் திருக்குன்றம் வாழும்
சியாமளா தேவி திறத்தால் - கயானனனே
முன்னின்று கூற முகிழ்க்கும் தமிழ்மாலை
செந்நின்ற நாட்டம் செலும்".

வேண்டுகோள்

"இளமையிலே பாரதநா டெங்கும் சென்றே
இனியதமிழ்ப் பணிபுரிய இதயம் கொண்டே
வளமையிலே பயிலாத வாழ்வே யுள்ளேன்
மறைப்பொருளே வழிகாட்ட வந்தநாளின்
அளவைமலி அழகு பொலி அவர்கள் காட்டும்
அணிதிகழும் தருக்கள்பல அடர்வதாகி
உளமகிழும் காட்சிதரும் உயர்வார் குன்றின்
உயர்வொப்பில் சியாமளையின் உருக்கண் டேனே".

முடிவு

"வாழ்த்துகின்றார் வானகத்தார் வாழ்வே வேண்டி
வழுத்துகின்றார் பணிகின்றார் மனித்த ரேனோர்
தாழ்த்ததிரு முடியினராய்ச் சரணம் சார்வான்
தம்மையவர் பணிவதுமே தவமாக் கொள்வர்.

வீழ்த்துதுய ரினராகி விமலை நின்னை
வேண்டவரு மனிதருக்கும் விண்ணோர் துச்சம்
ஆழ்த்துதுயர்க் கடலாழம் அறியா ரேனும்
அடலே சியாமளைநின் அருள்தேர் வாரே". (க0அ)

பின்னணியுரை:

திருவேங்கட நகர், அம்பத்தூர், சென்னை 23.9.69 முதற்பிரதி.
இரண்டாம் பிரதி T.V.S. நகர், மதுரை. 2.1.70.

(குறிப்பு): இந்நூல், 'சியாமளா தேவி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் இமயமலையின் ஒரு பகுதியான சியாமளகிரியிற் கோயிற் கொண்டிருக்கும் சியாமளா தேவியின் சிறப்புகள் கூறப்படுகின்றன. சியாமளா தேவியின் திருவடிகளைச் சிந்தையில் நிறுத்தியவர்கள் சிறந்த பதவியையும் நிலையையும் அடைவார்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன. மொத்தம் நூற்றுஒன்பது பாடல்கள்
சொல்லப்படுகின்றன. மொத்தம் நூற்றுஒன்பது பாடல்கள்
(வாழ்த்துப்பாவோடு) உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8404

மும்பை மாநகரம்

மும்பாதேவி திருமாலை

MUMPAI MANAKARAM

MUMPA DEVI TIRUMALAI

Pages : 444-470
Lines 32 on a Page
Extent 400 granthas
Complete
Mumba Devi of Mumbai City will, according to N. Kanagaraja Iyer, shower blessings on her devotees. 108 songs of the book disseminate this message.

தொடக்கம்

காப்பு

"மும்பைநகர் கோயில்கொளும் மும்பைதிருத் தாள்மலர்க்கு
செம்பதங்கொள் பைந்தமிழாற் செய்மாலை - கம்பமதம்
மூன்றுகொண்ட வேழ முகத்தண்ணல் மெய்யருள்பெய
ஊன்றுமுல கின்கண் உற்று".

முத்தேவியர் துதி

"திருமகளே கலைமகளே சிலைவாழ்தேவி
சேர்ந்தோங்கு கடலருகு சிலம்பின்மீது
பெருமைமிகு வீற்றிருக்கும் பிறக்கும் காணாப்
பெற்றஉளத் தின்பத்தைப் பிரித்தே யோதல்
அருமையென வுணர்ந்ததனால் அன்னமூவர்
அடிமலரைச் சிரித்தேற்றி அகத்தும் வைத்தோ
தருமமலி மும்மைநகர்த் தலைமை தேவி
சரணமலர்ப் புகழ்கின்றேன் தமிழி னாலே".

முடிவு

"நாட்டினை மறந்தே நகரின் மறந்தே
நன்குற வமையவே படைத்த
வீட்டினை மறந்தே வெள்ளிபொன் மறந்தே
வித்தையைக் கீர்த்தியை மறந்தே
தேட்டினை மறந்தே திருப்புகழ் மறந்தே
சிவமய மந்திர மறந்தே
ஏட்டினை மறந்தே வீட்டினை நினைந்தே
எய்துவேம் மும்பையம் பிகையே". (க0அ)

பின்னணியுரை:

முதற்பிரதி. 3.1.70. மதுரை
சௌமிய மார்கழி கககூ சனிக்கிழமை.

(குறிப்பு): இந்நூல், 'மும்பா தேவி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மும்பை மாநகரத்தில் வீற்றிருந்தருளும் மும்பாதேவியின் திருவருள் சிறப்புகள் பேசப்பட்டுள்ளன. மொத்தம் வாழ்த்துப்பாட்டு ஒன்றையும் சேர்த்து நூற்றொன்பது பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8405 - 8435

Paper : 32 x 19.5cms; Pages : 1-570
Lines 32 on a Page; Tamil, New, Good
Extent 8550 granthas
Complete

R.8405

ஸ்ரீ ராஜராஜேசுவரி தேவி

சந்திரகலா மாலை

SRI RAJARAJESWARI DEVI

CHANDHIRAKALA MALAI

Pages : 1-9
Lines 32 on a Page
Extent 130 granthas
Complete
N. Kanagaraja Iyer lauds Raja Rajeswari worshipped at the town Raja Rajeswaram near Nanaganallur (Madras). He delineates in 17 verses.

தொடக்கம்

காப்பு

"நங்கைநல்லூர் நற்கோயில்ல இராசரா சேசுவரி
மங்கள நாயகி மாமகட்கே - பொங்குதமிழ்
மாலையினைச் சாத்த மறைமே லுறையும்பல்
காலைநெஞ்சு போற்றும் கனிந்து".

பிரபந்தம்

"திருமாலு நான்முகனு முக்கணனும் வந்துபணி
திருவடியின் மலரை யுடையாய்

தேவேந்தி ராதியரும் பூவுலக தேவரும்
சித்தமிசை வைத்த வுருவாய்
கருமாலை யடியரினம் வென்றுயர வருள்கின்ற
கடைக்கண்ணின் மெல்லொ ளியினாய்
காதரண மிலாமலருள் பொழியுமன மலருள்ள
கற்பகச் செல்வி பிறவிபெறு மாயையினை
மாற்றியருள் மணிவி ளக்கே
மறைமந் திரத்தினால் அருச்சனைக ளேற்றருளும்
மாதரசி மாணிக்கமே
திருமாலை சந்திர கலாமாலை யேற்றருள்க
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி
திருவருளின் வெள்ளத்தில் உலகவுயிர் நீந்தவே
செய்தருள்க தேவே சியே".

முடிவு

வாழ்த்து

"தண்டமிழி னமைகின்ற சந்திர கலாமாலை
சாசுவத வாழ்வு பெறுக
தருமநெறி பொங்குதிரு நங்கைநல்லூர் நிலவு
சாதுசன சங்கம் வாழ்க
கண்டன மிசைப்பவரு மண்டன றிளைப்பவரும்
காசினியில் வாழ்வு பெறுக
காசிமுதல் ராமேச மளவுமர சாள்கின்ற
கருணேசி கழல்கள் வாழ்க

பெண்டகையை யேற்றமரு மிராசரா சேசுவரி

பெருங்கோயில் நன்கு வாழ்க

பெருமையிற் பெருமையும் சிறுமையிற் சிறுமையும்

பெருதமன மாந்தர் வாழ்க

அண்டர்நிலம் நாகநிலம் ஐந்தியை மண்டலம்

அறத்தினொடு வாழ்வு பெறுக

அறம்வாழ்க பொருள்வாழ்க இன்பமொடு வீடுபெற

அமைவுற்று வாழ்க வுலகே".

(குறிப்பு): இந்நூல், 'இராசராசேசுவரி தேவி சந்திரகலா மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் தொண்டைமண்டலம், பரங்கி மலைக்கு அருகிலுள்ள (சென்னை) நங்கை நல்லூர்ப்பகு தி இராசராசேசுவரி நகரத்தில் வீற்றிருந்து அருளும் இராசராசேசுவரியின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. திருவருளின் வெள்ளத்தில் உலகவுயிர் நீந்தவே செய்தருள்க தேவியே என்று ஒவ்வொரு பாடலும் முடிகின்றன. அத்தேவியின் அருள்வேண்டி ஆசிரியர் திரு. நா. கனகராசன் உருக்கமாகப் பாடியுள்ளார். வாழ்த்துப்பா ஒன்றையும் சேர்த்து மொத்தம் பதினேழு பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது.

R.8406

உடுப்பி கண்ணபிரான் சந்திரகலாமாலை

UDUPPI KANNAPIRAN CHANDHIRAKALAMALAI

Pages : 10-16
Lines 32 on a Page
Extent 105 granthas
Complete
A rosy picture of the graceful god Kannapiran of Uduppi (Karnataka). The poet N. Kanagaraja Iyer uses viruttam metre for his mission.

தொடக்கம்

காப்பு

“வேத விழுப்பொருளை வேதாந்தத் தத்துவத்தை
ஓத அவதரித்த உத்தமநின் - பாதமலர்
ஏத்தி உடுப்பிநகர் ஏற்றதிருக் கண்ணபிரான்
தோத்திரமே சொல்வாம் துணிந்து”.

கலைமகள்

“தலைதணிந்து நாவாரத் தண்டமிழா லேத்திக்
கலைமகளைப் போற்றுவாம் கண்ணன் - நிலையாம்
உடுப்பிநகர் சூழ்ந்த வுவப்பை யுளத்தால்
எடுப்பதையே எண்ணுகின்ற யாம்”.

முடிவு

“அடியவர் இனத்தை ஆண்டருள் உடுப்பி
அண்ணலாம் கண்ணன் வாழ்வுறுக
நெடியவன் பதமே நினைவுறு துறவில்
நின்றமெய் யன்பர் வாழ்வுறுக.
படியிலே பிறந்த பயனென வுடுப்பி
பணிந்தவர் குலங்கள் வாழ்வுறுக
அடியனேன் புனைந்த சந்திரகலையாய்
அமைதரு மாலை வாழ்வுறவே”.

பின்னணியுரை:

(குறிப்பு): சாதாரண வருடம் ஆவணிமாதம் மூன்றாம் நாள் (19.8.70) புதன்கிழமை நான் கோட்டையூர் ஸ்ரீ ராம நகரத்திலிருந்து குருதேவர்களைத் தரிசிக்கப் புறப்பட்டேன். சாதுர் மாஸ்ய காலத்தில் காமகோடி பீடாதிபதிகளைக் காஞ்சியிற் கண்டுகொண்டேன். பிறகு சென்னை சென்று அங்கிருந்து சிருங்ககிரிக்குப் புறப்பட்டேன். காஞ்சியிலே நான் என் ஜன்ம நட்சத்திரத்தை அறிந்து காமகோடி தேவிக்கு அருச்சனை செய்தே குருதேவர் திருவருள் பெற்றுப் புறப்பட்டேன். இந்தப் புண்ணியப் பயனும் விரைவில் எனக்கு சிருங்ககிரி செல்லும் பெரும்பேறு வாய்த்தது. விநாயகச் சதுர்த்தி முதலாக நடக்கும் கணபதி சதஸ தொடங்குமுன் அங்கு போய்விட்டேன். அப்புண்ணிய பூமியில் ஒருவாரம் இருந்து திருவருள் பெற்றுக் குருபிராசாத்ததோடு மங்களூர் வழியே உடுப்பி வந்தேன். அங்கு ஒர நாள் மடத்தில் உணவுபெற்று உடனேபுறப்பட்டுக் குந்தாபுரம் வழியே பரமகருணாநிதியான அம்பிகையைத் தரிசிக்க வந்து மூன்றுநாள் அங்கிருந்து மீண்டும் உடுப்பி வந்தேன். அப்பொழுது அதிகாலையில் அங்கு இருந்தேன். ஆதலால் நியமப்படி கண்ணனைத்தரிசித்து அவன் திருமுன்னிருந்து இப்பிரபந்தம் இயற்றினேன். மடாதிபர் தமிழறியாத காரணத்தால் இதனையேற்காது பிரசாதம் தந்து விடை கொடுத்தார்.

(குறிப்பு): இந்நூல், 'உடுப்பி கண்ணபிரான் சந்திரகலா மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் உடுப்பியிலுள்ள கண்ணபிரான் மீது பாடப்பட்டப் பாடல்கள் உள்ளன. இந்தியாவின் தென்மேற்கு நாட்ல் உள்ள ஒருமாநகரம் உடுப்பி மாநகரம். அங்கு வீற்றிருந்தருளும் கண்ணபிரானின் கருணைச் சிறப்பினை ஆசிரியர் திரு. நா. கனகராசன் பாடியுள்ளார். இதற்கொரு தனிச்சிறப்பு, இந்நூல் அவ்வாலயத்திலேயே இயற்றப்பட்டதாகும். முழுதும் உள்ளது.

R.8407

சுந்தரராமன் சந்திரகலாமாலை

SUNDARARAMAN CHANDIRAKALAMALAI

Pages : 16-20
Lines 32 on a Page
Extent 75 granthas
Complete
Printed
Contains 18 verses; A small 'malai' prabhandam sung on Sundaraman for whom was erected a temple at Sundara Nagar (Madurai) recently. Singer. N. Kanagaraja Iyer.

தொடக்கம்

நம்மாழ்வார் துதி

"மதுரைநகர்ச் செல்வம் வளரும் நெறியில்
மதுரவல்லி காண வளர்ந்த - புதுமை
நகரத் திராமனுக்கு நம்மாழ்வார் நல்கப்
பகரப் பெறுவதிப் பாட்டு".

கலைமகள் துதி

"கலைமகளே நாமகளே கல்விகலை காக்கும்
தலைமகளே வேதமே சாற்றும் - நிலைமகளே
நின்னருளை வேண்டியே நீலமுகில் தரசாதி
தன்னருளை யோதும் தமிழ்".

முடிவு

வாழ்வு

"வாழிய சுந்தர வைணவன் நன்மரபு
வாழிய சுந்தர மாநகரம் - வாழியரோ
சுந்தர ராமன் துணையடிகள் சென்னிவைக்கும்
சிந்தையர் எல்லாம் சிறந்து.
திருக்குறுங் குடியில் வாழும் திருப்பெரு நம்பி வாழ்க
திருக்குறுங் குடியில்தோன்றும் .... மரபு வாழ்க
பெருக்குறும் பொருனைத் தேடும் பிள்ளைகள் பேரர்வாழ்க
உருக்குறும் உளமே கொண்ட உத்தமர் எவரும் வாழ்க".

பின்னிணியுரை:

(குறிப்பு): மதுரைக் கருகேயுள்ள சுந்தர நகரம் (டி.வி.எஸ். நகரம்) சமீப காலத்தே சுந்தரராம விக்கிரத்தைக் கோயிலில் வைத்துக் குடமுழுக்காட்டியது. அப்பொழுது பயன்பட வேண்டும் என்று இயன்ற இப்பிரபந்தம் அச்சாகியும் இன்றளவும் அரங்கேறாமல் இருக்கிறது. சுந்தரம் ஐயங்கார் மரபினர் இதனை மதிக்கத்தக்க மனநிலையால் இல்லை. ஆதலால் இங்கு இதனை எழுதிவைத்தேன். 1970.

(குறிப்பு): இந்நூல், 'சுந்தரராமன் சந்திரகலாமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மதுரை மாநகரத்தின் தென்கிழக்கில் புதுமையாயெழுந்த சுந்தர நகரத்தே கோயில் கொண்டருளும் சுந்தரராமனுக்கு உரிய பெருமைகள் பலபடப் பாடப்பட்டுள்ளன. இந்நூல் அச்சாகியுள்ளது என்ற செய்தியை ஆசிரியரின் பின்னணியுரை பேசுகிறது. மொத்தம் பதினெட்டுப் பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8403

ஸ்ரீ புவனேசுவரிதேவி திருப்பணிச் சந்திரகலாமாலை

SRI PUVANESWARIDEVI TIRUPPANI CHANDRAKALAMALAI

Pages : 21-25
Lines 32 on a Page
Extent 75 granthas
Complete
Published
Poet N. Kanagaraja Iyer seeks blessings from Bhuvaneswari worshipped at Pudukkottai and appreciates the sincere services of one Ethiraja Naidu, a jail officer, who submitted his services at the temple of Bhuvaneswari.

தொடக்கம்

காப்பு

"தவநேசர் ஞான சதாசிவத் தானும்
சிவைநேசர் போற்றம் சிறக்கும் - புவனேசி
பூப்பணி மாலை புனைய விநாயகனே
நாப்பணி நல்கும் நயந்து".

நூல்

“நாதமே கலையே விந்துவே யெனமெயஞ்
ஞானியர் உணர்பெருந் தலைவி
வேதமே தெளித்தற் கரியமாப் புகழாய்
வேத னாதியர்பணி பதத்தாய்
பாதமே முதலா முடியள வலநின்
பருவத மியைத் தேதிராசன்
போதமே பொருந்த விரைஞ்சலு முவப்பாய்
புதுவைவாழ் புவனநா யகியே”. (க)

முடிவு

“வாழிய யுலக நிலையிலே மயங்கா
மனத்தினர் துறவிலே நிலைத்தார்
வாழிய அறங்கள் முறையினாற் புரியும்
மனமுள இல்லறத் தலைவர்
வாழிய அறங்கள் முறையினுற் புரியும்
மனமுள இல்லறத் தலைவர்
வாரிய புதுவைச் சதாசிவ முனிவர்
வளர்திரு வருள்நிலத் தனியே
வாரிய புவனநா யகியருள்நன்
னர்ப்பணி புரிபவர் பெறவே”.

பின்னணியுரை:

பத்தாண்டுகளின் முன் பாடப் பெற்று இப்புகழ் மாலை புவனநாயகியே தெய்வம் என்று புகழ்வதாயினும் பூப்பணிபுரிந்த புதுக்கோட்டை சிறைச்சாலை அதிகாரி திரு. எதிராஜ நாயுடு, திரு. லட்சுமி என்ற தம்பதிகளையும் வாழ்த்தும் உருவாய் அமைந்தது. சாந்தானந்த அடிகளார் இங்ஙனம் பாடச்செய்து அப்பொழுது சிறுபுத்தகமாக வெளியிட்டருளினர். இப்பொழுது அப்பதிப்பு அரிதாய ஆதலின் அங்கு இடம்பெறலாயிற்று. இச்செய்யுளைப் பாடும்போது புவனநாயகி தஞ்சை ஓவியர் தீட்டிய ஓவியவுருவம் பூண்டிருந்தாள். இன்று சிலையில்ல இருக்கிறாள்.

(குறிப்பு): இந்நூல், 'புவனேசுவரி திருப்பணி சந்திரகலாமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் புதுக்கோட்டை மாநகரின்கண் விற்றிருந்தருளும் புவனேசுவரியின் சிறப்புகளும், அங்கு பூப்பணிபுரிந்த சிறைச்சாலை அதிகாரி எதிராஜ நாயுடு இலக்குமி தம்பதிகளுக்கு வாழ்த்துக்களும் இடம் பெற்றுள்ளன. அச்சிடப் பட்டுள்ளது. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8409

மதிகுலத்தரசி கயற்கண்ணி சந்திரகலாமாலை

MADIKULATTARASI KAYARKANNI CHANDHIRAKALAMALAI

Pages : 26-30
Lines 32 on a Page
Extent 80 granthas
Complete
Unpublished
The mind of Angayarkanni has been sung here; This goddess at Madura is a famous one. Author of this particular treatise is N. Kanagaraja Iyer. Medium, verse.

தொடக்கம்

காப்பு (விநாயகர்)

"திங்கட் குலத்தின் திருவாய்த் தடாதகையா
மங்கைப் பெயரான் வருமரசி - தங்கக்
கமலம் பதத்தே கலாமாலை சூட்ட
மும்மதக் கரிமுகனை முந்து".

கலைமகள்

"தாய்மையுருவாத் தரணி புகுந்தருளும்
தூய்மைக் கயற்கண்ணி தொல்புகழை - வாய்மையுற
சந்திரகலா மாலை தானுக்க நாமகளைச்
சிந்தையினிற் சேர்ப்பாம் சிறிது".

சொக்கலிங்கக் கடவுள்

"சொக்கன் மதுரையான் தூய்மைச் சுருதிமுடி
புக்கான் மறைந்த பொருளானான் - முக்கணன்
அங்கயற் கண்ணிக் கருள்மாலை சாத்துதற்கே
இங்கயற்கண் நின்றருளும் இன்று".

முடிவு

"வாழி கயற்கண் பெருமாட்டி
வாழி சொக்கன் அழகப்பன்
ஊழி பலவும் நடந்தாலும்
உவமை பெருத அரசாட்சி
யாழி னிசையின் இனிமையோடும்
இனைய மதியின் குளிர்ச்சியொடும்
தாழி வெண்ணெய் பருகியவன்
தங்கை யரசு வாழியவே".

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல், 'மதிமுகத்தரசி கயற்கண்ணி சந்திரகலாமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மதுரை நகரில் செங்கோல் செலுத்திய கயற்கண்ணியின் கருணைச் சிறப்பு கவிதையால் பாராட்டப்பட்டுள்ளது. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8410

பேரின்பம் நூற்றெட்டு

PERINBAM NURRETTU

Pages : 31-47
Lines 28 on a Page
Extent 238 granthas
Complete
It is endless pleasure for N. Kanagaraja Iyer to elucidate the greatness of Sankara of Kanchipuram Mutt. His suitable medium is venba metre here. Who have 111 such songs.

தொடக்கம்

காப்புச் செய்யுள்

விநாயகன்

"பாரின்பம் எல்லாம் பறந்து புறம்போகப்
பேரின்பம் நூற்றெட்டுப் பேசுதற்குச் - சீரின்ப
வாக்கும் வளமும் வழங்கும் விநாயகனை
நோக்கும் மனமே நுனித்து".

கலைமகள்

"தலைமைகளை நல்கியருள் தாண்மலர்கொள் செல்வி
கலைமகளை நெஞ்சே கருதாய் - நிலைமைகொளும்
பேரின்ப நூற்றெட்டுப் பேசத் துணிந்தாயே
வேரின்பம் காண்பாய் விரைந்து".

முடிவு

"திருக்காம கோடிமடத் தேவகுரு வாழ்க
திருக்காம கோடிசிவை செம்மை - உருக்காணும்

பாதமலர் வாழ்க பரிபுரமும் வாழியரோ
போதமுற நெஞ்சுட் புகுந்து.

சங்கர மூர்த்தி தவமரபு வாழியரோ
ஐங்கரன் ஆறுமுகன் ஐயனே - செங்கண்மாய்
ஆதியோர் கோயில்கொளு மாலயங்கள் வாழியரோ
நீதியார் காஞ்சிநகர் நின்று".

பின்னணியுரை:

"அம்பத்தூர். முதற்பிரதி எழுதி முடிந்தது.
இராம் நகரம் இரண்டாம் பிரதி 6.10.71.
இப்பிரபந்தம் கார்வேட் நகரத்தில் எழுந்தருளியிருந்த இரண்டு குரு மூர்த்திகளிடமும் சமர்ப்பிக்கப்பெற்றது. தக்க சம்பாவனை தேடித்தந்தது.

(குறிப்பு): இந்நூல், 'பேரின்பம் நூற்றெட்டு' என்னும் பெயரினை உ டையது. இதன்கண், காஞ்சிமடச் சங்கரர் மாண்பு பாடப்பட்டுள் ளது. வாழ்த்துப் பாடல்கள் மூன்றினையும் சேர்த்து மொத்தம் நூற்றுப்பதினொரு பாடல்கள் உள்ளன. அத்தனை பாடல்களும் வெண்பா யாப்பிற்றாய் அமைந்துள்ளன. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8411

அன்புரை நூற்றெட்டு

ANBURAI NURRETTU

Pages : 48-63
Lines 28 on a Page
Extent 170 granthas
Complete
To his credit the poet N. Kanagaraja Iyer composed 108 venbas at Tirumulai.

தொடக்கம்

“நினைத்ததெலாம் நன்கு நிறைவேறச் செய்யும்
பனைக்கர வேரப்பன் பாதம் - தனைத்துதித்தே
அன்புரை நூற்றெட் டமைக்கத் துணிகின்றேன்
என்புரை எய்யாதேன் யான்”.

நூல்

“அன்பே சிவமென் றருளும் திருமூலம்
நன்றே தெளிந்த நலத்தனாய் - வன்பேயும்
அன்பின் வயமாமென் றான்றோர் உரைப்பதனை
இன்பின் இசைப்பேன் எடுத்து”. (க)

முடிவு

“வாக்கும் படைத்தேன் மனமும் உருகினேன்
கோக்கும் சுவையும் நுழைவுறும் - தேக்குசுவை
பாடல் இறைபொருட்டே பாடினேன் அன்புருவம்
தேட அறிந்தேன் சிறிது”. (க0எ)

சிறிதோ பெரிதோ தெளியேன் பொருளை
அறிதோ றறியாமை ஆக்கும் - செறிவையே
அன்பாலே தேழ அடையமுயல் கின்றேன்
அன்பாலே எய்துக அன்பு”.

பின்னணியுரை:

(குறிப்பு): இந்நூல், 'அன்புரை நூற்றெட்டு' என்னும் அழகிய பெயரினை உடையது. இதன்கண், அன்பே சிவமென்று அருளிய திருமூலரின் திருமூலரின் தெய்வவாக்கின் சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. மொத்தம் நூற்றெட்டு வெண்பாக்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8412

இன்புரை நூற்றெட்டு

ENBURAI NURRETTU

Pages : 64-80
Lines 28 on a Page
Extent 200 granthas
Complete
The necessity of pleasant words towards all is the main theme of this work wherein we have 110 songs. All are by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

விநாயகப்பிரான்

"இன்புரை நூற்றெட் டியம்பத் துணிகின்றேன்
அன்புரை பாடிய ஆற்றலால் - மென்புரையும்
வன்புரையும் பாட மதித்தேன் விநாயகனே
அன்புற நல்கும் அருள்".

கலைமகளை

"கலையின் உருவாய்க் கருணையின் திருவாய்
நிலையில் மிகுந்தவள் நேயம் - விலையிலது
தந்தாள் அவளே தருவாள் அவள்வாக்கு
வந்தாள் மனத்தே மலர்ந்து".

முடிவு

"கலைகளைத் தேர்ந்து கவின்விளக்க வல்லார்
இலையேனும் வேளாண்மை யேற்றம் - தலைமை
தரவாழும் ஊர்க்கண் தயங்குகே யின்பம்
உரவாளர் ஆவார் உவர்".

வாழ்த்து

"இன்பமனம் வாழியர் இன்பநிலை வாழியர்
இன்பவினை வாழியர் இவ்வுலகில் - இன்பநலம்
எல்லாரும் எய்த இதயத்தால் எண்ணுகின்ற
நல்லாரும் வாழியரோ நன்கு".

(குறிப்பு): இந்நூல், 'இன்புரை நூற்றெட்டு' எனும் இனிய பெயரை உடையது. இதன்கண், உலக உயிர்களிடத்து இன்பம் செலுத்த வேண்டிய இன்றியமையாமை எடுத்தியம்பப்பட்டுள்ளது. பாம்புதான் எனினும் இன்புரை செய்தால் பழகிடும் என்று ஆசிரியர் கூறுவது சிந்திக்கத் தக்கது. மொத்தம் நூற்றுப்பத்துப் பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8413

மென்புரை நூற்றெட்டு

MENBURAI NURRETTU

Pages : 81-96
Lines 28 on a Page
Extent 270 granthas
Complete
Central content of this treatise is the value of soft words towards one and all. Preacher, N. Kanagaraja Iyer. Preaches in 109 verses.

தொடக்கம்

காப்பு

விநாயகமூர்த்தி

"எழுத்தாணி யேந்துகரத் தெந்தை அடியார்
வழுத்தாத முன்னே வருவான் - அழுத்தாத
மென்புரை நல்கி விநாயகனே நூற்றெட்டு
நன்புற நல்கும் நயந்து".

கலைமகள்

"வரலாறு போன்று வருமென் புரைநூல்
வரலாறு நல்கு மனத்தான் - தூரலாறு
நன்கறிந்த நான்முகன் நாவாழும் நாமகள்
முன்புகுந்து நல்கும் மொழி".

முடிவு

"சிறுவர்பலர் தோன்றச் சிறந்த குலத்தே
பெறுவன யாவையும் பெற்ற - பொறுமை
மிகுந்த தலைவன் வியத்தக்கப் பெண்டின்
தகுந்த நலமுணர்ந்தான் தான்".

வாழ்த்து

"வாழியரோ வேதம் வளர்த்த பொருள்வகையே
வாழியரோ வேதநெறி வாழ்பவரே - வாழியரோ
தானச் சிறப்பறிந்து தன்குலத்தை வாழ்வித்தார்
...... துறவறமே நன்கு"

பின்னணியுரை:

நா. கனகராசன்
10.10.71.

கனகலட்சுமி
ஸ்ரீராமநகர்
கோட்டையூர்
இராநாதபுரம் மாவட்டம்
தமிழகம்
விரோதி கிருது
புரட்டாசி - 23.
ஞாயிறு
காலை 9 மணி.

(குறிப்பு): இந்நூல், 'மென்புரை நூற்றெட்டு' என்னும் பெயரினை உ டையது. இதன்கண், மென் உரையின் மேன்மையினையும், தேவியைத் தொழுதற்குத் தேவையான மொழியையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மொத்தம் நூற்றொன்பது பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8414

வன்புரை நூற்றெட்டு

VANPURAI NURRETTU

Pages : 97-112
Lines 28 on a Page
Extent 230 granthas
Complete
"Oppose the iniquity with firmness" - This is the lesson in this work. The area of this work covers 109 verses; All are by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"அன்புரை மென்புரை ஆய்ந்தின் புரைதெளிந்தோம்
வன்புறை தன்னை மதிப்பரோ - பொன்புரையும்
மேனியான் தந்த விநாயகனே முன்வந்தார்
மானியகம் வாக்கை வகுத்து"

கலைமகள்

"அன்புரை மென்புரை அன்னாய் அருளினையே
இன்புரையும் வைத்தாய் இதயத்தே - வன்புரை
நின்னெஞ்சி னாவின் றிலவிலதே ஆயினும்
என்னெஞ்சில் யாப்பாய் இருந்து".

முடிவு

"வாரா தொழிய மகனே நினைந்தாயோ
போராடி யின்றே புறப்பட்டாய் - ஆராயும்
உள்ளம் பெறுகிலையோ ஓங்கி யுயருநிலை
கொள்ள முயங்க குறித்து". (க0அ)

வாழ்த்து

"வன்புரை உறும் வளநூலும் வாழிய
என்புறுகு நெஞ்சத் தியற்கையும் - நன்புமுள
தாய்மையும் வாழிய தந்தை மகனுறவு
சேய்மையும் வாழிய சென்று".

பின்னணியுரை:

இடையீடு பட்டதால் இதுமுடிய இத்தனை நாள் ஆயிற்கு. இருபது நாள் வீண்.

(குறிப்பு): இந்நூல், "வன்புரை நூற்றெட்டு" என்னும் பெயரினை உடையது. இதன்கண், புன்மையைக் கண்டு வரும் வன்மையின் சிறப்புபாடப்பட்டுள்ளது. வன்மையின் அவசியம் வாழ்க்கையில் உண்டு. நீதிக்கு மாறுபட்ட நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் பாதிப்பை ஏற்படுத்த வன்மை பயன் படுமேல் நமது வாழ்த்துக்கு அது பொருளாகும். என இப்படிப்பட்ட கருத்துக்களை ஆசிரியர், நா. கனகராசன் நயம்படச் சுட்டியுள்ளார். மொத்தம் 109 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8415

காசி விசுவேச சதகம்

KASI VISUVESA CHATAKAM

Pages : 113-167
Lines 34 on a Page
Extent 450 granthas
Complete
It has taken 109 songs to the poet N. Kanagaraja Iyer to elucidate the name and fame of Kasi Visuvesar here.

தொடக்கம்

காப்பு

"காசிவிசு வேசனருட் காட்சிமனம் கண்டுருகி
மாசிறமிழ்ப் பாட்டிசைக்கும் வாய்ப்புற்றேன் - ஆசிரயன்
தாண்மலரிற்·சாரும் சதகம் விநாயகனே
கோண் மனியர் நல்கும் குளிர்ந்து".

காசிச் சிறப்பு

"பிறப்பவர் சிறப்பெய்து கமலா லயத்திலே
பிறவிவாய்ப் பெளிதில்லையே
பிறவிபெற வேண்டும் சிவபுண்ணியப் பேற்றினைப்
பெற்றவுயிர் பன்மை யிலையே
அறப்பயனை நாட்டவே அன்னமலை பாலிக்கும்
அம்பலத் தாடி திருமுன்
ஐம்பொறியு மொன்றவே நின்றுதரி சித்துருகும்
வாய்ப்புநெஞ் சமைத லரிதே
மரித்தவுயிர் எதுவெனினும் வீடருளும் வள்ளலுறை
வாராணசிப் பெருமையைக்
கற்பதுணர் காமதே னுவினுமிகு மென்னவே
கலைஞர்மனம் உணர்வ துளதே
காசினியை வாழ்விக்க வரநதி பெருக்கியருள்
காசிவிசு வேச சிவமே". (க)

முடிவு

வாழ்த்து

"ஒருநூறு செய்யுளால் நீதிபல பேசுதிறம்
உணர்த்திவரு சதகவகையுள்
ஒருபுதுமை தோற்றவரு காசிவிசு வேசனருள்
உளசதகம் நீடு வாழ்க
தருநூறு கூடினும் தரவரிய பேரின்பு
தருகின்ற தேவ தேவன்
தண்ணருளை பாதிமுத லந்தம்வரை யோதுமிச்
சதகத்தை யுலகம் அறிக
திருநீறு கண்டிகை மனத்தி லைந்தர் கரம்
சேரவாழ் தொண்டர் கணமே
சிவமயம் பொருள்தேற வேண்டியே தோன்றுமிச்
செய்யுள் நாணாளும் வளர்க
வருநூறு வயதளவு வாழ்ந்தாலும் இறைவனருள்
மருவவே மாதவம்பூண்
மனிதகுலம் அகழ்தோடு புறந்தூய தாகவே
வாழிவர் பல் லாண்டே".

பின்னணியுரை

முன்பு குறையாய் இருந்து இன்று நிறைவேறியது. இன்னொரு பிரதி இருக்கிறது. அது சற்றே வேறுபடும். 29.10.71.

(குறிப்பு): இந்நூல், 'காசி விசுவேச சதகம்' என்னும் பெயரினை உடையது. இதன்கண், காசி விசுவேச சிவத்தின் கருணைச் சிறப்புப் பாடப்பட்டுள்ளது. பாரதத்தில் உள்ள பல்வேறு சிவத்தலங்களையும் பாடி, "காசினியை வாழ்விக்க வர நதியைப் பெருக்கியருள்" என்ற வேண்டுகோளையும் விடுக்கின்றார் ஆசிரியர் திரு. நா. கானராசன், எம்.ஏ. பல்வேறு தலங்களின் இயற்றை அமைப்புகள், தெய்வச் செய்திகள் அனைத்தும் புராணங்களைப் போன்றே வருணிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 109 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8416

காமகோடி மடாதிபர் நாண்மங்கலம்

KAMAKODI MATATHIPAR NANMANGALAM

Pages : 169-175
Lines 28 on a Page
Extent 150 granthas
Complete
Poet N. Kanagaraja Iyer feels happy over the 36th birthday of Jayendra Saraswathi Swamy of Kanchi Mutt. This has been expressed in 40 verses which form a genre what is known as Nanmangalam.

தொடக்கம்

காப்பு

விநாயகர்

"சந்திர மோலி தனையே வழிய டூஉம்
சந்திர சேகரர் தங்கரத்தால் - தந்தருளும்
ஞான ஜய இந்திரர்க்கு நாண்மங்கலம் பாட
ஞான விநாயகனே நல்கு".

கலைமகள்

"அறுபத்து நான்கென் றளந்த கலைகள்
பெறுதற் கருளும் பிராட்டி - உருபற்றால்
நான்முகன் நாவில் நடிக்கும் கலைமகளைத்
தேன மொழிபா டநெஞ்சே தேடு".

முடிவு

"முப்பததைந தாண்டளவில் முத்தர்நெறி முழுமைதெளி
செப்பத்தின் திருநிலையாம் சிவகுரவர் மரபுநிலைத்து
எப்பற்றும் இலரேனும் எளியேமைக் கரையேற்ற
ஒப்பற்ற பெருவிளக்காய் உலகினிலே வாழியவே

(ந௯)

வாழ்த்துமனம் வாழ்த்துமுகம் வாழ்த்துகுலம் வாழ்த்துநெறி
தாழ்த்துசிரம் தாழ்த்துமொழி தாழ்த்துபணி தாழ்த்துமயில்
ஆழ்த்துமுகம் அருந்திறமா அமைதொழும்பர் இனம்கூற
வாழ்த்துரைக்கும் சபேந்திரர்தான் மலரிருமை யக்காண்டே".

பின்னணியுரை:

இச்செய்யுள் முழுதும் புதுப்பெரியவர்கள் காஞ்சியிலே இருந்து பொறுமையோடு கேட்டுத் தக்க சன்மானம் செய்தார்கள். இன்று இப்பிரபந்தம் பிரதி செய்யப்படுகிறது.

(குறிப்பு): இந்நூல், 'காமகோடி மடாதிபர் நாண்மங்கலம்' எனும் பெயரினை உடையது. காஞ்சி காமகோடி மடத்திலே ஆசிரிய மூர்த்தியான ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்களின் முப்பத்தாறாண்டு நிறைவு பற்றிய வாழ்த்துக்கள் அடங்கியுள்ளன. முழுதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8417

பஞ்சபூதலிங்கப் பஞ்சரத்னமாலை

PANCHAPUDHALINGAP PANCHARATNA MALAI

Pages : 176-186
Lines 32 on a Page
Extent 160 granthas
Complete
Fifty songs in five kinds of metres form a garland called 'Pancharatna Malai', written with view of the worshipping the siva linga in all its five states. Invoker, N. Kanagaraja Iyer of Pudukkottai.

தொடக்கம்

காப்பு

"ஐம்பூத நாயகன்வாழ் ஐம்பூத மாதலங்கள்
நம்பூத பாவியெலா நன்றமையக் - கொம்பானே
பாரதம் தீட்டும் பரமசுதன் மெய்யருளால்
சாரதமா லைவரும் தான்".

பிரபந்தம்

"திருவாரூர் என்ற சிவபுரத்தை நெஞ்சே
கருவாரூர் தாவக் கருதாய் - மருவாரூர்
மூன்றழுத்தத் தேவன் முதன்மை தெளிந்துணர்ந்தே
ஆன்றவித்தைச் சேர்ப்பாய் அகத்து".

முடிவு

"அருள்செய் கடவுளே அறிவின் கடலே
அற்புத மூர்த்தி ஆனந்த நாயக
சிற்சபா நாத தேவதே வேச

கற்பனை கடந்த கனக சபையினாய்

ஆகாய வுருவம் அமையும் இறைவனே

சிவகாம சுந்தரி சித்தம் உருகக்

குனிக்கும் கூத்தின் குறிப்பினை

இனிக்கும் வண்ணம் எடுத்துரை திருவே" (௫0)

பின்னணியுரை

(குறிப்பு): இந்நூல், 'பஞ்சபூதலிங்க பஞ்சரத்தினமாலை' என்னும் பெயரினை உடையது. ஐம்பூதங்களிலும் இறைவனை இலிங்க வடிவில் வழிபட்ட இடங்கள் தமிழகத்தில் உள்ளன. அவ்வைம் பூதவடிவ இலிங்கத்தை வெண்பா முதலாகிய ஐவகைப் பாக்களால் பாடியுள்ளார். ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. இப்பாடல்கள் அனைத்தும் அந்தாதி முறையில் அமைந்திருக்கின்றன. மொத்தம் ஐம்பது பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது.

R.8418

நவபராசக்தி நவரத்தினமாலை

MAVAPARASAKTHI NAVARATHINA MALAI

Pages : 187-206
Lines 36 on a Page
Extent 160 granthas
Complete

Navaratnam means nine kinds of precious stones. Here stand for nine kinds of metres. In 9 kinds of metres we have a total of 90 songs in praise of Parasakti enshrined at nine places. Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"பக்தி பெருகிய பாரத பூமியில்

தலந்தொறும் விளங்கும் தாய்மை யுருவம்

ஆயிரம் உளவாம் ஆயினும் அவற்றுள்
உள்ளம் புகுந்தருள் ஒன்பா னுருவை
இசைத்துப் புனையும் இதய வேட்கையிற்
கன்னியா குமரி காந்தி மதியே
உருவி னழகுகால் பருவத வர்த்தனி
மட்டுவார் குழலி மதுரை கயற்கணி
பெரிய நாயகி பெரும்புகழ்ப் புவனை
காஞ்சி நகர்வாழ் காம கோடி
ஆனைக்கா வுறை அகிலாண்ட நாயகி
எனும்பெயர் பெறும்பொலி வியையும் இறைவியா
ஒன்பதின் மரையும் சென்பது வகைக்கவி
அந்தாதி முறையிலே அமைத்துப் பாட
கரிமுக வரதன் கழல்களை
உரிய முறையால் உளத்தமைத் தனமே".

கன்னியாகுமரி

"தென்கடல் சார்ந்து திகழ்கன்னி யாம்குமரி
தன்மதம் போற்றும் தவம்பெற்றேம் - இன்பதுன்பம்
ஒன்றா மதிக்கும் உளத்திலவன் வீற்றிருப்பான்
குன்றாத வாழ்வு கொடுத்து".

முடிவு

ஆனைக்கா அகிலாண்ட நாயகி
"இன்றும் யானைக்கா வீசன் அருளினை
மன்று பின்னர் வழுத்தும் மொழித்திறம்

என்றும் செல்வம் இயைந்திலிர் அம்பிகை
மன்றும் தென்கடல் வாரிதி எய்துமோ".

வாழ்த்து

"ஒன்பதின்மர் தேவியரை ஒருமிக்க நினைந்தே
உரைத்துவிது பிரபந்தம் உயர்வாழ்வு பெறுக
அன்பதன்றி வேறுநினைப் பகத்திலிலா அடியார்
அன்னையுரு வியையு மிவர் அருள்பெறவே வாழ்க
இன்பமிலை துன்பமிலை இகபரமும் இலையே
இறைவியருள் துணையுண்டென் றெண்ணுமவர் வாழ்க
மன்பதைகள் யாவருமே மகிழ்வினொடு வாழ்க
மண்டலமும் விண்டலமும் மங்களவாழ் வுறவே".

பின்னணியுரை:

(குறிப்பு):"ஒன்பதின்மர் தேவியரை உள்ளத் தழைத்து உரைக்கத் துணிந்த இப்பிரபந்தம் விரைவில் இயற்றிய தாயினும் முறையே ஆயிருப்பதாக நினைக்கிறேன். இச்செய்யுட்களை அடிக்க நேர்ந்தது முதுமைத் தளர்ச்சியால் என்று இங்கே கூறத்துணிகிறேன் .

(குறிப்பு): இந்நூல், 'நவபராசக்தி நவரத்னமாலை' எனும் பெயரி னை உடையது. இதன்கண், கன்னியாகுமரி, காந்திமதி, பருவதவர்த்தனி, மட்டுவார் குழலி, மதுரைக்கயிற்கண்ணி, பெரியநாயகி, பெரும்புகழ்ப்புவனை, காஞ்சி நகர்வாழ் காமகோடி, ஆனைக்கா உறை அகிலாண்ட நாயகி, எனும் ஒன்பது தேவியர்களின் பெருமைகளை ஒன்பது வகைப் பாடல்களால் பாடப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் வாழ்த்துப்பாவோடு தொண்ணூறு பாக்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8419

மகாலட்சுமி மும்மணிக் கோவை

MAHALAKSHMI MUMMANIKKOVAI

Pages : 207-217
Lines 34 on a Page
Extent 200 granthas
Complete
Mahalakshmi templed at Mumbai has been sung by N. Kanagaraja Iyer in 30 stanzas which are in antadi style.

தொடக்கம்

காப்பு

"திருமகளே ஆட்சிபுரி திப்பியமார் கோயில்
மருமகளே வந்தாள் மருங்கே - தருமகளாம்
பார்வதி துர்க்கையும் பாங்கன் இடம்பெற்றாள்
சேர்ப்பதுதந் திருமுகன் தேர்ந்து".

பிரபந்தம்

"திருமகள் எனும்பெயர் சிறந்த தெய்வம்
உருமகள் உயர்மகள் உவமை யிலாமகள்
அருமகள் பெருமகள் அருளுக் குறையுள
மருமகள் வந்தால் வருவேற் றருள்வாள்
மலைமகள் புகினும் வாழ்த்தி யமர் த்துவள்
மலர்மய மான மாத்தனி மறந்திலள்
மும்மைப் பட்டின முறையே ஆட்சிபூண்
மும்பா தேவியின் மொய்ம்பு தெளிந்தனள்
செல்வம் கொழிக்கும் திருநகர் அதற்கே
கல்வி சிறக்கும் கலைநகர் அதற்கே

தானும் திருவருள் தனிமழை பொழியும்
திருவுளம் கொண்டனள் தேவி வந்தவை
மேலைக் கடற்கரை விளங்குமோர் குன்றில்
மாலைக் கதிரினை வரவேற் பவளாய்
அலையெழு காட்சி அகமுற மகிழ்ந்து
தலைமை தனக்குத் தந்த இருவரை
இருபுற மமர்த்தி இடைநிலை யேற்றினன்
தாயே உலகெலாம் தாங்கென
நாயேம் பணிந்து நயந்துவாழ்த் துவமே". (க)

முடிவு

"கனியு மனத்தே புகுந்த இறைவி கலைமகளே
முனியு மரசும் வணங்கிப் பணிந்த முதல்வியவள்
இனியும் பிறருக் கிளையா திருக்கும் இதயமுண்டேல்
மனித வுலகை வளர்க்க திருமகள் வாழ்வுறவே". (௩0)

வாழ்த்து

"மும்மைத் தேவியர் மும்மை நகரிலே
மோர்து வாரிதி முன்றிலில் வாழிய
செம்மைச் சிந்தை சிறந்த மனிதரே
தேவி மும்மை சிறப்புற வாழிய
அம்மை ஆட்சி அவனிமகன் பெற
அரிவை மாரும் அருளிடை வாழிய
வெம்மை வெங்கலி வீழ்வுற் றழியவே
வேதம் வாழ்க வியன்றமிழ் வாழ்கவே".

பின்னணியுரை:

இன்று பிற்பகல் மாசிலாமணி தேசிகர் இங்கு வந்து என் பாடல் பல கேட்டார். இவர் என்னோடு இளம்பருத்திற் சங்கத்திலே தமிழ் கற்ற அன்பர். காரைக்குடியிலே நாற்பதாண்டு தமிழ்ப்பயிர் வளர்த்து இப்பொழுது ஓய்வுபெற்றிருக்கிறார். வெண்பாவாற் செய்து நூற்றெட்டு வகைகளையும் காசியிலே பாட சதகத்தையும் கேட்டு மிகவும் பாராட்டினார். கந்தகிரிப் பிரபந்தமும் பிறவும் பெற்றுக் கொண்டு விடைபெறுகின்றனர். மீண்டும் வருவார்.

(குறிப்பு): இந்நூல், 'மகாலெட்சுமி மும்மணிக் கோவை' எனும் பெயரினை உடையது. மும்பைக் கடற்கரையில் திருக்கோயில் கொண்டிலங்கும் மகாலட்சுமிக்கு மூன்று வகைப் பாடல் மணிகளால் கோவைசெய்து அணிவித்து மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது. மொத்தம் 30 பாடல்கள் உள்ளன. அந்தாதியில் அமைந்துள்ளன.

R.8420

அன்னபூரணி அருள்விளக்குமாலை

ANNAPURANI ARULVILAKKAMALAI

Pages : 218-226
Lines 32 on a Page
Extent 170 granthas
Complete
Annapurani of Banares has been extolled here by N. Kanagaraja Iyer. Work contains 30 stanzas.

தொடக்கம்

காப்பு

விநாயகர்துதி

"கண்டிகை பூண்டுதிருக் காசிநகர் வாழ்ந்தருளும்
துண்புவி நாயகனைத் தோத்தரிப்பாம் - அண்டினருக் (கு)
அன்னம் நிரம்ப அளித்தருளும் தேவியருள்
நன்னர் விளக்க நயந்து".

விசுவேசுவர துதி.

"வாரா ணசியாம் வரநகரில் வாழ்சிவனை
ஆரா தனைபுரியும் அன்னநிறை - வேராய
பூரணியைப் போற்றப் புராரிவாசு வேசுவரன்
..... வாக்கருள்க என்று".

முடிவு

"அழிக்க வேதம் அமர்த்திய நாயகன்
அருள நெஞ்ச மமைந்தன னாதலின்
இழிக்க வாய்த்த இரப்புத் தொழிலினை
யேற்று நின்றான் இறைவி திருமுனே
பழிக்க நெஞ்சு பரந்ததே யாயினும்
பாவை யன்னம் படைத்தான் கடிகையிற்
நெழிக்க வெண்ணிலான் தேவன் சிரித்தனன்
சீர்த்த காசியிற் செய்த செயலிதே". (ருO)

வாழ்த்து

"காசி வாழும் கருணைப் பிரான்அருள்
காட்டும் அன்பிற் கடிகையும் வாழிய
ஆசில் நெஞ்சால் அவற்கன மிட்டருள்
அன்ன பூரணி ஆரருள் வாழிய
தேசின் மிக்க திருக்கங்கை வாழிய
தேயம் போற்றும் திருத்தொண்டர் வாழிய
மாசில் வாழ்வு மலர்க உலகொம்
மக்கள் நெஞ்சில் வளபுறம் வாழ்கவே".

பின்னணியுரை:

அன்னபூரணியை மூன்றுமுறை தரிசித்தப் புண்ணியம் இச்செய்யுளை எழுத இன்று தாண்டியது என்பேன். சங்கரர் பாடிய முறை மிக்கசிறந்தமுறை. இது அம்முறையில் அமைந்தில தாயினும் இறைவி அருள்பெற உதவியாகும் என்று நம்புகிறேன்.

(குறிப்பு): இந்நூல், 'அன்னபூராணி அருள் விளக்க மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், காசியின் கண்ணே கோயில் கொண்டருளும் அன்னபூரணியின் அருள் வெள்ளச் சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. அவ்வருள் பெறுதல் அடியார்க்கு மகிழ்ச்சியைத் தரும் என்று ஆசிரியர் திரு. நா. கனகராசன் பாடுகிறார். பாடல்களில் கற்பனைகள் கடுகளவும் இல்லை. முழுதும் உள்ளது.

R. 8421

ஊர்த்துவ தாண்டவ மாலை

OORTHUTHUVA TANDAVA MALAI

Pages : 227-231
Lines 34 on a Page
Extent 85 granthas
Complete
A small euology of 10 songs on Siva for his dance called 'urthuva tandavam' sung by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"ஓங்கார மெய்விளக்க ஊர்த்துவ தாண்டவம்
யாங்காண ஆடும் இறையவற்கே - பாங்கான
மாலை யியற்ற மதிமூன் றுடையபிரான்
காலைமனம் பற்றும் கனிந்து".

பிரபந்தம்

"படைப்புமுத லைந்தொழிலும் பயின்றருளு முக்கணான்
பக்திமிகு மக்கள் காணப்
பண்டுபொன் னம்பலம் வெள்ளியும் பலம்ஆதி
பதிகளில் கூத்தாடினான்
விடைக்கொடிய னம்பிகையும் விழிசாத்த நடனமிடு
மேன்மை பாரத பாக்கியமே
வேதமே யுணநாத தத்துவம் விளக்கவே
வெற்பரசை விட்ட பரமன்
படைக்கந் தாங்குபல கைகளொடு இடப்பதம்
பார்க்கவே கரநீட்டுவான்
பழமைபொலி யிக்கலையை யானும்அறி வேனென்று
பறந்துவந் தான்காளியே
உடைக்கல மொதிங்காமல் ஆனந்தமூர்த்தியே
ஊர்த்துவ தாண்டவ மாடினான்
உண்மையுணர் முனிவரே தாண்டவத் துட்பொருள்
உணர்த்தவல் லவராவாதே" (க)

முடிவு

"வள்ளுவர் இயற்றிய தெனக்கூறு பாடலிற்
வந்தது கலைத்திறத்தை
மனமார வோதுவது கருதாத புன்புலவர்
வாய்வந்த சொல்லாகுமே
எள்ளுபவர் முன்னரும் ஏக்கழுத்தத்தினொடு
எழுந்து நிற்கும் கலைஞரும்

என்பிரான் சத்தினுட் பொருளைனை யுணர்த்துதற்
இயலாது தடுமாறுவர்
கொள்ளுவர் கொடுப்பரோ கலைச்செல்வம் உலகிலே
குற்றமற வாழ்வர் அவரே
குறிப்பொன்று கொண்டுபொன் னம்பலத் தாடிதான்
குளிப்பது மறந்தாடினான்
உள்ளுவர் அளப்பிரிய கலைத்திருவி னோக்கத்தை
உலகளந் தானறிவனே
உண்மையுணர் முனிவரே தாண்டவத் துட்பொருள்
உணர்த்தவல் லவரா வரே". (க0)

வாழ்த்து

"ஊர்த்துவ தாண்டவ மாடிய நாயகன்
உபய பதம் பொலிக
பார்த்தவர் மூவரும் வாழிய வாடிய
யிடனும் வாழியவே
ஆர்த்தவர் கண்டவர் கேட்டவர் யாவரும்
அவனியில் வாழ்வுறுக
தீர்த்தனம் வாழிய காளியும் வாழிய
திருவுறும் கலையுடனே".

பின்னணியுரை

(குறிப்பு): இந்நூல், 'ஊர்த்துவ தாண்டவமாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், உண்மையினை விளக்க ஒயாமல் ஆடுகின்ற இறைவனின் பெருமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஊர்த்துவ தாண்டவமாடிய இறைவனுக்குப் பாமலர்களால் மாலைபுனைந்து சூட்டி மகிழுகின்றார் ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8422

உருவிலா இருவர் இரட்டைமணிமாலை

URUVILA ERUVAR ERATTAIMANIMALAI

Pages : 232-234
Lines 28 on a Page
Extent 50 granthas
Complete
Encomium on Siva and Parvathi in two types of metres written by N. Kanagaraja Iyer. Period, 20th Century.

தொடக்கம்

காப்பு

"எயிலுகந்து பெருந்துறையில் இருந்தருளும் இருவரையும்
அயிலுகந்த முருகனருள் அமுதமலர்த் தமிழானே
மயிகந்த யோகேசி மனத்துறைய வழுத்தடியேன்
வெயிலுகந்த பிள்ளைகழல் வேண்டியிசைத் திடுவேனே".

பிரபந்தம்

"உருவமிலா யானாலும் உள்ளமலர் வாழ்கின்றாய்
பருவமழை தோற்கும் பரிசான் - சருன
பெருந்துறைவாழ் தேவ பெரும்பொருளை நாளும்
அருந்துறைக்கே யெம்மை அழை".

முடிவு

"எனதாகு மீசன் திருவருள் என்றே இயம்பினரே
தனதாகு மெய்பணியோ காசிகாணச் சமைத்தனரே
பனதாய பூவினை வைத்தவர் மாணிக்க வாசகரே
எனதாக மைந்தனெனச் செயும்யோகத் தைஎனதுருவே".

வாழ்த்து

"உருவமிலாத் தேவன் உருவறியாத் தேவி
இருவர்பதம் வார்க இனிது".

(குறிப்பு): இந்நூல், 'உருவிலா இருவர் இரட்டைமணிமாலை' எனும் பெயரினை உடையது. இறைவன், இறைவி இருவருக்கும், பாமாலைகளை - இரட்டைமணி மாலைகளைச் சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. இருவகைப் பாடல் மணிகளால் ஆக்கப்பட்டதால் இரட்டை மணி மாலையாயிற்று. முழுவதும் உள்ளது.

R.8423

மணிவாசகர் திருவிழா மாலை

MANIVASAKAR TIRUVILA MALAI

Pages : 235-237
Lines 32 on a Page
Extent 50 granthas
Complete
Eleven stanzas by N. Kanagaraja Iyer exclusively on Manivasakar, author of Tiruvalagam.

தொடக்கம்

காப்பு

"மணிவா சகர்விழா மாலைப் பனுவல்
அணிவான் அமைந்த அகமே - துணிவாய்
வெயிலுகந்த பிள்ளை விளக்கும் பொருளை
அயிலுகந்த பிள்ளைவரும் அங்கு"

பிரபந்தம்

“விழாக்கொளும் பெரும்பே றெளியதோ இறைவன்
　　விருப்பறிந் திறைவியின் திருமுன்
தொழக்கொளும் தீபத் திருப்பணி யெளிதோ
　　சொல்லுக வாதவூ ரடிகாள்
அழாக் கொளும் வினையேம் திருப்பெருந் துறையில்
　　ஆத்தும நாதனுக் கமையா
விழாக்கொளத் துணிந்தீர் யோகநா யகியும்
　　விருப்பொடு மருளுவன் உமக்கே”. (க)

முடிவு

“யாவரே மறையைப் பயின்றவர் இவர்போல்
　　யாவரே தமிழ்தெளிஞ் தவரே
யாவரே இவர்போல் அருந்திருப் பணியை
　　இயற்றினார் உலகிலே சிறக்க
யாவரே இவர்கொல் இறையையே பொருந்தி
　　இரதமு மூர்த்தியும் அடைந்தார்
யாவரே இவரை நிகர்ப்பவர் எனலே
　　இயம்புமான் திருப்பெருந் துறையே”.

வாழ்த்து

“வாழ்கவே வாதவூ ரடிகள்வாக் கமுதம்
வாழ்கவே அவர்திருப் பணியே
வாழ்கவே ஆத்தும நாயகன் அருளே
வாழ்க நாயக திருவருளே

வாழ்கவே வாதவூ ரடிகளார் விழாவில்

வருந்திருக் கோயிலின் சிறிது

வாழ்கவே அவரைப் புனைந்துபா டியவாய்

வளமிலாப் பனுவலு முலகே".

(குறிப்பு): இந்நூல், 'மணிவாசகர் திருவிழா மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் சைவசமயக் குரவர்கள் நால்வருள், மாணிக்கவாசகனின் பெருமை பேசப்படுகின்றது. அப்பெரியாருக்குத் திருவிழா நாளில் பாமாலை ஒன்றைச் சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது. மொத்தம் வாழ்த்துப்பா ஒன்றுடன் 11 பாடல்கள் உள்ளன.

R.8424

சீகாழிப்பிள்ளை அமுதரசமாலை

SIKALIPPILLAI AMUTHARASAMALAI

Pages : 238-242
Lines 32 on a Page
Extent 80 granthas
Complete
Ten songs on Sikazhippillai, popularl known as Thirugnana Sambandar by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"சீகாழிப் பிள்ளை திருவாக் கமுதத்தைப்

பாகா யுருகிப் பருகியே - தோகைமயில்

வேலனவன் என்றே விநாயகன்முன் ஓதியே

கோலமெலாம் சொல்வன் குணித்து".

பிரபந்தம்

"பண்ணின்வகை யறியாது பாடுநெறி தெளியாது
பக்தியே சிறிது மறியாப்
பாமரக் கூட்டத்தின் நின்றறிவு துணையாப்
பயிற்றறம் தெளிகி லாதேன்
மண்ணின்வரு மானிடப் பிறவிபெற் றொருவாது
வாய்மொழியும் வருத லானே
மறைதேடு தோணிபுர நாயகனை நேர்கண்டு
வாயின்வழி பால்வ ழியவே
கண்ணின்வரு மானந் வெள்ளமொடு தோடுடைய
கடவுளைப் பாடுகுழவி
கருத்திலே மொழியிலே யாப்பிலே பொருளிலே
கரைபுரண் டோடு மன்பிற்
பெண்ணினொடு பேரொளியின் மறைதரும் காட்சியிற்
பித்துப் பிடித்த சிறியேன்
பேரின்ப வாரிதியின் நீந்துநெறி தேர்ந்துள்ள
பெட்பினை விளக்க லரிதே". (க)

முடிவு

"யாழ்மூரி பாடியது யாழ்ப்பாணர் தெளியவோ
எவ்வுல கமும்தெள யவோ
இசைவாக மாலைமாற் றேதியது சொல்லினொடு
எழுத்துவசம் என்றுணரவே

பாழ்போடு முலகவாழ் வொருசிறிது மதியாது

பரிவோடு பரமனருளே

பாடுபதி கங்கள்நம் பழவினை களைந்துயர்வு

பாலிக்க வல்லமந்திரம்

தாழ்வான நிலைநோக்கி யோடுநீர் வையையிற்

தாலபத்திர மேறவே

தந்திரமும் மந்திரமும் எந்திரமும் இல்லையே

சைவமே சான்றாவதே

வீழ்வாரை மேலேற்றி நல்லோரை வாழ்விக்க

மெய்ப்பொருளி னருளு ருவமாம்

வேதமய தேவார மருள்ஞான சம்பந்தர்

மென்பதம் நிலைக்க வுலகே".

(குறிப்பு): இந்நூல், 'சீகாழப்பிள்ளை அமுதரசமாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், சைவ சமயக் குரவர்களுள் ஒருவான திரு ஞானசம்பந்தனின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. 'ஞானப்பால் அருந்தி' ஞானப்பாடல்கள் தந்த அந்த சம்பந்தப் பெருமானுக்கு ஒரு மாலை சாற்றுகின்றார் ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ, மொத்தம் பத்துப் பாடல்கள் உள்ளன. முழுதும் உள்ளது.

R.8425

நடன சபாபதி நவரத்ன மாலை

NADANA SABAPATI NAVARATHNA MALAI

Pages : 243-245
Lines 32 on a Page
Extent 50 granthas
Complete
Natana Sabapathy, a form of Siva, has been glorified by the poet N. Kanagaraja Iyer. Number of songs he utilised is 9.

தொடக்கம்.

காப்பு.

"நடன சபாபதி நற்பதம் போற்றிப்
பட்வும் புரியுமிப் பாடல் - கடனமெலாம்
வல்ல விநாயகனை வாழ்த்திவரு மென்னவே
சொல்ல மனநாவே துணி

மாணிக்க மயமாக வருகின்ற மூர்த்தியினை
வழுத்த வேண்டும்
காணிக்கை மனமென்றெ திருக்கோயில் முன்னின்று
கரைதல் வேண்டும்
ஆணிப்பொன் பணிபூண்டு பதஞ்சலியே புலிக்கரசை
அடைந்து போற்றில்
பேணிக்கொள் வதன்பொருட்டே நடனசபா
பதியாகப் பிறங்குவாளே". (க)

முடிவு

"பவளமணி செம்மையொளி விளக்குவது நின்மேனிப்
பயிற்சி யாலோ
தவளமய விபூதியுமே நின்மேனிச் சிவப்புணரும்
தன்மை யுண்டே
கவளமுணும் களிறுநின தொனியாலே சிவந்து நிற்கக்
காணு மன்றே
துவள நினைத்தா மென்னன் பெருமைசொல வந்ததுதான்
சுருதி தானே".

வாழ்த்து

"நவமணிகள் நிற்கும் நவமணிமாலை
தவமணிய ஈசனே தந்தான் - சிவனவனும்
தேவிசிவ காமியும் சித்தத்தே வாழ்வதற்கே
பாவிநெஞ்சே மெய்யான பற்று".

(குறிப்பு): இந்நூல், 'நடனசபாபதி நவரத்தினமாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், நடன சபாபதியின் பெருமை நன்கு பாடப்பட்டுள்ளது. அவருக்கு ஒன்பது மணியான பாடல்களால் மாலைசூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுதும் உள்ளது.

R.8426

சத்த விடங்க தலத்துதி மாலை

SATHTHA VIDANGA TALATTUDI MALAI

Pages : 246-265
Lines 36 on a Page
Extent 170 granthas
Complete

On Siva enshrined at Tiruvarur, Nagappattinam, Tirunallaru, Tirumaraikkadu, Tirukkarayil, Tiruvamur and Tirukkuvalai by N. Kanagaraja Iyer in verses.

தொடக்கம்

காப்பு

"சத்த விடங்க தலத்துச் சிவபிரான்
சத்தமய வேதச் சரக்கறையாம் - அத்தன்
புகழ்பாட வேதப் பொருளாய் வேழம்
மகிழ்வோடு முன்னே வரும்".

திருவாரூர்

"திருவாரூர் வாழும் சிவன்மறைப் புற்றாவான்
வருமாறும் போமாறும் மாற்றி - ஒருவாறு
இருத்தியருஞ் செய்ய இருக்கின்ற னெஞ்சே
வருத்திநின்ற மாயை மறைத்து".

முடிவு

திருக்குவளை

"வாழ்க மண்டலம் வாழ்க விண்டலம்
வாழ்க பாநலம் வாழ்க ஞாயிறு
வாழ்க திங்கள் வான்மீன் வாழிய
உலகம் வாழிய உயிரினம் வாழிய

இறைவன் ஒருவன் இறைமைக் கடங்கி
நலங்கள் நிரம்பிய குலங்கள் வாழ்க

உண்மை பொருமை உணருதல் எளிதலை
பன்மைக் காட்சி படரும் உலகில்
எவ்வகைக் காட்சி எவரே மதிப்பினும்
அவ்வகைக் கருத்தை அவன்குறிப் பெனவே
போற்றுக வாழ்த்துக பொறுமையோ டேற்க
நீற்று மேனி யாற்றுச் சடையன்

எங்கும் உள்ளான் எவையும் அறிவான்
எல்லாம் வல்லான் என்றமெய் யறிவு
மக்க ளினத்தே வளர்வ தாகுக
பூரண புராணன் நாரண னெனவே

புகல்வார் கொள்கையை இகழ்தல் தகாதே
எவ்வகைத் தெய்வம் இறைஞ்சினர் ஆயினும்
அவ்வகைத் தெய்வமும் அவனே யென்ற
உண்மை யுணர்ச்சி திண்மை பெறுக
குவளை விடங்கன் தவளையை விழுங்கும்
சுரமிவம் அசைத்தான் ஆள்க திருவே".

வாழ்த்து

"சத்த விடங்கன் தலங்கள். எழுமைக்கும்
வைத்த எழுமணி மாலையினைப் - பத்தகணம்
பாடுக ஈசன் பதமலர்க்கண் சேர்த்துவிக்க
நாடுக பேரின்பம் நன்கு".

(குறிப்பு):இந்நூல், 'சத்த விடங்கத் தலத்துதி மாலை' என்னும் பெய ரினை உடையது. இதன்கண், திருவாரூர், நாகப்பட்டினம், திருநெள்ளாறு, திருமறைக்காடு, திருக்காராயில், திருவாமூர், திருக்குவளை முதலாகிய ஏழு தலங்களில் இருந்து அருள் புரியும் இறைவனின் பெருமை இனிதே பாடப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் தனிப்பெருமைகள் சிவத்தலங்கள். ஏழிசையால், இன்னமுதால் இறைவனை வாழ்த்தி வணங்கிய சைவசமயக் குரவர்களின் பாடல் பெற்ற சிறப்புக்களோடு இவருடைய பாடல்பெறும் சிறப்பையும் பெற்று சிறக்கின்றன. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8427

திருமால் பதிற்றுப்பத்து

THIRUMAL PATHIRRUPPATTU

Pages : 266-363
Lines 36 on a Page
Extent 1800 granthas
Complete
Encomium on Vishnu templed at various places including Srirangam and Tiruvanandapuram by N. Kanagaraja Iyer in 100 stanzas.

தொடக்கம்

காப்பு

"திருமால் திருவடியிற் சேரக் கருதி
ஒருபால் பதிற்றுலகத் தோத - வருமால்
குருகூரர் பாதம் குளிர்மலரைச் சென்னி
உருகூர வைப்பாம் உவந்து".

பிரபந்தம்

திருவரங்கம் பெரியகோயில்.

"குடமுனி யுலகம் குளிர்வுறக் கொடுத்த
பொன்னி மாநதி புவியினுக் கணியாய்க்

குடமலை யிருந்து கொடுவரு புனலை
வடதிருக் கவெரி வடக்கே பெருகத்
தென்திருக் காவிரி தெற்கே சிறக்க
அவற்றிடை யமையும் அரங்கமே பதியா
உலகமும் உயிரும் உவப்ப வேற்ற
அருமறை முதல்வன் ஆழி மாயவன்
தமிழ்மறை செவிக்கொளத் தமிழகத் தரசாய்
அரவணை யீதே அழகார் பள்ளிகொண்டு
ஆழ்வார் பதின்மர் ஆண்டவன் உடனே
நாலா யிரமெனும் நான்மறை பாடிப்
பரவுதல் கேட்டும் பரவச முற்றே
அறங்க நாயகி அந்தப் புரமும்
அருளால் நோக்கி அவனியைக் காக்கத்
திருக்கண் வளந்தருள் திருமால்
உருக்கண் டுணரும் உலகுவா ழியவே".

முடிவு

வாழ்த்து

"பதிற்றுப் பத்துப் பனுவ லெனவே
திருமால் திருப்புகழ் கருமால் கெடவே
ஓதிட வெழுந்த ஒருநூறு அகவலும்
வேதிட வேதம் விளக்கிய வுண்மை
தமிழால் உரைக்கத் தகுந்த முயற்சி

இயன்ற வளபு மியம்புவே மெனவே
துணிந்த முயற்சி அணிந்த கலைப்பணி
ஆதலை அறியும் அரவணைப் பரமன்
பாட பதத்துறை பகவன் தலைவன்
ஆயிரம் பெயரான் ஆயிர முகத்தான்
ஆயிரம் செவியான் ஆயிரம் விழியான்
திருவருள் பொழிக திருமறை வாழ்க
உலகம் வாழ்க உயிர்கள் வாழ்கவே".

(குறிப்பு):இந்நூல், "திருமால் பதிற்றுப்பத்து" என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருமாலின் சிறப்பு பாடப்பட்டுள்ளது. திருவரங்கம், திருவனந்தபுரம், திருவேங்கடம், சோலைமலை, கூடலலழகர், ஆராவமுதன், கோதண்டராமன், கண்ணபிரான், மானம் காத்த மாதவன், வதரி நாராயணன், எனும் தலைப்புகளில் நூறு பாடல்கள் உள்ளன. திருமாலின் பெயர்களும், புராணக் கதைகளும், பெருமைகளும் பாடப்பட்டுள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா.கனகராசன், எம்.ஏ.

R.8428

சிவபிரான் பதிற்றுப்பத்து

SIVAPIRAN PATHIRRUPPATHTHU

Pages : 364-420
Lines 35 on a Page
Extent 725 granthas
Complete
In praise of Siva templed at Chidambaram, Kanchi, Tiruvarur, Madura, Rameswaram etc by N. Kanagaraja Iyer. Pathirruppattu is a literary genre and this Pathirruppattu contains, as a rule, 100 verses.

தொடக்கம்

காப்பு

“பவனும் பரமன் பதிற்றுப்பத் தோதி
அவனும் சிறப்பை அடையத் - தவனும்
புரிவோம் ஒருகொம்பு பொற்கோட்டில் தீட்டும்
கரியோம் சிவாயநம காண்”.

பிரபந்தம்

“ஓம்நமச் சிவாய ஓம்நமச் சிவாயை
நமக்குமா ராய நமோக ணேசாய
ஆரிய எழுத்தால் ஆரிய மந்திரத்
அகப்பொரு ளுணர்த்தும் அருளைப் போற்றுதும்
பொருளை விளக்கும் புராணனைப் போற்றுதும்
மருளை யகற்றும் வாக்கினைப் போற்றுதும்
இருளை யொழிக்கும் இறையை இறைஞ்சுதும்
ஒளியே யாய ஒருமை வழுத்ததும்
வெளியே காலே விரியும் அங்கியே
நீரே நிலனே நிறைவாய் நிற்கும்
ஒருமைப் பொருளை உள்ளத் தளியிலே
தூண்டா விளக்காய்த் தூக்கி
ஆண்டாய் அடிமையை ஆள்கென் றிசைப்பமே”. (க)

முடிவு

"கருதிக் கருதிச் சுருதித் துணியைத்
தென்னிவர் பெறவே தெளிவித் தருளிய
குபேரன் தோழன் கொற்கை முத்தம்
மாலை கோத்து மார்பகத் தணிவோன்
சேலைப் பதாகையிற் றீட்டிய சுந்தரன்
விடைக்கொடி வேண்டா வென்றி வேந்தன்
கடைப்படு குலத்தின் கையுறை தனையும்
அருளோ டேற்கும் அரசர் பெருமான்
பொருளோ புகழோ புலமைத் தலைமையோ
விரும்பா விபுநரை விருந்திட் டழைத்தே
கண்மாப் பலகை கவினுற வமர்த்திப்
பொற்றா மரைக்கரைப் பொளயப் புரிந்தவன்
விபுலர் ஏவிய விலங்குகள் வெகுள
வாளி துரந்த வலியின் மிக்கான்
காளியோ டாடிய கலைதெளி கூத்தன்
மீளி யெனவே விண்ணவர் போற்றும்
ஆளி யலனோ ஆலவா யரசே
ஓம்நமச் சிவாய ஓம்நமச் சிவாயவே". (க00)

முடிவு

இந்நூல், 'சிவபிரான் பதிற்றுப்பத்து' எனும் பெயரினை உடையது. இதன்கண், சிவனுடைய பெருமை பாராட்டப்பட்டுள்ளது. சிதம்பரம், திருவாரூர், காஞ்சி, மயிலை, திருவெற்றியூர், இராமேசுவரம், மதுரை, திருப்பூவணநாதன், திருவாலவாய் முதலான இடங்களில் அமர்ந்து முத்தியை

அருளும் இறைவனின் புகழை இனிய பாடல்களால் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. எடுத்துரைக்கின்றார். மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8429

முருகவேள் பதிற்றுப்பத்து

MURUGAVEL PATHIRRUPPATHTHU

Pages : 421-436
Lines 28 on a Page
Extent 250 granthas
Complete
100 songs in praise of Lord Muruga who is enshrined at various shrines such as Pazhani, Tirucchandur etc., by N. Kanagaraja Iyer of Pudukkottai.

தொடக்கம்

காப்பு

"தமிழகமே போற்றும் தவக்கோலம் பூண்டான்
அமிழ்தயில்வார் காண்டற் கரியான் - தமிழ்தேர்
மருகல் பதிற்றுப்பத் தோங்கார மூர்த்தி
அருளின் வருநன் கமைந்து".

வெண்பா

"ஓங்கார மூர்த்தி - உலகளந்த ஞானமயன்
ஆங்கார மரனுக்கு மப்பாலாய் - நீங்காத
பேரின்ப வாழ்வருளப் பெண்ணிருமை கொண்டருகன்
சேரின்ப நெஞ்சமுறு சீர்". (க)

முடிவு

"ஏன்றார் எவருமே ஈடழியச் செய்தருளும்
தோன்றால் குமரமலைச் சோதியே - மான்றார்
மனத்துள் வயங்கும் மலர்ப்பதத்தாய் சான்றோர்
இனத்தும் புகுவேன் உணர்த்து".

வாழ்த்து

"ஓங்காரம் வாழ்க உவமையிலான் வாழிய
ஆங்காரம் இல்லான் அகம்வாழ்க - நீங்காத
புல்வயலான் செந்தூரான் பொற்பார் பரங்குன்றன்
நெல்வயலே வாழ்க நிமிர்ந்து".

பின்னணியுரை:

திருமால் பதிற்றுப்பத்து, சிவபிரான் பதிற்றுப்பத்து, முருகன் பதிற் றுப்பத்து, இந்த மும்மை நூறும் நிறைவேறின.

(குறிப்பு): இந்நூல், 'முருகன் பதிற்றுப்பத்து' எனும் பெயரினை உடையது. இதன்கண் முருகனின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றம், திருப்பழனி, திருவேரகம், கந்தகிரி, திருச்செந்தூர், சென்னிமலை, திருத்தணிகை, குமரமனை, ஆகிய இடங்களில் கோயிற் கொண்டருளும் குமரக் கடவுளின் கருணையைச் சிறப்பினைக் கவிஞர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் 100 பாடல்களில் பாடியுள்ளார். முழுவதும் உள்ளது.

R.8430

கலைமகள் திருமகள் இணைமணிமாலை

KALAIMAGAL THIRUMAGAL ENAIMANIMALAI

Pages : 437-466
Lines 28 on a Page
Extent 450 granthas
Complete

Kalaimagal, goddess of knowledge and Tirumagal, goddess of wealth have been euologised by N. Kanagaraja Iyer in 250 songs rendering a literary genre what is known as inaimanai malai.

தொடக்கம்

காப்பு

"மாமி திருமகளே வாக்கிலுறை நாமகளே
மாமி மதிக்கும் மருமகளே - யாமிங்கு
இருவருக்கும் நல்கும் இணைமணி மாலைக்கு
ஒருமருப்பில் உம்பனருள் உண்டு".

சிவபிரான்

"சிவமயமே யாகுக தேவியர் நோக்கம்
சிவமயமே யாகுக செய்யுள் - சிவமயமே
ஆகுக வாக்குள் அதன் கண் அமைபொருளும்
ஆகுக தேவன் அருள்".

முடிவு

"நாமகளே நின்முன் நடந்துவந்து வேண்டுகின்றேன்
பூமகளே எம்பொருட்டே போந்துளாள் - மாமகளே
நீயெமக்கு வேண்டும் நீதிவகை நல்குவதே
நாயமிக்க காரியமாய் நல்கு (கசூகூ)
நல்கத் தெரிந்த கலைமக ளேயுன் நளினிபதம்

புல்கத் தகுந்த சிரமுடை யேம்வந்து போற்றுகின்றேம்
பல்கத் தெளிந்த பனுவற் றிருவைப் பரிந்தருள்வாய்
மல்கத் தகுந்த திருமாலின் மார்பான் மருமகளே". (உ00)

பின்னணியுரை

(குறிப்பு): இணைமணிமாலைக் கணக்கு சிறிது குறைபடும். ஒரு வெண்பா அதிகம் இருந்தும் இங்கு இருநூலுக்கு கலித்துறை வந்திருக்கிறது. குறைகளைப் பொறுத்து இறைவியர் இருவரும் அருளவேண்டும்.

(குறிப்பு): இந்நூல், 'கலைமகள், திருமகள் இணைமணிமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், கலைமகளின் கருணைச் சிறப்பினையும், திருமகளின் அருள்வெள்ளச் சிறப்பினையும் ஆசிரியர், திரு. நா. கனகராசன் அழகாகப் பாடியுள்ளார். ஒருவன் வாழ்க்கையில் உயர்வதற்கு கலையும் வேண்டும், திருவும் வேண்டும். திருவைவிட கலையின் அவசியம் காலத்தால் மாறாதது என்ற அடிப்படையில் கலைமகளை முன்வைத்துத் திருமகளைப் பின் வைத்துள்ளார். மொத்தம் இருநூறு பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8431

விநாயகன் மும்மணி மாலை

VINAYAKAN MUMMANI MALAI

Pages : 467-476
Lines 34 on a Page
Extent 150 granthas
Complete
On Lord Vigneswara this literature runs in 30 stanzas which have been composed by the poet N. Kanagaraja Iyer, period 20th century.

தொடக்கம்

காப்பு

"கங்கைக் கரைக்காசிக் கண்ணுதற் காவிரி
மங்கைக் கரைக்கண் வலஞ்சுழி - அங்கையிலும்
பிள்ளையார் பட்டியிலும் பீடுபெறும் யானைமுகன்
தள்ளையாய் நல்கும் தமிழ்".

பிரபந்தம்

"வாரா ணசிநகரில் வாழ்விசுவ நாதனொடு
நாரா யணன்புகழ் நண்ணுகின்ற - வாரண
ஆசியப் பிள்ளை அருள்விளக்கும் பிள்ளையார்
தேசியச் செல்வமெனச் செப்பு". (க)

முடிவு

"சுப்பிர மூர்த்தி அப்பிர மூர்த்தி
சுப்பிர மணியன் துறவுபூண் டொதுங்கத்
தந்தைத் தாயைத் தானே சூழ்வந்து
சிந்தை குளிரச் சிறுகை நீட்டி
மாம்பழம் பெற்று மகிழ்வுறச் சுவைத்தவன்
தேம்பழம் தந்தாற் சிரித்தே பெறுவான்
பலாப்பழம் உரித்துப் பக்குவ மாக
விதைகளை யொதுக்கி மிக்கதேன் கலந்து
விருப்புடன் நீட்டினால்ல வேண்டள வேற்பான்
மாதுளங் கனியை வணங்கிமின் னின்று

முத்துநன் னிறமாய் முதிர்வது கண்டே
எடுத்துக் கொடுத்தார் இருகரத் தேந்துவான்
வாழைப் பழத்தை வருக்கைச் சுளையை
கருப்புக் கட்டிக் கலந்துநெய் தேனொடு
பிசைந்து கொடுத்தால் அசைந்து கொடுப்பான்
ஐந்தமு ததனை அவன்திரு மேனி
குளிரக் கொட்டினாற் கொடுப்பான் உலகமே
குழந்தைக் கூட்டம் குட்டிக் கொண்டு
சுற்றி வந்து தோப்பிக் கரணம்
போடும் பொழுது நீரும் மகிழ்ச்சி
இவ்வள வென்றே இயம்புவ தரிதே
வெள்ளப் பிள்ளை வெல்லம் பிள்ளை
குள்ளப் பிள்ளை குறைவிலாப் பிள்ளை
கள்ளப் பிள்ளை கயமுகப் பிள்ளை
பிள்ளையார்ப் பட்டி பிறங்கும் கோயில்
கொள்ளையால் செல்வம் குறித்துத் தகுமோ
வலஞ்சுழிக் கோயில் வாழ்வு முகக்கும்
வாரா ன்இக்கணம் வாழ்வான் அவனே". (௩0)

(குறிப்பு):இந்நூல், 'விநாயகன் மும்மணி மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண் விநாயகர் கடவுளின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. யானைமுகனுக்கு மூன்றுவகைப் பாடல்கள் எனும் மணிகளால் மாலை கட்டி, சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர், திரு. நா. கனகராசன். யானைமுகனின் வீரச் செயல்களும் திருவிளை யாடல்களும், அறிவுக் கூர்மையும் பற்றிய பல செய்திகள் இதன்கண் பாடப் பட்டுள்ளன. மொத்தம் முப்பது பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8432

வடமொழி தமிழ்மொழி இனிமணிமாலை

VADAMOZHI TAMILMOZHI ENAIMANIMALAI

Pages : 477-507
Lines 28 on a Page
Extent 450 granthas
Complete
Theme is new; Author N. Kanagaraja Iyer advocates for a happy union of Tamil and Sanskrit without conflict of whatsoever. For this, author has utilised 200 elegant Tamil Stanzas here, which ultimately freeze into a Tamil Literary genre.

தொடக்கம்

காப்பு

"ஆரியமும் பைந்தமிழும் அன்போ டிணைந்துருக
நேரியலும் மாலை நிகழ்த்துதற்கே - ஏரிகரை
ஆற்றங்கரை யரசின் ஆனந்த மாயமரும்
தோற்றங்கொள் வேழம் துதித்து".

பிரபந்தம்

"உத்தம தேயம் உரிமையெனக் கொண்டாயோ
மத்திய தேயத்தும் வாழ்வாயே - சத்தியம்வாழ்
தக்கிண நாட்டகத்தும் தாழாய் வடமொழியே
புக்கிலுனக் குண்டோ புகல்".

முடிவு

"சீரிய தோன்று தெளிந்தார் மொழிந்தனரே
ஆரிய நாடில்லை அகணிலத்தே - ஆரிய

சாதியிலை பாடையிலை தத்துவ ஞானமுண்டு
நீதிநிலை .... நீர்.

நீர்மை சிறந்த தமிழருக் கொன்று நிகழ்த்துவல்யான்
நேர்மை மறவா அருளாட்சி சான்ற நிலமுடையீர்
கூர்மை சிறந்த அறிவுளீர் நுந்தம் குலங்களிலே
ஓர்மை மறத்தல் தகாவெனும் தக்கிணம் உத்தமரே".

பின்னணியுரை:

இடையிலே சில எண்கள் பிழைபட்டதால் உ0க என்ற எண் இறுதிப் பாட்டில் வந்தது.

(குறிப்பு):இந்நூல், 'வடமொழி, தமிழ்மொழி இணைமணி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் இருமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைத் தன்மைகளையும், தெய்வத் தன்மைகளையும் பாராட்டியுள்ளார் ஆசிரியர், திரு. நா. கனகராசன். முழுவதும் உள்ளது. இரண்டுவகை மொழிகளுக்கும் மாலையாகத் தமிழ்ப் பாமாலையைச் சூட்டி மகிழ்கின்றார்.

R.8433

தந்தை தாய் இணைமணி மாலை

TANTAI TAI ENAIMANIMALAI

Pages : 508-536
Lines 28 on a Page
Extent 410 granthas.
Complete
Narayana and Alarmelumangai have been invoked; Author, N. Kanagaraja Iyer. Poet has continued 201 stanzas for this invocation.

தொடக்கம்

காப்பு

"தந்தை திருத்தாய் சரணத்தைச் சார்ந்துநின்று
பந்த மணிமாலை பாடுதற்குத் - தந்திமுகன்
நாமகள் பூமகள் நாரணன் ஆரணன்
காமகள் பாதமலலர் காப்பு".

பிரபந்தம்

"எந்தாய் தமிழ்மொழியில் என்னைப் புகுவித்த
தந்தாய் வறுமை தளமாக - நொந்தாய்
திருநா ரணநாமத் தெய்வமே நின்னை
ஒருநாள் மறவேன் உளேன்". (க)

முடிவு

"நயப்புமொழி கூறிலேன் நன்குணர்ந்து சொற்றேன்
வியப்புமொழி யொன்றும் விளம்பேன் - பயப்பறிந்த
தாய்தந்தை தெய்வமென்று சத்தியமாய்ச் சொல்கின்றேன்
வாய்தந்த தெய்வத்தின் வாழ்த்து.

வாழ்த்தும் உரைக்க மனந்துணி யாது மதுரைநகர்
வாழ்த்தும் குடியிருந் தேறியப் பழகும் மனைகளெலாம்
வாழ்த்தும் கயற்கண்ணி சொக்கண் மலரடி வாய்மலர்கள்
வாழ்த்தும் திருத்தந்தை வாழ்த்துவர் எந்தாயும்
வாழ்த்துவனே". (உ0க)

பின்னணியுரை:

ஒருவெண்பா இடையில் அதிகம். அதனால் 201 ஆகிவிட்டது.

(குறிப்பு): இந்நூல், 'தந்தைதாய் இணைமணி மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், நாராயணனையும், அலர்மேல்மங்கையையும் பற்றிய செய்திகளைக் கூறிப் பாராட்டுகின்றார். இன்னும் அவர்களையே தந்தைதாயாகப் பாவித்துப் பாடியுள்ளார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது. இருவகைப் பாடல்களாக 201 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8434

மண்டல விண்டல இணைமணி மாலை

MANDALA VINDALA ENAIMANI MALAI

Pages : 537-566
Lines 28 on a Page
Extent 450 granthas
Complete
Through verses, the Poet N. Kanagaraja Iyer renders that life on earth is equally great as that of the heaven Theme, once again, is new as far as the structure is concerned.

தொடக்கம்

காப்பு

"மண்டலமும் விண்டலமும் வாழுமுறை நண்புறவே
தொண்டரு மேனையரும் சூழ்வதனை - அண்டரும்
மானிடரும் தேற வழங்கும் மணிமாலைக்கு
யானைமுகன் காப்பருளும் இன்று".

பிரபந்தம்

"மண்டலம் எங்கும் வளைந்தறிந்த வல்லோரும்
கண்டபொருள் எல்லாம் கனிந்துரையார் - தண்டமிழும்
கன்னடமும் ஆந்திரமும் கண்டளவில் முற்றுவதோ
மன்னரிலா நாட்டின் மதிப்பு".

முடிவு

"தெளிவு வருக மனத்தகம் வானத்தில் செல்பவரால்
ஒளியும் அறிவும் உலக மகாருக் குறுதுணையா
வெளியும் இடையும் நிலத்தும் நிலக்கிடும் மெய்யறிவே
வளியும் மழையும் பொருந்தி யுயருக மண்டலமே".

வாழ்த்து

"உலகமெலாம் வாழ்க உயிர்களெலாம் வாழ்க
கலைகளெலாம் வாழ்க ககனம் - நிலவுலகம்
வேற்றுமை யின்றி விளக்கமுற வாழியரோ
தோற்றுவ வெல்லாம் சுடர்த்து".

பின்னணியுரை:

மண்டலமும் விண்டலமும் நெருங்கி உறவு பூணும் காலலம் வருவதை அறிந்து இப்புதுமைப் பிரபந்தம் இயற்றப் பெற்றது. இதன்கண் எத்தனை புதுக்கருத்துக்கள் இருப்பினும் அவையெல்லாம் பழமை வேரில் இருந்து படர்ந்து வளர்ந்த தருவின் தளிர்களே அரும்புகளே - மலர்களே - காய்களே கனிகளே. முதுமையை வெல்ற்கு இத்தகைய கவிதைத் திருப்பணியை எளியேற்கு அமைத்த கடவுள் திருவருள் உலகம் எங்கும் ஒரே மனம் உண்டாக்கி ஒளிர்வதாகுக.

குறிப்பு): இந்நூல், 'மண்டல விண்டல இணைமணிமாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், மண்ணுலகத்தைப் பற்றியும் விண்ணுலகத்தைப் பற்றியும் உள்ள செய்திகளையும், இடையிலுள்ள வேறுபாடுகளையும், தனிச்சிறப்புக்களையும் பாடியுள்ளார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மண்ணுலகைவிட விண்ணுக்கு சிறந்ததல்ல என்பதற்கு இவர்கூறும் காரணங்கள் சிறப்பில்லையென்றாலும், அந்தப் பார்வை சிறப்புடையது. சமய வாதிகள் அனைவரும் அவ்வுலகமே சிறந்தது என்று இவ்வுலக வாழ்வில் ஒரு வெறுப்பினை உண்டாக்கிவிட்டார்கள் என்பதை நயம்படச் சாடியுள்ளார். முழுவதும் உள்ளது.

R.8435

எல்லாம் வல்ல இறைவன் துதி

ELLAM VALLA ERAIVAN TUDHI

Pages : 567 & 578
Lines 24 on a Page
Extent 25 granthas
Complete
Eulogises the almighty in various ways. Author, N. Kanagaraja Iyer of 20th Century. Runs in verse.

தொடக்கம்

ஒருபா ஒருபஃது

"சொல்லால் அளப்பரிய தூய பரம்பொருளை
எல்லாம் இதயத் திருப்பதனை - எல்லா
உலகமும் ஆண்டருளும் உண்மைப் பொருளை
விலகவே வேண்டா விரும்பு.

விரும்புமதி நெஞ்சே வியத்தக்க ஒன்றை
அரும்புமஃ துள்ளத் தகமே - பெரும்பொருளும்
அஃதே சிறியதுவும் அஃதே அதன்....
எஃதே செலாதென் றிசை".

முடிவு

"இவண்பிறந்தோம் எங்கடவுள் இக்கடவுள் என்போர்
அவண்பிறந்தோர் அக்கடவுள் ஆமென் - றெவண்பிறந்த
மக்களும் கேட்க வழங்குவர் அக்கடவுள்
தொக்க தந்தைதா யென்று சொல்".

(குறிப்பு): இந்நூல், 'எல்லாம் வல்ல இறைவன் துதி' எனும் பெயரினை உடையது. இதன்கண், எல்லாம் வல்ல இறைவனின் பெருமைகளைக் கூறித் துதிக்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. இதன் இறுதியில், கி.வா. சகந்நாதனுக்குத் தான் எழுதிய கடிதம் ஒன்றின் பிரதி என்று குறிப்பிடப்பட்டப் பாடல்களும் காணப்படுகின்றன. முழுவதும் உள்ளது.

R.8436 - 8456 (One Codex)

Paper : 33cm x 20.5cm; Pages : 1-467
Lines 32 on a Page; Tamil, New, Good
Extent
Complete

R.8436

கூத்தனூர்க் கலைமகள் மாலை

KUTTANURK KALAIMAGAL MALAI

Pages : 1-16
Lines 30 on a Page
Extent 250 granthas
Complete
Kalaimahal of Kuttanur (Tanjore Dt.) has been extolled by N. Kanagaraj Iyer. This village, according to one view, has been named after Ottakkuttan, the famous poet.

தொடக்கம்

காப்பு

"வேத விநாயகனே வேண்டிப் பராவுகின்றேன்
போத மருளும் பொருட்டாக - நாதமலி
கூத்தனூர் வாழும் குணம்சால் கலைமகளை
ஏத்தவே மாலை யிசைத்து".

வேண்டுகோள்

"தக்க யாகப் பரணித் தமிழ்க்கவி
தந்த வாக்கி தனக்கிணை யற்றவன்
மிக்க சோழர் வியன்புகழ் பாடுலா
விருப்ப மேற விளங்கிய நாவினான்
முக்கண் அத்தன் முளரிப் பதத்திலே
மூழ்கும் கூத்தன் முழுமைப் புலமையும்
நக்கன் வாழ்த்த நயந்த கலைமகள்
நாளும் வாக்கு நலந்தரும் தெய்வமே".

முடிவு

"உலக மனைத்து மரசாளும் உருவத் தெய்வம் நீயலையோ
உலகில் ஆற்றல் நல்கவல அறிவுத் தெய்வம் வேறுளதோ
நிலமும் வானும் மதிக்குமிசை நிரப்பும் தன்மை நினதலவோ
வலமும் இடமும் மேல்கீழும் வழங்கும் வாக்குக் கலைமகளே".

வாழ்த்து

"மலைமா மகளும் திருமகளும் வாழ்வு நல்கி வாழியரோ
கலைமா மகளின் திருவருளைக் காணும் உலகம் வாழியரோ
கலைமா மகளே யுயிராகக் காணும் புலவர் வாழியரோ
நிலைமா மகள்வாழ் கூத்தனூர் நிமிர்ந்த கோயில் வாழியரோ".

பின்னணியுரை:

வியாழன் தொடங்கிச் சனிக்கிழமை காலை பூர்த்தி, சௌமிய மார்கழி உச தொடக்கம். சௌமிய மார்கழி உசா நிறைவு. கலைமகள் திருவருள் காத்தருள்க.

(குறிப்பு): இந்நூல், 'கூத்தனூர்க் கலைமகள் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், ஒட்டக்கூத்தனுக்கு தட்டாமல் வரும் கவியைத் தந்தவளாம் கலைமகளின் பெருமை கூறப்பட்டுள்ளது. தக்கயாகப் பரணியைத் தமிழுக்குத் தந்த கவிஞன் ஒட்டக்கூத்தன். சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் இன்று 'சின்னச்சிங்கப்பூர்' என்று சிறப்பாக அழைக்கப்படும் ஊர் கூத்தானூர் ஆகும். அக்கவிஞனின் பெயரால் அவ்வூர் அமைந்திருக்கிறது என்பதை ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் தமது கவிதையில் உணர்த்துகின்றார். முழுவதும் உள்ளது.

R.8437

கொல்லாபுரத் திருமகள் மாலை

KOLLAPURAT TIRUMUKAL MALAI

Pages : 17-32
Lines 30 on a Page
Extent 375 granthas
Complete
Work wants the graces of goddess Tirumagal of Kollapuram and it runs in verses. Total number of verses, 108.

தொடக்கம்

காப்பு

“கொல்லா புரத்தே குலவும் திருமகளைச்
சொல்லால் வளைக்கும் துணிவினேன் - எல்லாரும்
தும்பிக்கை கொண்ட சுருதிப் பிரானருளின்
நம்பிக்கை கொள்ளுமென் நா”.

வேண்டுகோள்

“கபலையெனப் புலவர்புகல் செங்கமலத்
திருமகளின் சரணம் சார்ந்து
சபலமென துளத்துண்மை அவனறிய
விளக்கு வேதே சமயமாக
அபலமய மானதமிழ் வாக்கானே
அவள் புகழை அளக்கப் புக்கேன்
சுபலமெனக் கருளுதிரு நோக்கமவட்
குளதென்று துணிந்த தாலே”.

முடிவு

“வேண்டிற் பெறாத பொருளுண்டோ விமலை செய்ய கமலத்தாய்
ஆண்டிக் கரசு தருபவன்றி அரசுக்கரண்டி நிலைதருவாம்
தூண்டித் திருமால் மனத்திருந்து தொல்லை யுலகைக் காத்தருள்வாய்
கூண்டிற் புகுந்தே பரவுகின்றேன் கொல்லா புரத்துத் திருமகளே”.

(க0அ)

வாழ்த்து

"வாழிகொல்லா புரநகரம் வாழிகொல்லா புரத்தரசி
வாழிகொல்லா புரத்திருவே வாழிகொல்லா புரமரபோர்
வாழிகொல்லா புரம்பணிவோர் வாழிகொல்லா புரநினைவோர்
வாழிகொல்லா புரத்திடுமான் மலர்த்தாள் சாரும் தமிழ்க்கவியே ".

றிப்பு): இந்நூல், 'கொல்லாபுரத் திருமகள் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், 'கொல்லாபுரத்தே குலவும் திருமகளின் பெருமைகள் சொல்லால் காட்டப்பட்டுள்ளன. அத்திருமகள், 'உறிக்குள் வெண்ணெய் எடுத்தானை உவந்து மணந்த கதையும், அருளின் சிறப்பும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8438

மகாலெட்சுமி திருமாலை

MAHALAKSHMI THIRUMALAI

Pages : 33-60
Lines 32 on a Page
Extent 350 granthas
Complete
Validity of the graces of Mahalakshmi of Mumbai town has been sung in 108 stanzas sung by N. Kanagaraja Iyer of 20th Century.

தொடக்கம்

காப்பு

"குடக்குக் கடற்கரையிற் கோமாட்டி கோயில்
அடக்கு மகாலட்சுமி அண்மித் - தொடக்கொழிய
மாமகனைப் போற்றுவேன் வள்ளல் விநாயகனும்
கோமகளை உள்ளத்தே கொண்டு".

வேண்டுகோள்

"பல்லாண்டு கடந்தபினர்ப் பழமை யோர்ந்து
பச்சிம சாகரத் தருகே பாறைமீது
எல்லாண்ட மூவருமே இலங்கும் கோயில்
எளியேன்முன் தொழுதவணம் இதயத்தெண்ணிச்
சொல்லாண்ட கவிதையினாற் றுணிவு பூண்டு
சுடர்க்கொடிகள் மூவரையும் துதிக்கப் புக்கேன்
நெல்லாண்ட பழனமெலாம் நிரம்பி வாழ்வு
நிறைகவென வுளநினைக்கும் நிலையி னேனே".

முடிவு

"பாசமிகப் பற்றுமிகப் பணக்குவியல் சேர்த்துமகிழ்
பண்பா ளர்க்கே
நேசமிகப் புதையல் தந்து காட்சிநல்கி மகிழ்ச்சிவினை
நினைவு கொள்வாய்.
தேசநலம் தனதாக வுழைப்பாரை வறுமையொடு
திரியச் செய்வாய்
தாசர்மன மறிகின்ற மும்பைநகர் மகாலட்சுமி
சாண்புக் கேனே. (கOஎ)

கந்தர்ப்பன் மகனாக இரதிமரு மகளாகும்
காட்சி கண்டாய்
வந்தர்ப்ப கங்களுக்குப் பசியாற வுணவூட்டும்
வகையில் லாயோ

சிந்தப்பன் மகார்வாழச் சிதறியத பிறர்தொழுத்தே
சேர்க்க வைத்தாய்
சந்தர்ப்பம் அறியாயே மும்பைநகர் மகாலட்சுமி
சரண்புக் கேனே". (கoஅ)

(குறிப்பு): இந்நூல், 'மகாலட்சுமி திருமாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், மும்பை மாநகரத்தில் கடற்கரைப்பாறைமேற் கோயிற் கொண்டிருட்கக்கும் மகாலட்சுமி தேவிக்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. மகாலட்சுமியின் அளப்பருங்கருணையின் அழகை, மாட்சியைப் பாடியுள்ளார். முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8439

மகாசரசுவதி மாலை

MAHASARASUVADHI MALAI

Pages : 61-76
Lines 30 on a Page
Extent 250 granthas
Complete
Saraswathy of same Mumbai has been praised; Author, N. Kanagaraja Iyer. Stanzas 108. Mumbai is situated at Bombay in Maharastra.

தொடக்கம்

காப்பு

"மும்பை மகாலட்சுமி மும்மைவாய் கோயிற்கண்
அம்பை சரஸ்வதியை ஆராதித் - தெம்புதுமை
மாலையைச் சாத்தவே வக்கிர துண்டத்தாள்
காலையே சென்னிவைத்தேம் காண்".

பிரபந்தம்

“இம்மைநலம் மறுமைநலம் இணையறுபே ரின்பநலம்
மும்மைநலம் அருளவமர் மும்பைநகர் மூவருளே
செம்மைதரு கலையருளிச் சிந்தையில்வாழ் தேவியினை
அம்மைசரஸ் வதியெனவே அகமுருகிப் போற்றுவமே”. (க)

முடிவு

“ஒருமொழியே யுலகமெலாம் உலவுகென விதிப்பாயே
தருமொழிகள் எலாமுலகில் தகுதிபெற வுரியனவே
இருமொழியும் பன்மொழியும் எனக்குரிமை புரிதாயே
திருமகளும் மலைமகளும் சேரவருள் கலைமகளே”. (க0அ)

வாழ்த்து

“மும்மையுரு வுவந்தருளும் முத்தேவி தனிவாழ்க்க
இம்மை அம்மை இசைத்தருளும் இறைவிதிரு வருள்வாழ்க
செம்மைமனம் செம்மைமொழி செம்மைசெயல் திறம்வாழ்க
அம்மைகலை மகளருளின் ஆழிபர வுகவுலகே”.

பின்னணியுரை:

சௌமிய தைம்மதி முதல்நாளான சங்கராந்தி தினம் காலை 5 மணிக்கும் பூர்த்தியானது. புதன் கிழமை.

(குறிப்பு): இந்நூல், ‘மகாசரசுவதி மாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண், மும்பையின் கண்ணே, வாழ்கின்ற அடியார்க்கு அருள்வழங்கும் கலைமகளின் பெருமை பாடப்பட்டுள்ளது. அவ்வடியவர்கள், அருள்பெறத் தேவியைத் தினமும் வணங்கிட வேண்டும் என்றும், வணங்கும் போது அகமுருகிப் போற்றிட வேண்டுமென்பதை ஆசிரியர் திரு. நா. கனகராசன் பாடியுள்ளார். முழுவதும் உள்ளது.

R.8440

மகர துர்க்கை மாலை

MAKARA DURKKAI MALAI

Pages : 76-91
Lines 30 on a Page
Extent 250 granthas
Complete
Mahara Durga is a deity on a rock situated at Mumbai, noted above. Poet N. Kanagaraja Iyer has composed stanzas on this goddess which form a garland, a literary form.

தொடக்கம்

காப்பு

"மகாலெட்சுமி கோயிலகம் வாணியோடு வாழும்
மகாதுர்க்கை பாதமலர் வாழ்த்தும் - மகாயஞ்ஞும்
தேவி திருமதலை செம்மையுரு வேகதந்தன்
ஏவி யருள வெழும்".

வேண்டுகோள்

"மகிமையொடு மகாசக்தி மும்மையுரு வெருத்தமரும்
மகாலட் சுமிக்கே
தகுதியிலேன் சென்றுபணிந்து இயற்றுதுதி மறைந்ததரும்
தாய்மை பூண்ட
சசிகள் ஒரு மூவருக்கும் தமிழ்மாலை சாற்றுவதே
தரும மென்று
மிகுமுணர்வு தூண்டவரு திருப்பணியை அவரேற்க
வேண்டு வேனே".

முடிவு

"செந்தா மரையாள் திறம்வா ழியரோ
அந்தார் அணிவார் அறம்வா ழியரோ
கொந்தார் குழலார் குலம்வா ழியரோ
வந்தார் முனிவர் மனம்வா ழியரோ
சம்பா பதியாம் தம்வா ழியரோ
மும்பா புரிவாழ் முறைவா ழியரோ
கம்பா நிதிசார் கலைவா ழியரோ
கொம்பா மிறைவிக் குலம்வா ழியரோ".

பின்னணியுரை

(குறிப்பு): பம்பாய் நகரத்திற் பரம கருணாகரியாக விளங்கும் மும் பாதேவியையும் அங்கு குதிரைப் பந்தயக் கூடத்துக்குப் புகழ்புனையும் மகாலட்சுமி என்ற நகர்ப்பகுதியில் உள்ள ஒரு சிறிய பாறைமேல் கடலையொட்டி அமர்ந்திருக்கும் மகாலட்சுமி, மகாசரசுவதி, மகா துர்க்கை, என்ற முத்தேவியர் திருப்படிவங்களைக் கண்டு வணங்கி இருபத்தைந்தாண்டு ஆகியிருந்தும் அப்பொழுது பாடிய பிரபந்தம் மறைந்ததால் இஃது இக்காலத்தில் மூன்று மாலைகளாய் இயன்றுள்ளது.

(குறிப்பு): இந்நூல், 'மகா துர்க்கை மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்; துர்க்கையின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. பம்பாய் மாநிலத்தில் ஒரு சிறிய பாறை மீது கடலையொட்டி அமைந்திருக்கும் தேவியாகிய துர்க்கைப்பற்றிப் பாடியுள்ளார். திரு. நா. கனகராசன், எம்.ஏ. அத்துர்க்கைக்குப் பாமாலையைச் சூட்டி மகிழ்ந்துள்ளார். முழுவதும் உள்ளது.

R.8441

அலர்மேல் மங்கை திருமாலை

ALARMEL MANGAI THIRUMALAI

Pages : 92-107
Lines 30 on a Page
Extent 250 granthas

Complete
Goddess Alarmelmangai has been praised for graces by the author N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"திருவேங்கட முடையான் சேவடியே போற்றி
கருவேங் கடம்கடக்கும் காதல் - உருவாம்
அடியார் பணியும் அலர்மங்கை மாலை
முடிவாம் அவனருளாள் முன்பு
திருக்குரு கூர்வாழும் திருவாய் மொழியார்
அருட்குருகும் நெஞ்சத்தேன் ஆகும் - தருக்கேன்
அலர்மேல் வாழ்மங்கை அணிமாலை யாப்பேன்
சிலர்போல்வேன் வாக்குச் சிறந்து".

முடிவு

"ஊனே உளமே உயிர்தானே உருகாதிருக்கும் மனிதகுலம்
மானே மரமே சிலயேயா மதிக்கும் மனமே யுடையேனைத்
தானே தழுவும் வேங்கடவன் தனியே யிருந்து மெனைப்பிரியான்
ஆனே அவனுக் குரிமைபெறும் அலர்மேல் மங்கை திருவருளே".

(க0அ)

வாழ்த்து

"வடவேங் கடவன் திருவடிகள் மறையின் முடிமேல் வாழியவே
கடலே பொருவும் கருணைகொளும் கண்கள் பலவும் வாழியவே
அடலே யறிந்து மனம்பூண்ட அலர்மேல் மங்கை வாழியவே
உடலே உயிரே அவற்காக்கும் உண்மைத் தொழும்பர் வாழியவே".

பின்னணியுரை:

(குறிப்பு): அலர்மேல் மங்கை திருவருவே என்று வைத்த மகுடத்தை ஒழுங்காக ஒவ்வொரு பாட்டிலும் வைப்பது எளிதன்மை தோற்றியதால் இப்பிரபந்தம் மூன்று நாள் வேண்டியிருக்கிறது. வியாழன் காலையில் நடராஜன் ஐயப்ப சோதி தரிசனம் பெற்று மீண்டு வந்தான். இரவு 1.30 மணிக்கு வந்துவிட்டார். வெள்ளிக்கிழமை நன்றாகப் பூசை செய்தான். சனிக்கிழமை சமாராதனை நடத்தினார். இவற்றில்நான் கலந்து கொண்டு இப்பிரபந்த பூர்த்திக்கு வாக்குப் பெற்றேன்.

(குறிப்பு): இந்நூல், 'அலர்மேல் மங்கை திருமாலை'.என்னும் பெயரினை உடையது. இதன் கண், அலர்மேல் மங்கையின் அருட்சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் "அவர்மேல் மங்கை திருவருளே" என்றே முடிகின்றது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8442

சுவர்ண காமாட்சி திருமாலை

SWARNA KAMATCHI THIRUMALAI

Pages : 108-157
Lines 36 on a Page
Extent 450 granthas
Complete
Goddess Swarna Kamatchi of Tanjore City has been praised earnestly for benefits in life; praised by the author N. Kanagaraja Iyer. He has composed this poetical work at Kottaiyur, a village near Karaikudi (Pasu. M. Dt.)

தொடக்கம்

காப்பு

"காஞ்சி தலம்பிரிந்து காந்திமிகு பொன்மயமாய்

நாஞ்சில்மலி சோழ நாட்டகத்தே - வாய்ஞ்சதனி

தஞ்சையிற் கொன் காமாட்சி தண்டமிழின் மாலைக்கே

வஞ்சமிலா வாக்கு வரும்.

வேதம் புரப்பதுவே மேன்மக்கள் நோக்கமென
நாதம் வளர்த்தருளும் ஞானமுனி - சீதமலர்
ஆ....ச் சங்கரர்தம் அன்புக் குரியதய
....முன்னின் றருள்".

முடிவு

வாழ்த்து

"தொண்டைமண் டலம்வாழி காஞ்சிமா நகர்வாழி
தூய்மைமலி காமாட்சியின்
சுடர்மேனி வீற்றிருந் தருள்கோயில் வாழியே
சொற் செல்வர் அத்துவிதமாம்
பண்டைமதம் நாட்டவரு சங்கரா சாரியர்
பரம்பரைத் தருமம் வாழி
பண்புமிகு மக்கள்வாழ் சோழமண் டலம்வாழி
பயிர்மல்கு தஞ்சை வாழி
கெண்டைவிழி கொண்டருளு சொன்னகா மாட்சியாம்
கிரியைஞா னசக்தி வாழி
கேவலக் காட்சிதரு குருமூர்த்தி யாகவரு
கிரீடமணி இறைவி வாழி
தண்டைபரி புரமணியு மன்னைதாள் மலர்வாழி
தண்டமிழ் மாலை வாழி
தமிழ்வாழி ஆரியமும் வாழி வேதமும்
தமிழ்மறையும் வாழி நன்றே".

பின்னணியுரை:

20.1.70. பூர்த்தி. கோட்டையூர்

(குறிப்பு): இந்நூல், 'சுவர்ண காமாட்சி திருமாலை' எனும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண் காமாட்சியின் கருணைச் சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. தஞ்சை மாநகரத்தில் வடமேற்குத் திசைக்குத் தெய்வமாக விளங்கும் சுவர்ண காமாட்சியின் பெருமைகளை ஆசிரியர் திரு. நா. கனகராசன் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலும் 'சொன்னகா மாட்சியொடு மன்னமன மாட்சியருள் சொன்னகா மாட்சியுமையே' என்று முடிகிறது முழுவதும் உள்ளது. மொத்தம் நூற்றெட்டுப்பாடல்கள் உள்ளன.

R.8443

பருவத வர்த்தனிமாலை

PARUVATA VARTTANI MALAI

Pages : 158-186
Lines 32 on a Page
Extent 750 granthas
Complete
Parvatha Varthini of Rameswaram has been invoked; Invoker, N. Kanagaraja Iyer. Invoked at Kattaiyur, noted before

தொடக்கம்

விநாயகன்

"தத்துவமே யாய்ந்துதெளி சான்றோர் மனத்துறையும்
சத்துவமே யானபரா சக்தியினைச் - சித்தம்
பருவத வர்த்தனியைப் பாடுதமிழ் மாலை
தருவதருள் வேழமுகன் தந்து".

கலைமகள்

"மலைவளரும் காதலிப்பெண் மாலைதமிழ் யாக்கக்
கலைமகளைப் போற்றியருள் காண்பேம் - நிலைமைகொளும்
வாக்கும் அருளி மனத்தும் புகுந்தருளிக்
காக்குமவன் என்றுறுதி கண்டு".

முடிவு

"வாழிய சேது பதிக்கு மதிப்பருள் வாரிதி சார்துறையே
வாழிய இராம பிரான்புரி பூசனை வாய்த்தருள் சிவபதமே
வாழிய சாவி மணலில் அமைத்தருள் மன்னிய திருவுருவே
வாழிய மாருதி கயில் யெடுத்துவரப் பெறுமருளுருவே
வாழிய கங்கை குளிப்பதுவேண்டிய வள்ளல் திருத்தனியே
வாழிய பருவத வர்த்தனி காதலின் வாழ்வு விளங்குறவே
வாழிய வேதியர் வேதமும் நால்வர் வழங்கிய வேதமுமே
வாழிய பர்வத வர்த்தனி மார்பணி மாலிகை தமிழுடனே".

பின்னணியுரை:

இப்பிரபந்தம் இராமநாதபுரம் நாட்டில் உள்ள கோட்டையூரில் சிவலாயத்தின் முன்புள்ள அகரத்தில் நடராசன் இருந்த காலத்தில் தொடங்கி முடிந்தது. சௌமிய வருடம் தைமாதம் கக ஆம்நாள் சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு இது இங்கு நிறைவேறியது.

(குறிப்பு): இந்நூல், 'பருவத வர்த்தனிமாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண், இராமேசுவரத்தில் உள்ள பருவத வர்த்தனியின் பண்புகளும், அருட்கொடையும் பாடப்பட்டுள்ளன. சுவடியில் உள்ள பாடல்களைப் படித்துணருவதே அருனமாயாகும் வண்ணம் எழுத்துக்கள் மறைந்து காணப்படுகின்றன. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8444

மங்களாம்பிகை மாலை

MANGALAMBIHAI MALAI

Pages : 187-215
Lines 32 on a Page
Extent 450 granthas
Complete
Praise on Mangalambikai of Kumbakonam is the theme here; This piece was written in 1970 by N. Kanagaraja Iyer. Written at Kottaiur, mentioned above.

தொடக்கம்

காப்பு

"திருக்குடந்தைக் கும்பலிங்கண் தேவகுலம் வாழ்வாள்
கருக்குடைந்த சிற்றுயிரைக் காப்பாள் - அருட்கடைந்த
பாமாலை வேழமுகன் பார்த்தருள நாவில்வரும்
தேமாலை யாகத் திகழ்ந்து".

வேண்டுகோள்

"கும்பலிங்கன் அரசுபுரி கும்ப கோணம்
குடியரசு வந்தபின்பு கொடுத்த வாழ்வில்
எம்பதங்கள் மாறியதாய் யானும் தொண்டை
இறையாண்ட புதுக்கோட்டை யிகந்து போந்தேன்
கம்பர்தந்த தமிழ்ச்செய்யுள் கலைபோல் ஓதல்
கல்லூரிப் பணிபுரியும் கடன்மை பூண்டேன்
செம்பதங்கள் இருமையுள தேவன் தேவி
திருவருளால் ஓராண்டு சிறப்புற் றேனே".

முடிவு

"வாரியரோ தமிழ்மணக்கும் வளவர் நாடு
வாழியரோ மறைமுழங்கும் வாழ்வாம் கோயில்
வாழியரோ தேவாரம் வழுத்தும் தொண்டர்
வாழியரோ வாசகத்தை மறவா நாவார்
வாழியரோ நான்குமறை வளரும் நாவார்
வாழியரோ பக்திநெறி வாழி ஞானம்
வாழியரோ காஞ்சிமடம் வாழும் ஞானி
வாழியரோ குருமரபு மறவா தோரே.

குரவர்குலம் நிலைபெற்ற கும்ப கோணம்
குறைவற்றிங் கறிவருளிக் குலவி வாழ்க
தரவமையும் இதயமுள தாயே தந்தை
தரித்திருக்கும் திருக்கோயில் தலமே வாழ்க
பரவலரும் புகழ்படைத்துப் பழமை சான்ற
பண்டிதர்கள் மகாசங்கம் பயின்று வாழ்க
இரவறியா நன்மக்கள் இறையைப் போற்றி
இறை கொள்ளும் திருநகரம் என்றும் வாழ்க".

பின்னணியுரை:

சௌமிய வருடம் தைமாதம் சுங திங்கட்கிழமை குடியரசுத் திருநாள் காலை 5 மணி பூர்த்தியானது. கோட்டையூர் சிவன்கோயில் அக்கிரகாரம் நடராசன் இல்லம் பூர்த்தி தினம். 26.1.70.

(குறிப்பு): இந்நூல், 'மங்களாம்பிகை மாலை' என்னும் பெயரினைப் பெற்றிருக்கிறது. இதன்கண் திருக்குடந்தை எனும் கும்பகோணத்தில் வீற்றிருந்தருளும் மங்களாம்பிகையின் பெருமைகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. பாமரரைப் பண்டிதராய்ப் பயிற்றும் நாடாம் குடந்தையிலோ கோயில் கொண்டுள்ள மங்களநாயகியின் பாதங்களை வணங்கி வாழ்த்தி அருள் பெறுக என்று ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. பாடியுள்ளார். முழுவதும் உள்ளது.

R.8445

கமலாம்பிகை திருமாலை

KAMALAMBIKAI THIRUMALAI

Pages : 216-243
Lines 32 on a Page
Extent 400 granthas
Complete
Kamalambikai is a goddess at Tiruvarur. Author N. Kanagaraja Iyer takes delight in singing this goddess for better life. Place of the writing of this book is Kottaiyur. We have 111 stanzas here.

தொடக்கம்

காப்பு

"கமலைத் தியாகன் கழல்மலரைப் போற்றிக்
கமலைப் பிராட்டி கழற்கே - தமிழிற்
திருமாலை சாத்துவேன் சித்தி விளைக்கும்
ஒருமாவை நெஞ்சத்து ளுய்த்து.

வளவர்குல மனுவேந்தன் மனத்தில் செம்மை
மறைமறைந்த தியாகேசன் மதித்த தாகும்

அளவறித லரிதாய அறத்தைக் காக்க்
அரசகுலத் தொடுபெற்றை ஆவின் கன்று

களமரியும் தேர்க்காலிற் கரையக் கண்டு
கற்றாவே மணியடிக்கக் கடவு ளாணை
இளமதலை யுயிர்போக்கி இரத மோட்டி
இறைசெய்த திருவாரூர்க் கிணையுமுண்டோ".

முடிவு

"தம்பிரான் தொழும்பர் தமிழ்ப்பெருந் தலைவர்
சத்திய வாக்கு வாழியவே
எம்பிரான் அடியார் யானடியேன்
என்றருள் பதிகம் வாழியவே
நம்பிரான் என்றே ஞானியர் பணியும்
நாதவன் மீகன் வாழியவே
எம்பிரான் அவனே என்புகல் இறைவி
எழிற்கம் லாம்பிகை வாழி".

பின்னணியுரை:

இராமநாதபுரம் மாவட்டம் கோட்டையூர்ச் சிவன்கோயில் அக்கிரகாரத்தில் நேற்றுத் தொடங்கி இன்று முடிந்தது.

(குறிப்பு): இந்நூல், 'கமலாம்பிகை மாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண் திருவாரூர் கமலாம்பிகையின் கருணைச் சிறப்பு பாடப்பட்டுள்ளது. அவ்வூரில் கோயில் கொண்டு அடியவர்க்கு அருள்புரியும் அம்பிகையை ஆசிரியர், திரு. நா. கனகராசன் அவர்கள் பாடியுள்ளார். முழுவதும் உள்ளது. மொத்தம் 111 பாடல்கள் உள்ளன.

R.8446

மூகாம்பிகை திருமாலை

MUKAMBIHAI THIRUMALAI

Pages : 244-259
Lines 30 on a Page
Extent
Complete
A garland of verses on Mukambihai of Tirukkollur. Garland has been prepared by N. Kanagaraja Iyer. Total verses, 109.

தொடக்கம்

காப்பு

"சக்திசிவம் வேறின்மை சாற்றவே தோன்றியவன்
முத்திதரும் வாக்கருளும் மூர்த்தத்தான் - பக்தியுளார்
பேறு பெறுமகாம் பிகைமாலை பாடுதற்கு
நீறுதரும் ஆனைமுகன் நின்று"

வேண்டுகோள்

"முகரைப் புலவர் ஆக்கி முத்தியும் அருளும் செல்வி
ஏகபைத் தியமே யுண்டேன் றெனிதிலே ஞான நல்கி
மாகசித் தியரை நோக்கி மண்ணகம் காத்து வாழ்வாள்
மூகவம் பிகையைப் பாட முயலுவம் தமிழால் நன்றே"

முடிவு

"சந்தேகம் மறைத்தபொருள் தருகின்றாய் அடியவர்க்கே
பந்தோடு பயில்விரலாற் பழமறையைப் புரட்டுகின்றாய்
சந்தோடு மணந்தபுயத் தாயாக நினைக்ககாணேம்
அந்தோவன் றுரையேமே அருளுரு மூகாம்பிகையே".
(க0அ)

வாழ்த்து

"வாழிதிருக் கொல்லூரே மனந்துரயார் வழியாடே
வாழிவனம் குறிஞ்சிநிலம் வாழிசிறு திருத்தனியே
வாழிதிரு வருள்வளத்தை வழங்குறு மூகாம்பிகையே
வாழிஅவள் திருவடியை மனத்தேற்றும் அன்பர்களே".

பின்னணியுரை:

சௌமிய வருடம் தைமாதம் 15ஆம் தேதி புதன் கிழமை
காலை 8.30 மணிக்கு இப்பிரபந்தம் பூர்த்தியாயிற்று.

(குறிப்பு): இந்நூல், 'மூகாம்பிகை திருமாலை' எனும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண் திருக்கொல்லூரில் கோயிற் கொண்டிருக்கும் மூகாம்பிகையின் சிறப்புகள் பாடப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது. மொத்தம் 109 பாடல்கள் உள்ளன.

R.8447

புண்டரீக வல்லி திருமாலை

PUNDARIKA VALLI THIRUMALAI

Pages : 260-310
Lines 34 on a Page
Extent 650 granthas
Complete

Garland of elegant verses on Pundarikavalli of Puliyur (near Chidambaram). Composer, N. Kanagaraja Iyer. Total verses 109.

தொடக்கம்

காப்பு

“திருக்குருகை நம்மாழ்வார் வேசடியைப் போற்று
உருக்குருகும் பைந்தமிழால் உள்ளம் - பெருக்கிவரும்
புண்டரிக வல்லி புகழ்மாலை போதுகின்றேன்
கண்டருள்க தேவி கனிந்து”

வேண்டுகோள்

“ஆடுமரன் பொன்மயமாம் அம்பலத்தே விளங்க
ஆட்டத்தை நோக்குவதே அமைவென்று புகுந்து
பாடுபுகழ் ஆழ்வார்கள் பாசுரங்கள் விழைந்து
பழமைபொலி திருப்பள்ளி படைகொண்ட பெருமாள்
நீடுபுகழ் புண்டரிக நிறைநகராய் இருப்பாள்
நெஞ்சுருகு மன்பினொடு நேருவேன் தேவி
கூடுசெல் அருள்கின்ற கோயிலகத் துறையக்
கும்பிடும்போ தடியேர்க்கும் கொடுத்துவைத்த துளதே”

வாழ்த்து

முடிவு

“தெய்வமொன் றுண்டன்று தெளிகின்ற மெய்யன்பர்
திசையெட்டும் நன்கு வாழ்க

தெய்வமிகழ் கின்றவரும் அத்தெய்வ மெய்யருள்
செறிந்துபல வாண்டு வாழ்க
சைவமென்றே புகல்க வைணவம் கைக்கொள்க
சத்தியத் தெய்வம் வாழ்க
சத்துசித் தானந்த மயமான தெய்வமது
தன்னாற்கும் காட்டி வாழ்க
மெய்யவுரு செஞ்சினார் தேடியுணர் தெய்வத்தின்
மெய்த்தன்மை என்றும் வாழ்க
விண்ணுலகு மண்ணுலகு பலவுலகுளாய்
விளங்கு பேரின்பம் வாழ்க
பொய்ப்புகலு நெஞ்சிலும் புண்டரிக வல்லியருள்
பொங்கிப் பரந்து வாழ்க
புண்டரிக வல்லிதிரு மாலையாம் புதுமையும்
பூமியிடை வாழி நன்றே"

பின்னணியுரை :

சௌமிய வருடம் தைமாதம் 18 சனிக்கிழமை காலை 4.30 பிரபந்தம்பூர்த்தி. கிருட்ண சேவை.

(குறிப்பு): இந்நூல், 'புண்டரீக வல்லி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதற்கண் புண்டரீக மலர்போன்ற பூம்பாதம் உடையவளைப் புகுந்து பாடப்பட்டுள்ளது. பிதம்பரத்திற்கருகிலுள்ள 'புலியூர்' எனும் பதியில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் புண்டிரீக வல்லிக்கு, ஆசிரியர் திரு. நா. கனகராசன் புகழ்மாலை சூட்டுகின்றார். மொத்தம் வாழ்த்துப் பாடல் ஒன்றையும் சேர்த்து 109 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8448

அரங்கநாயகி மாலை

ARANGANAYAKI MALAI

Pages : 311-326
Lines 30 on a Page
Extent 225 granthas
Complete
All these 109 verses are in praise of Aranganayaki of Srirangam.
Praised by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"அரங்கத்தின் அம்மன் அடித்தொண்டு பூண்டாள்
அரங்கத்தின் நாயகி ஆவாள் - தரங்கத்தில்
வந்ததிரு பாதம் வழுத்தும் திருமாலை
நந்தமனந் தோன்றுமால் நன்கு

ஆழ்வார் பதின்மர் அடிமலரைப் போற்றுவோம்
வாழ்வார் திருவரங்கம் வாழ்பரமன் - வாழ்வாம்
திருவரங்க நாயகியார் சேவடியைப் போற்றி
கருவரங்கம் நீங்கல் கழன்று"

முடிவு

"கோடிதிரு நாமமொடு குங்குமமே யருச்சித்தோம்
ஆடிமதி பூரம்வரும் ஆண்டாளின் அருள்துனிந்தேம்
நாடிவரு மடியார்க்கே நல்காமை அறியாயே
தேடிவரு பேறுதரும் திருவரங்க நாயகியே"

வாழ்த்து

“அழகுபொனி மணவாளன் அருள்மழையே வாழியரோ
விழலிமலி திருவரங்க மெய்த்தீருவும் வாழியரோ
குழவியர் போல் வேண்டுகின்ற குழுக்கள்நலம் வாழியரோ
மழவிளமை மாருத மலர்போலும் வாழியரோ”

(குறிப்பு): இந்நூல், ‘அரங்கநாயகி மாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருவரங்கம் பெரியகோயில் ‘அரங்க நாயகி யின்’ அருட்சிறப்பு பாடப்பட்டுள்ளது. ஆசிரியர் நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அரங்கநாதனின் காதலி அரங்கநாயகிக்கு பாமாலை சூட்டி மகிழ்கின்றார். முழுவதும் உள்ளது. மொத்தம் வாழ்த்துப்பா ஒன்றுடன் 109 பாடல்கள் உள்ளன.

R.8449

மதுரவல்லி திருமாலை

MADURAVALLI THIRUMALAI

Pages : 327-353
Lines 32 on a Page
Extent 370 granthas
Complete
Maduravalli of Madura City is praised here; Poet spent 108 songs to achieve this. Poet, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

“மதுரவல்லி பாதமலர் வாழ்த்தி வணங்கி
மதுரமய மாலை வனைவேன் - மதுரைநகர்
தாயாகக் கொண்ட தமிழ்ச்செல்வன் நம்மாழ்வார்
வாயால் மனத்தால் வர”

பிரபந்தம்

"மதுரவல்லி பாதமலர் வாழ்த்தி வணங்கி
மதுரமய மாலை வினைவேன் - மதுரைநகர்
தாயாக் கொண்ட தமிழ்ச்செல்வன் நம்மாழ்வார்
வாயால் மனத்தால் வர"

பிரபந்தம்

விதுவணியும் சடைமுடியோன் விழவயரும் வீதிபல
விளங்கு மூதூர்
மதுமயமாம் கவளசக்தி வாய்த்தபல புலவர் உறை
மதுரை மூதூர்
அதுவிதுவென் றருமறைகள் தேடுபத மிரண்டுடைய
அழகன் தேவி
எதுபொருளென் றறிவிக்கும் மதுரவல்லி திருவடிகள்
இறைஞ்சு வோமே". (க)

முடிவு

"எப்பொழுதும் என்னுளத்தே யிருந்தருள்க திருக்கூடல்
இறைவன் எம்மான்
எப்பொழுதும் அவர்குரிய மதுரவல்லி அடியேனை
ஏற்பா ளாக
எப்போதும் மதுரைநகர் என்குறைகள் மதியாதே
இனிமை செய்க
எப்பொழுதும் உளக்கோயில் தூய்தாக விடுக்கவென
இறைஞ்சு வேனே

சாமமறை இசைவிரும்பு கூடலழ கப்பெருமாள்

தமிழும் துய்ப்பான்

நாமசபம் செய்துமே கலியுகத்தில் முக்திநெறி

ஞாகன மார்க்கம்

தாமம்நிலை பெறுமார்பட் தனக்குரிய தாமமெனத்

தகவாய் ஏற்ற

பூமவல்லி தாமவல்லி மதுரவல்லி அறம் தலைமேற்

புனைவோம் யாமே"

(குறிப்பு): இந்நூல், 'மதுரவல்லி திருமாலை' என்னும் பெயரின் உடையது. இதன்கண், மதுரை கூடலழகன் தலைவியின் புகழ்பாடப்பட்டுள்ளது. மதுரைநகர் கோயில் கொண்டு அடியவர்க்கு அருள்வழங்கும் அம்மையாம் மதுரவல்லிக்கு ஆசிரியர், நா. கனகராசன், பாமாலை சூட்டி மகிழ்கின்றார். மொத்தம் 108 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8450

நாமகிரி திருமாலை

NAMAKIRI TIRUMALAI

Pages : 354-369
Lines 30 on a Page
Extent 270 granthas
Complete
Namakkal Narasingswami is the theme here; For the elucidation of the theme poet N. Kanagaraja Iyer has written 111 songs.

தொடக்கம்

"நம்மாழ்வார் வாக்கருள்க நாவருள்க நோக்கருள்க

நம்மாழ்வார் நாரசிங்கன் நாமகிரி - தம்மால்

இயலாத தொன்றில்லை எம்முள்ளத் தேறி

மயலாத நெஞ்சருள்க வந்து

நாமக்கல் நாரசிங்கன் நன்கமரும் பேறுபெரும்
ஏமக்கல் அஞ்சனைசெய் எதிர்நோக்கு மாட்சியுன
சாமக்கல் வேதத்தின் தத்துவமே விளக்குங்கல்
சேமக்கல் நாமகிரி தேவியரும் வேண்டுவமே"

முடிவு

"வந்தனையே புரிகின்றேன், வழுத்துரைத்தேன்
வாழ்த்துரைத்தே
சிந்தனையே நாமகிரி திருவடிகட் குரிதாக்கி
மந்தனையே கரையேற்ற வருகவென வேண்டுகின்றேன்
பந்தனையே யினியணுகாப் பரமபதம் வேண்டுவனே".

வாழ்த்து

"நாமக்கல் வாழ்கின்ற நாரசிங்கன் அருள்வாழ்க
நாமக்கல் கோயில்கொளும் நாமகிரி அருள்வாழ்க
நாமக்கல் பணியன்பர் நற்குலங்கள் தனிவாழ்க
நாமக்கல் நாமகிரி நன்மாலை வாழியவே

வாழியரோ நாரசிங்கன் வள்ளல்திரு வடிமலர
வாழியரோ நாமகிரி மாதேவி திருவடிகள்
வாழியரோ நாமகிரி மகிழைபுகல் திருமாலை
வாழியரோ நாமகிரி மனம்புகுந்த தொண்டர்களே"

பின்னணியுரை:

சௌமிய தை உக செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிறைவேறியது.

(குறிப்பு): இந்நூல், 'நாமகிரி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருமாலின் புகழ் உரைக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் நாரசிங்கனின் அருள்வேண்டிப் பாமாலை சூட்டுகின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன். மொத்தம் 111 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8451

நாகை நீலாயதாட்சி திருமாலை

NAGAI NILAYATHATCHI TIRUMALAI

Pages : 370-384
Lines 30 on a Page
Extent 255 granthas
Complete
Nilayathatchi of Nagappattinam (Tanjore Dt.) has been extolled by N. Kanagaraja Iyer. We have as much as 109 stanzas.

தொடக்கம்

"நீலாய தாட்சி நிலைகொள் திருநாகை
மாலாய நெஞ்சால் வருமாலை - வேலாளும்
வேந்தன் அருளும் விநாயகன் மெய்யருளும்
சார்ந்து வளரும் தமிழ்.

கடல்சார் திருநாகைக் காரோணம் வாழும்
மிடல்சார் சிவனருளை வேண்டி - உடல்சார்ந்த
நீலாய தாட்சி நினையும் திருமாலை
மாலாய நெஞ்சில் வரும்"

முடிவு

"ஒருகண மேனுநின்னை உறமுற நினையே மேனும்
வருவன வாழ்வுநின்றன மலர்விழி யருளே யென்போம்
தருவன கரங்கள் தந்தால் தரணியே வாழும்தாயே
உருவின உருவிலாத உவப்பவே அருள்செய் வாயே" (கo அ)

நாகைபட் டினத்தில்வாழும் நாதகா ரோணன் வாழ்க
நாகைபட் டினத்துவாழும் நம்பிகைச் செல்வி வாழ்க
நாகைநீ லாயதாட்சி நறுமலர்ப் பாதம் வாழ்க
நாகைநீ லாயதாட்சி நல்கிய மாலை வாழ்க"

பின்னணியுரை:

சௌமிய தை மாதம் உங வியாழன் காலை 4.30
இப்பிரபந்தம் பூர் த்தியாயிற்று.

(குறிப்பு): இந்நூல், 'நாகை நீலாயதாட்சி திருமாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண், தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகையில் கோயில் கொண்டு, வருகின்ற அடியவர்க்கு அருள்கின்ற தேவியாம் 'நீலாயதாட்சிக்குத் திருமாலை ஒன்றைப் பாமாலையால் சூட்டுகின்றார் ஆசிரியர். திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R. 8452

சௌந்தரநாயகி மாலை

SOUNDARANAYAKI MALAI

Pages : 385-400
Lines 30 on a Page
Extent 240 granthas
Complete.
Elaborate eulogy in 109 stanzas on Soundaranayaki of Tiruppuvanam (near Madura) by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

“வேதப் பொருளை விளக்கும் விநாயகனே
போதப் பொருளைப் பொருத்துகவே - காதலால்
பூவணத்தான் தேவிக்குப் பொற்புமலி மாலைதரும்
நாவணத்தை நெஞ்சுவந்து நல்கு”.

வேண்டுகோள்

“வீரரா கவனைப் போற்றி வேதநூல் பயின்று வாழ்ந்த
தீரராம் முன்னோர் அன்று தேவையை வணங்கு நோக்கால்
பூரண அருளான் வாழும் பூவணம் புகுந்துபல் லாண்டு
ஆரண முழங்கி வாழ்ந்தார் அவர்வழி வந்தேன் யானே”

முடிவு

“திருத்தக்கத் தேவங்ன என்பேன் திருப்பூ வணத்தான் தன்னை
உருத்தக்க விறைவி யென்பேன் உடனுறை அழகி தன்னை
வெறுத்தக்க வாழ்வுள் வீழா வெற்றியாய் காணும் வண்ணம்
தருத்தக்க கரத்தை நீட்டித் தருகயே ரின்பம் தானே” (க0அ)

வாழ்த்து

“பூரண நாதன் வாழ்க பூவணத் திறைவி வாழ்க
நாவண மளித்த வேத நாயகன் இறைவி வாழ்க
கோவணம் மாற்றி விடு கொடுத்தருள் பாதம் வாழ்க
பூவண மாலை வாழ்க புலவரே புகழு மாரே”.

பின்னணியுரை:

சௌமிய தை மாதம் உச ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்றரை மணிக்கு நிறைவேறியது.

(குறிப்பு): இந்நூல், 'சௌந்தர நாயகி மாலை' எனும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண், மதுரைக்கு அருகிலுள்ள திருப்பூவணத்தில் வீற்றிருந்து அருளும் சௌந்தரநாயகின் கருணைச் சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. திருப்பூவண நாதனின் நாயகியாம் சௌந்தர நாயகிக்கு, பாமலர்களால் மாலைகட்டிச் சூட்டுகின்றார். ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8453

சொக்கநாயகி மாலை

CHOKKANAYAKI MALAI

Pages : 401-422
Lines 30 on a Page
Extent 365 granthas
Complete
A pious book on Sokkanayaki of Tiruvanmiyur (Madras), Author, N. Kanagaraja Iyer. Period, 20th Century.

தொடக்கம்

காப்பு

"வான்மீகி மாமுனிவர் வாழ்த்திவழி பட்டசிவன்
வான்மியூர் வாழ்கின்ற வன்மீகன் - தான்மகிழும்
தேவிசொக்க நாயகியார் சேவக்குப் பூத்தூல
நாவின்நிற்க வேழமுகன் நன்கு"

வேண்டுகோள்

“தொடையாறு தோளுடையான் தோகைமயில்
வழிபட்ட துணைத்தா ளுள்ளாள்
இடையாறு கோயில்கொளும் திருமாலை
நாயகனை இறைஞ்சி யோர்நாள்
அடையாறு நடந்துதிரு வான்மியூர்
புகுந்தேனா ஆங்கப் போது
கடையாறு கங்கையினான் வன்மீக
நாதனையே தரிசித் தேனே”

முடிவு

“சொக்கநா யகனே வான்மீக முனிவன் துதிபெற வான்மியூர்
உறைவார்
சொக்கநா யகனே மறைகளுட் பொருளைத் துளக்கினர்
முனிகணத் தினுக்கே
சொக்கநா யகனே நால்வர்பாட் டிசைக்குச் சுருதியின்
மதிப்பினை யளித்தார்
சொக்கநா யகனே சொக்கநா யகியின் துணைவனாய்
விளங்கினர் உலகே”.

வாழ்த்து

“தொண்டைமண் டலமே தொண்டராற் சிறந்து
தூய்மையு மலிந்து வாழியவே
தண்டையே சதங்கை சிலம்பொடு மணியும்
சானகி கற்பு வாழியவே

இண்டையே தொடையல் மாலையோ டணியும்

இறைவிவான் மியூரில் வாழியவே

பண்டையோர் புகழ்ந்த வான்மியூர்த் தலைவன்

பத்தினியோடும் வாழியவே".

பின்னணியுரை:

சௌமிய தை 25 சனிக்கிழமை இரவு 8 மணி பூர்த்தியாயது.

(குறிப்பு): இந்நூல், 'சொக்கநாயகி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், சென்னைக்கு அண்மையிள்ள திரவான்மியூரில் கோயில் கொண்டிலங்கும் 'சொக்கநாயகி'யின் பெருமைகள் பாராட்டப்பட்டுள்ளன. சொக்கநாதனின் மனைவிக்கு ஆசிரியர் திரு. நா. கனகராசன் பாமாலை தந்து பரவுகின்றார். முழுவதும் உள்ளது. மொத்தம், வாழ்த்துப்பாடல் ஒன்றோடு 109 பாடல்கள் உள்ளன.

R.8454

அறம்வளர்த்த நாயகி மாலை

ARAMVALARTHTHA NAYAKI MALAI

Pages : 423-437
Lines 30 on a Page
Extent 250 granthas
Complete
On the north bank of the river Kaveri is situated the village Aiyaru. Aramva lartha Nayaki of this Aiyaru has been praised here by N. Kanagaraja Iyer in verses.

தொடக்கம்

காப்பு

"ஐயா றுடையான் அருளால் அறம்வளர்த்த

செய்யாள் திருவுருவைச் சிந்தித்து - மெய்யாக

யாக்கும் தமிழ்மாலைக் கேரம்பன் ஆரருளால்
வாக்கும் வளமும் வரும்"

பிரபந்தம்

"ஐயா றுடையான் அடிமலர்ச் சேவை அருள்புரிவாய்
நெய்யால் நிறைதல் சோற்றுத் துறையோடு நேருதியே
செய்யா வினைபசெய்த தீயே னெனினும் செகதலத்தே
நையா திருக்க வருள்க அறம்வளர் நாயகியே"

முடிவு

"திருவையா றென்ற சிவபுரம் வாழும் சிவதயிதே
கருவையா மெய்தா தொருபெரும் பேரின்பம் காண்பதற்கே
தருவையா மெய்யருள் யாரும் எதிர்த்துத் தடுப்பதிலை
வருவையா யென்பா யறைவி தருமசம் வர்த்தனியே"

வாழ்த்து

"வாழிய திருவை யாறு வாழிய இறைவன் பாதம்
வாழிய இறைவி பாதம் வாழிய திருவார் கோயில்
வாழிய பொன்னி யாதி வளந்திரும் திங்கள் ஐந்தும்
வாழிய அருளின் செல்வம் வழுத்திய மாலை தானே

வாழி தருமசம் வர்த்தனி தாண்மலர் மாநிலத்தே
வாழி தருமசம் வர்த்தனி மாலை வனப்புறவே
வாழி தருமசம் வர்த்தன சிந்தை மனமுறவே
வாழி தருமசம் வர்த்தன மார்க்கம் மகிதலத்தே"

பின்னணியுரை:

சௌமிய வருடம் தைமாதம் 27ஆம் நாள் சோமவாரம் காலை 5 மணிக்கு கோட்டையூரில் பூர்த்தியாயற்று.

முடிவுரை:

இந்நூல், 'அறம் வளர்த்த நாயகி மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், பொய்யா வளம்தரும் காவிரியின் வடக ரையில் பூவிரிக்கும் சோலை நிறை ஐயாற்றுப்பதியில் கோயில் கொண்டு வருவோரின் குறைகளையும் அறம்வளர்த்த நாயகியின் பெருமைகள் கூறப்படுகின்றன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8455

ஆனந்தவல்லி திருமாலை

ANANDAVALLI THIRUMALAI

Pages : 438 - 452
Lines 32 on a Page
Extent 300 granthas
Complete
Ananthavalli longs for the love of Somanatha of Madura. This is the tenor of this treatise of verses. By N. Kanagaraja, M.A.

தொடக்கம்

காப்பு

"வானர வீரர் வழுத்தும் திருத்தலமாம்
வானர வீர மதுரைக்கண் - தானதவம்
ஆக்கி வளர்த்தருளும் ஆனந்த வல்லிதமிழ்
வாக்கின் வரும்நன்கு மலர்ந்து"

சோமநாதன்

"உமையோ டொருங்குறையு முண்மை விளக்கி
நமையா ளருட்சோம நாதன் - இமயவல்லி
மாதாகு மானந்த வல்லியொடு வந்தருள்க
பாதாள விந்தம் பதித்து"

முடிவு

"வானர வீரர் வாழ்த்து மதுரைவாழ் சோம நாதன்
வானவர் அவரே யென்று மனமகிழ் கழுத்தே சொற்றான்
தேனென மொழியே பேசும் தேவியஃ துண்மை யென்றே
ஆனை மர்ந்து நின்றான் ஆனந்த வல்லி தானே"

வாழ்த்து

"வாழிய சோம நாதன் வாழி ஆனந்த வல்லி
வாழிய இளம சேவை வசித்தெழு கலிகள் சேனை
வாழிய கவிகள் செய்த மனநெகிழ் சிவத்தின் பூசை
வாழிய னந்த வல்லி மாலையும் வையக் கண்ணே"

பின்னணியுரை:

சௌமிய தை உஅ மங்களவாரம் மாலை நான்கு மணிக்கு பிரபந்தம் பூர்த்தி.

(குறிப்பு): இந்நூல், 'ஆனந்தவல்லி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மதுரை சோமநாதனின் மனமாய் வாடும்ஆனந்தவல்லியின் அருட்சிறப்பு பாடப்பட்டுள்ளது. 'அதிரசமனங்கொள் தாயார்' ஆனந்தவல்லிக்கு தனது பாடல் எனும்மலரால் மாலை தொடுத்து, அத்திரு மாலையை ஏற்றருள்க என்று இறைவியிடம் வேண்டுகின்றார் ஆசிரியர் திரு, நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R. 8456.

நடுவூர் நாயகி திருமாலை.

NADUVUR NAYAKI THIRUMALAI.

Pages, 453 - 467
Lines, 30 on a Page
Extent, 300 granthas.
Complete.
Naduvur goddess has been invoked by a devottee who is none other than the au thor N. Kanagaraja Iyer. Naduvur (Madurai) is a place where this goodess (na duvur nayaki) resides.

தொடக்கம்:

காப்பு.

"இம்மையிலே நன்மைதரு எம்பெருமான் ஆற்றலுரு
அம்மையே மத்தியபுரி ஆட்சியினுய் செம்மையுறும்
வேழமுகன் நின்கழற்கே மேவும் தமிழ்மாலை
வாழவருள் செய்கவெதிர் வந்து.

ஏமநெறி யெளியோருக் கினிதுனுற வருளவலாய்
சாமமறை தேடிவரும் சரணமுளான் நன்மைதரும்
காமமுளான் வாமமமர் கற்பகமே பொற்கொடியே
மாமதுர வாக்கருள்க மத்தியபுரி நாயகியே

இம்மையிலே யாவருக்கும் ஏற்றநன்மை தருவதுவே
தம்மைமறந் தெனையடையும் தக்கோர்க்கு நான்புரிவ
தெம்மையிலும் அவரென்னை இகவாமை உண்மையெனும்
நம்மையுடை யவன்தலைவி நடுவூரின் நாயகியே".

முடிவு:

"பேரின்பம் வேண்டுவதே பிறப்பின்வரு பெரும்பயனும்
ஓரின்பம் அதுதானே உளவின்பம் அதுதானே
சீரின்பம் அஃதிருக்கச் சிற்றின்பம் வேண்டுதிரோ
நாரின்பம் அறிமினெனன்பன் நடுவூரி னாயகியே". (கoஅ)

வாழ்த்து.

"உலகமெலாம் வார்வுறுக உயிர்களெலாம் வாழ்வுறுக
நலமருளும் சிவபெருமான் நனினபதம் வாழ்வுறுக
வலமருளும் மத்தியபுரி மலர்ப்பதங்கள் வாழ்வுறுக
நலுநடுவூர் நாயகியின் நறுமாலை வாழ்வுறவே".

பின்னணியுரை:

இப்பிரபந்தம் கோட்டையூர் சிவன்கோயில் அகரத்தில் 12 வீட்டில் தொடங்கி புதுவீட்டிலே பூர்த்தியாயிற்கு. கனகலட்சுமி புதிய இல் லம் ஸ்ரீராமநகர் கோட்டையூர் சௌமிய மாசி 'க' வியாழக்கிழ மை பிற்பகல் 3 மணிக்குப் பூர்த்தியாயிற்று.

(குறிப்பு): இந்நூல், 'நடுவூர் நாயகி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மதுரைநகர் நடுவூரில் வீற்றிருந்து அருள் வழ ங்கும் நாயகியின் சிறப்பு பாராட்டப்பட்டுள்ளது. அந்நடுவூர் நாயகிக்குப் பாமாலை ஒன்று சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8457

பரம்பொருள் மாலை

PARAMPORU MALAI

Pages : 5-11
Lines 32 on a Page
Extent 140 granthas
Complete
On 'omnipotent' god; Author N. Kanagaraja Iyer. Form, verse. Period, 20th Century. Contains 51 stanzas.

தொடக்கம்

காப்பு

"பரம்பொருள்மேற் பாடும் பனுவல் பயன்எய்த
வரம் பொருளை நன்கு வழங்கச் - சிரம்பணிநும்
வேழ முகத்து விநாயக மெய்ப்பொருளை
ஆழ மனத்து ளமைத்து"

நூல்

"புகழற் குரியது புனைதற் குரியது போற்றற் குரியதெனா
இகழற் கரியாதை எண்ணற் கரியாதை எய்தற் கரியதனை
அகழற் குரியதை ஆழ்தற் குரியதை அணுகத் துணிவேமே
மகிழத் துணிகுவம் வாழ்த்தத் துணிகுவம் மறைமேற் பொருளினையே"

முடிவு

"மறைப்பொரு ளென்றுநினைப்பவர் ஆயிர மறைகளு மோடுகவே
பொறைப்பொரு ளென்பவர் பொறைமுடி யேறுக பூதியி லாடுகவே

நிறைப்பொரு ளென்பவர் நிறைந்து குறைந்தில நீதி
நினைந்தறுக
இறைப்பொருள் இஃதென இதயமுறப்பெற எய்துக
இவ்வுலகே"
(ருO)

வாழ்த்து

"அரிய மறைப்பொருள் நுண்பொருள் மெய்ப்பொருள்
ஆய்பவர் வாழியவே
பெரிய திறத்தொடு பிரம மெனப்பெறு
பேச்சினர் வாழியவே
உரிய சிறப்புள மெய்பொருள் தத்துவம்
உறுதியின் வாழியவே
கரிய பரம்பொருள் மாலிகை வாழிய
காசினி வாழியவே"

பின்னணியுரை:

முதற்பிரதி 12.2.70. முப்பது செய்யுள் கனகலட்சுமி ஸ்ரீராமநகர் கோட்டையூர்.
இரண்டாம் பிரதி 12.5.70. ஐம்பது செய்யுள் கனகலட்சுமி ஸ்ரீராமநகர் கோட்டையூர்
சாதாரண சித்திரை 26 மங்கல வாரம் பிற்பகல் 2.20 மணி.

(குறிப்பு): இந்நூல், 'பரம்பொருள் மாலை' என்னும் பெயரினை உடையது இதன்கண், எல்லையிலாப் 'பரம்பொருள்' பெருமைகள் பாடப்பட்டுள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் தேவியர் பற்றிய திருமாலைபாடிப் பின்னர் இறைவனைப் பற்றி எழுதத் தொடங்கிய மாலைத் தொகுதியுள் முதற்கண் நிற்பது இதுவேயாகும். முழுவதும் உள்ளது.

R.8458

சொக்கலிங்க மாலை

CHOKKALINGA MALAI

Pages : 12-18
Lines 32 on a Page
Extent 175 granthas
Complete
By the same N. Kanagaraja Iyer. This time on the god Chockalingam of Madura, Number of stanzas, 51.

தொடக்கம்

காப்பு

"கயற்கண்ணி போற்றும் கழல்கொண்ட சொக்கன்
மயற்கண்ணே வாழும் மனத்தேம் - செயற்கண்ணேம்
ஆகம் புரிகவென ஆனைமுகன் ஆறுமுகன்
ஏகத் தருள்வார் இசைத்து"

நூல்

"நாக வாழ்வினான் இந்திரன்றொழும் நாயகப்
பெருந்தெய்வமென்பதோ
பாக வாழ்வினை யங்கயற் கணிபற்ற நல்கிய செல்வ
னென்பதோ
ஏக வாழ்வினை யாமு மெய்தவே எளிதுதோன்றி
வீசனென்பதே
சோக மாகிய பரவமேயருள் சொக்கலிங்கமே
சொக்கலிங்கமே"

முடிவு

"காரணத்துளே காரியத்தினைக் காண்க வென்னவே கழலும்
வேதமே
ஆரணத்துறை ஆழமாய்பவர் ஆயிரத்திலே யாவர் ஒருவரே
நாரணற்கருள் நம்பன் எம்பிரான் ஞானயோகமே நல்க
வேண்டுவேம்
தோரணத்தெழில் தோன்று மாலவாய்ச் சொக்கலிங்கமே
சொக்கலிங்கமே"
(ருO)

வாழ்த்து

"கடம்பன் வார்கவே கரிமுகத்தனும்
கடம்ப மாவனக் கடவுள் வாழ்கவே
நடம்பயின்றருள் நம்பன் வாழ்கவே
ஞானயோகியர் நன்கு வாழ்கவே
இடம்பயின்றுறை இறைவி வாழ்கவே
இறைவி செய்யகோல் இனிதுவாழ்கவே
மடம் புகுந்துறை மனமும் வாழ்கவே
மனத்து ளேறிய வள்ளல் வார்கவே"

பின்னணியுரை:

முதற்பிரதி 15.2.70. கனகலட்சுமி, ஸ்ரீராமநகர் கோட்டையூர், இராமநாதபுரம் மாவட்டம்.

இரண்டாம் பிரதி 13.5.76 சாதாரண வருடம் சித்திரை மாதம் 30. புதன்கிழமை கனகலட்சுமி ஸ்ரீராமநகர், கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'சொக்கலிங்க மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், கயற்கண்ணியின் காதலனும், மன்னுயிரின் காதலனுமாகிய; சொக்கலிங்கனின் பெருமை சொல்லப்பட்டு உள்ளது. இறைவனின் பெருமையை எடுத்துரைக்கப் புகுந்த ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் முதற்கண் 'சொக்கலிங்கன்' எனப் பெயர்கொண்ட தலத்தினை எடுத்துக்கொண்டார். பாடல்களில் இறைவனின் பண்புகளும், திருவிளையாடல்களும் பவனி வருகின்றன. முழுவதும் உள்ளது. மொத்தம் 51 பாடல்கள் உள்ளன.

R.8459

இம்மையில் நன்மை தருவான்மாலை

IMMAIYIL NANMAI THARUVANMALAI

Pages : 19-41
Lines 24 on a Page
Extent 250 granthas
Complete
"Chockalingam of Madura will shower blessings even in this present life" - Belief of the author N. Kanagaraja Iyer which has been expressed in verses. Period, 1970.

தொடக்கம்

காப்பு

"சுந்தர பாண்டியனாச் சொக்கலிங்கன் பூசைசெய்த
சந்திர சேகர சங்கரன் - எந்தைபிரான்
இம்மையிலே நன்மைதரும் ஈசன் திருமாலை
செம்மைசெயும் வேழமுகத் தேவு

மெய்ப்பொருளை யின்னதென நன்குணரு நாட்டமொடு
மேதினியில் வாழ்வு கண்டோம்
மெய்யற்ற பொருள்பலவும் நமதுள்ள மைம்பொறிகள்
வீழ்ந்தவழி போந் தறிவோம்

எப்பொருளை யுணர்வதால் வேறொன்றை யெண்ணவோ
எண்தவோ நினைவெழா தோ
இணையற்ற அப்பொருளை எய்தாது செலும்வாழ்வில்
எப்பயனும் விளைவ தில்லை
முப்பொருளு மாவதது மூன்றுமுறை முடியேறு
முக்கியப் பொருளு மதுவே
முச்சங்கம் வாழ்ந்தகடல் வடமொழிச் சாகரம்
முயன்றுபெற லரியபொருளை
இப்பொரு ளெனத் தெளியு மெய்யறிவு குருவருளின்
எய்தியேயுய் திபெறுவோம்
இம்மையினி னன்மைதரு மிறைவனது திருவருளை
எய்துவோம் இப்பிறவியோ" (க)

முடிவு

வாழ்த்து

"வாழிதிரு வாலவாய் மதுரையம் பதிகூடல்
வாழிய கடம்ப வனமே
வாழியந் நகரிலே அரசாண்ட மாண்புமிகு
வழுதியர் குலத்தி னறமே
வாழியம் மரபிலே தரத்தினால் வேள்வியால்
மலைத்ததுவச மன்ன னெய்தும்
வாழிதிரு மகளாக வள்ளிவரு செல்வமே
வாழ்வருள்கயற் கண்ணியே
வாழிநா னாகவே வந்தவனை வேட்டருளும்
மன்ன வன்சொக்க கேசனே

வாழிசுந் தரவழுதி மரபினால் வழிபட்ட

மத்திய புரிதேவதை சினவ

வாழியத் தேவிதிரு மணமாலை பூண்டருள

வரும் இம்மை நன்மை தருவான்

வாழியப் பெருமானை வாழ்த்தவரு தமிழ்மாலை

மணமிக்க மலராகவே"

பின்னணியுரை:

முதற்பிரதி 19.2.70. சௌமிய வருடம் மாசிமாதம் 'அ' வியாழன் காலை 9 மணி பூர்த்தியானது. ஸ்ரீராமநகரம் கோட்டையூர்.
இரண்டாம் பிரதி 15.5.70. சாதாரண வைகாசி 'க' வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி பூர்த்தியானது. ஸ்ரீராமநகரம், கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல்ல, 'இம்மையில் நன்மை தருவான் மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண், இம்மையில் நமக்கு நன்மையைத் தருகின்ற இறைவனின் பெருமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8460

திருவாலவாயுடையார் திருமாலை

THIRUVALAVAYUDAIYAR THIRUMALAI

Pages : 42-48
Lines 32 on a Page
Extent 100 granthas
Complete
An encomium on Tiruvalavayadayar of Madura City by N. Kanagaraja Iyer. Written in 1970. Total verses, 51.

தொடக்கம்

காப்பு

"ஆலவாய் உத்தரத்தே ஆப்புடையார் கோயிலென

ஞாலவாய் போற்றுலுறும் நற்பதிவாழ் - கோலமுறீஇ

வீற்றிருப்பான் பாதத்தே வேழமுகன் மெய்யருளே
ஊற்றிருப்பான் மாலை யுறும்

ஆப்பனூர் வாழ்ந்தருளும் அண்ணலாம் சீவகற்கு
வாய்ப்பவே வாக்கருள்க வாக்கிறைவி - கோப்பலமை
சொல்லும் பொருளும் அவையும் திருமுருகன்
புல்லும் துணையாற் புகும்"

நூல்

"யாப்புருவம் அணியுருவம் எழுத்தமையும் சொல்லுருவேம்
கோப்புருவம் பொருளுரவம் கொடுத்தடியர் குலமாளும்
ஆப்புடைய திருக்கோயில் ஆண்டருளும் நாயகனை
ஆப்புளுறை சீவகனை அகமுருகி யிறைஞ்சுவனே"

முடிவு

"இருக்குமுறை தேடியினும் எப்பாத திருவடியான்
அருக்கனுளே திங்களிடை அமருகின்ற கோலத்தான்
உருக்கமுறு மனத்தினருக் குணர்த்துதிரு வுருவாளன்
வருக்கமெலாம் வாழவைப்பான் வையைவட கரையினனே"

முடிவு

"ஆவாழ்க அந்தணரும் அருமறையும் வாழியரோ
கோவாழ்க கோமுறைமை கொண்டவரும் வாழியரோ
தேவாழ்க ஆப்பனூர்ச் சிவபெருமான் திருவடிகள்
நாவாழ்க மனம்வாழ்க நன்மாலை வாழியவே"

பின்னணியுரை:

முதற்பிரதி 19.2.70. கனகலட்சுமி, இராமநகரம், கோட்டையூர், இராமநாதபுரம். சாதாரண வருடம் வைகாசி மாதம் 6ஆம் தேதி புதன்கிழமை காலை 8.30 மணி பூர்த்தியாற்று.

(குறிப்பு): இந்நூல், 'திருவாலவாயுடையார் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருவாலவாயனின் பெருமைகள் உரைக்கப்படுகின்றன. ஆசிரியர் திரு. நா. கனகராசன். அக்கடவுளின் அருட்சிறப்பை வியந்து பாராட்டுகின்றார். மொத்தம், வாழ்த்துப் பாடல் ஒன்றுடன் ஐம்பத்தோரு பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8461

கூடலழகர் திருமாலை

KOODALAZHAKAR TIRUMALAI

Pages : 49-55
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
All these 51 songs are for the glory of Azhagarswamy of Madura. Glorification done by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

"கூடல் அழகர் குணநலங்கள் பாராட்டிப்
பாடல் புகலவரும் பண்பினேன் - நீடவளர்
தண்டமிழில் வேதம் தருங்குருகை மாலடியார்
கண்டபொருள் தேடுவேம் காண்

பாட லழகர் பலர்தாழ்ந்த பதத்தான் மதுர வல்லிதமும்
கூட லழகன் குணத்தழகன் கொள்கை யழகன் குறிப்பழகன்
ஆட லழகன் அருளழகன் அருமை மறைவாழ் பொருளழகன்
பாட லழகன் பரிவழகன் பதமே நினைந்து பராவுதுமே" (க)

முடிவு

"சிந்தா மணியே அடியேங்கள் சிந்தை நினைந்தருள் வாளே
நந்தா விளக்கே நாயகனே நான்மை வேத முதற்பொருளை
அந்தா ரணியும் உரமுடையாய் அழகுக் கொள்ளை யுருவான
எந்தாய் அருள்க என்கின்றேம் எமக்கே யருளை
விளக்குதியே" (ருO)

வாழ்த்து

"வாழி தமிழே வளர்கூடல் வாழி சங்கத் தமிழ்மதுரை
வாழி கூடல் அழகானான் வாழி கூடல் மதுரவல்லி
வாழி அழகன் பதத்தடிமை மாறா மனத்துப் பெருமக்கள்
வாழி அழகன் தமிழ்மாலைல மதுரைமயமாய்த்
தமிழமைந்தே"

(குறிப்பு): இந்நூல், 'கூடலழகர் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், கூடலழகரின் குணநலன்கள் பாராட்டப்படுகின்றன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அப்பெருமைகளை எடுத்துக் கூறும் பாடல் மலர்களால் மாலை தொடுத்துச் சூட்டி மகிழ்கின்றார். மொத்தம் ஐம்பது பாடல்களும், வாழ்த்துப்பாடல் ஒன்றுமாக ஐம்பத்தோரு பாடல்கள் உள்ளன.

R.8462

திருமாலிருஞ்சோலைமலை அழகர்மாலை

THIRUMALIRUNJOLAIMALAI ALAKARMALAI

Pages : 55-63
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
On Vishnu of Tirumalirunj Solaimalai by N. Kanagaraja Iyer. Number of verses used, 51.

தொடக்கம்

காப்பு

"திருமா லிருஞ்சோலை தென்மலையில் வாழும்
திருமால் திருவடிக்கே சேர்ந்து - கருமால்
கழலக் கருதுவேன் கற்றதமிழ் மாலை
அழகற் கமைப்பேன் அமர்ந்து"

விநாயகன்

"அநாமயமே நல்கும் அழகனருள் மாலை
விநாயகனை வேண்டி விளம்பிச் சநாதனமாம்
தத்துவமே தேர்வான் சரண்புகுந்த வாழ்வினேன்
சத்துவமே பாமாலை தான்"

முடிவு

"இலங்கா புரத்தினை வீடணற் கீந்த இராகவனே
கலங்கா வரத்தைக் குசேலருக் கீந்த கருங்கண்ணனே
அலங்கா விருப்பைத் திருமகட் காக்கி யழகர்மலை
அலங்கார மாயவனாக விளங்கினை ஆதரித்தே" (கo)

வாழ்த்து

"வாழி திருமா லிருஞ்சோலை வாய்த்த மலையரசு
வாழி திருமா லிருஞ்சோலை மாமுடி மாயவனே
வாழி யழகன் குழகன் தமிழ்தேர் மனத்தினனே
வாழி யழகன் திருமாலை யென்றும் மணம்பொலிந்தே"

(குறிப்பு): இந்நூல், 'திருமாலிருஞ்சோலைமலை அழகர்மலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், ஆழ்வார் திருவாக்கில் அமர்ந்த பெரும் நாயகனும் திருமாலின் பெருமைகள் பேசப்படுகின்றன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் தன்னுடைய பாமாலை ஒன்றை அவ்விறைவனுக்குச் சூட்டிப் பரவசம் அடைகின்றார். முழுவதும் உள்ளது.

R.8463

திருவேடகநாதன் மாலை

THIRUVEDAKANATHAN MALAI

Pages : 64-75
Lines 36 on a Page
Extent 170 granthas
Complete
This work begs for the graces of Siva of Tiruvaragam, a Saiva Shrine, Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஏடக நாதன் இணையடிக்கை சாத்தவரும்
ஏடக மாலை யினிதாகக் - கூடகமே
ஆகும் பொருள்விளங்க ஆனைமகப் பிள்ளையருள்
ஆகும் துணையாய் அமைந்து"

நூல்

"புகலியர் பெருமான் சமணரை வாத
பூமியில் எதிர்த்திடும் பொழுது
மிகலியல் புடைய வழுதியர் குரிசில்
மேனிவெப் பொழித்தருள் விரகர்

தகளயல் தெளிய வையையில் விடுத்த
தமிழ்மய மந்திரப் புதையல்ல
இகயிம் புனலை யெதிர்த்தமே லடைந்த
ஏடக நாதனைப் பணிவாம்". (க)

முடிவு

"நாவினுக் கரசர் ஞானசம் பந்தர்
நாவலூர் நம்பி வாசகனூர்
கோவினுக் குரிய மறைகளைத் தமிழாற்
குறைவற விசைக்கவே பிறந்தார்
ஆவினுக் குரிய ஐந்தினா லரனை
ஆட்டுதல் அறமெனு மவரே
தேவினுக் குரிமை யேடகப் பெருமான்
திருவரு ளெனவிளக் கினரே"

வாழ்த்து

"வாழிய வழுதி அரசுபூண் நிலமே
வாழிய மதுரைமா நகரே
வாழிய பெருகும் வையைமா நதியே
வாழிய பெருக்கெதிர் தமிழே
வாழிய தமிழி னேட்டினை மகிழ்வால்
வருகென வழைத்தவே டகமே
வாழிய சிவமே யேடக முடையான்
மாலையும் வாழிய வளர்ந்தே"

(குறிப்பு): "இந்நூல், 'திருவேடகநாதன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், ஏடுகள் நிலைத்த உயர்தலமாம் ஏடகத்தில் வீற்றிருந்து அருளும் நாதனின் இயல்புகளை பாராட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8464

திருபூவணநாதன் மாலை

THIRUPUVANANATHAN MALAI

Pages : 76-82
Lines 32 on a Page
Extent 160 granthas
Complete
Lord Siva of Tiruppuvanam has been sung by M. Kanagaraja Iyer, Medium, verse . Period, 1970.

தொடக்கம்

காப்பு

விநாயகன்

"திருப்பூ வணநாதன் சேவடிக்கே சாத்தும்
திருப்பூ வணமாலை செய்து - விருப்பூரச்
சௌந்தர நாயகி தந்தவொரு தந்திகழல்
சிந்தனையில் வைத்தேன் திறந்து"

நூல்

"உருவாய் இருப்பாய் என்கின்றாய் உருவம் இல்லாய் என்கின்றார்
உருவோ டருவும் பொருந்தனையென் றுரைப்பார் தாமும் உளரிறையே

தருவாய் அருளே யெனவேண்டித் தலையாற் றகவே
பணிகின்றோம்

திருவார் வையைக் கரைவாழும் திருப்பூ வணத்தெம்
பெருமானே"

முடிவு

"நாடு தருக நலம்தருக எனவேண்டோம்
காடு தருக மலைதருக கடலே யருள்க வெனப்புகழோம்
ஒடு தருக இறப்பேமுக் குளமே யுருகும் நிலைதருக
தேடு வாருளே வீடென்பேம் திருப்பூ வணத்தெம்
பெருமானே"

வாழ்த்து

"வாழி வழுதி வளநாடு வாழி சைவ சமயநெறி
வாழி மதுரை வளநகரம் வாழி சொக்கன் திருவருளே
வாழி கயற்கண் பெருமாட்டி வாழிதிருப்பூ வணநகரம்
வாழி திருப்பூ வணநாதன் மலர்த்தாள் பற்றும் தமிழ் மலரே"

பின்னணியுரை:

முதற்பிரதி 32.2.70 திங்கள் இரவு ஏழு மணி, சௌமிய மாசி கஉ சோமவாரம்
கணகலட்சுமி ஸ்ரீராமநகரம் கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'திருப்பூவணநாதன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருப்பூவணத்தில் விருப்புடன் வீற்றிருந்து அருளும் சிவபெருமானின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8465

சோமநாத மாலை

SOMANATHA MALAI

Pages : 83-90
Lines 32 on a Page
Extent 175 granthas
Complete
Somanath of Madura is the central theme of this political work; Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"வானர வீர மதுரை யெனப்பெயர்பூண்
மான மதுரையிலே வாழ்சிவத்தின் - தானமெணிப்
பாடும் தமிழ்மாலை பண்புபெற வேரம்பன்
நீடும் அருணல்கும் நின்று"

வேண்டுகோள்

"இலங்கையிலே இராமபிரான் இதயச் செல்வி
இருஞ்சிறையி னீங்குதனி லியற்றப் போந்த
வலங்கைவலி மனவலிகொள் வாயு மைந்தன்
வன்னிசுதன் முதலானோர் மதுரை நோக்கித்
துலங்குபணி புரிந்துவரச் சோம நாதன்
சுடரொளிகொல் இறைவியோடு தோன்றும் காட்சி
நலங்கிளரு மனத்தாலே நயந்து போற்றி
ஞானமய வமுத முண்டு நடந்தா ரன்றே"

முடிவு

"அப்பர் சம்பந்தர் மணிமொழி அறிவரி னினத்தோடே
ஒப்ப நம்மையும் இணைப்பதற் கிறைவளே யொருப்பட
நெறியுண் டே
செப்ப வாய்ப்புள மொழியெலாம் சிவமயம் தெளிவுறப்
போற்ற வேண்டும்
தப்பகன் றோழி நெஞ்சோடு சோமனைச் சார்வதே
தகுமன்றே" (ருச)

வாழ்த்து

"சோமநாதனே வாழிய ஆனந்த சுந்தரக் கொடிவாழ்க
ஏமநாதனே வாழிய வானரர் இறைஞ்சிய இறைவாழ்க
சாமநாதனே வாழிய தமிழ்செவி சாத்திய தவன்வாழ்க
காமநாதனை யுருவிலி யாக்கிய கடவுள்மெய்யருள் வாழ்க"

(குறிப்பு): இந்நூல், 'சோமநாதமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், மதுரையில் வாழ் சோமநாதனின் புகழ் பாடப்பட்டுள்ளது. சுருதிமுடி வீற்றிருக்கும் சோம நாதனுக்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8466

இராமநாத மாலை

RAMANATHA MALAI

Pages : 91-98
Lines 32 on a Page
Extent 180 granthas
Complete
God sung is, Ramanatha of Rameswaram. Author N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"இராமன தீச்சரத்தே எவ்வுலகும் காப்பான்
பரவரமாய் உள்ள பகவன் - அராவணிவான்
மாலை புகல்வான் மனங்கொண்டு வேழமுகன்
காலை வணங்கினேன் காண்"

வேண்டுகோள்

"சேதுபதி கரவல் திருப்பணி வேண்டுவான்
மாதுபதி போதமய மாதேவன் - ஈதுபதி
என்னவே தேவை யிருப்பான் திருமாலை
பன்னவே வந்தேன் பணிந்து"

முடிவு

"கலைகள் அவற்கே பணியுரிக கல்வி யவனை நாடுகவே
மலைகள் அவற்கே தனியாக மலைமா மகளும் உடனமர்க
அலைகள் எழுந்த கீழ்கடலின் ஆற்றல் அறியும்
எம்பெருமான்
நிலைகள் நான்கும் தருதற்கே நிலைத்தான் தேவைப்
பதியகத்தே"
(நச)

வாழ்த்து

"இராம நாத சிவம்வாழ்க இறைவி மலைவாழ் மகள்வாழ்க
இராம நாதன் திருப்பணிகள் இயற்று மன்பர் இனம்வாழ்க
இராம நாத ஆலயத்தே இதயம் வைத்த உயிர்வாழ்க
இராம நாத திருத்தலத்தே என்றும் தருமம் வாழியவே"

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய மாசி கச புதன்கிழமை பகல் 1.30 மணி பூர்த் தியானது.
இரண்டாம் பிரதி சாதாரண வைகாசி க0 ஞாயிறு பகல் 2 மணி பூர்த்தியானது.

(குறிப்பு): இந்நூல், 'இராமநாத மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண்ணே, இராமன் வணங்கிய இராமநாதனின் பெருமைகள் பாடப்படுகின்றன. வாழ்த்துப் பாடல் ஒன்றுடன் சேர்த்து மொத்தம் 55 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அவ்விறைவனுக்குப் பாமாலை சூட்டிப் பரவசம் அடைகின்றார். முழுவதும் உள்ளது.

R.8467

திருப்பரங்குன்ற மாலை

THIRUPURANGUNRA MALAI

Pages : 99-106
Lines 32 on a Page
Extent 100 granthas
Complete
All these 56 songs praise the Lord Muruga of Tirupparangundram (near Madura). Author worshipped, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஆறுபடை வீடென் றறிஞர்கணம் போற்றுகின்ற
பேறுபெறு மாதலங்கள் பிஞ்ஞகனே - நீறுபொலி
மேனியொடு வாழ்ந்தாலும் வேலவற்கே வாழ்த்துரைக்க
ஆனைமுகன் ஊக்கியருள் வான்"

வேண்டுகோள்

“பரங்குன்றம் வாழும் பரமன் குமாரன்
அரங்குன்றும் கூரியவே லையன் - சிரங்குன்றில்
போற்ற வருளும் புதுப்பனுவல் வேழமுகன்
ஏற்றம் அருள எழும்”

முடிவு

“படைவீடு வேறுபல பார்த்தும் பரங்குன்
றுடைவீ டெனவே யுவந்தான் - இடைவீடு
குன்றுதோ றாடும் குகனே யெமக்குரிய
நன்றெலாம் நல்கும் நயந்து”

வாழ்த்து

“முருகப் பெருமான் முதன்மைநிலை வாழ்க
பருகற் கமுதாகும் பாடற் - பொருளறிந்து
அன்றுபுல வர்க்கருளும் அண்ணல் பரங்குன்றன்
என்று மிருந்தருள்க இங்கு”.

பின்னணியுரை:

முதற்பிரதி, சௌமிய மாசி கச. புதன்கிழமை மாலை 4 மணி (25.3.70.)
இரண்டாம் பிரதி சாதாரண வைகாசி கக. இராமநகரம் கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், ‘திருப்பரங்குன்ற மாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருப்பரங்குன்றத்தில் விருப்புடன் அமர்ந்து அடியவர்க்கருளும் தண்டமிழ் முருகனின் சிறப்பு போற்றப்படுகிறது. அடியவர்தம் இதயக் கமலத்தேஎன்றும் நிறைந்துள்ள முருகனுக்கு ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அழகான பாமாலை ஒன்றைச் சூட்டுகின்றார். செவ்வேள் என்பதாலே உயர்ந்த பாடலாகிய வெண்பா மலர்களால் மாலை தொடுத்துள்ளார். மொத்தப் பாடல்கள் ஐம்பத்தாறு. முழுவதும் உள்ளது.

R.8468

கதிர்காம மாலை

KATHIRKAMA MALAI

Pages : 107-113
Lines 32 on a Page
Extent 125 granthas
Complete
God Muruga of Kathirkamam (Sri Lanka) has been extolled by N. Kanagaraja Iyer in 55 stanzas.

தொடக்கம்

காப்பு

"கதிர்காமம் வாழும் கதிர்வேற் பெருமான்
உதிர்காமம் வேண்டா வொருவன் - துதியாக
மாலை யமைப்பான் வரசித்தி வேழமுகன்
காலை யிறைஞ்சுவன் காண்"

பிரபந்தம்

"உறையிறந் தோங்குமறைக் குள்மறைந்த உருவமுளான்
கரையிறந் தோங்கும்கலை யின்கடலைக் கடக்கவருள்
வரையிறந் தோங்கும்திரு வருட்செல்வம் வசித்தவள்ளல்
விரைசிறந்தோங் கும்கடம்பன் கதிர்காம வேலவனே"

முடிவு

"வேலேந்து கையாய் மறையோர் புலவ விளக்கரிய
நூலேந்து நெஞ்சாய் நுழைவா ரிலாத நுணக்குமுளாய்
காலேந்து பீட மெனவே சிரங்களைக் காட்டுகின்றேம்
கோலேந்து வேந்தாய்க் கதிர்காம மேவிய குக்குடனே" (ருச)

வாழ்த்து

"வேலவன் வாழிய ஈழக் கதிர்காம மேவுபிரான்
நூலவன் வாரிய வேதத்தி னுட்பொருள் நோக்குவிப்பான்
காலவன் வாழிய அன்பர் தலைமேற் கழல்பதிப்பான்
மாலவன் வாழிய வேண்டும் நலங்கள் வளர்ப்பவனே"

பின்னணியுரை:

முதற்பிரதி கனகலட்சுமி சௌமிய மாசி கரு. வியாழன் பகல் 10 மணி.
இரண்டாம் பிரதி கனகலட்சுமி சாதாரண வைகாசி கஉ. செவ்வாய் பகல் 2 மணி.

(குறிப்பு): இந்நூல், 'கதிர்காம மாலை' என்னும் பெயரினை உடையது. இதக்கண்ணே, கதிர்காமத்தில் அமர்ந்து கருணைமழைப் பொழிகின்ற வேலவனின் சால்புகளைப் போற்றியுள்ளார் ஆசிரியர் நா. கனகராசன். கதிர்காம வேலவன் விற்றிருக்கும். நாட்டின் வளமைகளைக் கூறியுள்ளார். அடியவர்களுக்குக் கிடைக்கும். அருளையும் அழகாகப் பாடியுள்ளார். முழுவதும் உள்ளது. மொத்தம் 55 பாடல்கள்.

R.8469

குற்றாலநாதன் மாலை

KURRALANATHAN MALAI

Pages : 114-120
Lines 32 on a Page
Extent 175 granthas
Complete
A garland of verses in praise of Siva enshrined at Kuttralam (Tirunelveli Dt.); praised by the poet N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"குழல்வாய் மொழிதழுவும் குற்றால நாதன்
கழல்வாய் சிரம்வைத்துக் காதல் - எழவேயாம்

வேழமுகன் மெய்யருளை வேண்டித் தமிழ்மாலை
வாழ வமைப்போம் வகுத்து"

பிரபந்தம்

"அருவியாய் குறிஞ்சிநிலச் சிறப்பமைந்த குற்றால நாயகனை
ஒருவினா வினவிவிடை பெறுதகவோ உரிமையோ வுறுகிலே
மெனினும்
தருதியா லிறைவதிரு வருளெனவே தாண்மலர் பணிவது
புரிவேம்
வருதியால் எனவேதிறந் துவைத்திருக்கும் வாயிலிற் புகுந்து
வாழ்த்துவமே"

முடிவு

"அருணமா கிரிமேல் அனலென விருந்தாய் அம்பர மாயினை
பொதுவில்
கருணனே புனலாய்ச் சம்புலிங் கமெனக் கவின்றனை
யானைக்கா வினிலே
அருணலம் விளங்கு காளத்தி அணின் ஆயினை கம
ஆலயத்தே
பொருணல முதவு நிமென விருந்தாய் புராரிகுற் றாலநா
யகனே" (ருஉ)

வாழ்த்து

"வாழியோ திருக்குற் றாநா யகனே வாழிநற் குழலின்வாய்
மொழியே
வாழியோ தமிழை யுலகினுக் களித்த மாதவ அகத்திய
முனியே

வாழியோ அருவி யுருவினால் விளங்கும் வரநதி சுரநதி
வளர்ந்தே

வாழியோ திருக்குற் றாலநா யகனை வாழ்த்தியத் தமிழ்மலர்த்
தொடையே"

(குறிப்பு): இந்நூல், 'குற்றாலநாதன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குற்றலத்தில் குழல்வாய் மொழியாளுடன் வீற்றிருந்தருளும் நாதனின் சிறப்புகள் நவிலப்பட்டுள்ளன. ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அவ்விறைவனுக்குத் தமிழ்த்தொடை ஒன்றைச் சூட்டி மகிழ்கின்றார். முழுவதும் உள்ளது. மொத்தம் வாழ்த்துப்பாடல் ஒன்றோடு ஐம்பத்து மூன்று பாடல்கள் உள்ளன.

R.8470

நெல்லையப்பன் மாலை

NELLAIYAPPAN MALAI

Pages : 121-127
Lines 32 on a Page
Extent 170 granthas
Complete
In 51 stanzas, Tirunelveli Nellayppan has been glorified by N. Kanagaraja Iyer. Date of Work, 1970.

தொடக்கம்

காப்பு

"காந்திமதி தோள்தழுவும் கண்ணுதலாம் நெல்லையப்பன்
சாந்தியருள் பாமாலை சாற்றவே - ஏந்திசைகொள்
வேழமுகன் ஆறுமுகன் வெண்கமலை செங்கமலை
தோழமையே நல்க தொடர்ந்து"

பிரபந்தம்

"சாலிவா யீசவேணு மாவளத்தாய் தத்துவநா யகதமிழர்

நூலிலே புகுந்து மணமெலா நுகர்ந்த நுண்ணிய திண்ணிய
சேவிய

காலிலே விழுந்த அடியவர் தமக்கே கருணையால்
தன்னையே தருவாய்

வேலியே யுயர்ந்த நெல்லையம் பதிவாழ் விமலனே சிவவரஞ்
சுடரே" (க)

முடிவு

"அவனையா மறியே மாயினும் எனையே அவனருள்
வழிநமை யறியும்

சிவனையா மணுக நினைந்திலே மெனினும் சிவனருள்
நம்பிறப் புரிமை

தவனையா மறியேம் தவத்துறை நுழையேணம் தரணிவாழ்
விடைமயல்வேமே (சகூ)

பரமவா னந்த பரிதனா யினனே பரமநீ யருளிய செயலால்

சிரமசம் பந்தம் இனியெனக் கிலையே சிவமயக் கடலிலே
திளைத்தேன்

வரமடைந் தனனே ஒருமைகண் டனனே மறந்தன னநித்திய
வாழ்வை

உரமமைந் துளனே உரிமைபெற் றனளே ஒஃளொளி
நெல்லையம் பரனே" (ரு0)

வாழ்த்து

"நெல்லையம் பெருமான் திருவடி மலர்கள்

நிலமகள் மகிழவாழ் வுறுக

எல்லையே யிலாத திருவருள் விளக்கும

இறைவியின் திருவடி பொலிக

நெல்லையே யுலகம் பெறவருள் மழையை

நிரம்புற வுலகமே பெறுக

புல்லையும் புன்மை புகல்கிலாம் புலவர்

புலனெறி வழக்குவா ழியவே"

பின்னணியுரை:

முதற்பிரதி 1.3.70. ஞாயிறு காலை 5 மணி. கனகலட்சுமி ஸ்ரீராமநகர், கோட்டையூர், *இராமநாதபுரம் மாவட்டம்.*

இரண்டாம் பிரதி 28.5.70. சாதாரண வைகாசி கச. ஆம் நாள் வியாழக்கிழமை காலை 8.30 மணி ஸ்ரீராமநகர், கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'நெல்லையப்பன் மாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண்ணே, திருநெல்வேலியில் தாமிரவருணித் தீர்த்தமே விழைந்த செம்பொருளாம் இறைவனின் பெருமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. *நெல்லைவாழ் முதல்வனின் எல்லையிலா அருளை இனிதே, ஆசிரியர்,* திரு. நா. கனகராசன், எம்.ஏ. இயம்பியுள்ளார். மொத்தம் 51 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8471

ஆறுமுக நயினார் திருமாலை

ARUMUGA NAYINAR THIRUMALAI

Pages : 128-135
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
God Muruga has been termed as Arumuga Nayinar here. Poet N. Kanagaraja Iyer has composed this treatise seeking the Nayinar's graces.

தொடக்கம்

காப்பு

“நெல்லையப்பன் ஆலயத்தில் நீலமலர் மாலையணி
எல்லையற்ற மேனி யெழிலப்பன் - தொல்லையிசை
ஆறுமுக நாதன் அணிமாலை சாத்துகின்றேன்
நீறுமுக வேழமுகன் நேர்ந்து”

கலைமகள்

“ஆறுமுகன் பைந்தமிழா லாகும் திருமாலை
ஏறுமுகம் ஆகநிமிர்ந் தேற்றருளப் - பேறுமுகம்
கான்மலராற் காட்டும் கலைமகளை வாழ்த்துகின்றேன்
மேன்மையொடு நன்மை விழைந்து”

முடிவு

“திருநெல்வே லியிலுறையும் தேவர்பிரான் திருக்குமர
வருநல்வே லியைவிழைந்து வழுதிவள நாடடைந்தாய்
தருநல்வே லியிலிருக்கும் தையலரோ டெமையாள்வான்
அருநல்வே லியுநீயே ஆறுமுக நயினாரே”

வாழ்த்து

“வாழியவே தண்பொருந்தம் வாழிதிரு நெல்வேலி
வாழியவே வள்ளிபதம் வாழியதெய் வானைபதம்
வாழியவே காந்திமதி மணந்தசிவன் பாதமலர்
வாழியவே ஆறுமுக நயினாரின் மலர்ப்பதமே”

(குறிப்பு): இந்நூல், 'ஆறுமுக நயினார் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதற்கண்ணே, நெல்லையிலே விற்றிருந்து அடியவர்க்கு எல்லையில்லா இன்பத்தைத் தந்துவரும். ஆறுமுக நயினாரின் அருட்சிறப்பு போற்றப்பட்டுள்ளது. காந்திமதி நாதனெனும் கைலாய நாதனது திருக்கோயிலைக் காவல் புரியும் படைத்தலைனால் ஆறுமுக நயினாரின் பெருமை மலர்களைப் பாடல் எனும் நாரால் மாலை தொடுத்தச் சூட்டி மகிழ்கின்றார் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள். முழுவதும் உள்ளது.

R.8472

குறுக்குத்துறைக்குமரன் மாலை

KURUKKUTHTHURAIKKUMARAN MALAI

Pages : 136-143
Lines 32 on a Page
Extent 200 granthas
Complete
Lord Muruga of Kurukkutturai has been sung here in 55 stanzas; Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"கோயில்கொள வேண்டிக் குறுக்குத் துறைக்கோல்
ஞாயில் அமைத்து நடந்தகுகன் - வாயில்
மனத்தி லமர வழுத்துதிரு மாலை
தனத்தின் மிகுந்த தவம்

வேழமுக வள்ளல் விருப்புமுற நெஞ்சகத்தே
ஆழமுற வெய்தி யமர்தலால் - கேழமையும்
கோமான் குறுக்குத் துறைவாழ் குமரன்பன்
பாமாலை தோன்றும் பரிந்து

வெறுக்கை விழையேம் வியத்தக்க கோயில்
குறுக்குத் துறையென்றே கொண்டாய் - மறுக்கட்
அகற்றி அகம்புகுந்தே ஆள்க அதுவே
மிகற்கு நெறிகாட்டும் வீடு"

முடிவு

"பல்லாண் டுலகில் வாழ்ந்தவரும் பயிலாப் பொருளை
விளக்கவல ராய்
சொல்லாண் டதன்கண் பொருளமைக்கும் துணிவி னார்க்குக்
குருநீயே
எல்லாண் டொளிரும் அருமுகத்தாய் எல்லா மான இளவரசே
கல்லாண் டிருந்தாய் கடலாண்டாய் கந்தா குறுக்குத்
துறைமுருகா"

வாழ்த்து

"வாழி நெல்லைச் சிவபெருமான் வாழி காந்தி மதியம்மை
வாழி திருச்செந் தூர்முருகன் வாழி ஆறு முகநயினார்
வாழி யாற்றி னிடையினிலே வளரும் முருகன் திருக்கோயில்
வாழி குறுக்குத் துறைமுருகன் வானும் மண்ணும் வாழ்வுறவே"

குறிப்பு): இந்நூல், 'குறுக்குத்துறைக் குமரன் மாலை' எனும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண்ணே, குறுக்குத்துறையில் கோயில் கொண்டிருக்கும் குமரனின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அம்முருகனின் அருட்சிறப்பைப் பாடியுள்ளார். 'குறுமை அறியாக் குணக்கடலே குறுக்குத்துறைவாழ் முருகோனே' என்று அவர் உள்ளம் உருக முருகனை அழைத்து அருள்வேண்டுகின்றார். மொத்தம் 55 பாடல்கள் உள்ளன. முற்றுப் பெற்றுள்ளது.

R.8473

செந்திலாண்டவன் திருமாலை

SENTHILANDAVAN THIRUMALAI

Pages : 144-156
Lines 36 on a Page
Extent 225 granthas
Complete
God Muruga of Tirucchendil has been begged for graces by the poet N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"சிவத்தின் குமாரன் திருச்செந்தூர் வேலன்
பவத்தின் தொடர்பையே பாற்றத் - தவத்தின்
நெறியாற் றமிழ்பாட நேர்ந்தேன் தமையன்
குறியால் உளம்புகுதக் கொண்டு"

வேண்டுகோள்

"உருகவே யுளத்தை யுதவிய பெரும
உவமையே யிலாதபே ரழகாய்
அருகரே வருக திருப்பணி புரிக
அன்பனே யெனவெனை யழைத்தாய்
பருவமா முகிலே தோற்கவே யருளும்
பாதபங் கயமிரண் டுடையாய்
தருகவே யெனவே வேண்டுதல் புரியேன்
சரண்புகுந் தன்ன சரணருளே"

முடிவு

“அடியவர் எதனை இறப்பினும் உடனே
அருளுவ தியல்பென வுடையாய்
நெடியவன் மருக இருவர்மெய்த் தவை
நித்தியத் தத்துவக் குரவ
கொடியவர் இனத்தே யுழன்றுளே னெனினும்
குணங்களை பணித்தருள் புரிவாய்
படியிலே யினும்யான் பிறப்புரு வணமே
பார்த்தருள் செந்திலாண் டவனே” (ருஉ)

வாழ்த்து

“வாழிய கடலே வாழிய அலையே
வாழிய நாழியங் கிணறே
வாழிய சிவமே சிவமயம் பொருந்து
மனத்தினார் மொழியினார் செயலார்
வாழிய திருவாழ் செந்திலில் இருமை
வடிவமார் ஒருபெரு முருகே
வாழிய முருகின் திருத்தலை வியரே
வள்ளிதெய் வானையர் முறையே”

(குறிப்பு): இந்நூல், ‘செந்திலாண்டவன் திருமாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண், செந்திலிலே கோயில் கொண்டிலங்கும் ஆண்டவனின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. தேவியர் இருவர் இருபக்கமும் நிற்க, பரவும் அடியவர்களுக்கு அருளும் முருகனின் காட்சியை நமக்குப் பாடல் திரைகளில் போட்டுக்காட்டுகின்றார் திரு. நா. கணகராசன், எம்.ஏ. மொத்தம், 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8474

ஆழ்வார் திருநகரி ஆதிநாதன் மாலை

ALVAR THIRUNAGARI ADHINATHAN MALAI

Pages : 157-163
Lines 32 on a Page
Extent 170 granthas
Complete
Azhwar Tirunagari is also known as Tirukkurukur; Famous Azwar belongs to this town. This piece sings about this azhwar and runs in 55 verses. Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஆழ்வார் திருநகரி ஆதிநா தன்புனைய
வாழ்வார் திருமாலை வாய்ப்புறவே தாழ்வாம்
திருக்குறுகை யாழ்வார் திருவடியைப் போற்றி
உருக்குறுகும் தண்டமிழ்வாக் குற்று"

பரபந்தம்

"இசைமலிந்த சாமமறை இளந்தமிழா லியற்றுமன்பர்
நசைமலிந்த நெஞ்சத்தால் நாரணனை அகலாதார்
பசைமலிந்த பாடல்பெறு பரம்பொருளை ஆதிமுதல்
விசைமலிந்த பெருமானை வேண்டுதும்யாம் வீடுறவே" (க)

முடிவு

"எவன்செல்வம் வேண்டாதான் இவ்வுலகில் அவ்வுலகில்
தவன்செல்வம் அருள்செல்வம் தமிழ்செல்வம் தந்துள்ள
அவன்செல்வம் ஆழ்வார்க் கருட்செல்வம் ஆதிபிரான்
நவன்செல்வம் எனநமக்கே நல்கியுளான் சுவைப்பீரே"

வாழ்த்து

"வாழ்த்துமின்கள் மனமார மாதவன்றன் பாதமலர்
வாழ்த்துமின்கள் திருமாலின் மார்பமமர் தேவிபதம்
வாழ்த்துமின்கள் குருகூரர் மனநிறையு மறைப்பொருளை
வாழ்த்துமின்கள் திருக்கூரார் மாயவன்றன் மாலையையே"

(குறிப்பு): இந்நூல், 'ஆழ்வார் திருநகரி ஆதிநாதன் மாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளகது .இதன்கண் திருக்குறுகூர் ஆழ்வார் ஆதிநாதனின் அருட்கொடை பாராட்டப்பட்டுள்ளது. திருமாலின் அருள்பெற்ற இவ்வாழ்வாழ்வாருக்கு பாமாலை ஒன்றைச் சூட்டிப் பரவசம் அடைகின்றார். திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 55 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8475

திருவைகுந்த நாதன் மாலை

THIRUVAIKUNDHA NATHAN MALAI

Pages : 164-175
Lines 36 on a Page
Extent 160 granthas
Complete
Vishnu of Srivaikuntam is the central theme here. 53 songs have been composed by N. Kanagaraja Iyer in praise of this Vishnu.

தொடக்கம்

"தண்பொருநைத் தீரத்தே தான்பொருந்தும் வைகுந்தம்
பண்பொருந்து நெஞ்சமுளார் பாடுதவக் - கண்பொருந்தும்
நாயகனைப் போற்றுதற்கே நம்மாழ்வார் பாதமலர்ச்
சேயதுணை யுண்டே சிறந்து"

பிரபந்தம்

“திருமகள் தலைவன் ஒருபுறம் சிறப்ப
சிவபரஞ் சுடரொடு புறத்தே
தருமமும் தவமும் தழைப்புற வருளித்
தரணியைப் புரக்கவே யிருக்கும்
பெருமையே பொலிந்த தாமிரவருணிப்
பெருநதிக் கரையுள தலத்தை
அருமையி னடைந்து பணிந்தன பெருவோம்
அருள்திரு வைகுந்த மதுவே” (க)

முடிவு

“சச்சிதா னந்த தத்துவ மதுவே
சங்கு சக்கரக் கரத்துடனே
நிச்சிதா னந்த நிலையிலே அடியார்
நிற்கவே புரிவதும் அதுவே
குச்சிதா னந்த நிலையிலா தெனவே
கூறிய குருவுரு வதுவே
இச்சிதா னந்த மிசைப்பது மதுவே
இருப்பது வைகுந்த நகரே”

வாழ்த்து

“வாழியோ திருவை குந்தமா நகரம்
வாழிய ஆங்குவாழ் மனித்தர்
வாழியோ திருவை குந்தமே நிறைந்த
மாயவன் திருவடி மலர்கள்

வாழியோ திருவை குந்தமெய்த் தலைவி
மலர்வொடு திருவடி யிருள
வாழியோ திருவை குந்தனைப் புகழ்ந்த
மாலையாம் தமிழ்த்திரு தொடையே"

(குறிப்பு): இந்நூல், 'திருவைகுந்தநாதன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருவைகுந்தத்தில் கோயில் கொண்டருளும் திருமாலின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. ஆலிலைமேலொரு காலிவிரல் சுவைத்த இறைவனை, ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் பாராட்டி, பாமாலை ஒன்றையும் சூட்டி மகிழ்ச்சி அடைகின்றார். மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. அனைத்துப்பாடல்களும் ஆசிரிய விருத்தத்திலேயே அமைந்துள்ளன. முழுவதும் உள்ளது.

R.8476

திருவைகுந்தச் சிவபிரான்மாலை

THIRUVAIKUNDA SIVAPIRANMALAI

Pages : 176-187
Lines 36 on a Page
Extent 165 granthas
Complete
Siva of the town Sri Vaikuntam has been praised for graces here; Author, N. Kanagaraja Iyer. Place of writing, Sri Ramanagar (near Kottaiyur, Ramnad Dt.) 53 Stanzas are present.

தொடக்கம்

காப்பு

"அநாயகனை வைகுந்த ஆண்டவனைப் பாட
விநாயகனை நெஞ்சமுற வேண்டி - அநாமயமே
நல்குகென நெஞ்சார நாவாரப் போற்றுகின்றேன்
வெல்கதமிழ் வாழ்வே மிகுந்து

சிவபரம பொருளே மாயவன் நிறைந்த
திருமலி வைகுந்த நகரில்
தவபரம் பறையே புகுந்தவர் வணங்கச்
கரணமே சரணமாத் தருவாய்
பவபரம் பரையே பலமுறை படர்ந்து
பயின்றுள சீவரே யெனினும்
சிவபரம் பறையை நினைப்பதற் குரிமை
சிவையொடு சிவனரு ளுவனே" (க)

முடிவு

"காலனை யுதைத்த காலனே அளியேம்
காலனுக் கிரையென விருப்போம்
மூலனே முதல்வா முக்கண் நாயகனே
முழுமுதற் கடவுளே அருள்க
வேலனை இறைஞ்சி விநாயக னடிமேல்
வீழ்ந்தி றைவியை அடிதொழுது
காலவே நினது தனிபுகுந் தனமே
சரணருள் வைகுந்த சிவமே" (ருஉ)

வாழ்த்து

"வாழ்க வைகுந்தம் வாழ்க கைலாசம்
வாழ்க செந்தாமரைக் கோயில்
வாழ்க மெய்த் தொண்டர் மனத்திலே புகுந்து
வயங்கிய சிவபரம் பொருளே

வாழ்க வைகுந்த நகரிலே யமைந்த
மறைபுகழ் பெருந்திருக் கோயில்
வாழ்க வைகுந்த நாயகன் பதத்தே
மருவிய மாலிகை மணந்தே"

பின்னணியுரை:

1.6.70. சாதாரண வைகாசி 16 சோமவாரம் முதற்பிரதி, கனகலட்சுமி ஸ்ரீராமநகர்கோட்டையூர், இராமநாதபுரம்.

(குறிப்பு): இந்நூல், 'திருவைகுந்தச் சிவபிரான்மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே. திருவைகுந்தத்தில் கோயில் கொண்டருளும் சிவபிரானின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. தாமிரவருணி ஆற்றுநீரை மிகவும் விரும்பும் இறைவன் சிவபெருமான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பிரபந்த வகையுள் 'மாலை' எனும் பிரிவைச் சார்ந்தது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் வாழ்த்துப்பாடல் ஒன்றுடன் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8477

வில்லிபுத்தூரான் மாலை

VILLIPUTTURAN MALAI

Pages : 188-200
Lines 36 on a Page
Extent 250 granthas
Complete
Flourished in 1970. Author N. Kanagaraja Iyer, in 51 stanzas, delineates the life of the famous azhwar namely Srivilliputtur azhwar.

தொடக்கம்

“வேயர்கோன் தோன்றிவளர் வில்லிபுத்தூர் மாயவனை
ஆயர்கோன் ஆனானை ஆதரித்து - வேயவரு
மாலையடி காயமைய மாறனார் பாதமலர்
காலையிலே யேத்துவோம் கண்டு”

வேண்டுகோள்

“விண்டுசித்தர் கோதை வியப்பர் திருப்பிறப்புப்
கண்டுமகிழ் வில்லிபுத்தூர்க் காத்தருளும் விண்டுபதம்
போற்றிப் புகழும் புகழ்மாலை நம்மாழ்வார்
சாற்றிற் பெருமே தமிழ்”

முடிவு

“மைப்படிந்த திருமேனி மாயோன் பாதம்
மனம்வைத்துப் பொறியைந்தும் வசமே யாக்கிக்
கைப்பிடித்த வேடுகளைக் கடலில் வீசிக்
கற்பனையே கடந்தபிரான் கருணை காண்பான்
எப்படியும் தவம்புரிய இசைந்தே வந்தேன்
இவ்வுலகில் இனிப்பிறக்கும் எண்ணம் இல்லை
செப்படியின் வித்தையெனச் சிறியேன் றன்னைத்
திருவில்லி புத்தூரரான் சேர்த்தாள் வானே”

வாழ்த்து

“வாழியவே வில்லிபுத்தூர் வாழும் தெய்வம்
வாழியவே திருப்பாவை வனைந்த கோதை
வாழியவே விண்டுசித்தர் மனத்துச் செல்வம்
வாழியவே அனந்தமென வளர்ந்த வேதம்
வாழியவே ஆழ்வார்கள் வாக்கின் செல்வம்
வாழியவே தெய்வபக்தி மனித்தர் நெஞ்சில்
வாழியவே மெய்யன்பர் வளரும் தேயம்
வாரிய வில்லிபுத்தூர் மாலை தானே”

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய மாசி 20. செவ்வாய் மாலை 5 மணி பிரபந்த பூர்த்தி தினம். 3.3.70. ஸ்ரீராமநகர் கோட்டையூர்.

இரண்டாம் பிரதி சாதாரண வைகாசி கஅ. செவ்வாய் காலை 6 மணி 2.6.70. கனகலட்சுமி. ஸ்ரீராமநகர், கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், ‘வில்லிபுத்தூரரான் மாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருவல்லிப்புத்தூரரின் சிறப்பினைப் பாராட்டியுள்ளார் திரு. நா. கனகராசன், எம்.ஏ. தமிழில் பெருமாளின் பெருமைகளைப் பாடிய வில்லிபுத்துராழ்வாரின் பெருமைகளைப் பாடல்களில் பொதிந்து மாலையாக்கிச் சூட்டி மகிழ்கின்றார். மொத்தம், வாழ்த்துப்பாடல் ஒன்றுடன் 51 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8478

வானமாமலை மாலை

VANAMAMALAI MALAI

Pages : 201-213
Lines 36 on a Page
Extent 320 granthas

Complete
Tottattiri natha of Vanamamalai has been glorified in verse medium.
Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"திருவான மாமலைவாழ் தேவேசன் பாதத்
துருவான மாலையினை யோதத் - திருவாய்
மொழியருளு மாற முனிபாதம் போற்றி
இழிவகல வாழ்வோம் இனி"

வேண்டுகோள்

"தென்றமிழ நாட்டகத்தே தெய்வக் காட்சி
சிறக்கவமை கோயில்பல திகழ்வ துண்டு
தொன்றமையு மாலயத்தே தொழுவார் வாழ்த்தத்
தோதாத்திரி நாதனெனச் சுடரும் மூர்த்தி
அன்றமையும் நெறியாலே ஆடும் எண்ணெய்
அபூருவமாம் மருந்தாக அளிக்கும் நோக்கால்
இன்றளவும் வீற்றிருக்கும் ஏற்றம் சான்ற
இருக்கையினைப் பாடுவதற் கெண்ணி னேனே"

முடிவு

"சத்தியம் அவனே சாத்திரம் அவனே
சதுர்மறை முழுமையு மவனே

நித்திய மவனே நிறையவன் அவனே
நீலமே விளக்கிய ஒளியாள்
கத்திய மவனே கருத்துரை அவனே
காண காரியம் அவனே
பத்திய மவனே பாடலும் அவனே
பணிகவோ வானமா மலையே"

வாழ்த்து

"வானமா மலையாம் திருநகர் வாழ்க
வாழிய அங்குறை மனிதர்
வானமா மலையாய் திருத்தலத் தினிலே
வயங்குமெய்ப் பொருளருள் வாழ்க
வானமா மலையில் அறத்தினைப் புரக்கும்
மடாதிபர் மரபுமே வாழ்க
வானமா மலையின் மாலையுள் வாழ்க
மகிநலம் வாழிய வளர்ந்தே"

பின்னணியுரை:

இது முதற்பிரதி 3.6.70. ஸ்ரீராமநகர். கோட்டையூர் இராமநாதபுரம் மாவட்டம். சாதாரண ஆண்டு வைகாசி கசா புதன்கிழமை அமாவாசை திதி மாலை 6.30 மணிக்கு நிறைவேறியது.

(குறிப்பு): இந்நூல், 'வானமாமலை மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, வானமாமலை நாதனின் சிறப்பு பாடப்பட்டுள்ளது. ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவ்விறைவனுக்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்றார். முழுவதும் உள்ளது.

R.8479

திருக்குறுங்குடி மாலை

THIRUKKURUNGUDI MALAI

Pages : 214-225
Lines 36 on a Page
Extent 225 granthas
Complete
This work bridges Siva and Vishnu. This goes in verses. By N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"சிவனும் திருமாலும் சேர்ந்தொருங்கு வாழும்
பவனம் குறுங்குடியிற் பார்த்தேன் - புவனமெலாம்
போற்றத் தகும்பொருளைப் போற்றப் புறப்பட்டேன்
ஆற்றல்தரும் ஆனைமு கவன்"

பிரபந்தம்

"உருவமே உடையான் அழகுமிக் கமைந்தான்
உவப்புறு புருட உத்தமனாய்க்
கருவமே அறியாத் துறவியர் குலமே
கருத்தொடு திருப்பணி புரியச்
சருவமும் நயக்கும் சக்தனாய் நிலத்தே
தருமமே வளர்வுற அருள்வாள்
பருவமா மழைபோற் சிறப்பவீற் றிருக்கும்
பழம்பதி திருக்குறுங் குடியே

ஆதிநா யகனே மத்தியநா யகனே

அந்தமே ஆகுநா யகனே

ஆதியு மிலநொய் மத்திய மிலாதாய்

அந்தமே இலாதநா யகனே

நீதிநா யகனே நியமநா யகனே

நிகம கோடிகளி னுயகனே

மாதினா யகனே சோதிநா யகனே

வாழுதி திருக்குறுங் குடியே"

முடிவு

"திருமகள் கொழுந திருவிலே சிறந்த

தெய்வமே திருக்குறுங் குடியாம்

மருமகள் கலைகள் வளர்ப்பதை யறிந்து

மகிழ்வது துணிந்தகா ரணத்தால்

ஒருமகள் முகமு நோக்குருத் தவத்தின்

உத்தமர் வாய்மொழி சுவைத்தாய்

பெருமகள் விழைந்து தூண்டவே அருள்வாய்

பிறங்கினை திருக்குறுங் குடியே"

வாழ்த்து

"மலையின்மேல் எழுந்து விளங்கிய நம்பி

மணத்துழாய் கமழவா ழியவே

அலையின்மேல் எழுந்த அலைபொரு மழகின்

அருள்மலி நம்பிவா ழியவே

நிலையின்மேல் உயர்த்தி திருக்குறுங் குடியின்
நிலைபெறு நம்பிவா ழியவே
கலையெலாம் வளரும் தமிழகம் வழுத்தும்
கடவுள் பா டுவார்வா ழியவே"

(குறிப்பு): இந்நூல், 'திருக்குறுங்குடி மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, சிவனையும் திருமாலையும், சேர்த்துப் பாடப்பட்டுள்ளது. திருக்குறுங்குடியில் இவ்விறைவர்கள் இருவரும் சேர்ந்து ஒருங்கு வாழும் சிறப்பினை ஆசிரியர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள் அழகாகப் பாடியுள்ளார். இதிலிருந்து இவரது சமயப்பொறை இனிது விளங்குகின்றது. முழுவதும் உள்ளது.

R.8480

சங்கரநாராயணர் கோயில், சங்கரநயினார் திருமாலை

SANKARANARAYANAR KOIL, SANKARANAINAR THIRUMALAI

Pages : 226-238
Lines 36 on a Page
Extent 250 granthas
Complete
Glorious pages on Siva and Vishnu, gods at the town, Sankaranarayanar Koil. Composer N. Kanagaraja Iyer. He has composed 53 stanzas.

தொடக்கம்

காப்பு

"சங்கரனும் நாரணனும் தண்டமிழ நாட்டகத்தே
மங்களமா யோருருவம் வாய்த்தபதி - பொங்கவரு
தெய்வத்தைப் போற்றும் திருமாலை வேழமுகன்
கைவைத்த காப்பளது காண்"

வேண்டுகோள்

“கோமதியைத் தேவியெனக் கொண்ட தேவன்
குவலயமே தலைவணங்கும் கோவில் கொண்டான்
பாமதியை இறைவியெனப் பற்றும் மாலும்
பாகமுறத் திருவுடலில் பாதி தந்தான்
சீமதியைப் பணிந்தவரும் தேடி வந்த
சிந்தையரும் மந்திரத்தின் சிறக்கச் செய்வான்
தேமதியைச் சடைசார்த்தும் தேவ தேவன்
திருவடியை நினைக்கின்றோம் சித்தத் தாலே”

முடிவு

“கூவிளமே எருக்குதும்பை குளிரு மத்தம்
குவித்தவர்க்கே அருள்பொழியும் குணங்கொள் தெய்வம்
நாவிளமை மனவிளமை ஞானச் செல்வம்
நம்பன்ருட் பேறுபெறும் நற்பால் உண்டார்
கோவிலகம் புகுந்துநின்று குறைகள் தீர்க்கும்
கோமதிநா தனைப்புகழ்ந்து குடிய மூர்த்தி
மேவியிணை முக்கண்ணே விண்டு வாழும்
வியப்பறிந்து பாராட்டு விளம்பி னாரே” (ருஉ)

வாழ்த்து

“வாழியசங் கரலிங்கம் மதியைச் சூடி
வாழியகோ மதியன்னை மகிமை நாட்டி
வாழியங் கரன்திருமால் வயங்கும் மூர்த்தி
வாழியசங் கரன்கோயில் மறைகள் போற்ற

வாழியகோ மதிதிருமுன் வணங்கும் பெண்டிர்

வாழியசங் கரன்திருமுன் வழுத்தும் சான்றோர்

வாழியசங் கரநயினார் வாழும் கோயில்

வாழியசங் கரநயினார் மாலை தானே"

(குறிப்பு): இந்நூல், 'சங்கர நயனார் திருமாலை' என்னும் பெயரினை பெற்றுள்ளது. இதன்கண்ணே, இருபெரும் கடவுள்களாகிய, சங்கரன், நாராயணன் ஆகியோர் பெருமை பாடப்பட்டுள்ளது. சிவனும், மாலும் ஒருருக் கொண்டு உயர்தனிச் சிறப்புடைய பதி சங்கரநாராயணர் கோயில் என்றழைக்கப்படுகின்றது. சமையப் பொறையும் அருட்சிறப்பும் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம், வாழ்த்ப்பாடல் ஒன்றுடன் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8481

சுசீந்திரமாலை

SUSINDIRAMALAI

Pages : 239-251
Lines 36 on a Page
Extent 250 granthas
Complete
God Vishnu of Suchindram has been praised in verses. Praiser, N. Kanagaraja Iyer. Period of this work, 1970.

தொடக்கம்

காப்பு

விநாயகன்

"சீதாணு மாலவனைச் சேருந் திருமாலை

ஓதா வுருகும் உளத்தேற்குப் - பாதார

விந்தம் இதயத்தே மேவும் விநாயகனே

சந்தம் தமிழே தரும்"

அனுமான் துதி

"பனிநீரா லாடிப் பரவசமே யெய்தும்
முனியேயாம் அஞ்சனைசெய் முன்பு - தனியேயான்
வேண்டுவலோ காகுத்தன் விண்டுசிவன் நான்முகனென் (று)
ஆண்டிலங்கை சொற்றான் அவன்"

முடிவு

"செப்பலே முதலா மோசைகள் தெளிந்து
சிறியன பெரியன கவிதை
அப்பனே நினது திருவடி யினைக்கே
அர்ப்பணம் புரியவே துணிந்தேன்
ஒப்பனை புரிதற் கரியபே ரழகா
ஒப்பிலி எய்ப்பிலி உயிரே
மெய்ப்பொருள் எனவே விளங்கிய பரம
வேத்திய தாணுமா லயனே" (குஉ)

வாழ்த்து

"பிரமனே வாழ்க நாரண வாழ்க
பிறப்பிலி பிஞ்ஞக வாழ்க
பரமனே வாழ்க பரம்பொருள் வாழ்க
பழம்பெருந் தெய்வமே வாழ்க
வரமனே வாழ்க வாவை வாழ்க
மண்டல மன்னனே வாழ்க
தரமனே வாழ்க தருமனே வாழ்க
சத்திய தாணுமா லயனே"

பின்னணியுரை:

சாதாரண வைகாசி இருபத்துமூன்று சனிக்கிழமை காலை 6 மணி பிரபந்த துர்த்தி. முதற்பிரதி.
கனகலட்சுமி 6.6.70. ஸ்ரீராமன் நகர், கோட்டையூர் இராமநாதபுரம் நலம் அருள்க.

(குறிப்பு): இந்நூல், 'சுசீந்திர மாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண், கன்னியாகுமரியில் சுசீந்திரம் எனும் ஊரில் வீற்றிருந்து அருள்தரும் பெருமாலின் பெருமை போற்றப்பட்டுள்ளது. இம்மாலையுள், அகலிகைப் பெண்ணின் சாபம் போக்கல் முதலிய கதைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கானராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன.

R.8482

நாகர்கோயில் மாலை

NAGARKOIL MALAI

Pages : 252-258
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Cobras do come, daily, and worship, poet N. Kanagaraja Iyer sings, the god Mangayarbaga Nathan of Nagerkoil. Poet speaks in 51 stanzas.

தொடக்கம்

காப்பு

"நாகமே சூழ்ந்து பணிநாகர் திருக்கோயில்
பாகமே தேவி பரமாக - மாகமே
பூமியே போற்றும் புராரி திருமாலை
சாமியே வேழமுக தா

நீர்நிலை சூழாநின்ற நிமிர்ந்தெழு கோயிற் கண்ணே
பார்நிலை பெறவே காக்கும் பரமேசன் வாழ்கின் றானை
யார்நிலை பெறுவார் என்ப தெளிதிலே விளக்க வந்த
நார்நிலை தெளிக்கும் தேவ நாகநா தாவென் போமே" (க)

முடிவு

"செவியுற வேற்கு நோக்காற் சிவபிரான் திருமுன் வந்தே
அவியுணு மமரர் காணா அமுதமே போலும் வாக்கை
குவிகையோ றசைத்த யண்பர் கும்பிடு நாகர் கோயில்
சவிதர ஒளிருந் தேவே சரணமே நல்கு வாயே" (ரு0)

வாழ்த்து

"வாழிய நாகர் கோயில் வாழிய சேர நாடு
வாழிய நாக நாதன் வாழிய நாக பக்தர்
வாழிய வடநூல் வேதம் வாழிய தமிழின் வேதம்
வாழிய நாகர் கோயில் மாலையும் வளத்தி னாலே"

பின்னணியுரை:

சாதாரண வைகாசி உங. சனிக்கிழமை மாலை 4 மணி இங்கு இப்பிரபந்தம் முதற்பிரதி பூர்த்தி ஆகிறது.

(குறிப்பு): இந்நூல், 'நாகர்கோயில் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, நாகர் கோயிலில் வீற்றிருந்து அருளும் மங்கையர் பாகநாதனாம் நாகநாதனது அருட்சிறப்புப் பாடப்பட்டுள்ளது. நாகங்கள் சூழவந்து நாள்தோறும் பணிபூணும் சிறப்பினை உடையதாக கோயில் வருணிக்கப்பட்டுள்ளது. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 51 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8483

அநந்த பத்மநாப மாலை

ANANDHA PADMANAPA MALAI

Pages : 259-266
Lines 32 on a Page
Extent 170 granthas
Complete
Ananthapatmanapa of Trivandrum has been presented with a garland of poems. Presenter, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"திருவனந்த மாநகரச் சீரார் கடலும்
கருவனந்தம் கண்ட கணமும் - உருவனந்தம்
உள்ளமுறக் கொள்ளும் பெருமாளைக்
கள்ளமறு நெஞ்சகமே காண்

எவ்வுயிர்க்கும் காப்பருளும் எம்பெருமான் மாலைக்கே
எவ்வுருவக் காப்பை இசைப்பேனே - அவ்வுருவம்
எல்லாம் அவன்மயமென் றெண்ணி யிறைஞ்சுகின்றேன்
சொல்லால் இசையேன் துணிந்து"

முடிவு

"காணாரும் கண்டாரும் கருதாரும் கேளாரும்
கோணாத வுளத்தானே கும்பிடவே கூடுகின்றார்
வேணாடு கோல்செலுத்தும் வேந்தனையே யடிமைகொண்ட
நாணாளு மனந்தபத்ம நாபனலம் விளக்குதியே".

வாழ்த்து

"வாழிதிரு வனந்த-வனம் வாழிதிரு வனந்தபுரம்
வாழிதிரு வனந்தனிலை வாழிதிருப் பெருங்கோயில்
வாழிதிரு வடிபணியும் மன்னர்பிரான் திருமரபு
வாழிதிரு வனந்தனடி மலர்சாத்து மாலிகையே".

(குறிப்பு): இந்நூல், திருவனந்தபுரம் 'அனந்தபத்மநாப மாலை' என்னும் பெயரினை உடையது இதன்கண், திருவனந்தபுரத்தில் பெருமையுடன் அருளும் அனந்தபத்மநாபனின் பெருமை கூறப்பட்டுள்ளது. உறங்குகின்ற அனந்தனின் உயர்வினையும், உலகத்தை உய்விக்கும் பாங்கினையும் பாடல்களால் மாலையாக்கிச் சூட்டி மகிழ்கின்றார் இயற்றிய திரு. நா. கனகராசன் அவர்கள். முழுவதும் உள்ளது.

R.8484

குருவாயூரப்பன் மாலை

KURUVAYURAPPAN MALAI

Pages : 267-279
Lines 36 on a Page
Extent 250 granthas
Complete
52 stanzas are in praise of Guruvayurappa of Guruvayur (Kerala State). Sung by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"குருவா யூரப்பன் குணக்கடலிற் மூழ்கும்
திருவாளர் கூட்டத்தே சேரும் - பெருவாழ்வு
நாயடியே னெய்த நயக்கும் பெருமாளைத்
தூயநெஞ்சே சென்று தொழு"

வேண்டுகோள்

“விநாயகனை வேண்டுவது வேண்டும் நெஞ்சம்
விண்டுவன்றோ கண்ணனென வினிக்கும் ஆன்மா
அநாயகனா மானந்தன் அபூர்வ மூர்த்தி
ஆலயத்தை ஒருமுறையே அடைந்து சூழ்ந்தேன்
சநாதனமாம் தருமத்தைத் தாங்கும் தேவன்
தன்மயமா யெனையுருக்கச் சற்றே நின்றேன்
மனாதிகளால் அணுகரிய வாசு தேவன்
வருககுரு வாயூர்க்கே வருளகென் றானே”

முடிவு

வாழ்த்து

“காலமெலாம் அன்புசெயும் கணங்கள் வாழ்க
கண்ணனையே நினைத்துருகும் கவிகள் வாழ்க
ஞாலமெலாம் கண்ணனன்பு நன்கு வாழ்க
நன்மக்கள் மனக்கோயில் நயப்பான் வாழ்க
சீலமுள்ள பக்தகண சித்தத் துள்ளே
சீதரன்கோ விந்தனின்று சிறப்ப வாழ்க
கோலமலி யுருவமுள கோமான் வாழ்க
குருவாயூர்க் கண்ணபிரான் கோயில் வாழ்க

கலியுகத்தின் தொடக்கமறி கண்ணன் வாழ்க
கடல்நடந்து குருவாயூர் கண்டான் வாழ்க
ஒலியிசைக்கும் குழலுவந்த ஒருவன் வாழ்க
உளமுருக விசைக்கின்ற உம்பல் வாழ்க

மெலிவகற்றி எளியவரை விழிப்பான் வாழ்க

விதியினையும் மாற்றிவைக்கும் விமலன் வாழ்க

வலி வளர்த்து மனம்புகுந்த வள்ளல் வாழ்க

வசுதேவன் திருக்குமரன் வாழ்க வாழ்க"

(குறிப்பு): இந்நூல், 'குருவாயூரப்பன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குருவாயூரில் அமர்ந்து வரம்வேண்டி வருவோர்க்கு அருள்மழையைத் தருகின்ற இறைவனின் பெருமை இயம்பப்பட்டுள்ளது. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது. மொத்தம் 52 பாடல்கள் உள்ளன.

R.8485

திருசிவபேரூர் வடக்குநாதன்மாலை

THIRUSIVAPERUR VADAKKUNATHANMALAI

Pages : 280-286
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Vadakkunatha of Thirucchivaperur (Kerala State) has been invoked by N. Kanagaraja Iyer in 53 stanzas. Invoked in 1970.

தொடக்கம்

காப்பு

"வடக்கு திசை நோக்கி மக்களையே வாழ்த்தும்

குடக்குத்திருச் சிவபேர் கொள்ளூர் - இடத்தே

இருக்கும் பெருமாற்கே இன்றமிழின் மாலை

இருக்கோ டிசைப்போம் இருந்து"

பிரபந்தம்

"உருக்கிய மயமே யாக உருகிய நெய்யே போர்த்துத்
திருச்சிவ பேரூர் வாழும் தெய்வத்தை வணங்குகின்றோம்
அருச்சிவ மென்று முன்னம் அருவுரு வாயும் நாட்டும்
திருச்சிவ மிதயத்தேறித் திருவருள் வளர்க்கு மன்றே

பார்போல் இறுகுநெய்யை பவித்திர மேனி போர்த்து
நீர்பாலே முதலாம் ஆட்டம் நெஞ்சுற நிகழ்த்திக் கொண்டு
கார்கோம் குடநாட்டின்கண் கண்ணுதல் காட்சி நல்கும்
சீர்சாலும் வடக்குநாதன் திருச்சிவ பேரூரானே"

முடிவு

"முக்தியே யருளவல்ல மூர்த்தியை வணங்கு மாந்தர்
பக்தியை ஞானம் தன்னைப் பரமற்கே பரமற்கே சமர்ப்பிக் கின்றார்
சக்தியை அருள்க வென்றார் சதாயுசு தருகவெண்ணார்
சித்தியை அருள வேண்டார் திருச்சிவ பேரூரானே" (ருஉ)

வாழ்த்து

"மலையாள நிலமும் வாழ்க மலையாள மொழியும் வாழ்க
மலையான ஞானம் வாழ்க மலையாள பக்தி வாழ்க
மலையாள நாடுகண்ட மாதவன் இவனும் வாழ்க
மலையாள திருச்சூர்க் கோயில் மருவி யுலகில் வாழ்க"

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய ஆண்டு மாசிமாதம் உகூ வியாழக்கிழமை 12.3. 70. காலை 5.30 மணி ஸ்ரீராமநகர் கோட்டையூர்.
இரண்டாம் பிரதி சாதாரண வருடம் வைகாசி மாதம் 25 சோம வாரம் பிற்பகல் 4 மணி 8.6.70. மாலை 4 மணி கனகலட்சுமி ஸ்ரீராமநாகர்.

(குறிப்பு): இந்நூல், 'திருச்சிவபேரூர் வடக்குநாதன் மாலை' என்னும் பெயரினை உடையது, இதன்கண்ணே, மலையாள வளநாட்டில் நிலையானபுகழ் கொண்டு அளவில்லா அருள்வழங்கும் சிவபேரூர் வடக்குநாதனின் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. நெய்போர்த்த மூர்த்தியின் நீர்மையும், இறைவியை அகத்தே கொண்ட இயல்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8486

வைக்கம் மகாதேவ மாலை

VAIKKAM MAHADHEVA MALAI

Pages : 287-293
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Vaikkam is a place in Kerala State; Mahadeva of Vaikkam has been sung here by N. Kanagaraja Iyer. We have 53 stanzas in toto. Date, 1970.

தொடக்கம்

காப்பு

"வையகமே வாழ்த்துரைக்கும் வைக்கநகர் மாதேவன்
செய்யமலர்ச் சேவடியில் சேரவே - செய்யுளாய்
யாக்கும் தமிழ்மாலைக் கேரம்பன் இன்னருளே
பூக்கும் பொருளும் புகன்று"

பிரபந்தம்

“உள்ளத்தைக் கொள்ளைகொண்டே உயிர்க்கண மனைத்து மாளும்
கள்ளத்தை யன்றிவேறு கபடமே யறியாத் தெய்வம்
வள்ளத்தை யூர்ந்து மாந்தர் வருமாறு வைக்கம் வாழ்ந்தே
மள்ளர்க்கும் நல்வாழ் வீயும் மகாதேவன் சரணம் வாழ்க” (க)

முடிவு

“மூவரே பாடி யேத்தி மொழிந்தன பதிகம் ராடேன்
தேவரே துதித்த வேத சிரமொழி இசைக்க மாட்டேன்
யாவரே நினது பேரை இதயத்தில் இசைத்தார் தேறேன்
தேவனே வைக்கத் தப்பா சிவமயம் சிறக்கச் செய்வேன்”(ருஉ)

வாழ்த்து

“வைக்கம்வா ழப்பனாகும் மகாதேவன் பாதம் வாழ்க
முக்கணான் கயிலைவாழும் முதல்வனே நெஞ்சுள் வாழ்க
மக்களே தேவராக்கும் மகாதேவன் அருளே வாழ்க
மைக்கணி இறைவியோடும் மனத்தனி சிவமே வாழ்க”

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய வருடம் பங்குனி மாதம் இரண்டாம் நாள் ஞாயிறு பிற்பகல் இரண்டு மணிக்கு மதுரையில் சங்கரன் அகத்திலே பூர்த்தி. 15.3.70.

(குறிப்பு): இந்நூல், ‘வைக்கம் மகாதேவமாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண் மலையாள நாட்டில் விளங்கும் வைக்கம் நகரில் தக்கோனாய் அமர்ந்து தன் அடியவர்க்கு அருள்வழங்கும் மகாதேவனின் பெருமை பாடப்பட்டுள்ளது. அன்பினால் உன்னை வந்து அனுதினம் தொழுதிட வேண்டுமென்று ஆசிரியர் திரு. நா. கனகராசன் உள்ளம் உருக வேண்டுகின்றார். முழுவதும் உள்ளது. ஆசிரிய விருத்தப்பாடல்களின் அமைந்துள்ளன. மொத்தம் வாழ்த்துப்பாடல் ஒன்றுடன் 53 பாடல்கள் உள்ளன.

R.8487

திருவரங்கம் அழகிய மணவாளன் திருமாலை

THIRUVARANGAM ALAGIYA MANAVALAN THIRUMALAI

Pages : 294-301
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
God Azhakiya Manavalan of Srirangam has been extolled; It has taken 53 stanzas for this for N. Kanagaraja Iyer. Date, 1970.

தொடக்கம்

காப்பு

"திருவரங்க நாயகியின் தெய்வமலர் வாழும்
திருவரங்க நாயகனைத் தேடிக் - கருவரங்கம்
மீளாத வாழ்வுபெற வேண்டும் தமிழ்மாலை
ஆளா அருளும் அவன்"

குருகூரர்

"அவனருளை வேண்டி அவன்றாள் வணங்கும்
தவனமையு நெஞ்சே தமிழால் - அவனுருவைச்
சாற்றும் குருகூரர் தாண்மலரிற் சென்னிவைத்துப்
போற்றும் திருப்பணியைப் பூண்"

சேனை முதலியார்

"ஆனைமுக னாதியராய் அன்பர்கண மாண்டருளும்
சேனைமுத லாவார் திருவடியே - தானை

மடக்கி வணங்குவேய் வாக்கும் வளமும்
தொடக்கி யருள்க துணிந்து"

முடிவு

"வேண்டுகின்றேன் வைகுந்தம் விண்டுபதம் அஃதன்றே
ஈண்டுகின்றேன் பரமபதம் எம்பெருமான் இருக்கின்றான்
தேண்டுகின்றேன் திருவரங்கம் திருவீதி திரிகின்றேன்
ஆண்டுநின்றே அருளுகின்றாய் அரங்கநகர் அம்மானே".
(ருஉ)

வாழ்த்து

"வாழியரோ உலகமெலாம் வாழியரோ மறைகளெலாம்
வாழியரோ வைகுந்தம் வாழியரோ திருவரங்கம்
வாழியரோ திருவணைமேல் வளர்ந்தருளும் திருக்கோலம்
வாழியரோ திருவரங்க மணவாளர் மாலிகையே"

பின்னணியுரை:

முதற்பிரதி கோட்டையூர் நடராசர் அகம் கனகவல்லி ஸ்ரீராமநக ர் 4.3.70. காலை 6 மணி.
இரண்டாம் பிரதி சாதாரண வருடம் வைகாசி மாதம் 26 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்குப் பூர்த்தியாயது. 9.6.70.

(குறிப்பு): இந்நூல், 'திருவரங்கம் அழகிய மணவாளன் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருமாலின் சிறப்பியல்புகளும் அடியவர்களின் மனநிலையும் நன்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன. உடலுருக உளமுருக உரியவரை அரவணைக்கும் அரங்கநாதன் கொடுமைக்கு நெடும்பகையாய் விளங்குகின்றான், என்று ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. பாடியுள்ளார். மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8488

திருவானைக்கா சம்புலிங்க மாலை

THIRUVANAIKKA SAMBULINGAMALAI

Pages : 302-309
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
A poetic garland on Jambulinga of the town Tiruvanaikka knitted by N. Kanagaraja Iyer. Total number of songs present 53. Period of writing, 1970.

தொடக்கம்

காப்பு

"அப்புலிங்கம் சம்புலிங்கம் ஆனைக்கா வாழிலிங்கம்
இப்புலிங்கம் வாழ்வினகம் தலிங்கம் - செப்பிலிங்கம்
மாலைபுனை மெய்ப்பணிக்கு வாக்கருள வேழமுகன்
காலைமனம் வைப்போம் கனிந்து"

வேண்டுகோள்

"முகிலாண்ட இந்திரனே முதலோர் வேண்ட
முத்தமிழும் வளர்த்தகும்ப முனிவன் தந்த
நகிலாண்ட காவேரி நதியின் பாங்கர்
நரருலகம் சுரருலகம் நலமே யெய்த
அகிலாண்ட நாயகியே டரசு பூணும்
அப்புலிங்க மாயமைந்த ஆனைக் காவின்
பகலாண்ட இரவாண்ட பரமன் பாதம்
பக்தியோடு பணிந்துருகிப் பாடு வோமே"

முடிவு

"சக்தி யழிந்தது கோயிலி லென்பார்கள் சக்தியிலா
பக்தி வளர்ந்தது கண்கூடு என்ச்சிலர் பாடுவரே
உத்தி சிறந்த சாதிமதப் பிரிவு ஒடியது
முக்தி பிறந்ததோ ஆனைக்கா வீச பொழிந்தருளே" (ருஉ)

வாழ்த்து

"வாழிய ஆனைக்கா வாழ்வுறு மண்ணல் மலரடிகள்
வாழிய தேவன் வழிபாடு பூண்பாள் மலர்ப்பதமே
வாழிய பண்டித கோட்டி வரன்முறை வாழ்வுறவே
வாழிய ஆனைக்கா நாயகன் மாலை மணமுறவே"

பின்னணியுரை:

முதற்பிரதி கனகலட்சுமி இராமநகர் கோட்டையூர் 4.3.70. மாலை 4. மணி.
இரண்டாம் பிரதி கனகலட்சுமி இராமநகர் கோட்டையூர் 10.6.70. புதன்கிழமை காலை 8 மணி. சாதாரண வருடம் வைகாசி உஎ எழுதி முடிந்தது.

(குறிப்பு); இந்நூல், 'திருவானைக்கா சம்புலிங்கமாலை' என்னும் பெயரினைப் பெற்றுள்ளது. இதன்கண்ணே, ஆனையொன்று காவல்காத்த ஆண்டவன் சம்புலிங்கம் பெருமை பாராட்டப்பட்டுள்ளது. அவ்வானைகாத்தபதி 'திருவானைக்கா' எனும் பெயரை பெற்றது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8489

திரிசிரபுரம் தாயுமானவன் மாலை

THIRISIRAPURAM THAYUMANAVAN MALAI

Pages : 310-323
Lines 36 on a Page
Extent 200 granthas
Complete
God Tayumanavan ('also became the mother') of Tiruchi city has been sung here; Author, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"முக்குடுமி யுள்ள முதியமலை மேலிருக்கும்
முக்கணனைத் தாயான மூர்த்தியினை - இக்கணமே
வாயில் வாழ்பிள்ளை மலையுச்சிப் பிள்ளை - துணை
வாயவே வாழ்த்தும் மனம்"

பிரபந்தம்

"திருச்சிராப் பள்ளித் திருமலை யுருவாய்த்
திகழுமெம் மிறைவனே சிவனே
உருச்சிராப் பள்ளி உச்சியி னளவும்
ஓங்கிய மகாலிங்க சிவமே
அருச்சிராப் பள்ளி அகத்திலும் புறத்தும்
அன்பருக் கருள்செயும் அரசே
தருச்சிராப்பள்ளி தரிசனம் தருவாய்
தயைமிகு தாயுமா வனே" (க)

முடிவு:

"தனிப்பரம் பொருளே மட்டுவார் குழலி
தவத்தினாற் கனிந்துறு கனியே
நுனிப்பெருங் கிளையில் அழகுற விளங்கும்
நுண்ணிய தண்ணிய தளிரே
இனிப்பெருந் திறமே இத்தகைத் தெனவே
எளியனேன் அறிவுறப் புரிந்தாய்
இனிப்பிறந் தளியேன் உடலிடை யுழவேன்" (க0)

வாழ்த்து

"மறைபுகழ் சிறப்பார் திருச்சிராப் பள்ளி
மலைவளர் திருத்தனி வாழ்க
இறைமையே விளக்கும் மட்டுவார் குழலி
எம்மனை பதமலர் வாழ்க
முறைமையே செலுத்து முச்சிமேற் பிள்ளை
முகவயிற் பிள்ளையும் வாழ்க
நிறைவரும் தாயு மானவெம் பெருமான்
நிலமகள் மகிழவா ழியவே"

(குறிப்பு): இந்நூல், 'திரிசிரபுரம் தாயுமானவன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண் திரிசிரபுசம் எனும் ஊரில் வீற்றிருந்து வருவோருக்கெல்லாம் அருள்வழங்கும் தாயுமானவன் எனும் பெயர்பூண்டிருக்கும் இறைவனின் பெருமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8490

தஞ்சை இராசராசேச்சுரம் பெருவுடையார் மாலை

THANJAI RAJARAJAESWARAM PERUVUDAIYAR MALAI

Pages : 324-330
Lines 32 on a Page
Extent 120 granthas
Complete
53 stanzas are available here to speak about Peruvudayan of Tanjore; stanzas have been written by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"தஞ்சைப் பெருவுடையார் தாண்மலர்மேற் சென்னிவைத்து
நெஞ்சைத் திருப்பணியே நேர்கின்றேன் - அஞ்செழுத்தை
உன்னித் திருமாலை யோதுகின்றேன் மூத்தபிள்ளை
முன்னிற்கு மன்றே முனைந்து".

பிரபந்தம்

"இம்மையொடு மறுமையிலும் ஏனையரைப் பணியாமே
அம்மையொடு மப்பனென அமைந்திருளும் தஞ்சைநகர்
மும்மையுரு மூர்த்தியினை முறையானே பணியேற்றை
இம்மையிலே அருளுகின்றான் இராசரா சேச்சுரனே (க)

சோழர்குலத் திருப்பணிகள் தோன்றுதமிழ் நிலத்தகத்தே
யாழறியும் பாணரோடு மினியதமிழ்த் தேவாரம்
கேழமையப் பாடிவந்த கெழுதகைமைச் சம்பந்தர்க்கு
ஈழவெற்றித் தந்தபிரான் இராசரா சேச்சுரனே" (உ)

முடிவு

"குரவருளை இளமையிலே குறிக்கொண்டு பெற்றில்லேன்
திருவருளை விளக்கவல தேசிகரை இனுமதியேன்
உருவருளை விளக்குகின்ற உத்தமனே தஞ்சையினாய்
இருவருளே ஒருமைபுகல் இராசரா சேச்சுரனே" (ருஉ)

வாழ்த்து

"இராசரா சேசுவரம் எனும்பெயர்கொள் தலம்வாழ்க
இராசரா கேசுவரன் எனுமிறைவன் பதம்வாழ்க
இராசரா சேசுவரி எம்மிறைவி அருள்வாழ்க
இராசரா சேசுவரன் ஏற்றதமிழ் வாழியவே".

பின்னணியுரை:

முதற்பிரதி. சௌமிய மாசி 22 வியாழன் பிற்பகல் 3 மணி. 5.3.70. கனகலட்சுமி, ஸ்ரீராமநகர் கோட்டையூர் இராமநாதபுரம் மாவட்டம்.

இரண்டாம் பிரதி. சாதாரண வைகாசி உஅ வியாழன் இரவு 7 மணி. 11.6.70. இரவு 7 மணி ஸ்ரீராமநகர் கனகலட்சுமி, கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'தஞ்சை இராசராசேச்சுவரம் பெருவுடையார் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே தஞ்சை நகர்ப் பெரிய கோயிலில், நெஞ்சை உருக்கும் நிமலனாய் விளங்கும் பெருவுடையாளின் பெருமை பாடப்பட்டுள்ளது. மலையில்லா நகரத்தில் மலையொன்றைக் கொண்டு வந்து கோவிலாகக்கட்டி இறைவனைக் குடியிருக்க வைத்தான் இராசராசன் அவ்வரசனின் புகழை அவனிக்கு அறிவிக்கும் புகழ்க்கோயில் அது. அவ்விறைவனுக்குக் கவியரசர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. பாமாலை சூட்டிப் பார்க்கின்றார். மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8491

கும்பலிங்கன் திருமாலை

KUMBALINGAN THIRUMALAI

Pages : 331-342
Lines 36 on a Page
Extent 170 granthas
Complete
Another garland of Tamil songs; This time on Kumbalingam, a form of Siva. Author. N. Kanagaraja Iyer. 53 songs have been utilised for this garland.

தொடக்கம்

காப்பு

"கும்பலிங்க நாமமுள கும்பேசன் மெய்யருளை
நம்பனருள் வாய்ப்பால் நணுகவே - கும்பமுனி
தந்ததமிழ் மாலைசொலத் தந்திமுகத் தெந்தைகழல்
சிந்தை சென்னி வைப்பேம் செறித்து"

பிரபந்தம்

"பெற்ற தாயினும் பெரிய தாயெனப்
பிரிவி லாதமெய்த் தந்தை தானென
உற்ற யாரினும் உற்ற பற்றென
உள்ள வள்ளலே கள்ள மில்லியே
வெற்றம் வேண்டுவோர் வேண்டு கோண்முறை
விரைவி னிநிறை வேற்று வாயெனக்
குற்ற மற்றவர் கூறு கின்றனர்
கும்ப கோணம்வாழ் கும்ப லிங்கமே" (க)

முடிவு

“நால்வர் கேட்கவே ஞான நூலினை
நம்பி மோனமா நல்கி னாயரோ
நால்வர் கேட்கவே ஞான மூர்த்தியாம்
நானி லத்திலே நன்று பேசவே
நூல்கள் போற்றிய நுண்மை வேதமே
நூறு மார்க்கமாய் நுவறு மெய்ம்மையே
கோல்பிடித்த கைகொண்டு கூறினாய்
கும்ப கோணம் வாழி கும்ப லிங்கமே”

வாழ்த்து

“பொன்னி மாநதி பொன்னை நல்குக
பூமி யெங்கணும் பொலிவு தோன்றுக
சென்னி நாட்டிலே செல்வம் வாழிய
சிவம் நிம்பிய தேயம் வாழிய
பன்னி யோடுறு பரமன் பாதமும்
பக்த கோட்டியும் படியில் வாழிய
மன்னி வாழவுறு கும்ப கோணமும்
மாலை யேற்றுநல் வாழ்வு வாழ்கவே”.

(குறிப்பு): இந்நூல், ‘கும்பலிங்கன் திருமாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குடந்தை எனும் கும்பகோணத்தில் வீற்றிருந்தருளும் கும்பலிங்கனின் பெருமை கூறப்பட்டுள்ளது. காவிரிக் கரையினில் உள்ளக் காவிரி நகரம். அந்நகர இறைவனும் கும்பலிங்கனுக்கு ஆசிரியர் திரு. நா. கனகராசன், பாமாலை ஒன்று சூட்டிப் பணிகின்றார். மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8492

திருக்குடந்தை நாகநாதேசுவரன் திருமாலை

THIRUKKUDANTHAI NAGANADHESWARAN THIRUMALAI

Pages : 343-349
Lines 32 on a Page
Extent 350 granthas
Complete
Naganatheswaran of Kumbakonam has been spoken at length here; spoken by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"திருக்குடந்தை தென்பகுதி சீர்பெறுமாக் கோயில்
இருக்குமெந்தை நாகநா தேசன் - உருக்கலந்த
ஏற்றம் புகலும் எழில்மாலை யேரம்பன்
மாற்றம் வழங்க வரும்"

பிரபந்தம்

"குடம்பையுட் புள்ளைக் காக்கும் குடந்தையம் பதிமுக் கண்ணான்
உடம்பினுள் உயிரை யோம்ப உள்ளுயி ருருவம் பூண்டான்
மடம்பல விளங்கா நின்ற மாநகர் மத்திய தேசம்
நபம்புரி சபையி னோங்கும் நாகவீச் சுரமா மன்றே (க)

நிருத்தமே விளக்கம் புக்க நித்தியன் மண்ட பத்தை
உருத்தகு தேரே யாக்கி யுருளைகள் அமைத்த கோயில்
திருத்தகு பொன்னி பாயும் திருத்தலம் குடந்தைக் கண்ணே
எருத்தனை யூர்வான் நாக வீச்சுரன் கோயி லாமே" (உ)

முடிவு

"அணுவுளே அணுவா நின்றான் அசலமே லசல மானான்
கணுவுளே முத்தாய் நின்றான் கரும்புளே சாறும் ஆனான்
எணுமுளே யுள்ளத் தேறி இலங்குறும் நாக நாதன்
உணுமண வருள்வ தன்றி உயிர்நிலை அருள்கின் றானே"

(ருஉ)

வாழ்த்து

"கும்பகோ ணத்தின் தெய்வம் கும்மலிங் கேசனம் வாழ்க
நம்பனும் நாக நாதன் நலங்களை யருளி வாழ்க
செம்போனே போலத் தோன்றும் தேவியின் பாதம் வாழ்க
அம்பர நாக நாதன் அருள்புகல் மாலை வாழ்க"

(குறிப்பு): இந்நூல், 'திருக்குடந்தை நாகநாதேசுவரன் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குடந்தை எனும் கும்பகோணத்தில் கோயில் கொண்டிருக்கும் நாகநாதேசுவரனின் பெருமை பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது. மொத்தம் 55 பாடல்கள் உள்ளன.

R.8493

ஆராவமுதன் சாரங்கபாணி திருமாலை

ARAVAMUDAN SARANGAPANI THIRUMALAI

Pages : 350-356
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Sarangapani is a state of Vishnu who is possessing bow and arrow. Sarangapan i of Kumbakonam has been elevated here in verses by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஆரா வமுதாய் அமைசார்ங்க பாணியினை
ஈரா யிரம்பாடல் ஏத்தலாம் - சீரார்
திருமாலை யைம்பது செப்பக் குருகூர்
வருமாலை வேண்டும் மனம்"

பிரபந்தம்

"விழவார் கோயில் வளர்கின்றாய் வில்லார் திருக்கைப் பெருமானே
உழவார் நிலத்துக் குயிரருளும் உயர்கா விரியின் பணிபூண்டாய்
குழகார் எழிலின் கோலத்தாய் குணத்தின் கடலே அருளான
அழகார் நகரத் தரசாளும் ஆரா வமுதே அருள்வாயே" (க)

முடிவு

"பரம பதத்தை அளிக்கவலாய் பரவும் தமிழின் சுவைதெளிவாய்
சிரம பதத்தை மாற்றுதியே திருவை குந்தம் சேர்ப்பிப்பாய்
சரம பதத்தே முன்வருவாய் சரணா கதனென் றேற்பாயே
அரம பதத்தை அளியேலே ஆரா வமுதே அருள்வாயே"

வாழ்த்து

"வாழப் பிறந்தார் மனம்புகுந்து வாழ்ந்து சிறப்பான் வாழியவே
ஆழத் தழுங்கும் அவர்க்குதவும் ஆரா வமுதன் வாழியவே
போழத் துணிந்த வினையார்க்கும் போகம் அருள்வான் வாழியவே
கேழிற் சிறந்த திருக்குடந்தை இளரும் பரமன் வாழியவே"

(குறிப்பு): இந்நூல், 'ஆராவமுதன் சார்ங்கபாணி திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருக்குடந்தை எனும் கும்பகோணத்தில் கோயில் கொண்டிலங்கும் திருமாலின் பெருமை பாடப்பட்டுள்ளது. அத்திருமால் ஆராவமுதன் எனும் பெயரோடு அடியவர்க்கு அருள் வழங்குகின்றான். கையிலே வில்லும் அம்பும் உடையவன் என்பதால் சார்ங்க (வில்) பாணி என்றும் அழைக்கப்படுகின்றான். இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8494

சக்கரத்தாழ்வான் மாலை

CAKKARATHTHAZHVAN MALAI

Pages : 357-363
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Chakkarattazhvan is a mother posture of Vishnu; This is rendered at Kumbakonam temple to the devotees. Poet N. Kanagaraja Iyer delineates about this 'azhwar' is verses here.

தொடக்கம்

காப்பு

"அக்கரத்தைக் காண அருளும் திறமுள்ள
சக்கரத் தாழ்வான் தமிழ்மாலை - தக்கவணம்
ஆரத் திருக்குருகூர் ஆழ்வார் திருவருளைச்
சேரப் பெறுவேம் சிறிது"

பிரபந்தம்

"திருவாழி வாழ்வானை திருக்குடந்தை வாழ்வானை
அருளாழி இன்னதென அறிவிக்கும் திருவானை
உருவாழி ஞாயிறுவேல் ஒளிபொருந்து செய்யானை
மருளாழி கடந்துய்ய மனமார வாழ்த்துவமே"

முடிவு

"அமுதமுண அமரகணம் அவாவிமுயன் றடைந்தாலும்
அமுதமுள கலசநிலை யறிந்ததனைக் காக்கின்றான்
அமுதமய குணமுடைய ஆழியான் என்பாரே
அமுதமவன் மந்திரமாய் அமைந்துளது குடந்தையிலே"
(ருஉ)

வாழ்த்து

"சங்காழி கதை கட்கம் தாங்குபிரான் தாள்வாழ்க
மங்காத வாழ்வருளும் மாமகளார் பதம்வாழ்க
பொங்கார மாழிபுனை பூமிமகள் பதம்வாழ்க
அங்காரும் சக்கரத்தி னாழ்வானும் வாழியரே

செல்வமொடு கல்விமலி திருக்குடந்தை நகர்வாழ்க
நெல்வகைபி னறம்புரியும் உத்தமர்நற் குலம்வாழ்க
நெல்வதையே மதியாத வெற்றியினார் செயல்வாழ்க
நல்வழியே நயந்துறையும் நங்கையரும் வாழியரே"

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய மாசி 2ங. செவ்வாய் மாலை 6 மணி. ஸ்ரீரா மநகரம், கோட்டையூர்.
இரண்டாம் பிரதி சாதாரண ஆனி. 2 செவ்வாய் பிற்பகல் 1 மணி. ஸ்ரீராமநகரம். 16.6.70.

(குறிப்பு): இந்நூல், 'சக்கரத்தாழ்வான் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குடந்தை எனும் கும்பகோணத்தில் கோயில் கொண்டிலங்கும் சக்கரத் தாழ்வானின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. ஐம்படைகள் தாங்கி யருள்கின்ற திருமால் அழியோடு காட்சிதருவது கும்பகோணத்தில். இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8495

திருக்குடந்தை இராமாலய மாலை

THIRUKUDANTHAI RAMALAYA MALAI

Pages : 364-376
Lines 36 on a Page
Extent 375 granthas
Complete
Rama is the extolled god here; Landed by N. Kanagaraja Iyer is 53 songs. This has been composed at Kottaiyur (near Karaikkudi).

தொடக்கம்

காப்பு

"சிற்பச் சிறப்பால் திகழும் திருக்கோயில்
பொற்பப் புகழ்ந்த புகழாளன் - அற்புத
சாரித் திரனும் தசரத ராமனிசை
பாரித் துரைப்பாம் பரிந்து

இராமகாதை யோவியத்தால் இன்பம் பெருக்கும்
இராமபிரான் கோயில் இறைமை - பராவரமே
ஏற்ற தறிந்தே இறைஞ்சிப் புகழ்மாலை
போற்ற தரிதப் புவி"

முடிவு

"அயோத்திமா நகரம் யாங்குள தறியேன்
ஆங்குநீ வாழ்ந்தமெய்ச் சரிதம்
அயோத்திமா நகரில் அரசையே பொறுத்த
அழகினை நினைப்பிப்ப தறியேம்

அயோத்தி வைகுண்டம் எனப்பெரும் புலவர்
அகமகிழ்ந் துரைப்பது மறியேம்
அயோத்தியை இதயக் கமலத்தி லமைத்தேம்
ஆண்டருள் தசரத சுதனே" (ருஉ)

வாழ்த்து

"தசரத சுதனும் திருப்பெயர் விழைந்த
சத்திய நாயகன் வாழ்க
மசரத மனைய வாழ்வுள அரக்கர்
மடியவே வருபவன் வாழ்க
நிசரத கணைகள் அறம்வளர்ப் பதற்கே
நீட்டிய நிருபமன் வாழ்க
கசரத துரக பதாதிக ளுடைய
காகுத்தன் அடிமலர் வாழ்க"

பின்னணியுரை:

முதற்பிரதி சாதாரண ஆனி 3 புதன்கிழமை காலை 4.30 மணிக்கு இங்கு எழுதப்பட்டது. ஸ்ரீராமநகரம்; கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'திருக்குடந்தை இராமாலயமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருக்குடந்தையில் கோயில் கொண்டு வாயிலில் வந்தார்க்கும் அருள்வழங்கும் இராமபிரானின் பெருமை பாடப்பட்டுள்ளது. இராமாயணச் செய்திகள் பல பாடலின் பொருளாக வந்துள்ளன. இன்னும் பிற அரிய செய்திகளும், அவராரப் பெருமைகளும், அருள் வழங்கிய மாட்சியும் கூறப்பட்டுள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8496

திருவிடை மருதூர் மகாலிங்கமாலை

THIRUVIDAI MARUDUR MAHALINGAMALAI

Pages : 377-384
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Mahalingam (Siva) of Tiruvidaimarudur (Tanjore Dt.) has been spoken at length here in 61 verses. Speaker, N. Kanagaraja Iyer. Place and Period of the piece: Kottayur (Ramnad Dt.), 1970.

தொடக்கம்

"இடைமருதூர் கோயில்கொளு மெந்தைபிரான் மாலை
நடைமருவு பைந்தமிழ னாட்டத் - தொடைமருவு
பூந்தமிழை நல்குகென்று போற்றுகின்றேன் ஏரம்ப
வேந்தனையே வேண்டியடி வீழ்ந்து"

பிரபந்தம்

"உருவுடை மருத வாணன் ஒப்பிலா ஆற்றல் உள்ளான்
அருவுடை அருளின் மூர்த்தி அருமறை புச்சி மேலான்
கருவிடை மயங்கா நின்ற கணங்களைக் கரைக்கண் சேர்க்கும்
திருவிடை மருதூர் வாழும் தேவனைப் பழிச்சு வோமே" (க)

முடிவு

"மனந்தனை மலரே யாக்கி வழிபடு மெய்யன் பர்க்கே
தனந்தனை அருளா நின்றான் தருமமே தழைக்கச் செய்வான்
இனந்தனை யிகழ்வார் நெஞ்சில் இருப்பினும் வெளிப்பா டில்லார்
தினந்தனை வணங்கச் செய்யும் திருவிடை மருதூ ராரே". (சா0)

வாழ்த்து

"திருவிடை மருதூர்த் தெய்வம் சிவமகா லிங்கம் வாழ்க
திருவிடை மருதூர்த் தேவி திசையெலாம் சிறப்ப வாழ்க
திருவிடை மருதூர்க் கோயில் சிவமயம் விளக்கி வாழ்க
திருவிடை மருதூர்க் கொண்ட தேவராம் வேதம் வாழ்க"

பின்னணியுரை:

முதற்பிரதி. கனகலட்சுமி ஸ்ரீராமநகர் கோட்டையூர் சௌமிய மாசி 25 ஞாயிறு மாலை 8.30 மணி 8.3.70.
இரண்டாம் பிரதி. சாதாரண ஆனி 4 காலை 9 மணி ஸ்ரீராமநகர் கோட்டையூர், இராமநாதபுரம் 18.6.70.

(குறிப்பு): இந்நூல், 'திருவிடை மருதூர் மகாலிங்க மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே திருவிடை மருதூரில் வீற்றிருந்தருளும் சிவபெருமானின் பெருமை பாடப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பெருமையுடைய ஊர்களில் திருவிடை மருதூரும் ஒன்று. அவ்வூரில் 'மகாலிங்கன்' எனும் பெயருடன் விளங்கும் சிவபெருமான் பெருமைக்குரியவன். அடியவர்களின் இன்னலைப் போக்கும் இன்மருந்து. சைவசமயக் குரவர்களின் செந்தமிழ்ப் பாடல்களின் பொருளாவான் - என்று அவ்விறைவினை ஆசிரியர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அழகுறப் பாடியுள்ளார். மொத்தம் 61 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8497

திருபுவண நாதன் மாலை

THIRUPUVANA NATHAN MALAI

Pages : 385-392
Lines 32 on a Page
Extent 160 granthas
Complete
A Tamil religious piece that speaks about Tirubuvananatha of Tirubuvanamanag ar in 61 verses; Author by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"செந்தமிழ்வாழ் சோழத் திரிபுவன மாநகரிற்
சந்தமறை போற்றத் தலைமைபொலி - அந்தணனைச்
சாதிகுல மில்லானைச் சார்ந்துபுகழ் மாலையினை
ஆதிகண நாதன ருாம்"

பிரபந்தம்

"திரிபுவனச் சக்கரவர்த்தி தென்னாட்டுச் சோழ மன்னன்
திரிபுவன நாயகனும் திருநாமம் சூட்டுவித்த
திரிபுவன நாயகனே சிவசரபக் காட்சிதரும்
திரிபுவன நிலைநிறுத்தும் தேவர்பிரான் திருவருளே"

முடிவு

"திருவுளத்தை யுணகுதற்கே சிற்றோலை தேடுவரே
குருவுளத்தை மெய்யறிவு கொடுப்பிக்க வுரியானும்
உருவுளத்தை அடியேற்கும் உதவுதற்கே விழைவானும்
தருவுளத்தைத் திரிபுவன சக்கரவர்த்தி விளக்குகவே" (சா0)

வாழ்த்து

"வாழியவே திரிபுவன மகாதேவன் திருவருளே
வாழியவே திரிபுவன மன்னனது திருப்பணியே
வாழியவே திரிபுவன மகாசக்தி திருப்பதமே
வாழியவே திருபுவன மாலையென வாழ்த்துவலே".

பின்னணியுரை:

முதற்பிரதி. சௌமிய மாசி உரு. ஞாயிறு பகல் 2 மணி கனகலட்சுமி இராமநகர் கோட்டையூர்.
இரண்டாம் பிரதி. சாதாரண ஆனிரு காலை 5 மணி ஸ்ரீராமநகர் கோட்டையூர் சுக்கிரவாசரம் பிரதம காலத்திருப்பணி.

(குறிப்பு): இந்நூல், 'திரிபுவன நாதன்மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, சோழர்தன் பட்டத்தரசியாகிய 'திரிபுவன மாதேவி'யின் பெயரைக் கொண்டிலிங்கும் திரிபுவன மாநகரில், கோயில்கொண்டு அருள்வழங்கும் திரிபுவன நாதனின் பெருமை பாடப்பட்டுள்ளது. மொத்தம், 61 பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8498

வாட்போக்கி இரத்தினகிரீசர் மாலை

VATPOKKI RATHINAKIRIESAR MALAI

Pages : 393-399
Lines 32 on a Page
Extent 140 granthas
Complete
All these 51 verses are for Rathnagirisar of Vatpokki. All by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"வாட்போக்கி ரத்னகிரி மாணிக்க நாயகன்றன்
தாட்போக்கி நிற்கும் தமிழ்மாலை - கேட்போர்க்கும்
இன்பம் பயக்க இயமுகத்துப் பிள்ளையருள்
அன்பும் பயக்க அமர்ந்து"

பிரபந்தம்

"காவிரிக் கரையில் வாழும் கடம்பனைப் பணிந்து பின்பு
காவிரி திருநீ ராடிக் காவிரி மஞ்சள் வேண்டும்
தூவிரிக் கிரியில் வாழும் சொக்கனே மாணிக்கத்தை
நாவிரித் தமிழாற் பாட நானுளம் துணிகின் றேனே" (க)

முடிவு

"ஒருமூன்று தலங்கள் தேடி ஒருவாளின் வணங்கு பேறும்
இருமூன்று முகங்கொள் வேலன் இணையடி
இறைஞ்சும்வாய்ப்பும்

பெருமூன்று வேத மோதப் பெற்றவர்தமக்கும் வாயா

ஒருமூன்று தமிழாற் பெற்ற உவமையில் பேருமன்றே" (ரு0)

வாழ்த்து

"காவிரிக் கரையில் வாழும் கடம்பன்மெல் லடிகள் வாழ்க

சீதவிரி திருவாட் போக்கிச் சிவபிரான் திருத்தாள் வாழ்க

பாவிரி ஈங்கோய்க் குன்றம் பரமன்நற் பதங்கள் வாழ்க

தூவிரி மூவர்க் காகச் சொல்லிய தமிழும் வாழ்க"

(குறிப்பு): இந்நூல், 'வாட்போக்கி இரத்தினகிரீசர் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, காவிரி நதிக்கருகில் கோயில் கொண்டு கருணைமழைப் பொழிகின்ற இரத்தினகிரீசரின் அருட்சிறப்பு பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் 51 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8499

திருவீங்கோய் மலைமாலை

THIRUVIENGOY MALAIMALAI

Pages : 400-409
Lines 32 on a Page
Extent 200 granthas
Complete
Siva of the mount called Tiruvingoi has been celebrated here in 71 songs; celebrated by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஈங்கோய் மலையாற் கெழுபது பாடலை

யாங்கோ மறைந்துறையு மேழையேன் - பாங்கோடு

பாடியன் பாதத்தே பற்றோடு சேர்க்கபநெஞ்சே
தேடிவிக்ன நாயகன்றான் சேர்"

பிரபந்தம்

"செவ்வானத்து நிறம்போலும் சிவந்தமேனி கொளுந்தேவன்
துவ்வா மனித்தர் பலர்வாழும் துயரக் காலம்
இதன்கண்ணே
செவ்வாய் திறந்து மனம்கனிந்து சிவனே யீங்கோய்
மலையரசே
எவ்வா றிசைப்பேன் நின்பெருமை ஈங்கோய் மலையை
மறந்தே னே" (அ)

முடிவு

"எவனை யெதற்கே இரப்பதுவே
எவ்வூர் வேட் யிறைஞ்சுவதே
அவனை யருகே யழைப்பதனுக்
காற்றல் இலையோ மனக்குரங்கே
உவனை நினைந்த தவத்தானே
உவமை இலாத நிலைபெறுவாய்
இவனை யணுகா யெனவருவேன்
ஈங்கோய் மலையெம் பெருமானே" (எ0)

வாழ்த்து

"இருக்கு மறையே வாழ்வுறுக
எசுமா மறையே வாழ்வுறுக

உருக்கு சாமம் வாழ்வுறுக
உயரும் அதர்வம் வாழ்அறுக
பெருக்கு பொருளில் தேவராய்
பெருமான் விழைய வாழ்வுறுக
எருக்கு மலரே நிகர்ப்பவரும்
எளிய மாலை வாழியவே"

பின்னணியுரை:

திருவீங்கோய்மலை எழுபது பதினோராம் திருமுறைக்கு உரியது. இப்புதிய திருவீங்கோய் மலைமாலை எழுபதே செய்யுள் கொண்டது. இறைவன் திருவருள் வெள்ளம் பெருக்குக. அப்புலவர் பெயரோ இன்று நினைவில் இல்லை. இளமைக் கல்வி சிலையில் எழுத்தாய் இருக்கவில்லை.

(குறிப்பு): இந்நூல், 'திருவீங்கோய் மலைமாலை என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருவீங்கோய்மலையில் கோயில் கொண்டிலங்கும் இறைவனின் பெருமை எடுத்து உரைக்கப்படுகின்றது. மொத்தப்பாடல்கள் 71. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8500

கடம்பன் திருமாலை

KADAMPAN THIRUMALAI

Pages : 410-416
Lines 32 on a Page
Extent 320 granthas
Complete
Eulogy on Kadambam who is on the bank of the river Kaveri which is also called as Ponni.

தொடக்கம்

காப்பு

"பொன்னிக் கரைவாழ் புராதன மூர்த்திமலைக்
கன்னிக் குரிய கடம்பேசன் - என்னிதயம்
வீற்றிருந்து பாமாலை வேண்டுதலால் வேழமுகன்
ஏற்றதுணை நல்கும் இனிது"

பிரபந்தம்

"காவிரிக் கரையில் வாழும் கடம்பனே கடம்பன் தந்தாய்
பூவிரிச் சோலை சூழ்ந்த புண்ணிய பூமி வாழ்வே
தூவிரித் தமிழின் மாலை சூடவே விருப்பம் கொண்டாய்
தேவிரிச் செல்வம் நல்கிச் சிறியேனைப் புரப்பாய் தேவே"

முடிவு

"ஆரிய வேத மோரான் அருந்தமிழ் மறையும் தேரேன்
நாரியர் மனத்தை நாடி நம்பனை மறந்து கெட்டேன்
ஆரிய வணிகர் தீர்த்தம் ஆளவே வருங்காற் போற்றும்
சீரிய கடம்பன் பாதம் சிந்தையுட் செலுத்தி னேனே" (ருச)

வாழ்த்து

"வாழிய கடம்பன் பாதம் வாழிய சொக்கன் பாதம்
வாழிய ஈங்கோய் நாதன் மலர்ப்பதம் உலகம் வாழ்க
வாழிய தீர்த்த சேவை வாழிய வணிகர் தொண்டு
வாழிய மும்மைத் தேவை வழுத்திய மாலை தானே"

(குறிப்பு): இந்நூல், 'கடம்பன் திருமாலை' என்னும் பெயரினை உடையது.

இதன்கண்ணே, காவிரிக் கரைவாழ் இறைவன் கடம்பனின் பெருமை பாடப்பட்டுள்ளது. மலைக்கன்னிக்குரிய கடம்பேசன் அடியவர்க்கு அருள் வழங்கும் அன்புள்ளம் கொண்டவன். திருநீறு திமிர்ந்த மேனித் தெய்வ நாயகன். அருட்கடல், என்று ஆசிரியர் அவ்விறைவனைப் போற்றுகின்றார். மொத்தப்பாடல்கள் 55. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8501

குழித்தண்டலை மாலை

KUZHITHANDALAI MALAI

Pages : 417-423
Lines 32 on a Page
Extent 140 granthas
Complete
A Saiva literature dealing with Kuzhittandalai nathan of the town Kuzhittandalai by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"குழித்தண் டலையகத்தே கோயில்கொளு நாதன்
வழித்தண் டமிழ்மாலை வாழ்த்தப் - பழித்தபண்பு
பற்பலவும் ஏற்றருளிப் பாதம் தலைவைத்தான்
கற்பக விநாயகனே கண்டு"

பிரபந்தம்

"மொழித்தண் டமிழான் முறையே பணிந்து முழுமுதல்வன்
வழித்தண் டமிழின் பணியே பொருத்த மனமிசைவேன்
இழித்தன் பிலியென் றிகழான் எனவே இதயமெண்ணிக்
குழித்தண் டலையான் திருவடிப் போதினிற் கூடுவனே (க)

பிறப்பென்ற மாய வலைக்குள்ளே சிக்கிப் பிதற்று கின்றேன்
சிறப்பென்ற செல்வம் குழித்தான் டலையான் திருவருளால்
இறப்பென்ற துன்பம் வருமேனும் தோற்றம் எழுமுன்னமே
உறக்கண்ட மாந்தர் உறவெய்தி வாழ்வன் உலகத்திலே" (உ)

முடிவு

"நவில்வன தன்மை நவிற்சி யுயர்வு நவிற்சியிலை
தவலரும் தோல்கேள்வி நல்லோர் மனத்தே தயங்குபொருள்
அவலமிசை நீந்திக் குழித்தண் டலையான் அருள்புனைவான்
கவல்புகுதாத் தமிழ்மொழி வேண்டுதும் கைகுவித்தே"
(ருஉ)

வாழ்த்து

"வாழி குறுமுனி கும்பம் கவிழ்த்த வளநதியே
வாழி குறுமுனி தந்தருள் பைந்தமிழ் மாநிலத்தே
வாழி குழித்தண் டலைவாழ் தலைவனும் மாதருமே
வாழி குழித்தண் டலையாள் அடிபுகும் மாலையுமே"

(குறிப்பு): இந்நூல், 'குழித்தண்டலைமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே குழித்தண்டலையகத்தே கோயில் கொண்டு வாழும் இறைவனின் சிறப்பு பாடப்பட்டுள்ளது. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8502

சுகவன நாதன் திருமாலை

SUGAVANA NATHAN THIRUMALAI

Pages : 424-431
Lines 32 on a Page
Extent 150 granthas
Complete
Sonnambikai Nathan of Salem has been elevated here; By N. Kanagaraja Iyer. Total stanzas 55.

தொடக்கம்

காப்பு

"சொன்னாம் பிகைநாத தொல்சேல மாநகராய்
தென்னா சுகவனத்துத் தேவனே - மன்னாத
வாழ்க்கையினை மாற்றியருள் மாலையஃ தேற்றருள்க
ஆழ்க்கையையும் மாற்றி யருள்"

விநாயகன்

"ஆனைமுகத் தையனே ஆறுமுகற் கண்ணனே
சேனைமுகத் தேதம்பி செல்லுங்காற் - சோனைமழை
போலவே மெய்யருளின் பொற்புவலி நல்குதல்போல்
காலவே யேற்குமருள் தா"

முடிவு

"அரிய தவற்சிலை யேனும் அடியார் அகத்தளியோ
பெரிய திலையென் றிசைத்தே யழைப்பர் பெருநெறியார்
உரிய அருதிபொருள் தெரிந்சோதி யுருகுவதே
கரிய வெளிய சுகவன நாதனைக் காண்பதற்கே" (ருச)

வாழ்த்து

"வாழி சுகவன நாதன் அடியார் மனத்தனிக்கண்
வாழி இரணிய நாயகி அன்பர் மலரிதயம்
வாழி தமிழ்க் கொங்கு நாட்டுள சேல வளநகரம்
வாழி சுகவன நாயகன் மாலை மணமிகவே"

(குறிப்பு): இந்நூல், 'சுகவனநாதன் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, சேலமாநகரில் கோயில்கொண்டிலங்கும் சொன்னாம்பிகை நாதனின் பெருமை கூறப்படுகின்றது. 'சுகவனம் என்பது வேதவியாசர் தொடர்பினது. சுகவன நாயகன் பேரின்பம் நெய்திரி சோதியைப் போன்றது'. என்று சுகவனம் புகழ்ப்படுகின்றது. மொத்தம் 55 பாடல்கள் உள்ளன. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8503

திருப்பேரூர்ச் சிவபரம் பொருள்மாலை

TIRUPERUR SIVAPARAM PORULMALAI

Pages : 432-438
Lines 32 on a Page
Extent 154 granthas
Complete
53 stanzas here sing the greatness and value of Siva of Tirupporur. Singer, N. Kanagaraja Iyer. Place of writing, Kottayur (near Karaikudi); Period, 1970.

தொடக்கம்

காப்பு

"திருப்பேரூர் கோயில்கொளும் சிற்றம் பலத்தான்
திருப்பாதம் நெஞ்சமலர் சேர்த்து - விரும்பூர
பாடும் திருமாலைப் பட்டீசுரப் பிள்ளை
தேடும் திருவருளே செய்து"

பிரபந்தம்

"நீரூர் நிலத்தூர் நெருப்பூரே நிறைந்த காற்றூர் வானத்தூர்
சீரூர் கோயில் உடையானே சிதாகா சத்தே சின்மயமே
பாரூர் பலவும் தலைவணங்கும் பட்டீசுரத்தெம் பெருமானே
பேரூர் உறைஞ்த பிஞ்ஞகனே பிறப்பை யொழித்தே
யருள்வாயே"

முடிவு

"வேத மனைத்தும் நினைப்புகழும் விண்ணோர் குழுமி
வணங்குவரே
பூதம் உருவப் பொறுத்தனையே புதுமை பழமை
யிலாத்தலைவ
காதல் மணக்கும் மலர்க்காவைக் கண்ட குயிலே
இசைகற்றாய்
காதல் உருவத் தலைவியொடு காப்பாய் பேரூர் திருவருளே"

வாழ்த்து

"பேரூர் பெருமாள் வாழியரோ பேரூர் இறைவி வாழியரோ
ஆரூர் பெருமாள் அறவாழி, ஐயா றுடையார் பூவணத்தாள்
சீரூர் பொன்னம் பலத்தேவன் திருவாழ் ஆல வாய்த் தலைவன்
ஊரூர் தோறும் உவந்தபிரான் உலகம் வாழ வாழியவே"

பின்னணியுரை:

முதற்பிரதி சௌமிய மாசி உஅ புதன்கிழமை, 11.3.70. ஸ்ரீராமநகர் கோட்டையூர்.

(குறிப்பு): இந்நூல், 'திருப்போரூர்ச் சிவபரம்பொருள் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, திருப்பேரூர்க் கோயிலிலமலர்ந்து அருள்வழங்கும், சிவபரம் பொருளின் பெருமை பாடப்பட்டுள்ளது. 'பணத்தைத்தேடிப் பெருக்குகின்றார் பணியைப் புரிய அறியாதே' போன்ற கருத்துக்கள் உள்ளன. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8504

திருத்தணிகை மாலை

TIRUTTANIKAI MALAI

Pages : 439-461
Lines 36 on a Page
Extent 300 granthas
Complete
Tiruttanigai is a hill near Madras. Murugan temple on this is famous. Here, N . Kanagaraja Iyer lauds this Murugan. Number of songs he took, 51.

தொடக்கம்

காப்பு

"திருத்தணிகை வாழும் சிவகுமரன் வேலன்
உருத்தணிகை கொண்ட உளத்தேன் - கருத்தணிகை
உள்ள தமிழ்மாலை ஓத விநாயகனாம்
வள்ளலை வாழ்த்தும் மனம்"

பிரபந்தம்

பொன்மலியு நாட்டினிடைப் பூக்கள்மலி குன்றங்கள்
பொற்புமலி தளிக ளாகப்
போந்துவாழ் தெய்வமே சாந்துமலர் பொலிமார்ப
பொருவற்ற மகளி ரிருவர்

நென்மலியும் வாழ்வுலகு பெறவேண்டு மென்றவருள்

நிறைகின்ற நெஞ்ச முளராய்

நின்னையே தேடிமண மிக்கமண மாலைநான்

தேர்ந்து சூட்டின ரல்லரோ

கன்மலியு மொளியாழி கணையாழி யாடுகெனக்

கவின்மலிய வேந்தி வருவார்

கற்பகச் சோலைதரு பெண்ணையும் வள்ளிமலை

காட்டு பெண்ணையு மணந்தாய்

தென்மொழியும் வடமொழியும் நன்குபயில் நெஞ்சினால்

திருவிலங்கு தொண்டை நாட்டில்

திருத்தணிகை மலைமீது வாழ்ந்தருளு முருகனே

திருவருள் விளக்கி யருளே"

முடிவு

"அப்பனே என்னவோ ஐயனே என்னவோ

அரன்மகிழு மதலை யெனவே

ஆறுமுக வேலவே நீறுமுக மேறியெழில்

அமைகின் றதிரு வாளனே

அப்பரே சம்பந்தர் சுந்தரர் பாட்டெல்லாம்

ஆய்ந்துட பொருள் தேய்ந்த குரவ

அருள்வாத வூரடிகள் திருவாசகத் தினையும்

அடியேங்கள் பெற வருளினாய்

ஒப்பரே யிலரென்று யாமோத வல்லவர்

ஒருவரையும் உயர்கி லேயே

உவமையணி நின்னருகு வரமன நடுங்கும்
ஓதரிய நாத மயமே
செப்பலோ பொருளென்று சிறியேனும் வேண்டவே
செப்பியவை அறித லெளிதோ
திருத்தணிகை மலைமீது வாழ்ந்தருளு முருகனே
திருவருள் விளக்கி யருளே"

வாழ்த்து

"வாழியோ வாழியோ திருத்தணிகை மலைமீது
வாழ்ந்தருளு முருக னழகர்
வாழியோ வள்ளிநா யகியென்ற தேவியார்
மலர்வென்ற திருவ டிகளே
வாழியோ தெய்வானை திருவடித் துணையென்று
மனமார வாழ்த்து கின்றோம்
வாழியோ திருப்பரங் குன்றம்வாழ் முருகனே
வாழி சீரலை வாய்க்குகன்
வாழியோ திருவா வினன்குடிப் பழனிமலை
வாழ்ந்தருளு முருக சரணம்
வாழியோ திருவே ரகத்திலுள முருகனது
வண்மைதெளி யன்பர் மனமே
வாழியோ குன்றுதோ றாடுகே வள்ளலே
வாழி பழமுதிர் சோலையான்
வாழியோ முருகனருள் வேண்டுதமிழ் மாலிகை
வள்ளிதிரு வருளி னாலே"

பின்னணியுரை:

இரண்டாம்பிரதிக் குறிப்பு. சென்ற மூன்று நாளாக இப்பிரபந்தத்தைப் பிரதிசெய்து கொண்டிருக்கிறேன். இடையிடையே ஆசாரிய (சாரங்க) பாதுகை ஆயிரம் பிரதி செய்யப்படுதலால் இப்பிரபந்தம் இங்கு இந்த 25 பத்தி நிறைவேற மூன்றுநாள் ஆகியிருக்கிறது.

(குறிப்பு): இந்நூல், 'திருத்தணிகைமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருத்தணிகை மலைமீது வாழ்ந்தருளு முருகனின் திருவருள் பாடப்பட்டுள்ளது. குன்றங்கள் தோறும் அமர்ந்தருள் வழங்கும் குறிஞ்சித்தலைவர், குமரன் என்றும், கற்புநெறி மிக்கவிருமகளிரைக் காதலாற் கைப்பிடித்தற்கு இசைந்த குமரன் என்றும் பாராட்டப்பட்டுள்ளது. மொத்தம் 51 பாடல்கள் உள்ளன. இயற்றியவர், திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8505

திருப்பதி ஆண்டவன் மாலை

TIRUPPATHI ANDAVAN MALAI

Pages : 462-471
Lines 36 on a Page
Extent 140 granthas
Complete
Venkatachalapathy of Tiruppati mountain (A.P.) has been appreciated and begged here; Author, N. Kanagaraja Iyer; Total songs, 51.

தொடக்கம் .

காப்பு

"திருப்பதி நூற்றெட்டுத் தேவர்பிரான் வாழ்வான்
திருப்பதி வேங்கடமாச் சேர்ந்தான் - விருப்பதிகம்
கொண்டவனைப் போற்றியே கூறுதமிழ் நம்மாழ்வார்
கண்டதமிழ் கொண்டுவரும் கண்"

பிரபந்தம்

“புனைதற் கரிய பொலிவுடையாய்
புகழ்தற் கரிய புகழ்க்கடலே
நினைதற் கரிய நினைவிலுளாய்
நேயத் தொழும்பர் மனத்துள்ளாய்
வனைதற் குரிமை தருவாயே
வாக்கிற் புகுந்து வருவாயோ
இனைதற் குலகில் விடுவாயோ
எழில்வேங் கடத்தெம் பெருமானே” (க)

முடிவு

“பாடத் தெரிந்தார் பலர்பிறந்த பழமைத் தான நிலத்தகத்தே
நாடத் தெரியா அடிநாயேன் நம்பா நினையே நாடிவந்தேன்
ஓடத் தெரியா அடித்தொண்டர் உளத்தைத் தளியா யேற்றருள்க
வீடத் தகுந்த உயிர்வாழ்வு வேண்டேன் திருவேங் கடத்திறையே”

வாழ்த்து

“வாழி திருவேங் கடமலையே
வாழி தமிழின் வடவெல்லை
வாழி திருவேங் கடமுடையான்
மலர்போற் பொலியும் திருவடியே
வாழி அலர்மேல் மங்கையெனும்
மாதர்க் கரசி திருவடியே
வாழி திருவேங் கடமுடையான்
மலர்த்தாள் சாரும் மாலிகையே”

(குறிப்பு): இந்நூல், 'திருப்பதி ஆண்டவன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், திருப்பதி திருவேங்கடத்தானின் பெருமைகளை இப்பிரபந்தம் எடுத்துரைக்கின்றது. மொத்தம் 51 பாடல்கள் உள்ளன. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8506

சோழ சிங்கபுரம் கடிகாசலமாலை நரசிங்கமாலை

CHOLA SINGAPURAM KADIKACHALAMALAI NARASINGAMALAI

Pages : 472-479
Lines 32 on a Page
Extent 140 granthas
Complete
The shrines Cholasingapuram, and Gatikachalam have been extolled. Authored by N. Kanagarja Iyer. We have got 55 verses in this text.

தொடக்கம்

காப்பு

"கடிகை அசலமெனும் காரணப்பேர் பூண்ட
வடிவம் சிறந்த மலைமேல் - அடிபொருந்தி
வீற்றிருக்கும் நாரசிங்க விண்டுபுகழ் பாடுகின்றேன்
ஊற்றிருக்கும் நெஞ்சால் உவந்து"

அவையடக்கம்

"நரசிங்க னெங்கள்குல நம்பெருமா னாதலால்
தீரசங்கம் சேர்ந்தறியாச் சிற்றறிவேன் - சாரசங்கம்
போற்றும் திருக்குறுகைப் புண்ணியர்தாள் போற்றியே
சாற்றுவன் மாலைத் தமிழ்"

முடிவு

"செல்வ பிரகலாத வேண்டும் வரத்தினைச் செப்புகென
சொல்லு நரசிங்கன் சிங்கா சலத்திலும் சோழசிங்க
நல்ல புரத்திலும் வீற்றிருந்தானை நல்மனமே
புல்ல வருளுக வென்றான் இரணியன் புத்திரனே" (ருச)

வாழ்த்து

"வாழிதிரு நரசிங்கப் பெயர்கொளு மாதவனே
வாழி அகோபிலம் சிங்கவேள் குன்றத்து மாயவனே
வாழி கடிகா சலத்தே நரவரி மால்கழலே
வாழி கடிகா சலமாலை யாகவளர் தமிழே"

(குறிப்பு): இந்நூல், 'சோழசிங்கபுரம் கடிகாசலமாலை, நரசிங்க மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண், சோழசிங்கபுர மும் கடிகசாலமும், பெருமைபட பாடப்பட்டுள்ளது. மொத்தம் 55 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கன கராசன், எம்.ஏ.

R.8507

அகோபிலம் நரசிங்கம், சிங்கவேள் குன்றமாலை

AHOBILAM NARASINGAM SINGAVEL KUNRAMALAI

Pages : 480-492
Lines 36 on a Page
Extent 100 granthas
Complete
Nine forms of Vishnu around the mountain Ahobilam have been lauded; Lauded b y N. Kanagaraja Iyer in 53 songs.

தொடக்கம்

காப்பு

"சிங்கவேள் குன்றமெனும் சீரார். அகோபிலத்தே
தங்கவே வந்த தயாமூர்த்தி - சங்கமே
அழியே தாங்கும் அகோபில நாரசிங்கன்
வாழியென வாழ்த்தும் மனம்

ஆழ்வார் பதின்மர் அவருட் குருகூரர்
வாழ்வார் தமிழ்மறைகள் வாழ்த்தியே - கேழ்பரவும்
நரசிங்க மாலை நவிலத் துணிகின்றேன்
சாரசிங்கம் வாழும் தலத்து"

முடிவு

"பழமையினாய் புதுமையினாய் இளமையெழில்
கொழிக்கின்றாய் பதும மாதர்
கிழமையினால் ஆரியசங்க கரர்க்குதவி
அமயத்தே கிடைப்பச் செய்தார்
கிழமையிலே சனிவிழைந்தாய் பொழுதி லந்தி
விழைந்தனையே கீர்த்தி மிக்காய்
அழகமையும் நரசிங்க அகோபிலத்தெம்
பெருமாளே அருள்வாய் நன்றே"

வாழ்த்து

"நிலமுள்ள வுயிரெல்லாம் வாழ்வுபெற
அருளுமறம் நிறைந்தே வாழ்க
தலமுள்ள பகுதியெலாம் கோயில் கொளும்
நரசிங்கன் சரணம் வாழ்க. .
புலமுள்ள உளத்திலெலாம் திருமகளின்
திருவுருவம் புகுந்து வாழ்க
நலமுள்ள குறிஞ்சிமகிழ் நரசிங்க
மூர்த்தியருள் நாளும் வாழ்க".

(குறிப்பு): இந்நூல், 'அகோபிலம் நரசிங்கம் சிங்கவேள் குன்றமாலை' என்னும் பெயரினை உடையது. அகோபல மலையிலும் பக்கத்திலும் உள்ள ஒன்பது மூர்த்திகளின் சிறப்பு பற்றியும், அகோபிலச் சிறப்பு பற்றியும் இதன்கண் பாடப்பட்டுள்ளன. இரணியனை வென்ற நிலையும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

R.8508

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதன் மாலை

KANCHIPURAM EKAMPARANATHAN MALAI

Pages : 493-499
Lines 32 on a Page
Extent 120 granthas
Complete
Akambaranatha of Kanchipuram is the theme here; he has been acclaimed in 53 stanzas by N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"காஞ்சிநகர் வாழ்ந்தருளும் கண்ணுதல் ஏகம்பன்
காஞ்சியணி தேவி கடைக்கணிக்க - ஆஞ்சியிலா
வாழ்வனே வேண்டுதமிழ் மாலைக்கே ரம்பன்
வாழ்வருளும் வாக்கும் வகுத்து"

பிரபந்தம்

"ஆகம் பலவும் முகுந்தே விளையாடும் அம்பலத்தான்
நாகம் பொலிந்த திருமேனி கொண்ட நலப்பரமன்
ஏகம் பொருளென் றிசைத்தே விளக்குமிருக் கையுவந்து
ஏகம்ப நாதன் எனவெய்து காஞ்சி இறைஞ்சுவமே (க)

ஒருமர நிழலில் உவந்தே யிருக்கும் ஒருபொருளை
திருமா மகளும் திருமாலும் வந்து சிவமயத்தே
பெருமா லடைந்து பிறர்க்கு விளக்கும் பெருமையினை
தருமா மறைமொழி கச்சியே கம்பன் தனைத்தொழுமே" (உ)

முடிவு

"பற்பல கோயில் அமைந்தது காஞ்சிப் பதியெனினும்
வெற்பன கோபுரம் கொண்டு சிறப்பை விளக்குகின்ற
அற்புத ஆலயம் ஏகாம்ப பேசுவரன் ஆலயமும்
கற்பனை யில்லை சிறையுளத் தேதின்று காட்டினரே" (ருஉ)

வாழ்த்து

"வாழிய சான்றோர் மலிந்துறை சீர்த்தொண்டை மண்டலமே
வாழிய காஞ்சி புரமென்று உரைக்கும் வளநக்ரே
வாழிய காஞ்சியில் ஏகாம்ப ரேசன் மலரடியே
வாழிய அன்னான் திருவடி பற்றிய மாலிகையே".

(குறிப்பு): இந்நூல், 'காஞ்சிபுரம் ஏகாம்பர நாதன் மாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, காஞ்சியில் வீற்றிருந்து கருணை வழங்கும் ஏகாம்பர ஈசுவரரின் பெருமை பாடப்பட்டுள்ளது. வேதம் புகழ்ந்த மொழியேற்றும் வேகம்ப வித்தகன் என்று புகழப்படுகின்றது. கச்சி எனும் காஞ்சிமாநகரத்தின் பெருமை அளவிடற்கரியது. இயற்கை வளங்களோடு இறைவனின் அருளும் இணைந்திருப்பதால் அவ்வூர் மற்ற ஊர்களைவிடப் பெருமை வாய்ந்தது என்று ஆசிரியர் நா. கனகராசன், எம்.ஏ. இந்நூல் குறிப்பிடுகின்றார். மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8509

குமரக்கோட்டக் குமரன் திருமாலை

KUMARAKOTTAK KUMARAN THIRUMALAI

Pages : 500-511
Lines 36 on a Page
Extent 170 granthas
Complete
Kumarakkottam is a celebrated Murugan temple at Madras. Author N. Kanagaraja Iyer has celebrated this in this piece in the medium of verse.

தொடக்கம்

காப்பு

"திருக்குமரக் கோட்டத்துக் செல்வனைச் சார்ந்து
வருக்குமுறு செய்யுளால் வாழ்த்த - உருக்குமனம்
உள்ளேன் விநாயகனை உள்ளமுற வேண்டாதே
கொள்ளேன் அருளின் குறிப்பு

தொண்டை நாட்டுத் தலைநகராம்
தொன்மைப் புகழ்ப்பூண் பெருநகரம்
அண்டர் படையை அவுணர்பகை
அழிய நடத்தும் குமரேசன்
கொண்ட கோயில்ல எனும்புகழ் சால்
குமர கோட்டம் பொலிநகரம்
கண்ட கண்கள் களிப்பூரக்
காட்சி மலிந்த சிறப்பினதே" (௧)

முடிவு

"ஆறு மறையும் சடைப்பெருமாள்
ஆறு மகத்துப் பொறிகளிலே
ஆறு முகத்தோ டவதரித்தாய்
ஆனை முகத்தாற் கிளையாயே
சீறு முகத்தால் அமரருக்கே
சிரிக்கு முகத்தால் அமரருக்கே
பேறு முகத்தால் மனிதருக்கே
பிறங்கு காஞ்சிக் குமரோனே" (௫௨)

வாழ்க

"வாழி தொண்டை மண்டலமே
வாழி காஞ்சி மாநகரே
வாழி குமரண் திருக்கோயில்
வாழி குமரப் பெருமானே

வாழி வள்ளி நாயகியே

வாழி மகவான் திருமகளே

வாழி முருக னடியர்களே

வாழி உலகம் அருளாலே".

(குறிப்பு): இந்நூல், 'குமர கோட்டக் குமாரன் திருமாலை' என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே, குமரக்கோட்டம் எனும் திருத்தலத்தில் உறைகின்ற குமரக்கடவுளின் பெருமை பாடப்பட்டுள்ளது. அடியவர்க்கு அருள் வழங்கும் சிறப்பும், கோயில் கொண்டருளியுள்ள தலத்தின் பெருமையும் பலவாறாகப் பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. முழுவதும் உள்ளது.

R.8510

காஞ்சி வரந்தருவான் மாலை

KANCHI VARANTHARUVAN MALAI

Pages : 512-518
Lines 32 on a Page
Extent 115 granthas
Complete
51 verses here sing the glory of Varadarasapperumal of Kanchipuram (Chingleput Dt.) Author of the verses, N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"அத்திகிரி யுச்சி அரவணையிற் பள்ளி கொளும்

கைத்திகிரி நாதன் கருணைபெறச் - சித்தமுறீஇய்

யாக்கும் தமிழ்மாலை யேற்புறவே நம்மாழ்வார்

வாக்குள் வருக மகிழ்ந்து"

பிரபந்தம்

"மறைமேல் வளரும் ஒளியே! மதியே! கதிரே! விழியாய்
நிறைவாய் அடியார் மனமே நிலையா யுடைய மலையோ
மறையா மனமே அறிவாய் வரமே தருவாய் அலையோ
இறையே கிரிமேல் இனிதே எமையாள் நினைவோ
டுளையே (க)

கரியாகிய மாமலைமேற் கரியாய் வளர்வாய் அணைமேல்
உரியார் வரவே யருள்வாய் உருவே யறிதற் கரியாப்
பெரியாய் கொடையே பயில்வாய் பிறவிப்பிணியே
யொழிவேன்
அரியே திருமா துடனே அகமே யுருவாய் விரைவே" (உ)

முடிவு

"கடலே உறைவாய் வளர்வாய் கருணா கரனே பரனே
மிடலே யிருமொழியினாய் விழைவாய் ... மலையே
சுடரே பனையாய் அகமே துயரற்று மரம்புரிவாய்
விடரே யிலாத மலையே விமலா நிலையாயினையே (சகூ)

தொண்டைப் பெருநா டுடையாய் சுருதிப்பெருநூல்
உறைவாய்
அண்டர்க் கருள்வாய் அமுதே அடியர்க் கருள்வாய்
நினையே
பண்டைப் புகழ்வாய் நகராம் பரிசால் காஞ்சிக் குரியாய்
எண்டைத் துயர்வாம் இதயம் இனிதே நிறைவா கியரே"
(ருO)

வாழ்த்து

"கச்சிப்பதி வாழியவே கருணைக்கடல் வாழியவே
உச்சிப்பொருள் வாழியவே உயரும்கிரி வாழியவே
நச்சிப்புகு நெஞ்சுடையார் நலமேமிக வாழியவே
எச்சிற்கவி வாழியவே இறைபே ரருள் வாழியவே"

(குறிப்பு): இந்நூல், 'காஞ்சி வரந்தருவான் மாலை' எனும் பெயரினை உடையது. இதன்கண்ணே, காஞ்சியில் வீற்றிருந்து கருணைமழை பொழியும் பெருமாளின் பெருமை பாடப்பட்டுள்ளது. இறைவனைக் கருணைக் கடலென்றும், கருணாகரன் என்றும் பாராட்டியுள்ளார். வரந்தருகின்ற வரதராசப்பெருமாளின் அருட்டன்மையைப் பெரிதும் போற்றியுள்ளார். இதன்கண்ணே 51 பாடல்கள் உள்ளன. தன்னைப்பற்றி ஆசிரியர், எள்ளற்குரியேன் எனினும் அருள்வாயாக என்று குறிப்பிடுகின்றார். இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ. அவர்கள். முழுவதும் உள்ளது.

R.8511

உலகளந்த பெருமாள்மாலை

ULAKALANDHA PERUMALMALAI

Pages : 519-530
Lines 36 on a Page
Extent 175 granthas
Complete
A form of Vishnu has been extolled here in verses. Composer of the verses N. Kanagaraja Iyer.

தொடக்கம்

காப்பு

"ஒருதாள் நிலத்தூன்றி ஓர்தாள் வியன்வான்
உருவா வளக்கும் உருவத் - திருமால்
உலகளந்த நாயகன் உள்ள முவந்த
சிலகவியின் மாலை செலும்

ஆழ்வார் பதின்மர் அடிமலரை நெஞ்சத்தே
வாழ்வார் பொருளா வணங்கியே - கேழ்வார்
உலகளந்த நாதன் உயர்தொண்டைக் காஞ்சி
நிலமடைந்த தேமாலை நேர்"

முடிவு

"மேகத்தை நினக்குவமை மெனவுரைக்க
வேண்டுகின்றேய் விமல மூர்த்தி
ஆகத்தை யவர்மகளுக் காலயமாய்
அளித்தருளும் அண்ணல் நின்போல்
ஒகத்தை அடியவருக் கருள வல்லார்
உளரேயே உலக மூன்றும்
நாகத்தை வெலுமுவணர் மன மருள
அளந்தனையெம் நலத்துக் கன்றே

அன்பத்த அருளத்த கொடையத்த
ஆண்மை யத்த அழக அத்த
இன்பத்த இயலத்த இடையத்த அளந்தமேலும்
இருக்கி னத்த
மென்பத்த விளக்கத்த விள்ளுவதற் கியலாத
மேன்மை யத்த
வன்பத்த உலகளந்த யத்தத்த எமைக்காத்து
வாழ்விப் பாயே"

(குறிப்பு): ‘உலகளந்த பெருமாள் மாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண்ணே காஞ்சியிலே வீற்றிருந்து காட்சி தரும் உலகளந்த பெருமாளின் பெருமைகள் பாடப்பட்டுள்ளன. ‘உலகளந்த பெருமாளே காஞ்சிநகர் பெறும்பேறே உயர்வாழ்வு ஈயே’ என்று அடியவர்கள் வேண்ட, அவ்வேண்டுகோளுக்கேற்ப அருள் வழங்குகின்றான் என்று ஆசிரியர் பாராட்டிக் கூறுகின்றார். இயற்றியவர் நா. கனகராசன், எம்.ஏ. மொத்தம் ஐம்பது விருத்தப்பாக்கள் உள்ளன. முழுவதும் உள்ளது.

R.8512

சேலம் சுந்தரராச மாலை

SALEM SUNDHARARASA MALAI

Pages : 531-537
Lines 32 on a Page
Extent 140 granthas
Complete
Sundararaj is the name of Vishnu at Salem. N. Kanagaraja Iyer worships here this god as a result of which we have got 53 verses.

தொடக்கம்

காப்பு

“அழகுக் கரசன் அருட்சேல நாதன்
விழவுக் கரசன் வியன்றாள் - பழகுமளம்
நாவசைக்கப் பாடுகின்ற நன்மாலை நம்மாழ்வார்
பாவிசைத்த மெய்ம்மை கொளும் பத்து”

பிரபந்தம்

“தேன்றிகழ் துளவமாலை திகழ்திரு மார்பம் உள்ளாய்
ஊன்திகழ் போன்றி உலகினைப் புரக்கும் தேவே
வான்திகழ் வாழ்வை மக்கள் மனத்திலே நிரப்பா நின்றாய்
தோன்றிய கால மில்லாச் சுந்தர ராச மாலே” (க)

முடிவு

“ஆரிய மறிந்த தேவ அருந்தமிழ் சுவைக்கு மண்ணால்
வீரிய மிகுந்த மன்னர் வேண்டிய தெல்லாம் ஈந்தாய்
காரியம் கெட்ட தந்தோ காமே மாறிற் றென்ப
சூரியன் விழியே யான சுந்தர ராச மாலே” (ருஉ)

வாழ்த்து

“வாழிய கொங்கு நாடு வாழிமா நகராம் சேலம்
வாழிய சுகங்கள் கூடி வாழ்வுறும் வனமாம் தேயம்
வாழிய அழகின் மூர்த்தி வாழிய கொடையின் வள்ளல்
வாழிய அழகு மன்னன் மனம்புகும் மாலை தானே”. (ருங)

(குறிப்பு): இந்நூல், ‘சேலம் சுந்தரராசமாலை’ என்னும் பெயரினை உடையது. இதன்கண், தொண்டர்கள் பண்டு சுகவனம் என்று புகழும் சேலத்தின் பெருமையும், ஆங்குறைந்து அருள்வழங்கும் சுந்தரராசப் பெருமாளின் பெருமையும் பாடப்பட்டுள்ளது. மொத்தம் 53 பாடல்கள் உள்ளன. முழுவதும் உள்ளது. இயற்றியவர் திரு. நா. கனகராசன், எம்.ஏ.

Printed by
Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. - Co.op Society Ltd.
26, Koya Arunagiri First Street Royapettah
Madras - 600 014. ☎ : 84 56 70

Printed by
Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. - Co.op Society Ltd.
26, Koya Arunagiri First Street Royapettah
Madras - 600 014. ☎ : 84 56 70